உ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் : ௩. | பிரபவ—மார்கழி, தை, மாசி, பங்குனி. | மலர் : ௯—௧௨. |

உ

## இராசராசன்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 136 பக்கம்.)

இனி, திருவாரூர், திருநாகை, திருக்காறுயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் எழுதலங்களினும் தியாகராசர் எழுந்தருளப்பெற்றிருத்தலின் இவை சத்தவிடங்கத் தலமெனப்பட்டன; விடங்கர் தியாகராசராதலின். இதனை,

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறுயில்—பேரான
ஒத்ததிரு வாய்மூ ருவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்" என்னும் வெண்பாவானுணர்க.

இஃது இவ்வாருக. தஞ்சை இராசராசேச்சரத்து எருந்தருளிய தியாகப்பெருமானுக்குத் தட்சிணமேரு விடங்கர் என்னும் பெயர் காணப்படுகின்றது. இத்தஞ்சை மேற்கண்ட ஏழு தலங்களுள் ஒன்றல்லவாகவும் இதன்கணுள்ள தியாகர்க்கு இப்பெயர் வருதற்கு இயைபென்னை என்ருராய்வது இன்றியமையாததாகலின் அதனை ஆராய்வாம்.

இனி, தியாகர் எழுவரையும் விண்ணவர்க் கரசன்பாற்பெற்று மண்ணுலகில் எழு தலத்தும் ஒரு பகலில் அமர்வித்து வழிபட்டனன் முசுகுந்தன் என்பர். இவ்வரலாற்றை,

"நன்றெனவே விடைகொண்டு நானிலத்தி னிடையிழிந்து
தென்றிசையா ரூர்தன்னிற் சிவனுறைபூங் கோயில்புக்கு
மன்றல்கமழ் தண்டுளவோன் வழிபடவீற் றிருந்தோரை
வென்றியரி யணைமீதில் விதிமுறையாற் ருபித்தான்.

கடனுகை நள்ளாறு காருயல் கோளரியூர்
மடனுகை முத்தீனும் வாய்மியூர் மறைக்கானம்
உடனுருந் தலமாறி லோராறு வடிவுகொண்ட
படநாக மதிவேணிப் பரஞ்சுடரை யமர்வித்தான்.

இப்படியே யொருபகலி லெழுவரையுந் தாபித்து
மெய்ப்பரிவில் வழிபாடு விதிமுறையாற் புரிவித்துச்
செப்பரிய புகழாரூர்த் தேவனுக்கு விழாச்செய்வான்
முப்புவனங்களும் போற்று முசுகுந்தன் முன்னினனுல்."

என்னும் கந்தபுராணம் கந்தவிரதப்படலச் செய்யுட்களால் அறியலாம்.

அம்முசுகுந்தனை இராசராசனது முன்னோர்களில் ஒருவனென ஆனைமங்கலத்துச் செப்பேடு கூறுகின்றது. தன் முன்னோரிற் சிறந்தோனுகிய அவன் வழிபட்ட தலம் என்னும் இயைபு பற்றிப்போலும், இராசராசன், ஏனைய தலங்கட்குச் செல்லாமலும் விடங்கர் தலத்துட் சிறந்து விளங்கும் திருவாரூர்க்குச் சென்று தியாகேசரை வழிபட்டுவருவானுயினன். இதனை, "ஆரூர்த்

தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சி யலகில் புகழ்பெறு ராசராச மன்னவ:" என்னும் திருமுறைகண்ட புராணச் செய்யு ளால் அறிக.

இவ்வாறு வழிபட்டு வந்தவன் தனக்கு இராசராசன் என் னும் பெயர் ஏற்பட்டு, அப்பெயரால் தன் தலைநகர்க்கண் இராச ராசேச்சரம் எடுப்பித்த பின்னர், திருவாரூர் ஆலய ஐதிகப்படி, இவ்வாலயத்தும் தியாகரை எழுந்தருளுவித்துச் சிறப்பொடு பூசனை விருப்பொடு நடாத்தியதோடு விடங்கர் என்னும் பெயரை யும் இவர்க்கு இட்டு வழங்கினன் என்ற இயைபு கோடல் பொருத்தமுடைத்தாதல் காண்க.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளுவித்த திருமேனிகளில், பழைய வரலாற்றினை நினைவுறுத்தும் சிலவற்றினை ஈண்டு எடுத்துக் காட்டுவது இன்றியமையாததாகலின் அவற்றைக் கூறுவேன். ஒரு இலிங்கமும் அதினின்று நான்கு திருக்காத்துடன் தோற்றிய சிவவடிவமும் அதனையடுத்துப் பிரமனும் பன்றி முகனுடைய திருமாலும் நிற்கும் இலிங்க புராணதேவர் திருமேனி, திரு மாலும் பிரமனும் அடிமுடி காணமாட்டாது எய்த்து நிற்க, இலிங் கத்து நின்றும் வெளிப்பட்டு அவர்க்கு இறைவன் அருளிய வண்ணத்தையும்; பிரமன் இருந்து சடங்கியற்ற, திருமால் நின்று காத்து நீர்வார்க்கப் பிராட்டியோடு நான்கு திருக்காத்துடன் எழுந்தருளி நின்ற கலியாண சுந்தரர் திருமேனி, புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன் தொழில்காட்டப் புவனவாழ்க் கைச் செயல்வண்ணம் நிலைநிறுத்த இறைவன் மலைமகளை மணந்த செய்தியையும்; கின்னரர் கின்னரிகள் கர்ணபிராவிர்தர்கள் இருடிகள் நால்வர் மருங்கிருப்பப் புலியும் பாம்பும் கிடக்கும் இரண்டு சிகரத்தினையுடைய ஒரு மலையின் உச்சியில் ஒன்பது பணையும் நாற்பத்திரண்டு கிளைகளும் போக்கிப் பொக்கணம் ஒன்று தூங்க நின்ற ஆலமரத்தடியில் முயலகனைத் திருவடியிற் கிடத்தி நான்கு திருக்கரத்துடன் சுகாசனமாக வீற்றிருக்கும் தக்கணாமூர்த்தி திருமேனி, கல்லாலின் புடையமர்ந்து இருடிகள் நால்வர்க்கும் அண்ணல் அறவுரை பகர்ந்த மாண்பினையும்; சிவ

வழிபாட்டிற்கு இடையூறு விளைத்த தந்தையைத் தாளற வீழ்த்தி இறைவனை வழிபட்டுப் பிரசாதம் பெறுதற்கு இரண்டு கரத்தையும் நீட்டிநிற்கும் சண்டேசர்க்கு, முயலகன் திருவடியிற் கிடப்ப, பிராட்டியோடும் எழுந்தருளித் தமது திருக்கரத்தால் மலர் மாலையை நல்கும் சண்டேசப் பிரசாத தேவர் திருமேனி, சண்டேச நாயனர் வரலாற்றினையும்; நாற்புறத்தினும் நந்நான்கு திருக்கரங்களோடு நான்கு திருமேனிகள் தன்னிற் கிளைத்து நிற்க, அவற்று நாப்பண் பத்துத்திருக்கரங்களோடு அவற்றினும் உயரமாக எழுந்தருளி நின்ற பஞ்சதேக மூர்த்திகள், பிரமன், விண்டு, உருத்திரன், மயேசன் என்பார் சதாசிவத்தினின்றும் தோற்றிய உண்மையினையும் விளக்கி நிற்றல் காண்க.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளப்பெற்றுள்ள சிவனடியார் வடிவங்களுள் மிலாடுடையார் படிமம் ஒன்றுாகும். இம் மிலாடுடையாரே, சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனாராவார். இவர் பெயரால் திருநாகேச்சரத்தைச் சார்ந்த குமாரமாத்தாண்டபுரத்தில் எடுக்கப்பெற்ற மிலாடுடையார்பள்ளி எனப்பெயரிய கோவிலுக்குக் குமாரமாத்தாண்டன் என்னும் திருச்சுற்றுலையை அந்நகரத்தார் எடுப்பித்தனர் என்பது 222 of appendix B of 1911-ஆல் அறியக்கிடக்கின்றது. திருவிடைமருதூர் மகாலிங்கேச்வரர் ஆலயத்து நடுவிமானத்தின் வடசுவரில் வெட்டப்பட்டுள்ள சாசனம், காடுபட்டிகள் நந்தி போத்தரையன் என்னும் பல்லவமன்னன், குமாரமாத்தாண்டன் என்னும் விளக்கொன்றினைக் கொடுத்தனன் எனக் கூறுநிற்கும். இதனல் குமாரமாத்தாண்டன் என்பது நந்திபோத்தரையனது மறுபெயர் எனக் கொள்ளக்கிடத்தல் காண்க. இம்மிலாடுடையாரைப்பற்றி முன்னர்ச் சுட்டுவது இராசகேசரிவன்மன் முதலாம் ஆதித்தனது இரண்டாம் ஆண்டுச் சாசனமேயாம். ஆதித்தனே என்றால் கி. பி. 880 முதல் 907 வரை ஆட்சிபுரிந்தவன். ஆகவே மெய்ப்பொருள் நாயனாராகிய மிலாடுடையார், அவனுக்குச் சில காலத்திற்கு முற்பட்டிருந்தாரெனக் கோடல் அமையும் என்பதை Annual Report on Epigraphy for 1912, Part II, para 12 இல் காண்க.

இனி, இவ்வாலயத்தில், சிறுகாலை உச்சம்போது இராவை என்ற மூன்று காலத்தும் பூசை நடைபெற்றது. "ஸ்ரீராஜராஜீச்வர முடையார் ஆடியருளுந் திருமஞ்சன நீரிலுந் தண்ணீர் மீதிலுமிட பெருஞ்சண்பக மொட்டுக்கும் ஏலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும்" என்னும் சாசனப்பகுதியால், பெருஞ்சண்பக மொட்டு ஏலரிசி இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். நெய்கொண்டு திருவிளக்குகள் ஏற்றப்பட்டன. நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு நெய் அளப்பதற்கு, ஆடு பசு எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறுவாராயினர். அங்ஙனம் பெறுமிடத்து, ஆடெனில் தொண்ணூற்றாறும், பசுவாயின் நாற்பத்தெட்டும், எருமை என்றால் பதினாறும் பெறுவர். அவற்றுள், பசுவொடு சார்த்திக் கொடுத்த எருதும் கன்றும் பசுவாகவும், எருமையொடு சார்த்திக்கொடுத்த கிடாவும் கன்றும் எருமையாகவும், ஆட்டொடு சார்த்திக்கொடுத்த கிடாயுங் குட்டியும் ஆடாகவும் கொள்ளப்பட்டன. இதனை, "திருவிளக்குக்கு நெய் அளக்கக் கடவர்களாக இடையர்வழி திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடு தொண்ணூற்றாறாகவும் பசுநாற்பத்தெட்டாகவும் எருமை பதினாறாகவும் இவையிற்றுக்கு பசுவின் கன்றும் எருதும் பசுவொடு சார்த்திக்குடுத்தன பசுவாகவும் ஆட்டுக்குட்டியுங் கிடாயும் ஆடு சார்த்திக் குடுத்தன ஆடாகவும் எருமைக் கன்றுங் கிடாவும் எருமை சார்த்திக் குடுத்தன எருமையாகவும்............கொண்ட இடையர்கள்............திருவிளக்கு ஒன்றினுக்கு ஆடவல்லானால் நிசதம் நெய் உழக்காக அளக்கக்கடவர்" என்றதனால் அறியலாம். மேற்கூறிய மூவினத்துள், ஒரு எருமைக்கு மூன்று பசுவும், ஒரு பசுவுக்கு இரண்டு ஆடும் ஒப்பாதல் காண்க. யாடும் பசுவும் மூத்து இறந்து படுமுன், இடையர்கள் அவற்றை மாற்றி வேறு கொள்ளக் கடமைப்பட்டவாதலின், அவைகளைச், "சாவா மூவாப் பேராடு சாவா மூவாப் பசு" எனச் சாசனங் கூறும்.

இனி, பழவரிசியாற் சமைத்த போனகம், கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது, வெள்ளிலை

யமுது இவை நாடோறும் மூன்று போதினும் திருவமுது செய்விக்கப்பட்டன.

இனி, திங்கடோறும் திருவிழா எழுந்தருளுந் திருமேனிகட்குப் பழவரிசியால் அட்டபோனகமும், பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் இவை கொடு செய்த அப்பக்காய்க் கறியமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு இவைகொண்டு அட்ட புளிங்கறியமுதும், புளியிட்டடுங்கறியமுதும், காய்க்கறியமுதும், பொரிக்கறியமுதும் பிறவும் அமுது செய்வித்தனர்.

இனி, திங்கட்டிருவிழா என்பன, இராசராசன் பிறந்த நாளாகிய திருச்சதையத் திருவிழாப் பன்னிரண்டும், கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாள் ஒன்றும் ஆகப் பதின்மூன்றுமாம்.

இனி, "வெந்த குங்கிலியப் புகைவிம்மவே—கந்த நாறுங் கழிப்பாலையார்" எனத் தேவாரத்தும், "கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுதலெம்பிரானுக்குப்—பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல" எனப் பெரிய புராணத்தும், "ஆலய மெங்கெங்கும்—காதிய குங்குலியப் புகை" எனச் சேக்கிழார் நாயனர் புராணத்தும் ஆலயங்களிற் குங்குலியப்புகையிட்டமை கேட்கப்படுவதானும், திருவையாற்றில் ஆட்கொண்டார் திருமுன்னர் குங்குலியக்குழி இன்றும் காண்டக இருத்தலானும், பண்டைக்காலத்தில் குங்குலியமே திருப்புகைக்குக் கைக்கொண்டனரென்பதும் இற்றை நாளையில் வழக்கிலுள்ள சாம்பிராணி இருந்ததில்லை என்பதும் ஒருதலை.

இனி, இவ்வாலயத்தில் திருவமுது செய்விக்கும்போது திருப்புகையோடு கற்பூரம் காட்டப்பட்டமை சாசனங்களால் அறியக்கிடக்கின்றது. அப்பொழுது புகைக்குக்கொண்டது எதுவெனிற் குங்குலியம் அன்று; சீதாரியாம். அதனைச் சிதாரி எனக்கொண்டு திப்பற்றவைப்பதற்கு இன்றியமையாத மெல்லிய மரப்பட்டை என்று எழுதினேரு முண்டு. ஆனல் அது சிதாரியன்று, சீதாரியேயாம். சீதத்திற்கு-குளிர்ச்சிக்கு, அரி-பகையாதலால்,

இப்பெயர் பெற்றது. மக்கள் நீராடிய பின்னர் இப்புகை காட்டும் வழக்குண்டு; அது, "பாதாதிகேசம் பழிப்பில்லாள் பாங்கமைந்த-சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள்" என ஞானவுலாக் கூறு மாற்றாலறிக. அஃது யாதோவெனிற் சந்தனத்திரளையாம், என்னை? இராசராசதேவர் முதற்பெருந்தேவியார் எடுப்பித்த ஒலோகமாதேவீச்சரத்து, "திருமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்குமாக நிசதம் சந்தனம் முப்பலம்" என்னும் சாசனப்பகுதியால் அறியக்கிடத்தலால்.

இனி, திங்கள் விழாவேயன்றி ஆண்டு விழாவும் நடைபெற்றது. அது ஒன்பது நாள் நடைபெறும். ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும் ஆடவல்லார் எழுந்தருளு நாளையும் பறையறைந்து தெரிவிப்பர். ஒவ்வொரு திங்கட்டிரு விழாவினும் ஆட்டைத் திருவிழாவினும் வழிபட்டு உடன்வரும் சிவயோகியர் பதின்மர்க்கு உடையார் சாலையில் உணவளிப்பதுண்டு. ஆட்டை விழாவாகிய வைகாசிப் பெரிய திருவிழாவில் இராசராசேச்வரத்தில் இராசராசேச்வர நாடகம் நடைபெறும். நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டாண்டு தோறும் நூற்றிருபதின் கலநெல் நிபந்தம் ஏற்பட்டிருந்தது.

இனி, இவ்வாலயத்திற்கு வேண்டு நிபந்தங்களைக் கூறிப் போதரும் சாசனங்களில் தேங்காயும் மிளகாயும் கூறப்படவில்லை. தேவர்க்காம் உணவாதலின் மிளகாய் ஒழித்தனர் எனினும் ஒழிக. சோழநாட்டில் தென்னை இருந்திலது என்றல் அமையாது. என்னை? ஆனைமங்கலச் செப்புப்பட்டயத்தில் "இவ்வூரிட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாததாகவும்" என்றும், "காவு தெங்கிடப் பெறுவதாகவும்" என்றும் காணப்படுதலின். அன்றியும் இவ்வாலயத்து வடசுவரில் பொறிக்கப் பெற்றுள்ள சாசனத்திலும், "தெங்குமரம் நின்ற நந்தவானமும்" எனக் கூறப்படுதலின், தென்னை இருந்தமை அறியக்கிடப்பினும், சாசனங்களிற் கூறப்படாமையின், இற்றை நாளையிற்போலத் தேங்காயுடைத்து வழிபடும் வழக்கு அற்றை நாளையில் இருந்ததில்லை போலும் என்று ஊகிக்கலாம்.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளுவித்தவற்றுள் கடவுள் வடிவமெனில் திருமேனி எனவும், மக்கள் வடிவமாயின் பிரதிமம் எனவும், வழங்கியிருத்தல் பாராட்டற்பாலது. அவற்றை, "எழுந்தருளுவித்த பிச்சதேவர் திருமேனி ஒன்று' 'நம்பி ஆரூரனுர் பிரதிமம் ஒன்று' "நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமம் ஒன்று'' என்பவற்றுட் காண்க.

இனி, இவ்வாலயத்து அக்காலத்து வழங்கிய சம்பிரதாயச் சொற்களைக் கேட்பதும் இன்பம் பயக்குமாகலின் அவற்றுட் சில ஈண்டுத் தருகின்றேன். அவை திருவமுது, திருமஞ்சனம், திருப்பரிகலம், திருப்பரிசட்டம், திருவொற்றுடை, திருப்பாவாடை, திருப்பள்ளித்தாமம் முதலியனவாம். அவற்றுள் முதன் மூன்றும் எவர்க்கும் எளிதின் விளங்குமாதலின், அவற்றை விடுத்திட்டு ஏனையவற்றை விளக்குமிடத்துத் திருப்பரிசட்டம் என்பது கடவுட்கணியும் ஆடை. இதனை இந்நாளையில் திருப்பரிவட்டம் என வழங்குப. திருவொற்றுடை என்பது, திருமஞ்சனம் செய்வித்த பின்னர் கடவுட்டிருமேனிக்கண் உள்ள நீரை ஒற்றியெடுக்கும் ஆடை. திருப்பாவாடை என்பது திருமுன் அமுது செய்விக்கச் சோற்றினைப் பரப்புதற்கு இடும் ஆடை. திருப்பள்ளித்தாமம் என்பது மாலையெனப் பொருள்படுமேனும் ஈண்டு அருச்சனைக்குரிய மலரெனப்படும். அதனை, 'திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்பார் இருவர்' என்னும் திருவேதிகுடி சாசனப் பகுதியானும், 'சாத்தலாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங் கொய்து' எனவும், 'வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங்கொண்டு வான்முறையே—பண்டைப் பயில்வா லருச்சித்து' எனவும், 'கொய்த தூநறும் பள்ளித்தாமம் குஞ்சிமேற் றுதையக் கொண்டார்' எனவும், 'சடைமே லணியத் திருப்பள்ளித்தாமம் பறித்துச் சாத்துவார் எனவும், 'தெய்வ நாயகற்குச் சாத்துந் திருப்பள்ளித் தாமம் கொய்து' எனவும், 'சிவகாமியாண்டார் கொய்து—பன்னகாபரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித்தாமம்' எனவும், பெரியபுராணத்துப் பலவிடத்தும் பரந்து கிடத்தலானும் அறியலாம்.

இனி இவ்வாலயத்திற்குரிய பொருட்சாலைகள் இரண்டு இருந்தன அவற்றுள் ஒன்று உள்ளூரிலும் மற்றொன்று வெளியூரிலும் இருந்தது. உள்ளூரிலிருந்தது உடையார் உள்ளூர்ப் பண்டாரமெனவும், வெளியூரிலிருந்தது உடையார் நாட்டுப்பண்டாரம் எனவும் பெயர்வாய்ந்திருந்தது. இன்னும் உள்ளூர்ப்பண்டாரம், பெரும்பண்டாரம், பண்டாரம் என்று இருவகைத்து. பெரும்பண்டாரம் தஞ்சைவிடங்கன் என்று அழைக்கபெற்றது. கோயிலிற் பரிசாரகம் செய்வோர் தமக்கு ஏற்பட்ட நெல்லும் காசும் உள்ளூர்ப்பண்டாரத்தே பெற்றனர். கரணத்தார்களும் பண்டாரி (பொருளாளர்) களும் நாட்டுப்பண்டாரத்தே நெல்லுப் பெறுவர். சோழமண்டலத்துள்ள ஊர்ச்சபையார் அரசன் ஆணைக்கிணங்கித் திருமெய்க்காப்பார்களை அனுப்பிவந்தனர். இம்மெய்க்காப்பார்கள் தம் கடமைச் செலவும் படிச்செலவுமாகிய இரண்டினையும் தத்தம் ஊர்ச்சபையின்கண்ணே பெறுவாராயினர். இவர்கள் இவ்விராசராசேச்சரத்து, கோளாந்தகன், இராசராசன், அணுக்கன் என்ற திருவாயில்கள் மூன்றினையும் காவல் செய்தனர்.

இனி இவ்வாலயத்துப் பண்டாரத்தினின்று ஊர்ச்சபையாரும் பிறரும் கடனாகப் பொருள்பெற்று அதன் பொலிசை (வட்டி)யை ஆலயத்திற்கு வேண்டும் பொருளாகக் கொடுத்து வந்தனர்.

இனி இவ்வாலயத்தின் திருவாசல்களைக் கோளாந்தகன், இராசராசன், அணுக்கன் எனவும், பெரும்பண்டாரத்தைத் தஞ்சை விடங்கன் எனவும் மாக்காலை ஆடவல்லான் எனவும் நிறைகல்லை தக்ஷிணமேரு விடங்கன் எனவும், உயர்திணைப் பெயரால் வழங்கியிருப்பது ஆராயத்தக்கது. இவ்வழக்குப்பற்றிப் போலும் திருவாரூர்க் கண்ணுள்ள ஆயிரக்கால் மண்டபத்தை தேவாசிரியன் என வழங்குவாராயினர். "தேவாசிரியன் எனுந் திருக்காவணம்" என்று பெரியபுராணங் கூறுவதறிக.

இனி, இராசராசன் தன் பண்டாரத்தினும், சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரத்தினும் கொடுத்த பொன்னாலும் வெள்ளியாலும் செய்து, 'சிவபாத

சேகரன்' 'இராசராசன்' என்னும் திருப்பெயர் பொறித்த திருப்பரிகலங்களும், பொன்னாற் செய்தனவும் மணிகள் பதித்தனவுமாகிய அணிகலங்களும் ஒன்றிரண்டல்ல, பல கொடுத்தமை காணக்கிடத்தலின், அவற்றுட் சிலவற்றையேனும் எடுத்துரைப்பது இன்றியமையாததாயிற்று.

இனி, கூறுமிடத்து, குடம், கலசப்பானை, படிக்கம், தட்டம், தளிகை, மூக்குவட்டகை, கைவட்டகை, காண்டிகைச் செப்பு, வட்டில், கச்சோலம், இலைத்தட்டு, மண்டை, நெடுமடல், குறுமடல், பிங்காலம் முதலாய திருப்பரிகலங்களும்; கண்டநாண், புல்லிகைக்கண்ட நாண், பாசமாலை, மாணிக்கத்தின் தாலி, வாகுவலயம், பதக்கம், அரதனவளையல், அரதனக்கடகம், பவழக்கடகம், திருக்கைக்காறை, திருப்பட்டிகை, அரதனமோதிரம், நவரத்தினமோதிரம், மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகச்சிடுக்கின் கூடு, பிருஷ்டகண்டிகை, ஸ்ரீ சந்தம் என்ற மணிக்கலங்களும்; திருமுடி, வீரபட்டம், உதரபந்தனம், இராசாவர்த்தம், வயிரசாயலம், மூன்றாக அடுத்துவிளக்கின கண்டத்துடர், புறத்துடர், ஏகாவல்லி, திரிசரம், பஞ்சசரி, சப்தசரி, திரள்வணிவடம், தாலிமணிவடம், பொன்னாணிற் கோத்த மாணிக்கத்தின் திரு, கண்டநாண், பொன்னின்பட்டைக்காறை, திருக்களாவம், திருமகரம், திருக்குதம்பை, தொடு, வடுகவாளி, கொட்டு, பட்டைமேற் துண்டுவைத்து விளக்கின வளையல், கைக்கடகம், திருக்கால்வடம், திருவடிக்காறை, திருக்கால்மோதிரம் என்றின்னோன்ன பொன்னணிகலங்களும்; முத்தின் சூடகம், முத்தின் சிடுக்கு, முத்துமாத்திரை என்னும் முத்தணிகலங்களும் பலப்பல கொடுத்திருத்தலை இராசராசேச்சரத்துள்ள சாசனங்களிற் பரக்கக் காண்க.

இனி, மேற்கூறிய அரதனக்கலங்களில் 'சோனகச்சிடுக்கின் கூடு' என்பது ஒன்றாகும். அதன் முற்பகுதியாகிய 'சோனகர்' என்பது கிரேக்கர் அல்லது அரபியரைக் குறிக்கும் பெயராதலால், தென்னிந்தியாவில் பதினோராம் நூற்றாண்டில், சோனகர் செல்வாக்குற்றிருந்தமை அறியலாம்.

## இராசராசன்எடுப்பித்த வேறு ஆலயம்,

இனி, இராசராசன் தன் இருபத்தொன்பதாம் யாண்டில் தொண்டை மண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலத்தில் பெரும்பாணப்பாடித் தூநாட்டில் மேற்பாடியாகிய இராசாச்ரய புரத்தில் தேவதான இறையிலியாக அந்நகாரத்தாரிடத்தில் நிலம் பெற்று திருவரிஞ்சியீச்வரம் எடுப்பித்தனன் என மேற்பாடி சாசனங்களால் அறியக்கிடக்கின்றது. மேற்பாடி என்பது வட வாற்காட்டில் உள்ள திருவல்லத்துக்கு வடக்கே ஆறு கல் சேய்மைக்கண் உள்ளதொரு நகராகும். இராசாச்ரயன் என இராசராசனுக்கு ஒரு பெயருண்மையான், மேற்பாடி இராசாச்ரயபுரம் என்று வழங்குவதாயிற்று. அரிஞ்சயன் என்பது இராசராசனது பாட்டன் பெயராதலால், தன் பாட்டன் பள்ளிப்படையாக அதாவது இளைப்பாறு மிடமாக இவ்வாலயம் எடுப்பித்தனன். இதனை, "ஸ்ரீ கோவிராஜ ராஜகேசரி பன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு உ௯-ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடித் தூஞாட்டு மேற்பாடியாகிய ராஜாச்ரயபுரத்து நகரத்தோம் ஆற்றூர்த்துஞ்சின தேவர்க்குப் பள்ளிப் படையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எங்கள் நகரத்தி லெடுப்பித்தருளின திரு அறிஞ்சிகை ஈச்வரத்து மகாதேவர் ஸ்ரீ கோயிலுக்குந் திருச்சுற்றாலைக்குந் திருமுற்றத்துக்குந் திருநந்தனவனத்துக்கும் மடவிளாகத்துக்குமாக நாங்களித் தேவற்குக் குடுத்த நிலத்துக்கெல்லை" (S. I. I. Vol. III Part I page 23) என்னும் சாசனத்துட் காண்க.

(தொடரும்.)

உ

# அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திருவாளர், சி. வேதாசலம் பிள்ளையவர்கள், B.A., B.L. கரந்தை.

உயர் திருவாளர் திவான் பகதூர் சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களால் சிதம்பரத்தில் ஆங்கிலம், தமிழ், வடமொழிகளில் உயர்தரக்கல்விப் பயிற்சிக்கெனச் சிலவாண்டுகளாக நடத்திவரப் படும் கல்லூரிகளை அடிப்படையாக்கொண்டு தமிழ்நாட்டில் உயர் தரக்கல்வியையும் ஆராய்ச்சியையும் வளர்ப்பதற்காக ஓர் புதிய பல்கலைக்கழகம் "அண்ணாமலைப் பல்கலைக் கழகம்" என்ற அரிய பெயருடன் அமைக்கப்பெறுமென்றும், அப்பல்கலைக்கழகக் கட்டிடங்களும் அவற்றுடன் சேர்ந்த மாணவர், ஆசிரியர் விடுதிகளும் நிற்குமிடம் அண்ணாமலை நகரென அழைக்கப்பெறுமென்றும் சென்னைச் சட்டசபை முன்னர் ஓர் மசோதா கொண்டு வருவதாக அரசாட்சியார் விளம்பரஞ் செய்துளார்கள். 1923-ம் ஆண்டின் சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் சென்னைச் சட்டசபையாரால் கலந்து பேசப்படுங் காலையிலேயே ஓர் தனிப் பல்கலைக் கழகம் நிறுவச் சிதம்பரம் மிக்க தகுதியுடையதோரிடமாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. உயர்திரு. செட்டியாரவர்கள் பெரும் பொருள் செலவிட்டு நிறுவியுள்ள பல அழகிய கட்டிடங்களையும் சுவடிகள், அறிவுநூற் கருவிகள் முதலிய பொருள்களையும் உதவுவதுடன் நடைமுதற் செலவுக்கென்று இருபது இலக்கம் ரூபா கொடுப்பதாகவும் முன்வரவே, அரசாட்சியார் இப்பெருங்கொடையை மிக்க நன்றியுடன் ஏற்றுத் தாமும் சிறிது பொருளுதவி செய்வதாக ஒப்பி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவ ஏற்பாடுசெய்ய முன்வந்துளார்கள். இனிச் சட்டசபையார் அரசாட்சியாரின் மசோதாவை ஆராய்ந்து விதிகளைத் திட்டஞ்செய்வதே எஞ்சிநிற்கின்றது. *

* இப்பால் இம்மசோதா சட்டசபையின் ஒப்பம் பெற்றிருக்கிறது. இதனைப்பற்றிய ஆராய்ச்சிகள் அடுத்த மலரில் வெளிவரும்.

அண்ணுமலைநகரில் இப்பொழுது தொடங்குவதாகவிருக்கும் பல்கலைக் கழகத்துக்கும் சென்னை, ஆந்திரப் பல்கலைக் கழகங்களுக்கும் சிறப்பான வேறுபாடொன்றுண்டு. முற்கூறிய கழகங்கள் பல நாட்டுப்பகுதிகளிலும் நகரங்களிலுமுள்ள பலப்பல கல்லூரிகளைத் தம்முடைய ஆட்சிக்குட்படுத்திச் சிறப்பாகத் தேர்தல்கள் மூலமாகவே கல்வியை வளர்க்க முன் வந்தனவாகும். அண்ணுமலைப் பல்கலைக் கழகமோ அவ்வாறன்றி, பத்துமைல் சதுர அளவுள்ள ஓர் சிறு நிலப்பகுதிகொண்ட ஊரில் அமைக்கப்பெற்று மாணக்கர் யாவரையும் கல்லூரிகளைச்சார்ந்துள மாணவர் விடுதிகளில் அமர்த்தி மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தித் தமிழ், வடமொழி, இந்திய வரலாறு முதலியவற்றின் வளர்ச்சிக்கு முதன்மையான இடங்கொடுத்துக் கீழ்த்திசைக் கலைகளை மேனிலைக்குக் கொண்டுவரும் கருத்துடனே நிறுவப் பெறுவதாகும். எனவே, அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஏனைய கழகங்களைவிட மிக்க பயனும் சிறப்பும் வாய்க்கப் பெறுவதென்பதை எவரும் ஒப்ப வேண்டும்.

இவற்றுடன், தனதுதாத்தேதோன்றி ஒன்று பலவாய "கன்னடமுங் களிதெலுங்குங் கவின் மலையாளமுந்துளுவும்" சிறிது கற்பிக்கப் பெறுவதுடன் மேற்கூறிய தாய்மொழி, வழி மொழிகளுக்குட் காணப்படும் ஒற்றுமை வேறுபாடுகளை யாராய்ந்து தெளியவும், சித்தாந்தம் முதலிய தென்னுட்டுத் தத்துவ முறைகளை ஆராய்ந்து முறைப்படுத்தி யோதவும் தமிழ் இசை, நாடகம், ஆட்டம், மருத்துவம் முதலியவற்றைப் பழமையான நூல்களைக் கொண்டும் வழக்கிலுள்ள முறைகளைக் கொண்டும் ஆராய்ச்சி புரியவும் தனித்தனித் தவிசுகளும் குழுக்களும் ஏற்படுத்துவது மிகவும் வேண்டப்படுவதாகும். 'பி. ஏ.,' 'எம். ஏ.,' முதலிய மேனுட்டு முறைப்பட்டங்களை யொழித்துத் தேர்ச்சிபெறும் பல்கலைக் கழக மாணவர்க்குத் தமிழ் மணங் கமழும் இனிமையான பட்டங்களைத்தந்து சிறப்பித்தலும் இப் புதுக்கழகத்தின் கடமையாகும். உயர்திரு. செட்டியாரவர்களும் அவர்கள் வழித்தோன்றல்களும் அரசாட்சியாரும் அவர்களின் பணியாளரும் தமிழ்ப்பெரியாரும் இவ்வுயரிய எண்ணங்களைச்

சிறிதும் மறவாது என்றுங் கீழ்த்திசைக் கலைகளின் ஆராய்ச்சி, வளர்ச்சி, உயர்ச்சிக்கே அரும்பாடு படுவார்களென்று தமிழ்மக்கள் எதிர்பார்த்து மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருக்கின்றனர்.

இவ்வண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பெறுவதால் தமிழ்ப் பல்கலைக் கழகமென்றொன்று தோற்றுவிக்கத் தமிழ்ப் பெரியோர் பலர் எடுத்துக்கொண்ட முயற்சி வீண் போய் விட்டதோவென அஞ்சுதற்கிடம் ஏற்பட்டிருக்கிறது. அரசாட்சியாரின் எண்ணங்களை வெளிவருமுன்னரே தெரிந்துகோடற்கு ஆற்றல் பெற்ற பெரியார் சிலரும், நாட்டாள்கள் சிலவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகந் தோன்றுங் காரணத்தால் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருக்கொண்டு உயிர்பெற்று நிலவுவது இன்னும் சிலவாண்டுகளுக்கேனும் இயலாதென்று தெரிவிப்பது தமிழ்க் குடிமக்கட்குப் பெரியதொரு கவற்சியை யுண்டாக்குகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தையுந் தோற்றுவித்துத் தமிழறிவை வளர்த்துத் தமிழ் மக்களின் புலமையை உலகுக்குப் பயன்படுத்திப் புகழ் பெற்றோங்கி நிலவுதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்வது அரசாட்சியாரின் கடமையாகும். தமிழ் மக்கள் ஊக்கங்குன்றாது அதற்கென உழைத்துத் தாம் கோரியதைப் பெறவேண்டுவது மிக்க இன்றியமையாததாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சியிலமைந்துள்ள நிலப்பரப்பு மிக்க விரிவானதாகையால் பொருளும் முயற்சியுமிருக்குமேல் ஐந்தாறு பல்கலைக் கழகங்கள் அமைத்துக் கொள்ளினும், தமிழ்நாட்டார் தேவைக்குப் போதியதாகக் கருதுவதற்கிடமில்லை. வேண்டுமாயின், சென்னை நகரிலுள்ள பலகல்லூரிகளையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றதொரு பல்கலைக் கழகமாகப் பிணித்துச், சென்னையும், அண்ணாமலை நகரும், ஆந்திர நாடும்போகச் சென்னை மாகாணத்தில் எஞ்சிநிற்கும் நிலப்பரப்பைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிநிலையில் வைப்பது எவரும் விரும்பத்தக்க எண்ணமாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வாழ்க!
தமிழ்ப் பல்கலைக் கழகம் விரைவிற் றோன்றி யோங்குக!

# துயரங்கள்.

## க.

நமது தமிழ்த்தாயின் அருள் மகனும், சேதுநாட்டின் இறைவருமாகிய நமது தமிழ் மன்னர், மாட்சிமிக்க இராசாசேதுவா முத்துராமலிங்க சேதுபதியவர்கள் விபவ ஆண்டு ஆடித் திங்கள் கக ஆம் நாள் விண்ணவர் விருந்தாகிய செய்தி, இத்தமிழுலக மெல்லாம் திடுக்குற்று நடுங்கச்செய்தது. அந்தோ! தமிழ்த்தாயின் உறுதுணையாய புலவர்கள், மன்னர்கள், செல்வர்கள் முதலாய பெருந்தகையாளர்கள் நீடிய ஆயுள் பெறுதலின்றி, அத்தாயினை விட்டகல்வது தமிழ்த்தாயின் தவக்குறையே போலும்! நமது மன்னர், சேது நாட்டின் அரசாய் அதனைத் திறம்பெறக் காவல் பூண்டிருந்ததோடு, ஆங்கில அரசியலில் சட்டக்கழகம், மாகாட்டாண்மைக் கழகம் முதலாய அரிய நிலையங்களில் உயர் இடங்கள் பெற்று, உலகறிந்த பெரும் புகழினராக விளங்கினர். நமது மன்னர், கவியரங்கேறிப் புலவர்களைப் புரந்த பண்டை மன்னர்களோடொப்ப, தமிழ், ஆங்கிலம் முதலியவற்றில், நிரம்பிய புலமையும், இன்னிசைச் செல்வமும், கடவுட்பற்றும், புலவர்மாட்டுச் சிறந்த அன்பும் பெற்றவர். நமது மன்னர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகிப் பல்லாயிரக் கணக்கான பெரும் பொருள் உதவியவர். நமது மன்னர், தமிழ்ப் பெரும்புலவர் திரு. ரா. இராகவையங்காரவர்கள் முதலியோரை உரிமைப் புலவராக்கி என்றும் போற்றிவந்ததோடு, தமிழ் நூல் வெளியீடுகள் பலவற்றிற்குப் பெரும் பொருள் உதவிவந்தவர். நமது மன்னர், தமிழ்ப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழுவிற்குத் தலைவராகி, அத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தினவர். நமது மன்னர், இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பால் மிக்க அன்புடையராய், இதன் ஐந்தாம் ஆண்டு விழாவிற்றலைமைதாங்கிச் சிறப்பித்தவர். (இவர்கள் விண்ணுலக வாழ்வுற்ற செய்தியறிந்தவுடன், நமது சங்க நிறைவேற்று கழகம் கூடித் துயரங் காட்டியுளது.) நமது மன்னர்தம் பிரிவால் பெருந்துயருற்ற அவர்தம் அருமை அன்னையர்க்கும், மனைவியர், மக்களுக்கும், புலவர்கட்கும், சங்கங்கட்கும் தமிழ்த்தாய் ஆறுதல் அளிப்பளாக.

**மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் பாடியது.**

மதியினுக்குக் கட்டளைக்கல் வாதத்துக் குரையாணி
துதியினுக்குப் பெருநிலயஞ் சூழ்ந்தார்க்கு வாழ்ந்ததுணை
நிதியினுக்குத் தனதனெனு நீள்ராச ராச! வெந்தப்
பதியினுக்கு ளொளித்தனையோ படரினுக்கு ளெமைவிடுத்தே.

உ.

தஞ்சை மாநகரில் தமிழ்ப் பெரியார் எனச் சிறப்புற்றிருந்த திருவாளர், இராவ்பகதூர் சீநிவாசபிள்ளையவர்கள் நிகழும் விபவ ஆண்டு, ஆவணித் திங்கள், ௩௰-ஆம் நாள் தமிழ்த் தெய்வத்தின் திருவடி நீழல் எய்திய செய்தி, தமிழ் நாட்டினரைத் துயர்க்கடலில் ஆழ்த்திய மற்றொரு துயரமாகும். நமது பெரியார், ஆங்கிலக் கல்லூரியிற் படிக்கும் போதே ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்பதற் கேற்ப, நுணுகிய அறிவும், சிறந்த தமிழ் அன்பும், எற்ற தமிழ்த் தொண்டும் உடையாராயினர். பின்னர், சட்டப்புலமை எய்தி வழக்கறிஞர் தொழிலிற் சிறந்த திறமை காட்டி விளங்கிய காலத்தும், தமிழ் மடங்களின் காப்பிற்குரிய வழக்குக்களே பெரிதும் உடையராயிருந்தமையின், தமிழ்த் தொண்டே புரிந்தவரானார். அதன் பின்னர், ஓய்வுற்றிருக்குங் காலத்தோ, ஓய்வின்றித் தமிழ் நூற்களை ஆய்ந்து, தம்பால் வரும் புலவர்களோடு அவ்வாய்வுரைகளைக் கூறிக் கேட்டு மகிழ்ந்தும், இதுகாறும் எய்தாத சிறப்பைத் தமிழ் மகள் எய்துமாறு “தமிழ் மொழி வரலாறு” எனும் ஆராய்ச்சி நூல் எழுதி வெளியிட்டும் தமது தமிழ்த் தாயின் கடமைகளைச் செலுத்தியவர். அந்தோ! இப்பெரியார் இன்னும் பலகாலம் உடல் நலமுற்றிருப்பின், எத்துணையோ அரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதியிருப்பர். என் செய்வேம்! எமது தவமிலை அத்துணையே போலும்! நமது பெரியாரின் தமையன் மகனார், திரு. கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கட்கும் மற்றைய குடும்பத்தினர்க்கும் நமது இரங்குதலைத் தெரிவித்து, ஆறுதல் அடைய வேண்டுகிறோம்.

---

செந்தமிழ்த்தா யின்மகனுஞ் சீநிவா சப்பெரியன்
அந்தோயாங் குற்றனமே! ஐயகோ!—இந்தவொரு
மாநிலமே யன்றம்ம மற்றெங்குத் தேடுறினும்
காணுவமோ இன்னுமொரு கால்!

உ

# இன்பப்பேறு.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்,
தமிழ்ப்புலவர், சலகண்டபுரம்.

(தொடர்ச்சி துணர் ௩, மலர் ௧, பக்கம் ௧௮.)

["இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு"]

இக்குறளில் ஆசிரியர், துன்பத்தையே இன்பமெனக்கோடல் அமையுமெனக் கூறிய நுட்பத்தை விளக்கி உரையாசிரியர்,

(௧) துன்பமும் உயிர்க்கியல்பன்று. (௨) அஃது கணத்தே தோன்றி யழியுந்தகையது. (௩) மனத்தின் நினைப்பால் மாற்றத் தகுவது எனப்பொருட்டோ டெடுத்துக்காட்டித் துன்ப நுகர்ச்சியையே இன்பநுகர்ச்சியெனக் கொள்ளல்கூடும் என நிறுவியுள்ளார்.

இவ்வுண்மையை ஓர் சிறுகதை வழித்தாய் உணர்த்தலாம். பற்பல நாடுகட்குச் சென்று ஆண்டாண்டுள்ள காட்சிகளைக் காணவிரும்பிப் போந்தானொருவன், வழியில் எதிர்ப்பட்ட அழகிய பட்டினமொன்றைக் கண்ணுற்று, அகன்று நீண்டதோர் ஆறு கிடந்தன்ன பெருந்தெருக்களின் இருமருங்கும் வெள்ளிக் குன்றங்கள் பல வீற்றிருந்தனைய வெண்சுதைதீற்றிய மேனிலைமாடங்கள் நிரை நிரையமைந்து நீள்வான் தொட்டுயர்ந்த வனப்பையும், அவற்றின் சுவர்ப்புறங்களில் எண்வகைச் செய்தியும் உவமங் காட்டிக் கண்ணுளர் தீட்டிய ஓவியங்களின் உருவமைப்பையும், நறுமணங்கமழும் புதுமலர் செறிந்த பல உய்யானங்களையும், இடையே அகன்ற புளினத்தடங்களின் பொலிவையும், மகளிரின்

பல்வகை ஆடல் பாடல்களையும் கண்டு கண்டுவந்து களிக்கும் மனத்தனாய் அவ்வூர் வேந்தன் அரண்மனைத் தெருவின் வழிச் செல்லா நிற்புழி, ஆண்டுக் கந்துநீத் துழிதருங்கடாஅக் களிறொன்று, மேலோர்க்கொன்று காழோர் கையறக் கப்பணஞ்சிதறித் தடுத்தும் தடையுறாது, வளியாற் கொட்புறாஉம் வங்கம்போலத் தெருமரலெய்திச் செல்வழி யுணராது தன்மேற் கடுவரைநீரிற் கடுத்துவரக்கண்டஞ்சி, நடுநடுங்கி, ஆருயிர்காக்கும் ஆதரவதனால் அருகிலமைந்துள்ள பெரியதோர் அரண்மனைக்குட் புக்கானாக, அம்மாடம், அவ்வூர் மன்னவன் காதன் மடமகள் வாழும் காவற் புரமாதலின், வாயில்காவலர், கடும்புலிபோற் சீறிச்சினந்து யாவனடா நீ! ஈண்டுப்புக்கது பெருந்தவறு, வருதி எனக்கை தொட்டீர்த்துப் போய்க் காவலனாணையாற் கடுஞ்சிறைப்படுத்தினர். இங்ஙனம், சிறைக்கோட்டத்துத் தமியனாயிருக்கும் அவன், முதலில், தான் கண்ணுற்ற அரும்பெறற் காட்சிகள் பலவற்றையும் எண்ணித் தான் தன்னூரிலேயே இருப்பின் இத்தகை வளங்களை கண்டுமகிழ முடியாதன்றோ என இறும்பூதெய்தி முகமலரக், கண்கள் மதர்ப்பொடுதாவித் திசைதொறும்பாய மகிழ்வுற்றும்; பின்னர், தன் முன் கொல்வான் எதிரிய கூற்றமே போன்று, கடாஅ மெடுத்தூற்றுங் கருங்களிறு தோன்றியதை நினைக்க அங்கம் நடுங்கி அச்சமெய்தித் தலைகுலுக்கி மருண்ட நோக்கொடு இன்னும் அம்மாக்களிறு இங்கு வருங்கொலோ என்னப் பதைப்புற்றரட்கியும்; மற்றும், தவறி வீழ்ந்தோர்க் கரிவாளும் எதிர்ந்தாலொப்ப அவ்யானைக்கஞ்சி அரசன் புதல்வியின் கன்னிமாடவாயிலிற் கால்வைத்தாங்கே, தொடுதோலடியினர், இடைநீள்கச்சினர், வயப்புலிப்போத்துறழ் வன்கட் சீற்றத்தர், கன்னகு தோளர், கைதொட்டீர்த்த கடுமையைக் கருதியபோழ்து கண் சிவப்பூர உதட்டைமென்று அந்தோ! அப்பதகர் என் அச்சக்காலை அஞ்சேலென்னாராகித் தவறுபாடு எட்டுணையுமியற்றா என்னை இக்கொடுஞ் சிறையிலிடுவித்தனரே எனத் தன்னுட் பொங்கும் சினந்தலைக்கொண்டு சீறிச் செயிர்த்து நோக்கியும்; மறுகணத்தே தன் ஊரிலுள்ளாராய மனைவி, மக்கள், உற்றோர், நட்டோர் முதலானோரைப்பிரிந்து அவரறியாதவிடத்தே

தமியனுய்ச் சிறைப்புக்க செய்தி ஆண்டுச் சென்றறிவிக்குநர் யாவர்? அவர்களறியின் என்படுவர்? என எண்ணியகாலை, பனிவார் கண்ணொடு பதைத்துச் சோர்ந்து விம்மிவிம்மிப் புலம்பலுற்றும்; பின்னர், ஊழ்வலிகடக்குநர் யாவரே? ஆயினும் என்? இன்னும் சின்னாட்களில், அறங்கூறவையத்தினர் என்குற்றத்தை நேரில் வினவி முறைசெய்ய வருங்கால், புதியேனாகிய யான் களிறுகண்டஞ்சி நடுங்கி உயிர்காக்க ஓடி அறியாது அக்கடிமனை வாயிலிற் கால்வைத்தது தவறன்றே என உண்மைகூறி மன்றாடி வழக்குரைத்து உய்தி பெற்று மீள்வேன் என நினைத்தபோது திக்குகடோறும் பெருமிதத்தோடு சுழன்று நோக்கும் கண்களால் மலர்ச்சியுறும் முகப்பொலிவுடையனாக மிகமகிழ்ந்தும் இன்னணம் சில்கணத்தே பலமாறுதல்களை யடைந்தனன்.

இச்சிறுகதையால், நெஞ்சின் நினைவுகட்கேற்ப இன்ப துன்பப் புலப்பாடுறுமென மேல் தேவர் கூறிய திருக்குறளுண்மை தெற்றென்னு மன்றே?

இஃதுண்மையேயாக, கண்முன் நமக்கே நேரும் துன்பங்களை இன்பங்களே யாமெனக் கருதும் உள்ளத்திட்பம் எளிதில் அமைவதொன்றாகாதே என்பிரேல், மற்றும் இன்பம் வழங்கும் வேறு கருவிகளுளவோ என அத்தெய்வத் தமிழ்மறையைத்தான் வினவ வேண்டும்.

“இன்பம் இடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்” அதாவது:—

‘ஆசையறின் இன்பத்தே வாழலாம்’ என மற்றோருத்தரம் அவ்வுத்தரமறை தருகின்றது. இதுகாறும் இன்பத்தை விளைக்கும் கருவிகளை ஆய்ந்த நமக்கு, அவ்வின்பத்தைத்தோன்றாது மறைக்கும் தடையீது, அஃது தொலைந்தாலன்றி இன்பம் பெறுதற்கியலாது எனப் பொய்யாமொழி புகன்றுள்ளது. எனை அறிஞர் நூற்களும் இதனையே மடித்து மடித்துப் பலவிடங்களிலும் பகராநிற்கின்றன. “ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள்— ஈசனோ டாயினும் ஆசையறுமின்கள்” “அற்றது பற்றெனி—

ஆற்றதுவீடு" "ஆசையெனும் பெருங்காற்றா டிலவம்பஞ் சென்வு மன மலைபுங்காலம், மோசம்வரும்—நிராசையின்றேற் றெய்வ முண்டோ." இன்னும் இவ்வாறு பல்லாயிரமேற்கோள் நிரட்ட லாம். இன்பத்தைபடைய வேண்டின் ஆசையை அறத்தொலைக்க வேண்டியதே. நன்று! நன்று!! ஆசையை நீக்கல் பகற்கனவே, வெறும்பேச்சளவே, செய்கையில் சிறிதேனும் கூட்டலாகுமா? என்னேபேதமை! ஆசையின்றேல், இவ் வுடம்பேன்? மனைவி மைந்தர்கள் எற்றுக்கு? இம்மை மறுமையின் வாழ்க்கைதான் எதற்கு? "தூரத்தே தோன்றும் உருவம் தெரியவழிகேட்டால் கண்களை மூடிக்கொண்டு நோக்குக" என்பதுபோல், இன்ப மடைய வழிவினவினால் ஆசையை விடுக்க என்பதோ? முற் கூறிய சில வழிகளினும் இஃது நம்மாற் சிறிதும் இயலாது தொன்றேயாயிற்று என எம்மோடு வெறுப்பீரேல், யாம் செயக்கிடந்ததென்? எது மிக அரிய பெரிய பொருளோ, அது னைப் பெறுவது எளிதாயிராது என்பதனை நினைவு கூர்மின்! உண்மை இதுவே. மிகவும் முயன்றும் பெரியதோர் வருத்தங் கூர்ந்தும்தான் இன்பத்தை அணுகவேண்டும். "உழப்பின் வாரா வுறுநிக ருளவோ" என்னும் பெரியோர் சொற்படி விடாது பழக்கத்தாலும் மனவெழுச்சியாலும் பன்னாட்கள் உழைத்துத் தான் ஆகவேண்டும். அற்றேல், இன்பநுகர்ச்சிக்கு வழி கூறிய வாறே இவ்வாசை நீக்கத்திற்கும் பல வழிகளிருக்கலாமன்றோ? அவை யாவை? என மீட்டும் எம்மைக் கேட்பீர்போலும்! "இன்பம் வேண்டுவோன் துன்பந்தண்டான்" என்பவாகலின் அவாவை நீக்கற்கும் பல வருத்த வழிகளிருக்கின்றன. அவற் றுட்டலையாயது மெய்யுணர்தலே. நாம் காதலிக்கும் பொருட் களின் உண்மைத் தன்மையை ஆராய்ச்சியோடு ஊன்றி நோக்கல் வேண்டும்.

"இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு." என்பதால் அவாவனைத்தும் மயக்க உணர்ச்சியானே தோன்றிப் பெருகு மென்கை துணியப் படும். முதற்கண் 'நான்' எனத்தலைப்படும் இவ்வுடம்பை காடு வோம். அது—

"நாடியோ என்போ நரம்புசிக் கோழையோ
தேடி யெனையறியேன்—" என்றவாறே தசை, தோல், என்பு, நரம்பு, செந்நீர் முதலாய எழ்பொருட் கூட்டாவரல் யாக்கைப் பெற்று,

"பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை"

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது" என ஆன்றோரால் இழிக்கப்படுவதாய், உயிர் நீத்தவழிப் பிணப்பெயரோடு வீழ்ந்தழிவதாயுள்ளது. ஆகலின் இதனை ஓர் இருப்பிடமாக் கொண்டுள்ள உயிராம் எனக்கிதனோடு தொடர்பாவென்னுளது? இங்ஙனமே உறக்ககாலத்துளவாகியும் கோளிலவாம் பொறி புலன்களும், மூர்ச்சை மயக்கங்களில் கொல்லனுலைக் குருகெனவுயிர்த்தும் அறிவுறாத மூச்சுக்காற்றும், (பிராணவாயு) ஒன்றை நினைப்புழிப் பிறிதொன்றை மறந்து நிற்கும் மனமும், கனவில்லாதவுறக்கத்தி (சுழுத்தியி)ல் தலைப்படா தொடுங்கும் ஏனை உட்கருவி (அந்தக்காணங்)களும் உயிராம் என்னின் வேறுமென்பதொருதலை. அச்சோ! 'நானே' என்றிதுகாறும் என்னை ஏய்த்த உடல் முதலியவைகளே வேறுயொழியுமேல் இவ்வுடலின் தொடர்பால் எனக்குரியாரென எண்ணிய உற்றார் பெற்றோர் மனைவி மக்கள் முதலானோரோ டுறவு எங்ஙனம் கூடுவதாம்? மற்றும் என்னனையராய் உலகப்பற்றுட்பட்டு நிலைகலங்கித் தம்மைத்தாம் காக்க வல்லாரல்லராய் அலமாலுறும் அன்னோர்களாற்றும் யானெதிர்பார்க்கும் உதவி யாதாம்?

இஃது "வீழ்வார்க்கு வீழ்வார் துணை" யாவது போலும்.

"குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிபுக்கவாறு" போலும்

நகுதக்க செய்தியாமளவே யன்றிப் பிறிதில்லை. இனி உயிரெனப் படும் என் இயல்புதான் யாது?

"இந்தவுடல் கருவிகரணமும்நீ யல்லையாதொன்று பற்றினத னியல்பாய் நின்று—பந்தமுறும் பளிங்கனைய சித்து நீ—" என முற்றுணர்ந்த மூதறிஞர் பேரருள்சுரந்து பிழைக்கும்வழி புணர்த்தியவாறே சார்ந்ததன் வண்ணமாம் தன்மை என் தன்மை. ஆயின், எனக்கிப்பிறவி எங்ஙன் எய்திற்று? யானே இவ்வுடலைத் தாவிப்பிடித்தேனோ? இவ்வுடலே என்னை ஓடிவந்து பற்றிற்றோ? இல்லை இல்லை; முன்னை வினையால் மூண்டதிப்பிறவி. அற்றேல், அவ்வினையை இயற்றிய யானும் அதன் இருக்கையை உணர்ந் தெய்தலாற்றேன். அறிவில் (சடப்) பொருளாம் அஃதும் இயற்றிய என்னை யறிந்தெய்தாதே. பின் எங்ஙனம் கூடிற்று? ஆம்! ஆம்! அறிகின்றேன். வினையையும் எனையும் வேறிருந் துணர்ந்த முற்றறிவுடைய முழுமுத லொருவன் கூட்டக் கூடினே மாகல் வேண்டும். ஆ! ஆ! அப்பேருட் பெருமான் என்னை யறிவிக்காமலே எனக்கு வேண்டுவ வனைத்தும் விழைந்து நல்கு கின்றான் அல்லனோ! என் பிறவியை நீக்கற்கு அவன் பிறவி யற்றவனாகவும், என்பற்றைப் போக்கற்கு அவன் பற்றற்றவனாக வும், என்னை மீட்டும் இறவாது காத்தற்கு அவன் இறப்பில்லாத வனாகவும், எனக்கின்பம் அளித்தற்கு அவன் இன்பவடிவினனாக வும், இலங்குகின்றானாதல் வேண்டும். அவன் பொன்னடியைத் தலைப்பட்டாலொழிய என் இன்னல் ஒழியாது. தவாப்பெருந் தலைவனைச் சார்ந்துழியல்லதென்—அவாப்பெருங் கடலினலைப் பொழிந் துய்கிலேன்; பொய்ப்பொருள் மீது புணர்த்தஎன் பற்றை யம்—மெய்ப்பொரு ளடிக்கே வேண்டிச் சேர்ப்பேன்; என்றிங்ங னம் தன்னையும் தனக்குக் களைகணும் தலைவனையுங் குறித்துக் காண்டலே மெய்யுணர்தலாம்.

> "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டு மிடும்பை யில."

> "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தாற் கல்லான்
> மனக்கவலை மாற்ற லரிது."

> "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
> ரிறைவனடி சேரா தார்."

என மெய்புணர்வுடையார் விரும்பும் இறைவனையன்றி இன்பம் பெறுதற்கில்லை எவ்வகையினும் எனத் தமிழ்மறை மூழங்குகின்றது. ஈண்டு மற்றொருண்மையும் கருதற்பாலது. மனத்தே அவா எழுதற்கு, பொறிவாயிலாக உலகப்பொருட்களுணரப் படுந்தோறும் அப்புறப்பொருட்களுக்கும் உட்கருவிகளுக்கும் ஒரு சேர்க்கை (பற்று) உண்டாக, அப்பொருட்களில் நல்லன எனக்கு வேண்டும் எனக்கருத்துறுதலே காரணமாதலின், ஐவாய வேட்கையவாவினை அந்நிலையில்லாப் பொருட்கண் மேற் செலுத்தி அவற்றிற்குக் கேடுறுங்கால் துன்புற வருதலால், என்றும் அழியாப் பொருளாயுள்ள இறைவன் பொன்னடிக்குய்க்கின், மிக்க இன்பம் துய்க்கத்தடையில்லை. உயிருள்ளதனையும் உடனிற்கும் மனம் யாதானு மொன்றைக் கருதிக் கொண்டன்றி நில்லாவியல் பிற்றாதலின், அஃது பிறிதொன்றைக்கருதிப் பித்துக்கொள்ளாது எல்லாம் வல்ல ஆண்டவன் அடியைப்பூண்டு கிடக்கப்பயிற்றல், அறிவுடை மக்களாய் இன்பம் விழையும் எவர்க்கும் தவிராக்கடனேயாம். இதுகாறும் யாம் விரித்துரைத்த இவ்வெல்லாம் அடக்கி நம் தமிழ்த்தாய் அணிமேகலையாம் மணிமேகலை, ஒரு சில அடிகளில் விளக்கிக் காட்டுகின்றது.

> "பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெருகிய வின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்ன
> தற்றோ ருறுவ தறிக"

காண்மின்! காண்மின்!! எத்துணைப் பெரிய பொருட்களையும் மிகச்சுருங்கக்கூறும் சொல்வளம் நம் தமிழ் அன்னைக்கு வாய்த்தாங்கு வேறெம்மொழிக்கும் வாய்த்தின்று. நன்றே அவள் நலம்! வாழ்கஅவள் வென்றி!!

அன்பர்காள்! இறுதியாக நீவிர் என்னை வினவுதல் அறிவேன். அஃது, இறைவன்பால் அன்பு செலுத்துமாறு யாங்ஙனம்? என்பதன்றே. யான் இறுக்கும் விடையை நினைவு கூர்மின்! நம் பெரு நாவலர் பொதுமறையில்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

என அருள் சுரந்தளித்த இவ்வாரா வின்னமுது, துறவதிகாரத் திறுதியிற் சுடர்விசி நின்று, அடுத்த மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தோடு சென்றியைந்து, இறைவனருள் பெற்றவழி மெய்யுணர்வு பயன்றருமெனக் குறிப்பதாகலின், "அவனரு ளாலே யவன்றாள் வணங்கி" எனவும் "அவனருளாலே பத்தி நன்குண்டாம் பத்தியா லவனரு ளுண்டாம்" எனவும் புகன்ற ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் கருத்தைத் துலக்கி யுள்ளது. மேலும், ஓர் குடத்து நிரம்பிய நீரை வேறோர் குடத் தும் பையப்பையப் பெய்யுங்கால் ஊற்றுங்குடத்துக் குறையு மளவு ஊற்றப்படுங்குடம் நீரானிரம்புதல் போல, இறைவன் திருவடிக்கட் சிறிது சிறிதாகச் செலுத்துந்தோறும் உலகப் பற்றுக் குறைவுற்றுவந் திறுதியில் "மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்" "நெஞ்சம் முனக்கே யிடமாக வைத்தேன் நினையாதொருபோது மிருந்தறியேன்" "நினைத்தனைப்பொழுதும் மறந்துய்வனோ" "உன்னை மறந்திடு வேனோ மறந்தறியேன் மறந்தாலுயிர்விடுவேன் கணந்தரியேன்" என்றெல்லாம் அவனருள் பெற்றுய்ந்த ஆன்றோர் உரைத்தாங்கு, ஆராத இன்பம் அடைதற்குப் பொருட்டாய பேரன்பு பெருகி நிரம்புதல் திண்ணமேயாம்.

அப்பா! இதுகாறும் பலபடவாராய்ந்துழன்ற நமக்கு, இன் பம் தன் மெய்ந்நிலையைக் கைந்நிலையாகக் காட்டிற்று. இப்போது நாம் பெற்ற முடிபுகளை நிரலே நிறுத்திக் காண்போமாக.

(க) அழிவுபெறும் பொருட்களால் எவ்வாற்றானும் இன் பம் பெறேம்.

(உ) இன்பம் வரும் போதின்புறுமை இன்பப்பேற்றுக் கோர்வழி.

(ங). துன்பத்தையே இன்பமென நினைக்கினும் இன்பம் பெறலாம்.

(ச) இன்பத்தைத் தோன்றாது மறைத்துத் தடுக்கும் ஆசையை நீக்கினன்றி அது கிட்டாது.

(ரு) ஆசையை அறுத்தற்கு மெய்யுணர்வு தேவை.

(சு) மெய்யுணர்வும் இறைவன்மாட்டன்பு செய்யினன்றிப் பயன்தராது.

(எ) இறைவனருளைப் பெறுதற்கவன்பா லன்புவேண்டும். அவனருட்டுணையாலே மனம் ஒருங்கி யன்புற அதன் வழித்தாய் இன்பமெய்தலாம்.

(அ) மெய்யுணர்வுடன் கூடிய இறைவனருள், முதற்கண் இன்பம் நல்கிப் பின்னர் விடுபேறருளிப் பிறவியை நீக்கும்.

(கூ) உலகப்பற்றுட்பட்ட மனத்தைப் பையப்பைய இறைவனடியை நினைவுகூரப் பயிற்றிவரின், நாளடைவில் நிரம்பிய அன்பு பேரின்பந்தரத்தவறாது.

தமிழ்த்தாய் மக்களாம் தவப்பெருஞ் செல்வர்காள்! மேற்கூறிய உண்மைகளை முற்றறிந்து இன்பம்நுகர்ந்த நம் வாதவூரடிகள், மலர்வாய்ப் பெருகிய வாசகத்தேனைப்பருகி இக்கட்டுரையை முற்றுவிப்பாம், அஃது ஈண்டைக் கேற்புடைத்தாகலின்.

"நினைத்தனை யுள்ளதோர் பூவிற்றே னுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"

இத்திருமறைப்பொருளை அறிந்தவாறு எடுத்தபொருண் மொழிக் கேற்றபெற்றி ஒரு சிறிது கூறுதும்.

அவா, சினம், கடும்பற்றுள்ளம், மருள், செருக்கு, உட்பகை என்னும் ஆறு தீப்பண்புகளையும் ஆறுகாலாகக்கொண்டு, இருவினையாய சிறகொடு பறந்து ஆனைச்சுவைத்தேன்பருக விரும்பி (இன்பம் துய்க்க) கண்ணுக்கெதிர்ந்த பன்னிறப்பூக்கடோறும் (பல்வகை அழகு வாய்ந்த பற்பல உலகப்பொருட்களில்) அஃது

நிரம்பியுள்ளதெனப் பிறழவுணர்ந்த பேதமை தூரப்ப விலகத் தெழுந்து (இன்பமிருக்கின்றதென மருண்டு) பேராசைப் பிணிப் பொடு பல்காற் சுழன்றும், ஒலித்தும், தும்பியாற்றுதைத்தும், ஊதியும், முரன்றும் ஓசையற்றடங்கியும், (பலவகை வருந்தி) நின் சிறுவயிறு நிரம்பா நிரப்பொடு* சிறிதேகிடைப்ப வறிதே பெயர்ந்து (கருதித்துய்த்தவற்றால் அவா அடங்காது) பொழில் பலபுக்குக் கழிபேரயர்வொடு-முன்சுவைத்ததுவும் பின்பசி தூண் டற்-கேற்றதாகி †யாற்றிடைக் கழிய-முண்மேற் படலும் கண் மேல் மோதலும்—மற்றொரு வண்டு பெற்றதை வெளவலும்—கடு வெயில் காயக் கால்விசைத்தலைப்பப்--பனியோ மழையோ படர் சிறைவீக்க-வுழன்ற பேறன்றிவே றொருபயன் பெறுமே--அளித் தக் காயென ‡அம்முதற் பெயர்பெறீஇ-வருந்துறு பேதை வண்டே வம்மோ! (மேலும் பல துன்பங்களைப் பொறுத்துத் துய்க்கலா மின்பமென வுழலும் மனமே! வருக.) நீ இப்பூக்க ளால் வயிறாரத் தேன் பருகுமா றெப்போதுமில்லை. ஆயின், நின் பசிதீர வுண்டற்கேற்ற தேனிருக்குமிடம் நினக்காகப் பரிந்து பல வினவிப் பகலிரவாகப் பாடுபட்டும் யான் அறிந்துவைத் ததை உரைக்கின்றேன். ஆண்டுச் செல்வையேல், நின்னொடு புரைகுநரில்லை யிந்நிலத்து. அத்தேனினியல்பைக் கூறக் கேட்பாயாயின், மிகவும் இறும்பூதெய்தி விம்மிதமுறுவை. இத் தேனைப்போல், வாய்வைத்துச் சுவைக்க நாவுள் இருக்குந்தனையும் சுவைந்து ஒழிவதன்றப் புதுத்தேன். அதனை நினைத்தாலே நினைத்த நெஞ்சம் மிக வினித்துச் சுவைதரும். அம்மட்டோ இருவிழிக்கெதிர் பெறக்கண்டால், ஆங்கே நனிபெரும் இனிப்பு நண்ணும் திண்ணமே. அந்நறவினைப் பேர் கூறும் அளவே நாக்குமுழுவதும் தித்திப்பாலியன்றாங்கே மாறுவின் சுவை வழங்க லாற்று. இப்பூக்கள் போன்று, ஒருகால் மலர்ந்தும், ஓர்கால் புலர்ந்தும் நின்னை ஏமாற்றும் தன்மையறியாத அப்பூவின் தேன், எஞ்ஞான்றும் ஒருநாட் போல ஓயாது பெருகும். இவ்வுலகப் பூத்தேன் முன்தரும் சுவைக்குப்பின் புளிப்புச்சுவையும் தரும். அன்றி உண்டபோதே ஓர் சிற்றின்பந்தரும். அதுவோ உனது

*நிரப்பு—வறுமை. †ஆறு—வழி. ‡அளி—வண்டின் ஓர் பெயர்.

வல்லென்ற என்பும் வெள்ளிய வெண்ணெய்க் கட்டியினியற்றினாற் போல நெகிழ்ந்து நெகிழ்ந்தின்பத்தேறல் உடல் முழுதும் பொங்கிப் பொங்கித் துளும்பப் பெருவகை பெருமிதத்தோடு மனம் பொறுக்கலாற்றாவண்ணம் மேலிட்டெழ, நின்னைக்களியாட்டயரச் செய்விக்கும். இவ்வளவுமிருந்தும், அத்தேன் எட்டற்கரிய நெடுவரையிலோ, மிக ஓங்கிய மரக்கிளையிலோ, யாரும் புகாத கொடும்புதற்குள்ளோ இருப்பதேற் பயன் என்? எனத் திகைக்கின்றாயோ? இல்லை. யாவருக்கும் பொதுவாய வெளியிலே, தானே விளைந்து ஆடி ஓயாது பொழிந்துகொண்டேயிருக்கின்றது.

'கறப்பதுழக்குப்பால் உதைப்பது பல்போக்கும்' என்றாற் போல உன் உழைப்பையும் வயிற்றெரிச்சலையுங் கொட்டிக்கொண்டு ஓர் துளித்தேன் தரும் இப்பூக்கள் போன்றதன்றஃது. நின் சிறிய தும்பியைச் சற்றுயர்த்தி ஓர் முறை 'ரீம்' எனு முன்னமே தானே நின்பால் எதிர்கொண்டு வந்தழைத்து அத்தகுதேனை அருந்த அருத்தும். உய்யவேண்டின் என் உறுதிமொழி கேள். அப்பெருந் தெய்வத்தேனை நாடிச்சென்று ஆண்டே நின் செவ்வழி, விளரி முதலிய செவ்விய பண்களைப் பாடுவாயாக. நீ (கோ—தும்பி) தும்பிகட்கு வேந்தனாங் குலத்தோன்றலாகலின் நின் பெருமைக்குப் பொருந்தும் பெற்றியறிந்துகொள். (ஈண்டு உயரிய மக்கட் பிறவி பெற்றார் தில்லைமன்றத்தொரு சேவடி காட்டிக் குனிப்புறும் கூத்தனை நினைந்து வாழ்த்தி நிலைபெறும் இன்பம் அடைகவென்று குறித்தறைந்தது காண்க.)

"ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே
என்னுடை யன்பே." (திருவாசகம்.)

"அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே." (தாயுமானர்.)

தென்னாடுடைய சிவமே போற்றி
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி.

திருச்சிற்றம்பலம்.

(முற்றும்.)

348

உ

# தமிழர் நல்லிசைப் புலமை.

திருவாளர் V. சண்முகம் செட்டியாரவர்கள், தஞ்சை.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலேகிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்

என வந்தருவார் கூறிப் போந்தவாறு, கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும் தன்னுதரத்துதித் தெழுந்து ஒவ்வொன்றும் பல மொழிகளுக்குத் தாய் மொழியாக ஆயிடினும், சிலமொழிபோல வழக்கொழிந்து அழியாது சிறப்புற்ற இளமையினை எக்காலத்தும் உடைய பொருட்டினால், கன்னித் தமிழெனப் பெயர் பெற்றனள் நம் தமிழ்த்தாய்.

வடநாட்டினராகிய ஆரியமக்களின் மொழியாகிய ஆரிய மொழிக்கு எதிராக உண்டாகிய தமிழ் மொழியானது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் மூன்று பெரும் பிரிவுகளையுடைமையின் முத்தமிழ் எனவும் பெயர் பெற்றுளது.

இத்தமிழ்மொழி பண்டைக்காலத்தில் முத்தமிழிலும் வல்ல புலவர்களாலும், தமிழ்நாட்டு மன்னர்களாலும் மிகச் சிறப்புற்றிருந்தது. பின்னர் இஃது எவ்வளவோ இடையூறுகளை அயல் நாட்டினராலும், கடலாலும் அடைந்தும் அழியாமலே இப்பொழுதும் இருந்து வருகின்றது.

ஆனல் இந்நாளிலே அயல் நாட்டினராலும், அயல் நாட்டு மொழியாலும் சிறிதளவு இடையூறு நம் தமிழ் மொழிக்கு

ஏற்பட்டு வருவது வுண்மையே யெனினும், அது தற்காலத் தமிழ்ப் போலிப்புலவர் பலரால் உண்டாகும் இடையூற்றைப்போல் அவ்வளவு மிக்கதன்று. ஏனெனில் இவர்கள் நிகண்டில் சில செய்யுட்களையும் இராமாயண பாரதமாகிய பழம் புராணங்களில் உள்ள சில செய்யுட்களையும் மனப்பாடம் செய்த அளவிலேயே தாம் பெரும்புலவர்கள் எனக்கூறிக்கொண்டு, 'இராமாயண ஆசிரியராகிய கம்பர் எழுந்நூறு விழுவதன் முன் கவிபாடியது எழுநூறே: ஆனல் யாமோ எழாயிரம் பாடிடுவம்" எனக் கண்டவாறு செய்யுட்களை யியற்றத்தொடங்கி விடுகின்றனர். இவர்கள் அறியாமைதான் என்னே!

"சுட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குரும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்று முடிந்துதலை யிரங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே

எனக் கூறிய சான்றோர் உளக்கருத்தின்படி அப்புலவர் பெரு மக்கள் இந்நாள் இருப்பரேல் இன்னோர்கள் தாம் தாம் புலவர்க ளெனக் கூறிக்கொண்டு முன்வர இயலுமோ?

இப்புலவர்களால் இயற்றமிழோ தன் சீர்குலைந்து நிற்கின் றது. நாடகத்தமிழோ தமிழ் எழுத்துக்களின் நெடுக்கணக் கினையானும் அறியாத நடிகர்களாலே எவ்வளவு சீர்கேடான நிலைமையினை யடைந்திருக்கின்றது என்பதை யாவரும் அறிவர். இசைத் தமிழின் நிலை என்றாலோ 'தமிழ் மொழியாளர்க்கு இசையென்பதே தெரிந்திலது. இவ்வாறு கூறுவதற்கு இசை களின் பெயர்களெல்லாம் வடமொழியில் இருப்பதே சான்றாம்' என அறிவிலா மாக்கள் சிலர் கூறும் அளவில் வந்துளது. என்னே இவர்கள் மடமை!

இவர் தம் அறியாக் கூற்றுகளைப் பின்னர் ஆராய்ந்திடுவாம். இங்ஙனம் நம் நாட்டுப்புலவர்களின் அறிவினை யாம் அளக்கப்புகின் பண்டைநாட் புலவர்களின் அறிவின் பெருமையினை அறிந்து கொள்ள வேண்டுவது முதற்கடமையாம். ஆதலின் பண்டைத் தமிழர்தம் நல்லிசைப் புலமையினைச் சற்று ஆய்ந்திடுவம்.

புலமையாவது அறிவுடையனுந்தன்மை. இப்புலமை யுள்ளவர்க்கே புலவர் என்பது பெயர். இது எல்லாவுயிர்க்கும் இயற்கையில் அமைந்து கிடக்கும் குணங்களுள் ஒன்றேயாயினும், எல்லோரும் பொருளுடையாராயிருப்பினும் நிறைந்த பொருளுடையவரையே உடையாரென்பவாகலின், சிறந்த புலமை யுள்ளவர்க்கே புலவரென்பது பெயராம். அச்செல்வத்தினை யுடையான் அதனை வெளியிடுமாற்றால், அவனது செல்வத்தினளவு தோன்றுதலே போல், ஒருவனுடைய புலமையும் அவனது செய்யுள் வழியே தோன்றும் என்பதும் பெறுதும். அன்றியும் உடையான் ஒருவன் அறவினையாற் பொருளீட்டிப் பல்லுயிர்க்கும் பகுத்தளித்துவப்பானாயின் அவனும் அவனது உடைமையும் சீரும் சிறப்பும் அடைவதுபோல், புலவனொருவனும் தன் புலக்கண்ணிற் றோன்றிய பொருளைச் சீரிய கூரிய தீஞ்சொற்களால் மன்னுயிர்க்கு வெளியிட்டுக் களிப்பானாயின், அவனும் அவன் செய்புட்களும் அழியாச் சிறப்படையும் என்பதும் தோன்றும். இம்மட்டோடன்றி உடையான் தன் பொருளைத் தியவழியிற் செலவிடின் தீராப்பழிக்காளாவதுபோல், புலவனும் செவ்வியசொல், பொருள், ஓசை முதலியனவின்றிச் செய்புட்கள் இயற்றிடப்புகின் அவன் புலமையை அறிவுடையார் மதித்துக்கொள்ளார்.

இனிப்புலமை யென்பதற்கு அறியுந்தன்மையெனப் பொருள் கொள்ளினும் ஆம். அதுவும் அதனை அவன் அறிவிக்குந்தன்மையான் வெளியாதலின் புலமை யென்பதனுள் அறியுந்தொழிலும் அறிவிக்குந் தொழிலும் ஆகிய இருதொழிலும் அடங்கியிருத்தல் காண்க.

அறிதற்குக் கருவியாவது மனம். அம்மனமும் தானே யறிதல் இயலாமையின், அது ஐம்புலன்களின் துணையைக் கொண்டே யறிதல் வேண்டும். அங்ஙனம் அறிந்த பொருள் களைத் திரட்டி வைக்குமிடமே புலம் என்க. என்னை? புலம் என்றதற்கு இடம் என்பதும் பொருளாதலின். புலத்தின்கண் ணுள்ள பொருள்கள்தாம் பின்னரும் பிறபொருள்களை யாய்ந்து தெளிதற்குத் துணையாகின்றன.

உலகத்திற் பிறந்தார் யாவர்மாட்டும் இயற்கையாக அமைந்து கிடக்கும் இப்புலமையினை, கற்றல், கேட்டல், காண்டல் என்ற இம்மூவகை வழிகளாலும் சீரும் சிறப்பும் உடையதாகச் செய்து கொள்ளலாகும். உலகப்பொருள்களை நேரே தம் கண்ணாற் கண்டும் கண்ட அவற்றைத் தம் இயற்கை யறிவினாலே யாராய்ந்து அவ்வவற்றின் தன்மை உணர்ந்தும், சான்றோர்கள் வெளியிட்ட நூல்களைக் கற்றும், கற்றவைகளைத் தம்முணர்வாலாராய்ந்தும் அவ்வாராய்ச்சிகளாற் போதரும் உண்மையினைக் கொள்ளல் வேண்டும். ஒருவன் இவ்வாறு தன்னறிவால் முற்றக்கற்றிடினும் கசடறக்கற்றவனாகான். அவனுக்கு ஐயம் திரிபு முதலியன தோன்றுதல் இயற்கையன்றோ? ஆகவே கற்றதனோடு நில்லாது அவ்வறிவினையுடையார்பாற் சென்று கேட்டலும் வேண்டும். இங்ஙனம் கேட்டறிந்து கொண்டானாயினும், அஃது 'எட்டுப் படிப்பாக முடிந்திடும் ஆதலின், உலகத்துள்ள பொருள்களைத்தான் தன் கண்களால் நேரே காண்டலும் வேண்டும். அவ்வாறு கண்ணிற்கண்டும் அவன் தெரிந்து கொள்ளானாயின் அவன் அறிவினை யுடையானாகான்.

இவ்வாறு கண்டு கேட்டுக் கற்றுக்கொண்ட உண்மைப் பொருள்களைப் பன்முறையும் எண்ணித் தெளிந்து கொள்வனேல், கல்லில் எழுதிய எழுத்துக்களே போல், அவைகள் அவனுடைய மனதில் நன்றாகப் பதிந்துவிடும். எத்துணை ஆண்டுகள் சென் றிடினும் அப்பொருள்கள் அவன் வேண்டுங்காலத்தில் அவனது அகக்கண்ணிற் றோன்றிடும்.

இங்ஙனம் இவன் கொண்ட அறிவுப் பொருள்கள், ஓர் பெரிய கடலின் அலைகள் எழுந்தெழுந்து அடங்குதலே போல் அகக்கண்ணின் முன்பாக வந்து வந்து தோன்றிக்கொண்டிருக்கும். அவைகளையே பன்முறையும் அவன் ஆராய்ந்து எண்ணிப் பார்த்திடுவனேல் நுண்ணிய அறிவு தோன்றிவிடும்.

இவ்வித அறிவினையுடையான்முன் மற்றொருவர் தோன்றி எதாவது ஒரு பொருளினைப் பற்றிய கருத்துக்களைக் கூறிடின் தான் முன்னமே கற்றுணர்ந்த கருத்துக்கள் அவனுடைய அகக் கண்முன் தோன்றுநிற்கும். எடுத்துக்காட்டாக ஒருவர் 'நண்ப, பண்டைக்காலத்தில் அசுரர்கள் இயற்றிய துன்பத்தினை நீக்க வேண்டித் தேவர்களுக்காகத் திருமால் இராமனாக தோன்றினான்'' என்று கூறியதைக் கேட்ட அவ்வமயமே, நம் கண் முன் பாக, அசுரர்கள் இயற்றிய இடையூறுகளும், தேவர்கள் திருமாலிடம் சென்று வேண்டுவதும், திருமாலின் பிறப்பும் ஆகிய இவைகளும், இவைகளைப்பற்றிய கதைகளைக் கூறிய புலவர்களும், அவர்களுடைய செய்யுட்களும் தோன்றுகின்றனவன்றோ? என்? இவைகளெல்லாம் நம்மால் கற்கப்பட்டு நம்முடைய மனதிற் பதிந்து கிடந்தனவேயன்றோ? எனவே ஒரு பொருளைப் பற்றிக்கேட்ட அளவில் அப்பொருட்கியைந்த கருத்துக்கள் யாவும் அவன் அகக்கண்ணின் முன்பு வந்து நிற்கும் என்பதே உண்மை.

அன்றியும் மருத்துவநூல்வல்லோன் ஒருவன் தன்னிடம் வரும் நோயாளி யொருவனைக் கண்ணுற்பார்த்த அளவில் அவன் இன்னநோயினையுடையவன் என்பதை யறிந்து கொள்கின்றான். இஃது எவ்வாறு இயலுமெனின் இதற்கு முன்பாகவே இவ் வண்ணமான உடல் நிலையுடையானைக் கண்டறிந்து இன்ன நோயுடையான் இந்நிலைமையிலிருப்பன் என்பதை யறிந்துள்ளானாதலின், இவனது உடல் நிலையைப்பார்த்த அளவில் அதற்குக் காரணமான நோயும் அவன் உள்ளத்திற் றோன்றிவிடும். இம் மட்டோடன்றி அந்நோய்க்குத் தக்க மருந்தும் தோன்றிவிடும் என்பதும் உண்மையன்றோ?

இதுகாறும் பொதுப்படக் கூறிப்போந்த பொருள் இருபிரிவினை யுடைய. அவை புலத்தின்கண் எழும் பொருள், அதற்கு வேறுய்ப் புறத்தே தோன்றும் பொருள் என்பனவாம். இவற்றுள் புறத்தே தோன்றும் பொருள்களை இயற்கைப் பொருளை அறிந்த புலவன் தன் புலப்பொருளோடு கூட்டிப்பெருக்கி யுரைப்பதனையே செய்யுளென்ப. இது மெய் வாய்களின் தொழிலாகும். ஆகவே ஒன்றினையறிவித்தற்குக் கருவி மெய், வாய் என்பனவாம். கண் முதலாயின உளவெனினும் அவை பயன்படுதல் சிறுபான்மையாதலின் மெய்வாய்களைப் போல் அத்துணைச் சிறப்பிலவாம். மெய் கருவியாக அறிவித்தல் ஓவியம் முதலியவற்றின்கண்ணும் பிறவற்றின் கண்ணுமாம். வாய் கருவியாக அறிவித்தல் சொல்லானும் ஓசையானுமாம்.

இனி இவ்விரண்டின் தொழிலுக்கும் என்னையோ வேறுபாடெனின், ஓவியம் பொருளின் புறநிலையை விளங்க அறிவிக்குமேயன்றிச் செய்புள்போலப் புறநிலையோடு அகநிலையையும் உணர்த்தாதென்க. அருவியொன்று மலையினின்றும் வீழுமாபோல் எழுதி வரும் ஓர் ஓவியமானது, அம்மலையினது கரிய நிறத்தையும், புல், செடி, கொடி முதலியவற்றின் பசியநிறத்தையும், அருவிநீரின் வெள்ளிய நிறத்தையும் பெற்று, நீர்வீழும் அழகையும், மரம் முதலியவற்றின் தோற்றத்தையும் இருந்தபடியே காட்டிக் கண்ணைக்கவர்ந்து இன்பமூட்டுந்தன்மையுடன் விளங்குதல் ஒருதலை. ஆயினும், மலையினின்றும் நீர்விழுந்தொழிலைக் காட்டும் அது, நாழிகைதோறும் நீர் பெருகுதலையும் அதனிடத்து எழும் ஓசையினையும், அவ்வோசை கேட்டு அஞ்சும் உயிர்களின் அச்சத்தையும், மரங்கள் வேர்தகர்ந்து வீழும் அரவத்தையும் காட்டும் இயல்புடைத்தன்று. அவ்வருவியையே ஒரு புலவன் உரைக்கப் புகின் மேற்கூறிய ஓவியத்தோடு அதன்கிழ்க் குறையையும் நீக்கி அதனாற்பெறப்படும் பொருளையும் கூட்டியுரைப்பன். எனவே தோன்றும் பொருளின் புறநிலையோடு அகநிலையையும் கூட்டியுரைப்பதே செய்யுள் என்பது பெற்றும். இது செய்யுட்கு வேண்டிய இலக்கணங்களுள் ஒன்றும்.

ஓவியத்துறைகைபோய ஒருவன் பல்வேறு நிறங்களாற் காண்புதற்கினியதாய்த் தான் கருத்துட்கொண்ட ஓர் பொருளினை ஓவியத்தில் வரைந்து காட்டலே போல் கல்வித்துறைகைபோய நல்லிசைப்புலவோர் தாம் கருத்துட்கொண்ட பொருள்களை, சில்வகை யெழுத்துக்களுடைய சொல்லாற் பல்வகைப் பொருள்களைச் செறித்து இன்னிசையுடனே விளங்கிடச் செய்யும் ஓர் யாப்பே செய்யுள் எனப் பெயர் பெறும்.

இச்செய்யுள்தான் பாச்செய்யுள் எனவும் உரைநடைச் செய்யுள் எனவும் இருவகைத்து. இப்பாச் செய்புளும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைத்தாம். மருட்பா என்பதனையும் கூட்டி ஐந்து எனலும் ஆம். இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலக்கண வேறுபாட்டை யுடையனவாம். இவைகளின் ஓசைகளும் தூங்கல், செப்பல், துள்ளல் முதலாக வேறுபடும். இவ்விலக்கணங்களை யெல்லாம் இலக்கண நூல்களிற் கண்டுகொள்க. உரைநடைச் செய்யுட்களோ யாம் உலக நிலையிற் பேசுதல் போல் உரைத்தலாம்.

அகநிலை, புறநிலை ஆகிய இவ்விரண்டும் பொருந்த உரைநடையில் உரைப்பினும் ஆம். ஆயின் அவைமாட்டுக் குறைகள் சிலவுள. அவற்றுள் ஒன்று எளிதில் மனப்பாடம் பண்ணவியலாமை. இரண்டாவது விழுமிய வோசையின்மை. மூன்றுவது யாப்பின் அருமை முதலியன.

உரைநடை யாப்புகள் எளிதில் மனப்பாடம் பண்ணற்கு இயலாது நிற்றலை யாவரும் இனிதறிவர். சிறிய அறவுரைகள் பல இளமைக்காலத்தே பொருள் விளங்காவாய் முதுமைக் காலத்தே அவைகளின் பொருள் விளங்கல் ஒருதலை. இதற்குச் சான்று ஆத்திசூடி ஒன்றுமே சாலும். இங்ஙனமே நம்தமிழ் மறையாகிய திருக்குறளும் பிறசான்றோர் செய்யுட்களுமாம்.

விழுமிய ஓசைபடக் கூறுதல் உரைநடையாப்பிற்கு அரிது. அன்றியும் பாட்டோசை பயில உரைப்பதிலும் அவ்வோசையைப்

பயில்வதிலும் இளையோர் முதல் முதியோர் வரையிலும் யாவர்க்கும் விருப்பு மிகல் இயல்பு. இது சிறுவர்கள் தெருவில் விளையாடுங் காலத்துக் கூர்ந்து நோக்குவார்க்கும், முதியோர் பலரும் தனித்திருக்கும் காலத்து இசை இசைத்தலைக் காண்பார்க்கும் நன்கு புலனும். இவ்வோசை பொருந்த உரைநடையிலும் உரைக்கப்புகின், அவன், ஓர் இசையாசிரியனின் மாணவனை யொப்பப் பல்லோராலும் நகைக்கப்படுவான். அன்றியும் சிற்சில சொற்களைச் சொல்லுங்காலத்து அவற்றிற்கெனத் தனித்த வோசை, செய்கை முதலியன வேண்டுதல் போல, சிற்சில பொருள்களையுரைக்கப் புகுங்கால் அவற்றிற்கெனத் தனித்த யாப்பு வேண்டுமென அறிக. அதுவன்றிப் புதிய எண்ணங்கள் பலதோன்றித் தடையின்றி வருதற்குச் செய்யுள் யாப்பே சிறந்த துணையாகின்றது என்பர் ஆங்கில ஆசிரியர் மில்டனும் என்பதும் அறிக. விரைந்து செல்லும் குதிரை யொன்றிற்கு ஆற்றின்கண் உள்ள உயர்வு தாழ்வுகள் அதன் செலவிற்குத் தடையாக நிற்றல் போல் தண்ணென்றெழுகிச் செல்லும் சொற்பொருள், உரைநடை யாப்பின் இடையில் நிகழுங் குறிகளும், பிறவுமாய தடைகளால் தம் விரைவு குன்றி ஒழுக்காறு அற்றுப்போகும்.

இனிப் பாச்செய்யுட்கள், கூறப்படும் பொருளுக்கேற்ப விழுமிய ஓசையுடையனவாய், எதுகை, மோனை முதலியன உடைமையினாலே, மனப்பாடம் பண்ணுதற்கு மிக்க எளிதாகவும், அம்மட்டோடன்றி மனப்பாடம் பண்ணியவை மறக்கப்படினும் மிக்க விரைவில் எளிதாக மறுபடியும் நினைவிற்குக் கொண்டுவரத் தக்கதாகவுமிருக்கின்றன. விழுமிய ஓசையை உடைமையாக இருத்தலின் யாவரும் விரும்பிக்கற்றிடுவர்.

இவ்வாறாகக் கருத்துக்களைப் பாச்செய்யுட்களில் அறிவித்தலிலும் ஓர் தடை யேற்படுகின்றது. ஓர் புலவன் தன் கருத்துக்களை வெளியிடச் செய்யுட்களை யாக்கப் புகுவானாயின், அச்செய்யுளின் விழுமிய ஓசையினையும், இலக்கணங்களையும் எதுகை மோனை முதலியவற்றினையுங் கொண்டு கூட்டித் தன் கருத்தினை

நிறைத்தல் வேண்டும். அக்காலத்துத் தன் செய்யுளின் எதுகை, மோனை முதலியவற்றிற்கர்கத் தான் கருதிய பொருளை மாற்றி யமைக்க வேண்டிய நிலைமையில் வருகின்றான். ஆகவே தான் இயற்றப்புகும் யாப்பிற் கேற்பத் தன் கருத்துக்களைத் திருத்தி யமைத்தல் வேண்டும். ஆயினும் இத்தடையினை மீறிக் கொள்வதற்கே, செந்தொடை, கூன் முதலிய எதுகை மோனையில்லாச் செய்யுட்களையும் அமைத்துப் போயினர் சான்றோர்.

இதுகாறும் யாம் பொதுப்படப் புலமை யென்பது யாதெனஆராய்ந்து வந்தோம். இனிமேல் நம் பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் எவ்வாறான புலமையினை உடையரா யிருந்தனர் என்பதனை யும் சற்று ஆராய்வாம்.

தொடரும்.

---

உ

திருசிற்றம்பலம்.

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

---

திரு. கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சாவூர்.

---

(தொடர்ச்சி துணர் ரு, பக்கம் ருகசு.)

## அன்னம் விடு தூது.

அ. தார மருங்கா மனப்புள்ளே! தைக்குமால்
வார மருங்கா மனப்புள்ளே—சீரமரும்
என்னைவிட மென்றூர்க் கிசைப்பீர் தனுநாதா
என்னைவிட மென்றுரென் றேற்று.

தாரம் மருங்காம்-பெடையன்னத்தின் அருகிலே பொருந்திய. அனம் புள்ளே-அன்னப்பறவையே: வாரம் அரும்-அன்பு இல்லாத. காமன் அம்பு உள்ளே தைக்கும்-மன்மதபாணம் இருதயத்திலேசென்று வருத்துகின்றது. ஏற்று (நான் கூறுவதை செவியிலே) ஏற்று. விடமென்றார்க்கு- (முன்னம் என்னை ஒரு போதும்) கைவிடுவதில்லை யென்று சொல்லிப்பிரிந்த திருச்சுழியல் நாதருக்கு. என்னை-அன்னமாகிய என்னை. விடமென்றூர் என்று இசைப்பீர்- (நம் தலைவியார்) விடமென்று சொல்லி வெறுத்து விட்டார் என்று கூறுவீராக.

"தாரமருங்கா மனப்புள்ளே" என்றது நீ உன் துணையை விட்டுப் பிரியாது எங்ஙனம் வாழ்கின்றாயோ யானும் அங்ஙனம் வாழவேண்டாவோ என்றதை அறிவித்தற்காக வென்க. வார் அமரும் அம்பு என எடுத்து-நீட்சி பொருந்திய அம்பு என்றலும் ஒன்று. என் நைவு இடம் என்றார்க்கு எனப் பிரித்து என் மனக் கனிவுக்கு விடயமான தானம் என்றவர்க்கு என்று பொருளுரைப்பினுமாம். மூன்றாமடியிலுள்ள என்னைவிட மென்றார்க்கு என்பதற்கு, எனது தலைவரும் நஞ்சுண்டவருமான திருச்சுழியற் பிரானுக்கு, என உரை கூறினுமாம். ஐ-தலைவர். இச்செய்புள் மடக்கு என்னும் சொல்லலங்காரம் பெற்றது. இச்செய்யுளை "தாரமருங்கா மனப்புள்ளே" என்ற தொடக்கத்து அழகர் கலம்பகச் செய்யுளோடு ஒப்புநோக்குக.

கூ. ஏற்றுக் கொளினும் இனிதே பிறவியுந்தான்
கூற்றுக் கடிந்தோனைக் குங்குமத்தின்—சேற்றுச்
சுணங்குவார் கொங்கைத் துணைமாலை கோனை
வணங்குவா ராயின் மகிழ்ந்து.

துணைமாலை நாயகனை வணங்குவார் பிறவி மார்க்கண்டேயரது பிறவிபோன்று துன்பம்தாராது இன்பமே பயக்கும் என்பது இக்கவியின் கருத்து. அருமைதோன்ற "வணங்குவாராயின்" என்றார். இச்செய்புளை

"இனிதே பிறவி யினமரங்க ளேறிக்
கனிதேர் கடுவன்க டம்மின்—முனிவராய்ப்
பிணங்கிவருந் தண்சாரற் காளத்தி பேணி
வணங்கவல்ல ராபின் மகிழ்ந்து"

என்ற திருமுற்றச் செய்யுளோடு ஒப்பு நோக்குக.

௰. மகிழும் பிறையோடு வாளரவும் சூடித்
திகழுந் திருமேனிச் செல்வா!—இகழும்
வினையா ரெனையும் விழுமியர்பால் வைத்தால்
உனையார் வினவுவா ரோது.

வினை-தீவினை. மகிழ்ச்சியைத்தரும் குளிர்ந்த சந்திரனையும், துன்பத்தைத் தரும் வெவ்விய அரவத்தையும் சமமாகத் தரித்த திருமேனிப்பிரானே! பெரியோர்களாகிய நின் அடியார் மாட்டுத் தீவினையையுடைய அடியேனைச் சமமாக வைத்தால் உம்மை வினவுவார் யார் என்பதாம். ஒன்றை யொன்று பகைத்திடும் தொழில் நீக்கி உறவுகொண்டு மகிழும் பிறையையும் அரவத்தை யும் சூடி என்று முதலடிக்குப் பொருள் கூறினுமாம். இதனால் தீவினையையுடைய அடியேனை நல்வினையையுடைய பெரியோர் களின் குழுவே தேவரீர் வைத்தால், உமது நல்லருள் மகிமை யினால், அப்பெரியோர்களால் வெறுத்துத் தள்ளத்தக்கவனாகாமல் புகழ்ந்து கொண்டாடப் பேறுவேன் என்பது போதருமாறு காண்க.

௧௧. ஓதும் வினைகா ளுமக்கோ ரிடந்தேடிப்
போதும் பொழுதுபெறப் போமின்கள்—காது
நிறைகின்ற கூந்தற் றுணைமாலை நேயன்
உறைகின்ற துள்ளத் துணர்ந்து.

ஓதும் வினைகாள்-புண்ணிய பாவங்களென்று சொல்லப் படு கின்ற கருமங்களே! நேயன் உள்ளத்து உறைகின்றது உணர்ந்து பொழுது பெறப் போமின்கள் என்றியைக்க. பொழுது பெற- விரைவிலே யென்றபடி. இச்செய்யுளை, "பெற்றங்கள் மேய்க்கும்

பிரானுர் பேணுந் திருக்கோயில்கண்டீர், அற்ற முரைக்கின்றே னின்னம் ஆழ்வினைகா ளுமக்கிங்கோர், பற்றில்லைகண்டீர் நடமின்'' என்ற ஆழ்வா ரருளிச் செயலோடும்,

"விழுப்பா ரினியெமை யார்பிற வித்துயர் மெய்ப்புறவந்
தழுப்பா தொழிமி னருவினை காளும்மை யப்புறத்தே
யிழுப்பா னொருவன்வந் தின்றுநின் ருனிள நாகுசங்கங்
கொழுப்பாய் மருதஞ் சுலாங்குந கூரெங் குலக்கொழுந்தே"

என்ற சடகோபாந்தாதிச் செய்யுளோடும் ஒப்புநோக்குக.

கஉ. உணர்ந்தும் நெடுநா ளுணராதுஞ் செய்து
புணர்ந்து வருவினைகள் போமே—கொணர்ந்து
கொழியலிறை முத்தக் குளிர்நதித்தோய்ந் தெம்மான்
சுழியலிறை பாதந் தொழின்.

கொழியல்-கொழியலாக. விடாது பிறவிகள் தோறும் தொடர்ந்து வருதலான், "புணர்ந்து வருவினைகாள்" என்ருர். வினையாகிய வெப்பத்தை நீக்குதலுடைமையின் "குளிர்நதி" என்ருர். இச்செய்புள்,

"அறியாம லேனு மறிந்தேனுஞ் செய்த
செறிகின்ற தீவினைக ளெல்லாம்—நெறிநின்று
நன்முகில்சேர் காளத்தி நாத னடிபணிந்து
பொன்முகரி யாடுதலும் போம்"

என்ற மேலோர் செய்புளை அடியொற்றியது காண்க.

கந. தொழுவனே நின்னைத் துணைமாலை நேயா!
விழுவனே நின்றிருமுன் வீழ்ந்தங்—கழுவனே
பாடிக் கனிந்துருகி யாடிப் பாதாம்புயத்தைச
சூடிக் களிப்பனே சொல்.

தொழுதல் முதலியன ஈச்வரன்பக்கல் அன்பும், அறிவு முடையாரது மெய்ப்பாடு. "ஆடினுன் அழுதான்பாடி அரற்றினுன் சிரத்திற் செங்கை—சூடினுன் தொழுதான் ஓடி உலகெலாம் துகைத்தான் துள்ளி" என்ருர் கவிச்சக்ரவர்த்தியும்.

கச. சொல்லாய் மறையோ சுழியலோ அம்பலமோ
நல்லாய் துணைமாலை நாயகனே—வில்லாய்
மலைதழுவும் வல்லவா! வல்வினையேன் நெஞ்சோ
நிலைதழுவுந் தானம் நினக்கு.

சொல்லாய் மறை-(உனது பொருள் சேரும்) புகழையே ஆராயும் வேதம்; சொல்-புகழ். இனி, சொல்லாய் என்பதற்கு, சொல்லியருளாய் எனலுமாம். நல்லாய் என்பதை விளியாகக் கொள்ளாது துணைமாலைக்கு விசேடணமாக்கி நல்லதாயாகிய என்று கொள்ளலும் எற்கும். "வில்லாய் மலைதழுவும் வல்லவா" என்பது நீ முன்னம் கல்லை வில்லாகக்காட்டி நினது திறமையை வெளியிட்டாங்கு, இப்போதும் என் வன்னெஞ்சக்கல்லை மென் மலராக்கி அதில் எழுந்தருளி நினது வல்லமையைக் காட்டினுய் என்பதைக் கொண்டு நிற்றல் அறிக. இச்செய்புள்

"இருக்குந் திருக்கோயி லேழையே னெஞ்சோ
மருக்கொள் கயிலை வரையோ—திருக்களவோ
சோதிமணி மன்றோ சுடர்விசும்போ பால்வண்ணு
வோது மறையோ வுனக்கு"

என்ற செய்புளின் கருத்தை முற்றிலும் கொண்டிருப்பது பாராட் டற்பாலது.

கரு. தான நினக்கேன் றவநினக்கேன் பல்கலைநூல்
ஞான நலநினக்கேன் நன்னெஞ்சே—ஊனம்
அடர்த்தாளும் பூமிச னஞ்செழுத்துஞ் செய்ய
சுடர்த்தாளு முண்டே துணை.

பூமிசன் என்பது, திருச்சுழியல் நாதனது திருநாமங்களுள் ஒன்று. மலவிருளை நீக்கல் பற்றி "சுடர்த்தாள்" என்றார் என்க சூரியனது சிவந்த இளங்கதிரினை யொத்த விரல்களையுடைய அடி யெனலுமாம். விரல்கட்கு சூரியனது இளங்கதிரை ஒப்புக் கூறுவதை

"தளங்கெழு கற்பக முமிழுந் தண்டுறை
இளங்கொடிப் பவளமுங் கிடக்க வென்னவை
துளங்கொளி விரற்கெதி ருதிக்குஞ் சூரியன்
இளங்கதி ரொக்கினு மொக்கு மேந்திழாய்"

என்ற கம்பராமாயண செய்யுளினது ஈற்றிரண்டடிகளால் அறிக.

கசு. உண்டு துணையெனச்சூழ்ந் துற்றா ருயிர்போதல்
கண்டு விலகுங்காற் கால்கொடுப்பாய்—விண்டு
தொழுங்கால காலா! சுழியலினாய்! பண்டு
விழுங்கால காலா! விரைந்து.

உண்டு-நமது சோற்றைத்தின்று. துணையெனச்சூழ்ந்து-நாம் உமக்குத் துணையாயிருக்கின்றோம் என்று சொல்லி, நம்மோடு கூடவேயிருந்து. விரைந்து கால்கொடுப்பாய் என இயையும் சூழ்ந்துற்றார் விலகுங்கால் உண்டு துணையெனக் கால்கொடுப்பாய் என இயைத்துப், பொருள்கொள்ளுதல் நன்குபொருந்தும் காலன் கைப்படாமல் என்னைக் காப்பாய் என்பார் "காலகாலா" என்றும், பிறவிப் பெருங்கடலில் வீழாமல் துணைசெய்வாய் என்பார் "சுழியலினாய்", என்றும், வினையரவின் விடத்திற் சாகாது போற்றுவாய் என்பார் "விழுங்காலகாலா" என்றும் கூறினார் என்க.

## கூடலிழைத்தல்.

கஎ. விரையகலக் கொன்றைச் சுழியலர்கோன் மீண்டென்
புரையகலக் கண்களிக்கப் போந்து—வரையகலங்
காட்டுமே லென்னைக் கலந்திறுகத் தன்னோடுங்
கூட்டுமேற் கூடலே கூடு.

விரைஅகல் அக்கொன்றை—நன்மணம் விரிந்த அந்த கொன்றைமலர் மாலையினை. சுழியலர் கோன்-சுழியல் நகரத்தவரது தலைவனாகிய திருமேனிநாதன். புரை—குறை; ஈண்டு சாயலொடு மணமாமை தளர்ந்ததாகிய குறை. திருவடையாள மாலையாகலின் "அக்கொன்றை" என உலகறிசுட்டார் கூறினர்.

"கூடலாவது—வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து, இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டாற் கூடுகை, ஒற்றைப்பட்டால் கூடாமை என்று சங்கேதம்" என்றருளிச் செய்வர் நாச்சியார் திருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியனத் தரும்பதத்தில்.

கஅ. கூடு மிளமையும்பொற் கொங்கையினுர் கூட்டுறவும்
மாடுங் குறித்தைவர் வாய்விழுநும்—பாடு
விழற்புல்லி னீர்விடலாம் மெய்ச்சுழிகைத் தாணு
கழற்புல்லி னீர்விடலாங் கட்டு.

கூடு மிளமையும்-சரீரத்தையும் யௌவனத்தையும்; கூடு-சரீரம் அன்றி, நன்ருகக்கூடிய இளமையையும் எனக்கொள்ளலாம். பொற்கொங்கை-பொன்னுபரணங்களை அணிந்த முலை; அழகிய முலை; பொன் போன்று தேமல்படர்ந்த முலை. மாடும்-செல்வத்தையும். பாடு-பிரயாசம். விழற் புல்லில் நீர் விடலாம்-விழலுக்கிறைத்த நீர் போன்ற தன்மைத்தாகும். கட்டு- "நாசமான பாச"த்தினது பந்தம். பின்னாண்டடி திரிபு என்னும் சொல்லணியுடையது.

கசு. கட்டுச் செடிப்புலனைக் காய்ந்து சுகதுக்கம்
விட்டுப் பசையறுத்த மேலோர்க்குந்—தட்டுப்
படாதுயரும் பூமிசன் பாதமுநான் கண்டேன்
அடாதுயரு மென்பாற் கடுத்து.

செடிப்புலனைக் காய்ந்து கட்டு—(ஞானமாகிய பைங்கூழைத் தலையெடுக்கவொண்ணுது மூடி அழிக்கும்) ஐம்புலன்களாகிய பூண்டை காய்ந்து களைந்து. கட்டுதல்-களைதல். துயரும் என்பார்க்கு அடுத்து அடா-(பிறவித்)துன்பமும் என்னிடத்து வந்து வருத்தா.

உ0. அடுக்கும் பிறவிக் கருங்கடலுக் கம்பி
படுக்கு மனவிருட்குப் பானு—மடுக்குஞ்
சதியுற்ற கல்வினைக்கோர் சாயகமாஞ் சூலப்
பதியுற்ற நாதன் பதம்.

சூலப்பதி-திருச்சுழியலுக்குள்ள பெயர்களில் ஒன்று. அம்பி-தோணி. பானு-சூரியன். மடுக்கும்சதி-(நரகிலே) தள்ளுவல்ல வஞ்சனை. சாயகம்-அம்பு. இச்செய்யுளை,

"இடர்க்கடலுக் கோட மிதயவிருட் கென்றாழ்
உடற் பகையை வேரறுக்கு மொள்வாள்-இடப்புறத்தைச்
சூல்வண்ண மேகச் சுரகுழலுக் கீந்தருளும்
பால்வண்ண நாதன் பதம்"-என்ற செய்யுளோடும்,

"துணையெனப் படுவ வுயிர்க்கள வரிய தொல்லைவெவ் வினைவரை துளைக்கும்
கணையெனப் படுவ நீந்தரும் பிறவிக் கருங்கடல் கடப்பதற் கமைந்த
புணையெனப் படுவ கட்டுவீ டென்று புகன்றிடப் படுவவே தில்லை
யிணையெனப் படுவ பாலையூர்ப் பெருமா னிருபதத் தாமரை மலரே"

என்ற திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடலோடும் ஒப்புநோக்குக. இத்திருச்சுழியல் வெண்பாவந்தாதியின் செய்யுட்களும், கவிஞர் பெருமானாகிய பிள்ளையவர்கள் செய்யுட்களும், ஒரோவிடத்துப் பொருளால் ஒத்துக்கிடக்கின்றமை அறியத்தக்கது.

உக. பதந்தொடரு மன்னம்; பொறியரியும் பைந்தார்
விதந்தொடரு மென்குழலை வேட்டு—நிதந்தொடரும்;
பண்புடையா ளானாற் பரனே! துணைமாலை
நண்புடையா ளாமே நமக்கு.

அன்னம் பதந்தொடரும்-அன்னமானது (தேவியின் நடையைக் கற்க) அவளது பாதத்தைத் தொடர்ந்து செல்லாநிற்கும். பொறி அரி-பொறியையுடைய வண்டு; பண்புடையாள் ஆனால்-இப்படிப்பட்ட (அன்னந்தொடரும் பாதமும், பொறியரி தொடரும் கூந்தலுமுடைய) வளானால். நமக்கு-தேவரீருக்கு. இது இப்பொருள் குறித்தலை "நெருநலினும் வந்தவரோ நாமென்ன" என்ற கல்வியிற் பெரியாரது வாக்கினால் அறிக.

பொறியரி (இலக்குமியையுடைய திருமால்) தொடரும் பாதமும் அன்னம் (பிரமன்) தொடரும் சடைமுடியையுடைய தேவரீருக்கு, பொறியரி (வண்டு) தொடருங் கூந்தலும் அன்னம் (அன்னப்புள்) தொடரும் பாதமுமுடைய துணைமாலை எவ்வாறு நண்புடையாளாவாள்? என்றவாறு.

"பொறியரி தொடரு மருமலர்த் தாளோன் பொலியனந் தொடர்சடா
முடியோ
னறியுநின் கொழுநன் பொறியரி தொடரு மலர்க்குழ லினைநடை
யன்னஞ்
செறிதரத் தொடர்மென் பதத்தினை யெனினீ தேவொடு மாறுளாய்
கொல்லோ
கறிபயி லளிசூழ் பொழிற்றிரு வானைக் காவகி லாண்டநா யகியே"

என்ற பிள்ளையவர்களது செய்யுள், இச்செய்யுளினை அடியொற்றியது.

உஉ. நம்மை வலாரியயன் நாரணனு நாமத்தைச்
செம்மை பெறப்புனைந்து சேமிப்பான்—வெம்மைப்
படநாகம் பூண்டானைப் பைந்நாகத் தின்கீழ்க்
கடனுகக் கைதொழுதாற் கண்டு.

வலாரி-இந்திரன். சேமிப்பான்-காப்பான். நாகம்-புன்னைமரம். பைந்நாகத்தின் கீழ்க்கண்டு கடனுகக் கைதொழுதால் என இயையும். புன்னைமரத்தின் கீழ் வீற்றிருக்கும், திருமேனிப்பிரானை வணங்குபவர், இந்திரன், பிரமன், திருமால், இவர்களது பதவியை யடையப் பெறுவார்கள் என்று இச்செய்யுட்குப் பொருள் காண்க.

உங. கண்டு களிக்கக் கழலு மணிச்சிலம்பும்
பண்டு தரிபுரியும் பட்டுடையும்—கொண்டு
பொடியோடு சாந்தொளிரப் பூமீச! போந்துன்
கொடியோடுங் காட்சி கொடு.

கண்டுகளிக்க-அடியேன் தரிசித்துக் களிக்குமாறு. நிகம்பாத்தை விலக்கப் "பண்டுதரிபுரியும்" என்றார். மணிச்சிலம்பு-அழகிய சிலம்பு; மணிப்பரல் பொதிந்த சிலம்பு. கொடி-பூங்கொடி

போன்ற துணைமாலை. கழலும், உரியும், பொடியும், திருமேனி நாதன் அணிவது; சிலம்பும், பட்டும், சாந்தும் தேவி அணிவது. இச்செய்யுளை அடியொற்றி

"அடியனேன் மனத்துக் கழலொடு சிலம்பு மதனொடு
பட்டும்வெள் ளியதுண்
பொடியொடு சாந்துஞ் சடையொடோ திமமாய்ப் பொலிதரப்
பெறுவதெக் காலோ
கொடியிடை மடவார் கொவ்வைவா யிதழுங் குறியகட்
கொழுஞ்செழுங் கரும்புங்
கடிபடத் தெவிட்டா விரதமூற் றெடுக்குங் கலைசைவாழ்
சிதம்பரேச் சுரனே"

என்பர் கலைசைச் சிதம்பரேசுவரர் மாலையில், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

உச. கொடுவிடஞ் சோறு கொடுவரித்தோல் கூறை
படுவிடப் பைந்நாகம் பைப்பூண்—நடுவிடம்
நீறுதருங் காடென்னிற் புன்னை நிழலார்க்குப்
பேறுதரும் வீறுண்டோ பேசு.

கூறை-தரிக்கும் உடை. கொடுவரித்தோல்-புலியின்தோல். படுவிடப்பைந்நாகம்-கொல்லுநச்சுப் பையையுடைய பாம்பு. நடுவிடம்-நடனசபை. பேறுதரும்வீறு-பாக்கியத்தைத்தரும் வல்லமை. சோற்றுக்கும், துணிக்கும் வகையில்லாமல், விடத்தை தின்று தோலைப் போர்த்துக்கொண்டிருப்பவரும், வீடில்லாமல் மரத்தினிழலிலே உறைபவரும், பாம்பையணிந்து சுடுகாட்டில் நடனம்புரிபவருமாகிய திருமேனிநாதர், தம்மையடைந்தார்க்கு என்ன பாக்கியத்தை தரப்போகிறார் என்றவாறு. இது, பழித்தது போலப் புகழ்ந்தது. இச்செய்யுள்

"ஏறுவது கொல்லேறெரி சுடலை யாடரங்கு
கூறைபுலித் தோன் மணிப்பூண் கோளரா—நாறு
கார்ந்தை யணிகருவைக் காபாலிக் கென்பால்
வாந்தரவே றுண்டோ வகை"

என்ற செய்யுளை அடியொற்றியது.

உரு. பேசி லெவரே பெருவலியர்? பூமீசா!
மாசின் மலையான் மழைதடுத்த—தேசிற்
பினைக்கேற்ற மாலோ பெருநகரைச் சூல
முனைக்கேற்ற நீயோ மொழி.

மாசின்மலை-மேகங்கள் தவழப்பெற்ற மலை. பினைக்கேற்ற மால்-நப்பின்னைப்பிராட்டிக்கு ஏற்றவனான கண்ணனாகிய திருமால். தேசிற் பினைக்கேற்ற மால் என்றதனால், பெண்களை நாடி, மேனி மினுக்கித்திரியும் கண்ணன் நின்னைப்போல் ஆயுதம் எடுத்து அனைவரையும் காக்கவல்ல வீரனன்று என்பதாக, "எவரே பெருவலியர்" என்ற வினாவிற்கு விடையும் உணரவைத்தார்.

## கரும்பை நோக்கித் தலைவியிரங்கல்.

உசு. மொழியுங் குழைவார்ந்தீர் முத்தமிழச் செய்யுள்
வழியுமா சாரமுநீர் வாய்ந்தீர்—கழியுமக்குக்
கோலஞ்செய் மாச்சுழியார் கோவுக் கெதிர்நில்லாக்
கோலஞ்செய் வேளிணக்கங் கோது.

மொழியும் குழைவு ஆர்ந்தீர்-வார்த்தைகளும் வணக்கமாகப் பொருந்தப் பெற்றீர். (ஒலிக்குந் தழைகள் நிரம்பப்பெற்றீர்) முத்தமிழச் செய்யுள்வழியும் ஆசாரமும் நீர் வாய்ந்தீர்-மூவகைப் பட்டதாகிய தமிழ்ச்செய்யுள் நூல்களிலே கூறப்படும் நன்னெறியையும், நல்லொழுக்கத்தையும் நீர் அமையப்பெற்றுள்ளீர் (வயல்களில் முத்து சிந்திப்பதிய நீங்கள், வழிகின்ற மிக்க சாரத்தையும் பொருந்தியுள்ளீர். கழி உமக்கு-(இவ்வாறு செந்நெறிச் சேர்ந்துள்ள) கரும்புகளாகிய உங்களுக்கு, கோலம் செய்-அழகு பொருந்திய மாச்சுழியார் கோவுக்கு-திருச்சுழியற்பிரானுக்கு, நில்லா கோல் அஞ்சு எய்வேள்-எதிர்நிற்கமாட்டாத ஐயம்புபொழியும் மன்மதனது, இணக்கம் கோது-நட்புத்தீதே. தமிழச்செய்யுள்-அ-வேற்றுமைப் புணர்ச்சியில் வந்த சாரியை. இணக்கம் என்றது மன்மதனுக்கு வில்லாயிருக்குந்தன்மையை.

உஎ. கோதை மடவார் குவிமுலைவீழ் வண்டனும்
பேதை முடிக்குன் பிறங்குகழற்—போதைப்
புனைவனே முத்திபுரப் பூமீசா! தீவாய்
இனைவனே சொல்லாய் எனக்கு.

முத்திபுரம்-திருச்சுழியலுக்கு ஒரு பெயர். கோதை மடவார்-பூமாலை போலும் மெல்லியலாராகிய இளமங்கையர். அன்றி, கூந்தலையுடைய மங்கையருமாம். வீழ்தல்-விரும்புதல். "திருவீழ் நுண்பூண்" என்றார் புறத்திலும். வண்டன்-தூர்த்தன். குவிமுலைவீழ் வண்டனும் பேதை என்பதற்கு-குவிமுலையாகிய கோங் கரும்பிலே வீழ்ந்துபட்ட வண்டையொத்தனாகிய அறிவிலி என்று பொருள் கூறினுமாம். அப்பொழுது மடவார் என்பது யாக்கையைக் குறிக்கும்.

உஅ. என்னை நிகர்ப்பவரார் எதிங் கெனக்கரிது
முன்னை மறையறியா முன்னவனைப்—புன்னை
நிழலடியிற் கண்குளிர நெஞ்சுருகி யேத்திக்
கழலடியிற் கைகுவித்தேன் கண்டு.

"நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" என்று ஆழ்வார் பெருமிதந்தோன்றக்கூறி இன்புற்றது போல, இவரும், திருமேனிகாதனைத் தரிசித்தமையின் பெருமிதங்கொண்டு "என்னை நிகர்ப்பவரார்? எதிங்கெனக் கரிது?" என்று கூறுகிறார். மனமொழி மெய்களால் வணங்கினேன் என்பார் "நெஞ்சுருகி எத்திக் கைகுவித்தேன்" என்றார் என்க.

## பிரிவாற்றாத தலைவி நிலைக்குத் தோழி இரங்கல்.

உகூ. கண்டு சினைமுத்தங் கண்மயங்கத் தாஞ்செறுத்து
வண்டுஞ் சிலம்பனமும் வாதாட—விண்டு
புரிவளைதிர்க்கும் புனல்வயலூர் கோமான்
சரிவளைக்கு நல்குமோ தார்.

சினை-அன்னமீன்ற முட்டையும், முத்தம்-சங்கமீன்ற முத்துக் களும், கண்மயங்க-நீர்த்துறையிலே கலந்து மாறுடினவாக

'வண்டும் சிலம்பனமும்-சங்கமும், சிலம்பொலிபோல் ஒலிக்கும் அனப்பறவையும், தாஞ்செறுத்து வழக்காட-தமக்குள்ளே வழக்கிட. 'புரிவளை-வலம்புரிச் சங்கமானது, கண்டு விண்டு தீர்க்கும்-அவ்வழக்கைப் பார்த்து விலக்கி அவற்றின் வழக்கை தீர்த்தற்கிடமான. புனல் வயலூர்க்கோமான்-நீர்வளஞ்செறிந்த வயலூரில் (திருச்சுழியலில்) வீற்றிருக்கும் பிரான்' சரிவளைக்குத்தார் நல்குமோ-கழன்றுவிழும் வளையலையுடைய இவ்விளம் பெண்ணுக்குக் கொன்றைமலர் மாலையைத்தருமோ? என்றவாறு. சரிவளை-வினைத்தொகை அன்மொழி. சங்கும் அன்னமும் வழக்கிடுகையில், இவ்விரண்டும் மதிக்கத்தக்க வலம்புரிச்சங்கு அவை அஞ்சி அகலும்படி அவற்றின் நடுவிற் சென்றதையே, வழக்குத் தீர்த்ததாகக் குறித்தார். பிரிந்த நிலையில் தலைவி தலைவனது மாலையைப் பெற்றாயினும் மகிழக்கருதியதனைக்குறித்து "நல்குமோதார்" என்றது. இது தனது மாலை இவளுடம்பிற் படும்படி கலவியின்பத்தைத் தந்தருள்வனோ என்ற குறிப்புமாம். இச்செய்யுள்

"அரிவளை பொன்மகி ழாயிழைக் கீயுங்கொ லந்திவந்து
முரிவளை முத்துஞ் சினையு மயங்க முறைசெறுத்து
வரிவளை யும்மன்ன முந்தம்மி லேவழக் காடவலம்
புரிவளை யூடறுக் குங்குரு கூரெம் புரவலனே" என்ற கவியிற் பெரியாரது கலித்துறைச் செய்யுளை அடியொற்றியது.

௩௰. கார்கெழு மாணிக்கந் தண்டாளம் பூணுதே
கார்கெழு வெவ்விடக் கட்செவியைச்—சீர்கெழு
பூணுகக் கொள்ளப் புவனேசா! மற்றந்தக்
கோணுகஞ் செய்தவமென் கூறு.

கார்கெழு-மாலையாகப் பொருந்துதற்குரிய. கெழு-சாரியைச்சொல்; பொருந்துதல் என்னும் பொருள்தந்து நின்றது. சிலப்பதிகாரப் பதிகத்தில் "முடிகெழுவேந்தர்" என்புழி, 'கெழு' என்பதற்கு, இவ்வாறே கொள்வர், அடியார்க்கு நல்லார். கோள்நாகம்-கொல்லுதற்றொழிலுடைய நாகம்.

தொடரும்.

369

உ

இறை யருள் வாழ்க.

# உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B A., L.T., ஆசிரியர்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், உரத்தநாடு.

முன்றொடர்ச்சி. துணர் 3, பக்கம் 299.

## மூன்றும் படலம்.

## தசைக் கூட்டம்.

தசைகளின் வகை தொகை:—நமது உடலின் எலும்புகளை இயக்குவன ஐந்நூற்றிற்கு மேற்பட்ட தசைகளே. இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயிருள்ள பொறி (Machine) ஆகும். இவை பொறிகளைப்போல் வேலையுஞ்செய்து சூடு முண்டாக்குவன. எனினும் நம்மாலாக்கப்பெற்ற பொறிகளினும் பன்மடங்கு திறமை (Efficiency) வாய்ந்தன. எவ்வாறெனின், கொடுக்கப்பட்ட எரிபொருளைக் (Fuel) கொண்டு மிகக் குறைந்த சூடும் மிகுந்த வேலையுஞ் செய்வன தசைகளேயன்றி நம்மாலாக்கப்பெற்ற பொறிகளல்ல. இத்தகைத் திறமைவாய்ந்த பொறிகள் நம்முடலிற் குறைவாயில்லை. நம்முடல் நிறையில் நூற்றிற்கு 41 பங்கு தசைகளாமெனின் அவை மற்றய பகுதிகளாய எலும்பு, குருதி, நரம்பு, தோல் முதலியவற்றினும் மிகுந்திருப்பது தெளியப்படும். இவைகளாற்றான் நாம் உணவு தேடி, சமைத்து, உண்டு, சுமிக்க வைக்கிறோம். இவைகளே குருதி ஓட்டம், மூச்சுவிடுதல் முதலிய

உயிர்த்தொழில்களைச் செய்கின்றன. நாம் பேசவும், நடக்கவும், வேலை செய்யவும் உதவுவன் இவைகளே. இத்தசைகளில் இரு வகையுண்டு. ஒன்று கட்டுப்படுவன (Voluntary) மற்றொன்று கட்டுப்படாதன (Involuntary). கட்டுப்படுந்தசைகளே உள்ளம் நினைத்தபடி நடப்பன. கை, கால், தலை, முண்டம் முதலிய உறுப்புக்களை வெளியிலிருந்து இயக்குவன இவைகளே. இவ்வா றின்றிக் குருதியேற்றம், தீனிப்பை, நுரையீரல் முதலிய உள் ளுறுப்புக்களை இயக்குவன உடலினுட் புறத்துள்ள கட்டுப்படாத தசைகள். இவைகளின் வேலைகளை நாம் நினைத்தபடி நிறுத்தி வைக்க வியலாது. இவ்வாறு இவ்விருவகைத் தசைகளும் தொழின்முறையில் மாறுபடுவதன்றி அமைப்பிலும் மாறுபடு கின்றன. கட்டுப்பட்டதசைகள் வரியுடையன (Striped). கட்டுப்படாதவைகளில் வரியில்லை (Unstriped). [ஈற்றிலுள்ள படத்தைப் பார்க்க]. ஒவ்வொரு தசையும் பல தசை நார்கள் (Fibres) சேர்ந்து உண்டாயிருக்கின்றது. ஒவ்வொரு தசை நாரிலும் பலதசைக் கூடுகளிருக்கின்றன. இவை இணைக்கப் பெற்றிருக்கும் வியப்பே வியப்பு!

நீட்டி முடக்குந்தசைகள் :—எல்லா எலும்புகளும் மூட்டு களில் இயங்குவதைக் காணலாம். இயக்கம் எலும்புகள் நீளுவ தாலும், முடங்குவதாலும், திரும்புவதாலும் உண்டாகிறது. இவ்வாறு எலும்புகளை இயக்குவன தசைளே. தசைகள் ஒவ் வொரு மூட்டின் சுறுக்கே மூட்டின் இருபுற எலும்புகளிலும் இணைக்கப் பெற்றிருக்கின்றன. எடுத்துக் காட்டாக முழங்கை மூட்டை எடுத்துக்கொள்வோம். இம் மூட்டாற்றான் முன்கை நீண்டு முடங்குகிறது. இதை நீட்ட ஒரு தசையும் முடக்க ஒரு தசையும் தனித்தனியே உண்டு. இவைகளுக்கு நீட்டி (Extensor) முடக்கி (Flexor) என்னும் பொதுப்பெயருண்டு. முன் கையை நீளவைப்பது முண்டா என்னும் இருமுதலி (Bicep). இதன் ஒரு புறம் மேற்கை அடியிலும் மற்றொருமுனை கீழ்க்கை அடியிலும் இணைக்கப்பெற்றிருக்கின்றன. இதனால் இது சுருங் கும் பொழுது கீழ்க்கை முடக்கப்பட்டு மேற்கையிடங்கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு முடங்கிய கையை நீட்ட வேண்டு

மாயின் மும்முதலி (Tricep) சுருங்குகிறது. இதுவும் இரு முதலியைப் போலவே மேற்கை கீழ்க்கைகளின் அடியிலேயே இணைக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் இது மேற்கையின் பின்புறமாக இருக்கிறது. இத்தகைய ஏற்பாடே மற்ற தசைகளிலும் மூட்டுகளிலுமுளது. இவ்வாறு இயங்கத் தசைகளை எலும்புகளுடன் இணைக்க வேண்டுமன்றோ? இதற்காக மிக உறுதியுடைய தசைக்கயிறுகள் (Tendons or Sinews) தசைகளின் ஒவ்வொரு முனையிலு மிருக்கின்றன.

**தசை நல வழி :**—எத்தசை மிகுதியாக வேலை செய்கிறதோ அதற்குக் குருதியும் மிகுதியாகப் பாய்கிறது. இதனால் அதன் கூடுகள் பெருத்துப் பல்குகின்றவாதலின் அத்தசையும் பருத்து வலிவடைந்து கருஞ்சிவப்பு நிறமடைகிறது. வேலை செய்யாத தசையோ சிறுத்து வலிவற்று வெளுத்துப் போகிறது. ஆதலின் தக்க தசைப்பயிற்சி மிகவும் இன்றியமையாததே. இளமையில் தக்க தசைப்பயிற்சியால் தசைகளை எளிதில் பருத்து வலிவடையச் செய்யலாம். ஆதலின் இளமையில் கட்டாயமாகக் கற்க வேண்டியவற்றுள் தசைப்பயிற்சியை முதன்மையானதாகக் கொள்ளல் வேண்டும். முதுமையில் பயிற்சியால் தசைகளைப் பருக்கவைத்தல் அவ்வளவு எளிதன்றேனும் தக்க முயற்சியால் பயனடையலாம்.

நமது உடலிற்கு வரும் பலவித நோய்களில் மூன்றிலொரு பங்கு தசைப்பயிற்சியின்மையால் உண்டாகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இக்காலத்தில் கற்றோர் பலர் குறைவாக நடமாடுவதால் தசைகளுக்கு மிகக் குறைந்த வேலையைக் கொடுத்து வலிவிழக்கச் செய்கின்றனர். இத்துடன் நில்லாது எக்காலமும் படித்து அல்லது எழுதிக்கொண்டிருப்பதினால் கண்களுக்கும் மூளைக்கும், நாளொன்றிற்கு நான்கு அல்லது ஐந்து முறைக்குக் குறையாதுண்பதினால் சமிக்கும் உறுப்புகளுக்கும் அளவிற்கு மிஞ்சிய வேலையைக் கொடுத்துக் களைப்படைந்து நலியச் செய்கின்றனர். இதனால் இவர்கள் நோய்க் களஞ்சியமாகின்றனர். இன்னார் எத்துணை வலிமைதரும் மருந்துகளை (Tonics) உண்டும்

என்ன பயன்? வலிமைதரும் மருந்துகளால் மட்டும் வலிமை உண்டாவதாயின் யாவரும் புட்டி புட்டியாக உண்டு வீமர் அநுமார் ஆய்விடலாமே! இல்லை! இல்லை!! வலிமை முயற்சியாலும் பயிற்சியாலும் உண்டாகுமேயன்றி மருந்துகளால் மட்டும் ஒருகாலும் உண்டாகாது. மருந்துகள் உடற்கு ஒத்தனவாயிருந்தால் மட்டும் சிறிது ஊட்டங் கொடுக்கலாமேயன்றி வேறொரு நன்மையுஞ் செய்ய வல்லனவல்ல. ஆதலின் அவைகளையே நம்பியிராது பயிற்சி செய்தல் வேண்டும். இன்னும் ஊளைச்சதையோ, தொந்தியோ, விழுந்திருப்பவர்கள் உடற்பயிற்சி பெரிதுந் தேவையுடையவர்களென்பதை அவைகளே காட்டுகின்றன. ஏனெனில் ஊளைச்சதை தொந்தி சரிதல்* ஆகிய இவ்விரண்டும் உடலின் நலனையாவது வலிவையாவது குறிக்காது தசைகளும் வயிறும் நிலை மாறியிருத்தலாகிய அழகின்மையையே (Deformity) குறிக்கின்றன. இந்நிலைமாறல்களும் மாறு உடற்பயிற்சியால் நீங்கிவிடுமாதலின் இவைகளை யுடையோர் அழகும் வலிவும் நலனும் பெற இனியாவது முயலுவார்களாக.

இவ்வாறு உடற்பயிற்சியில்லாது நலிகின்றவர்க்கு மாறுகச் சிலர் தந்தசைகளைப் பருக்கவும் வலிவடையவும் வைத்தலே கண்ணுங் கருத்துமாகத் தசைப்பயிற்சிப் பொறிகளை (Spring Dumb-bells, Developers, Weights etc.) இயக்குவதிலேயே காலங் கழிக்கின்றனர். இதனல் தடித்தனத்தைத் தவிர வேறுபயனின்று. இன்னும் உற்று நோக்கின் தசைகளைப் பருக்க வைப்பதால் அவைகளை ஊட்டி வளர்க்குஞ் செலவுமிகுதி; அவைகளுண்டாக்கும் நச்சுப்பொருளும் மிகுதியே யாதலின் இத்தீமைகள் தவிர வேறு நன்மை யொன்றுமிலது. இனி வலிவு மிக மிக, நீண்ட வாழ்வுண்டாகுமாவென்று பார்த்தால் அதுவுமில்லை.

* இதனையே அருணகிரிநாதர்

'தொந்திசரிய மயிரே வெளிர நிரை
தந்தமசைய முதுகேவளைய இதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர்—நகையாடி
தொண்டு கிழவனிவனுரென்று' என்னுவரென்று குறிக்கின்றனர்.

மகளிர் ஆடவரினும் குன்றிய வலிவுடையரேனும் வாழுந்திறன் (Vitality) மிகுதியுடையோராவர்; நீண்ட ஆண்டு வாழுகின்றனர்; குருதி இழப்பை (Loss of Blood) மிகப் பொறுக்கும் வன்மையுடையர்; குளிர், வெயில், பசி, நச்சுப்பொருள்கள் இவைகளைத்தாங்கும் தன்மை மிகுதியாக வுடையவராவர். ஆகலின் தசை வலிவிற்கும் வாழ்விற்கும் ஒரு பொறுப்புமில்லை. இவையன்றி உலகில் தசைகளின் வலிவைவிடத் திறமையே (Skill) மிகப் பலன் தருகின்றது. பாரம் மிகுதியாகச் சுமந்து மாடுபோல் உழைப்பவர்களைவிட நுட்பமான வேலை செய்கிறவர்களுக்கன்றோ கூலி மிகுதி. ஆதலின் வலிமையைப் பெருக்குவதில் மிகுதியாகப் பாடுபடுவதைவிடத் திறமையைப் பெருக்கப் பழகுதலே நன்று. தசைகளை இயக்குவன நரம்புகளேயாதலின் தசைகளின் திறமையைப் பெருக்க நரம்புகள் திறமையடையும்படி பழகுதலே பெரிதாம். *

இதனால் தசைப்பயிற்சி வேண்டியதில்லை யென்று நினைத்துவிடக்கூடாது. அளவிற்கு மிஞ்சிய பயிற்சியே வேண்டாததாம். உடலுழைப்பில்லாது உள்ள உழைப்பையே கைக்கொண்டு நலியுங் கற்றோருக்கும், உள்ள உழைப்பில்லாது உடல் உழைப்பையே மேற்கொண்டிருக்கும் மற்றோருக்கும் என்ன வேற்றுமை? இருவரும் ஒன்றை வளர்த்து மற்றொன்றை நலியவிடுகின்றனர். இரண்டையும் ஒக்கவளர்க்க முயல்பவரே அறிஞராவர். இன்னோர் போதுமான உடற்பயிற்சியினாலும், விம்முதலினாலும் (Hardening the muscles) † தசைகளில் முறுக்கேற்றி வைத்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

---

* இவ்வாறு பழக்குபவரே தச்சர், கொல்லர், கொத்தர், சித்திரமெழுதுவோர், நகாசு வேலைக்காரர், தாள் கட்டடவேலைக்கார (Book-binder) நெசவுத்தொழிலாளர் முதலியோர்.

† தசைப்பயிற்சி செய்ய வியலாத பொழுது படுத்த, உட்கார்ந்த, அல்லது நின்றபடியே உள்ள முயற்சியால் தசைகளை விம்மி வைத்தல் உடற்கு நலந்தரும்.

சிலர் எழுதுகோலைப் பிடிக்கும் போது உலக்கையைப் பிடிக்கும் வலிவுடனும், தளர்ச்சியுடன் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலையில் மல்லுக்கு நிற்கும் முறுக்கோடும், உடலைப்பல வழியில் வீணே வளைத்துக் கொண்டும், பயனில்லாது துன்புறுகின்றனர். இன்னோர் இவ்வீண் வழிகளிற் களைப்புறுந் தசைகளைத் தளர்த்திவிடப் பழகுதல் வேண்டும்.

**தசைப்பயிற்சி:**—இவை மூன்று வகை. முதல்வகையாகிய பயிர்த்தொழில், தோட்டவேலை, தச்சு, கொத்து முதலிய வேலைகள் தசைப் பயிற்சியுடன் ஊதியந்தருவன. சிலம்பம், மல், குதிரையேற்றம், பந்தாட்டம் முதலிய விளையாட்டுகள் தசைப்பயிற்சியுடன் உள்ளத்திற்கின்பந் (Recreation) தருவன. இவற்றையே கற்றோர் விரும்புவர். கைகால் வீசல் (Drill), விட்டப்பயிற்சி (Gymnastics), நிறைப்பயிற்சி (Dumb-bells) முதலியன ஊதியமாவது இன்பமாவது தருவனவல்ல. எனினும் வேறு வகையிற் பயிற்சியடையாத சிலதசைகளைப் பயிற்ற இதுவே தக்கவழி. நடப்பதாலும் மாடிப்படி யேறுவதாலும் கால் தசைகளுக்கும், கைவேலைகளால் கை, நெஞ்சுத் தசைகளுக்கும் பயிற்சி பலருக்கு உண்டேனும், யாவருக்கும் உள்ளுறுப்புக்களாய கல்லீரல், தீனிப்பை, குடர்கள், குண்டிக்காய் (Kidneys), முதலியன அடையும் பயிற்சி குறைவே. இதற்காகவே கைகால் வீசல் முதலிய பயிற்சிகள் இன்றியமையாதன. இவ்வாறு பயிலும் பொழுது இடையிடையே மூச்சுப்பயிற்சி செய்து கொண்டுவரின் நுரையீரல்களும் எற்றமும் பயிற்சியடைவதன்றி மூச்சுவாங்காது.

**களைப்பு:**—தசைகள் தமக்குக் குருதிகொண்டுவரும் உணவுப் பொருள்களையும் உயிர்க்காற்றையுங் கொண்டே நமக்கு வேலை செய்கின்றன. தசைகள் வேலைசெய்யும் பொழுது பயன்படும் உணவுப்பொருள் சர்க்கரையுங் கஞ்சிப்பொருளு (Starch)மேயாகும். இப்பொருள்கள் உயிர்க்காற்றின் உதவியால் நீராவிப் பொறியில் (Steam Engine) நிலக்கரி எரிவதுபோல் எரிந்து தசைகளை வேலை செய்யும்படி செய்கின்றன. இதனால் நீராவிப் பொறியிற் சூடுண்டாவது போல் வேலைசெய்யுந் தசையிலுஞ்

சூடுண்டாகிறது. இதனுற்றான் உடற்பயிற்சியாவது கடும்வேலை யாவது செய்யும்பொழுது நம் உடலில் மிகுதியாகச் சூடுண்டாகிறது. இன்னுங் கரி எரியும்போது சாம்பல் உண்டாவதுபோல், உணவுப்பொருள் எரிவதனல் சில நச்சுப்பொருள்களுண்டாகின்றன. இப்பொருள்கள் தசைகளையியக்கும் நரம்புகளை மயக்கிவிடுவதாற் களைப்புண்டாகிறது. சிறிது நேரங் களைப்பாறினல் இந்நச்சுப் பொருள்களைக் குருதி நீக்கிவிடும். களைப்பாறும்பொழுது தசைகளைத் தளர்த்திவிட்டுச் (Relax) செயலற்றுக்கிடப்பது போலிருந்தால் சடுதியில் இளைப்பாறிவிடலாம். மிகுதியாக வேலை செய்யின் இந்நஞ்சு மூளைக்கும் பரவித் தூக்கமுண்டு பண்ணுகிறது. நெடுநாள் வேலை செய்யாதிருப்பவர்கள் வேலை செய்யில் தசைகளில் வலியை யுண்டாக்குவன நச்சுப்பொருள்களே. இவை இரண்டொரு நாளிற் கரைந்துவிடும். சடுதியில் நீக்கவேண்டுமாயின் வெந்நீரொத்து அல்லது வெந்நீர் முழுக்கு, உடம்பு பிடித்தல் முதலிய வழிகளால் நீக்கிவிடலாம். உடல்பிடித்தல் தகுதியான தசைப்பயிற்சியுமாகும். வேறு பயிற்சியில்லாதவர் இதையாவது செய்து கொள்ளலாம். இளைஞர் அளவிற்கு மிஞ்சிய வேலையினல் களைத்து இளைத்துப்போவார்கள். இன்னர் பின்னர் முழுவளர்ச்சியை யடைய முடியாதாதலின் அவர்களிடம் மிகுதியான வேலை வாங்குதல் பெருங்கொடுமையே.

மயக்கப் பொருளும் தசைகளும்:—கள், சாராயம் முதலிய குடிகள் தசைகளுக்கு வலிமை தருமென்று நினைப்பது தவறு. உண்மையில் குடியர்கள் வலிமையை இழந்துவிடுகிறார்கள். குடிக்காதவர்கள் வேலைசெய்யும் அளவும் நேரமும் குடிக்கிறவர்களாற் செய்யமுடியாததைக் கண்கூடாகக் காணலாம். இன்னுங் குடி, தசைகளை வேகவைக்கிறது என்பதை மருத்துவர் அறுக்கும் பொழுது (Operation) கண்டுபிடித்திருக்கிறார்கள். இஃதன்றி இக்குடி தசையை இறுக்கி வேலைசெய்யுஞ் செயலற்றதாகச் செய்கிறது. சாராயம் தசையை இறுகச்செய்யுமென்பதைப் பாம்பு, தேள் முதலிய சிற்றுயிர்களைப் பொருட்காட்சிசாலை (Museum) யில் சாராயக்குப்பியிலடைத்து வைத்திருப்

பதைக் கொண்டு தெளியலாம். புகையிலை, கஞ்சா, அபின் முதலியனவும் தசைகளை மெலியவும் வலிமை யிழக்கவுஞ் செய்கின்றன.

**முதல் உதவி :**—தசை கிறப்பட்டால் அவ்விடத்தை அசைக்காது வைத்திருந்து வெள்ளைத்துணித் துண்டால் மூடிக் குளிர் நீரால் நனைக்க வேண்டும். தசை புரண்டிருந்தாலும் அசைக்காதிருப்பதுடன் கட்டுக்கட்டி வைத்திருக்கவேண்டும்.

---

## நான்காம் படலம்.

## குருதி ஓட்ட உறுப்புக்கள்.

**குருதியின் இருபெருஞ் செயல்கள் :**—நமது உடலின் வெளியுறுப்புகள் அடிக்கடி வேலை செய்வதாலும், உள்ளுறுப்புகள் அல்லும் பகலும் வேலை செய்து கொண்டிருப்பதாலும் இவைகள் தேய்கின்றன. தேயும் ஒவ்வொரு இடத்தையும் வளர்க்கவும், கழிபொருள்களை நீக்கவும் ஓர் பொருள் வேண்டும். இப்பொருள் ஒவ்வொரு நுண்ணிய கூட்டிற்குஞ் செல்ல வேண்டியதாயிருப்பதால் நீர்ப்பொருளா (Liquid) கவே இருக்க வேண்டுமன்றோ? ஒரு ஊரை உண்பிப்பதற்கும் கழுவுவதற்கும் எவ்வாறு தண்ணீர் வேண்டியதாயிருக்கிறதோ அவ்வாறே நம்முடற்குங் குருதி வேண்டியதாயிருக்கிறது.

**இரு எற்றங்களும் அவைகளின் அமைப்பும் :**—ஓர் ஊரின் ஒவ்வொரு வீட்டிற்கும் அதன் அறைகளுக்கும் நீர் செல்ல வேண்டுமானல் எவ்வாறு ஒரு பெரும் எற்றம் (Pump) தேவையோ அவ்வாறே நம்முடலின் ஒவ்வொரு கூட்டிற்குங் குருதியை இறைக்க ஓர் எற்றந்தேவை. ஒவ்வொருவரும் பயன்படுத்திய அழுக்கு நீர் எங்ஙனம் நீர் நிலைகள், கடல்களிற் கலந்து பின்னர் அவ்விடமிருந்து நீராவியாக மாற்றப்பெற்றுத் தூய்மை யடைகிறதோ, அவ்வாறே நமது உடல் பயன்படுத்திய அழுக்குக்

குருதியைத் தூய்மைப்படுத்தும்படி நுரையிரலுக்கு அனுப்ப மற்றொரு ஏற்றமுந் தேவை. இவ்விரு ஏற்றங்களுஞ் சேர்ந்ததே நம் நெஞ்சினுள் லப்டப் என்று அடித்துக் கொண்டிருக்குங் குருதி ஏற்றம். இது ஒவ்வொருவரிடத்தும் அவரவர் மூடிய கையத்தனை பெரியதாயிருக்கிறது. இவ்வேற்றங்கள் உலகிலுள்ள ஏற்றங்கள் போல் அமைக்கப்படாமல் பைகள் போலமைந்து, தம் மியற்கையாகவே விரியும்போது குருதி இவற்றுட் பாய்வதும், தாமாகவே சுருங்கும்போது குருதி இறைப்பது உண்டாகின்றன.

குருதியேற்றத்தின் அமைப்பும், குழாய்களும் :— நீரை இறைக்க ஊற்று, கிணறு போன்ற நீர் நிலை வேண்டியது போல் இரு ஏற்றங்களும் இறைப்பதற்காகக் குருதியைச் சேமிக்கக் காது கள் போன்ற இருகுருதி ஊற்றுப்பைகள் (Auricle) இருக்கின் றன. ஊற்றுகளின் மேல் ஏற்றம் போடப்பட்டிருப்பதை எங் கும் பார்த்திருப்பீர்கள். நம் வியப்புவாய்ந்த குருதியேற்றத்தில் இதற்கு நேர்மாறாக இரு ஊற்றுகளின் அடியிலும் இரு சால்கள் (Ventricle) அமைக்கப் பெற்றிருக்கின்றன. இச்சால்கள் சுருங் கிக் குருதியை இறைக்கும் பொழுது குருதிமேலுள்ள ஊற்றிற்குச் சென்றுவிடாதபடி சால்களுக்கும், ஊற்றுகளுக்குமிடையே ஒவ் வொரு முக்கூறுடைய ஒருவழிக்கதவுகள் (Triscupid Valves) இருக்கின்றன. இவையாவுஞ் (ஊற்றுகள், சால்கள், கதவுகள்) சேர்ந்ததே குருதியேற்றம். இதிலுள்ள இரு ஏற்றங்களும் இடம் வலமாக அமைந்திருக்கின்றன. இவ்வேற்றங்களிறைக் குங் குருதி, பாய் குழாய்கள் (Arteries) வழியே பாய்ந்து பின்னர் இக்குழாய்களிலிருந்து பிரியும் எண்ணிறந்த மயிர்க்குழாய் (Capillaries) வழியே செல்கிறது. இம்மயிர்க் குழாய்களில் 2000த்தை ஒன்றின் பக்கத்திலொன்றாக நெருக்கி வைத்தால் ஒரு அங்குலம் குறுக்களவுடையனவாகும். இதனால் இவற்றின் நுண்மை புலனும். பின்னர் இம்மயிர்க்குழாய்கள் ஒன்று சேர்ந்து வடிகுழாய் (Veins) ஆகின்றன.

குருதியின் ஒரு முழுச்சுற்று (Circulation of Blood):— குருதி உடலினுள் சுற்றிச் சுற்றிச் சென்றுகொண்டேயிருப்பதால்

அச்சுற்றிற்கு முதலுமில்லை, முடிவுமில்லை. எனினும் எளிதிலுணர்வதற்காக இடது ஊற்றுப்பையில் துவங்கி, குருதி செல்லும் வழியெல்லாம் செல்வோம். இவ்வூற்றுப்பை நிறைந்ததும் இது சுருங்குகிறது. உடனே இதிலுள்ள குருதி கீழுள்ள ஒருவழிக் கதவைத் திறந்துகொண்டு இடது சாலினுட் பாய்ந்து அதை நிரப்புகிறது. நிரம்பியதும் இது சுருங்குகிறது. சுருங்கும்போது குருதிமேலுள்ள ஊற்றுப்பைக்குச் செல்லாதபடி ஒரு வழிக்கதவு அடைத்துக் கொள்ளுகிறது. இதனால் குருதி வேறு வழியின்றிப் பெரிய பாய்குழாயுட் (Aorta) புகுகிறது.* இக் குழாய் பல கிளைகளாகப் பிரிந்து தலை, கை, கால், வயிறு, குடல் முதலிய பேருறுப்புகளுக்குப் பாய்கிறது. ஆங்கு, பலப்பல கிளைகளாகப் பிரிந்து அக்கிளைகளுக்குக் கிளைகளுண்டாய்க் கடைசியில் மிகச் சிறுபுரையுடைய மயிர்க்குழாயாகிறது. ஈண்டே குருதி பல கூடுகளுக்குப் பாய்வதால் அக்கூடுகள் வேண்டிய உணவுப்பொருள் களை யெடுத்துக்கொண்டு கழிபொருள்களைத் தள்ளி விடுகின்றன. இதனால் குருதி அழுக்கடைகிறது. முன் எறு குழாய்கள் பிரிந்து பிரிந்து எவ்வாறு மயிர்க்குழியாயினவோ அதற்கு மாறாக இப்பொழுது பல மயிர்க்குழாய்கள் ஒன்று சேர்ந்து சிறு வடி குழாயாகவும் இதிற் பல சேர்ந்து பெரும் வடி குழாயாகவும் ஆகின்றன. இவ்வாறு தலை, கைப்புறத்திருந்து வரும் வடி-குழாய்கள் ஒன்று சேர்ந்து மேற்பெருவடிகுழாய் (Superior Vena Cava) ஆகியும் மற்றைய கீழுறுப்புகளிலிருந்து வருங் குழாய்கள் ஒன்று சேர்ந்து கீழப்பெருவடிகுழாய் (Inferior Vena Cava) ஆகியும் இவ்விரு பெருங்குழாய்களும் அழுக்குக் குருதியை வலது ஊற்றுப் பையுட் கொட்டுகின்றன. இது நிறைந்ததும் சுருங்கிக் கீழுள்ள ஒருவழிக்கதவைத் திறப்பித்து வலது சாலுட்குருதியைக் கொட்டுகிறது. இது நிறைந்து சுருங்கி மேற்கண்ட கதவை அடைக்கச்செய்து குருதியை நுரையீரற் பாய்குழாய் (Pulmonary Artery) வழியே நுரையிரலுக்குட் செலுத்துகிறது.† ஈண்டு

*† இவ்வாறு பாயும்போது அக்குழாய் முதலில் உள்ள ஒரு வழிக் கதவைத் திறந்துகொண்டு பாய்கிறது. இக்கதவு இன்றேல் மறுமுறை சால்விரியும்போது பாய்குழாயுட் சென்ற குருதி திரும்பிச் சாலுட்கொட்டி விடும்.

முன்போல் பல மயிர்குழாய்களாய்ப்பிரிந்து, தூய காற்றுடன் கலந்து தூய்மையடைந்து, முன்போலவே பிரிந்த மயிர்க்குழாய் ஒன்று சேர்ந்து நுரையீரல் வடிகுழாய் (Pulmonory Vein) வழியே இடது ஊற்றுப்பையை அடைகிறது. அடைந்ததும் முன்போல் மறுசுற்றுச் சுற்றுகிறது. இவ்வாறே எப்பொழுதுஞ் சுற்றிக்கொண்டேயிருக்கிறது. இச்சுற்று எளிதில் நடைபெறக் குழாய்கள் யாவும் மிக வழுவழுப்பாயிருந்து ஏற்றத்தின் வேலையை எவ்வளவு குறைக்கக் கூடுமோ அவ்வளவு குறைக்கின்றன. வலது ஏற்றம் நுரையீரலுக்கு மட்டும் இறைப்பதால் சிறிதாயும், இடது ஏற்றம் உடல் முழுவதும் இறைப்பதால் பருத்து வலிவுடையதாயுமிருக்கின்றன.

பாய் குழாய்க்கும் வடி குழாய்க்குமுள்ள வேற்றுமைகள் :— (1) பாய் குழாய் தூய குருதியே கொண்டு செல்லும். வடிகுழாய் அழுக்குக் குருதியே கொண்டு செல்லும். எனினும் நுரையீரற் பாய்குழாய் அழுக்குக் குருதியையும் நுரையீரல் வடிகுழாய் தூய குருதியையுங் கொண்டு செல்லும் மாறுபாடுடையன. (2) பாய் குழாயில் குருதி எப்பொழுதும் இருந்துகொண்டே யிருக்கிறது. இதனால் இடது சால் குருதியை இறைக்கும் பொழுது, பாய் குழாயில் முன்னிருந்த குருதி புதிதாய் இறைக்கப்பட்ட குருதிக்கு இடங்கொடுக்க வியலாது. இதற்காகப் பாய்குழாய்கள் அகன்று மீளுந்தன்மை (Elasticity) யுடையனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் இடது சால் குருதியை இறைத்ததும் அதற் கண்மையிலுள்ள ஏறுகுழாய் புதுக்குருதிக்கு இடங்கொடுக்க விரிகிறது. பின்னர் இப்பங்கு சுருங்கிக் குருதியை அடுத்த பங்கிற்குத் தள்ளுகிறது. இவ்வாறு ஏறு குழாயின் ஒவ்வொரு சிறுபங்கும் அடுத்தடுத்து வரிசையாகத் தள்ளிக்கொண்டே செல்வதால் குருதியும் அலைபோல் குதித்துக்கொண்டே செல்கிறது. இவ்வாறு செல்வதை மணிக்கட்டுகளிலும், பொட்டுகளிலும், காதின் முன்னும் குரல்வளைப் பக்கங்களிலுமுள்ள பாய்குழாய்களின் மேற்கைவைத்துத் துடிப்பதூஉற் கண்டுகொள்ளலாம். இத்துடிப்பை மணிக்கட்டில் நாட்டு மருத்துவர் சோதனை செய்

வதைக் "கைபார்த்தல்" (Pulse) என்கிறோம். வடிகுழாய் இவ்வாறு அகன்று மீளுந்தன்மையுடைத்தன்று. அதில் இத்துடிப்புமில்லை. ஏனெனின் அழுக்குக் குருதி ஒருபடித்தாகவே குருதியேற்றத்திற்குப் பாய்ந்து கொண்டே இருக்கிறது. (3) குருதியேற்றம் இறைப்பதாலுண்டாம் உதைவு (Pressure) குருதி மயிர் குழாய்க்குச் செல்லு முன்னேயே அற்றுப் போவதால் குருதியை வடிகுழாய் வழியே செலுத்துவதற்கு வேறு அமுக்கல் இலது. ஆதலின் வடிகுழாயில் குருதிவலிவற்று மெதுவாகச் செல்லுகிறது. இவ்வடி குழாய்கள் தசையினூடே செல்வதால் தசை வேலை செய்யும் பொழுது இக்குழாய்கள் அமுக்குண்டு, அமுக்குண்டவிடத்தின் முன்னும் பின்னும் குருதி தள்ளப்படும். குருதி, ஏற்றத்தை நோக்கி முன் தள்ளப்படுதல் நலமே. குருதி, பின் தள்ளப்படின் ஏற்றத்தை நோக்கிச் செல்லாதபடி தடுக்கப்படும். இதனால் ஏற்றத்தின் வேலை தவங்கும். தவங்காதிருக்குமாறு வடிகுழாய்களிற் பைபோன்ற ஒருவழிக் கதவுகளிருக்கின்றன. உங்கள் சட்டைப் பையைப் பாருங்கள். அதன்மேலிருந்து கையைவிட்டால் பை தானாகவே திறக்கும். கீழிருந்து தடவிக்கொண்டு மேற்சென்றால் அது தானாகவே மூடிக்கொள்ளும். இவ்வாறே இவ்வொருவழிப் பைகள் யாவும் குருதி ஏற்றத்தை நோக்கித் திறந்து கொண்டிருப்பதால் குருதி அவ்வழியே செல்வுழி மூடிக்கொண்டும், எதிர்நோக்கிச் செல்கையில் தாமாகவே திறந்து குழாயை அடைப்பதால் குருதி கீழ்விழாதபடி தடுத்துக்கொண்டுமிருக்கின்றன. இத்தகையபைகள் பாய்குழாய்களிலில்லை. (4) பாய்குழாய்கள் உடலின் உட்புறத்தில் புதைந்திருக்கின்றன. வடிகுழாய்கள் மேற்பரப்பிலிருக்கின்றன.

குருதியேற்றத்தின் கடிவாளங்கள் :—ஏற்றம் நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை ஓயாது துடிநேரம் ஒன்றிற்கு ஆண்களுக்கு 70 முறையும், பெண்களுக்கு 80 முறையும், சிறு குழந்தைகளுக்கு 120 முறையும் துடிக்கிறது. நன்றாய் வளர்ந்த நடுத்தர மனிதனுடலில் சுமார் 16 சேர் குருதியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பிற்குங் குருதி உணவளிப்பதால் உறுப்பின் வேலை மிகுந்

தால் குருதியும் மிக வேண்டுமன்றோ? ஆனால் குருதியின் அளவு திடீரென்று மிகாது. அதற்கு பதிலாக அவ்வுறுப்பிலுள்ள எறுசுழாய் பெருத்து ஆங்கு குருதி மிகுதியாய்ச் செல்கிறது. நாம் படிக்கும் பொழுது மூளையும், நடக்கும்பொழுது கால்களும், சாப்பிட்டவுடன் தினிப்பையுங் குடர்களும் மிகுதியாக வேலை செய்வதால் அவ்வவைகள் அவ்வப்பொழுது மிகுந்த குருதியை யடைகின்றன. இதனால் சாப்பிட்டதும் என் படிக்கக்கூடா தென்பது நன்கு விளங்கும். எல்லா உறுப்புக்களும் ஒருங்கே உழைக்கும் போது எல்லா உறுப்புக்களுக்கும் ஒரே முறையில் மிகுந்த குருதியைக் கொடுப்பதற்காக எற்றம் விரைவாயும் வலிவுடனும் வேலை செய்கிறது. எல்லா உறுப்புகளும் வேலை செய்யாக் காலத்து எற்றத்தின் வேலையுங் குறைவே. தூங்கும் பொழுது இதன் வேலை மிகக்குறைவு. விழித்துக்கொண்டு படுத்திருக்கும்போது சிறிது மிகும். உட்கார்ந்திருக்கும் போது இன்னும் மிகும். நிற்கும் போது இதனினும் மிகும். நடக்கும் போது முன்னையினும் மிகும். ஓடும்போதுங் கடுந்தொழில் செய்யும் போதும் எல்லாவற்றினும் மிகும். இவ்வாறு எறத் தாழ வேலை செய்யும்படி கட்டளைகளையிடுவது உயிர் முடிச்சு (Medulle Oblongatta). இது தன் கட்டளைகளை இதனுடன் எற்றத்தை இணைக்கும் இரு எற்ற நரம்புக்கயிறுகளாற் (Vagus Nerves) செலுத்துகிறது. எவ்வுறுப்பு மிகுதியான வேலை செய்யினும் அஃது இவ்வுயிர் முடிச்சிற்குத் தெரிவிக்கும். இது இந்நரம்புக் கயிறுகளால் எற்றத்தை வேண்டியபடி இயக்குவதுடன் வேலை செய்யும் உறுப்புக்குச் செல்லும் எறு சுழாயையும் நமக்குத் தெரியாமலே பெரிதாக்கிவிடும். என்ன விந்தை! இம்முடிச்சு எற்ற நரம்புக்கயிறுகளை நன்றாய்த் தளர்த்தி விட்டுவிட்டால் எற்றம் சிறிது நேரம் வேகமாய்த் துடித்துப் பின் களைத்து நின்றுவிடும். இதனால் நாம் சிறிது நேரம் செயலற்றுக்கிடக்கிறோம். திடீரென்று பயந்தாலும் அதிர்ச்சியடைந்தாலும், வலியடைந்தாலும் இஃதுண்டாகிறது. இவ்வாறன்றி உயிர் முடிச்சு எற்ற நரம்புக்கயிறுகளை சிறிது தளர்த்தினால் சிறிது வேகத்துடனும், பெரிது தளர்த்தினால் பெரிய வேகத்துடனும் தளர்த்திய அளவுக்

குத்தக்க விரைவாய் வேலை செய்வதால், எற்றம் ஓர் குதிரை போன்றும் அதன் இரு நரம்புக்கயிறுகளும் இரு கடிவாளங்கள் போன்றுமுள.

**தசைப்பயிற்சியும், மூச்சுவிடலும் ஏற்றத்திற்குதவும் வழி :**— தசைகள் வேலை செய்யும்போது அதிலிள்ள இறங்கு குழாய் பிழியப்படுகிறதென்றும், குருதி பின்னிடையாவண்ணம் ஒரு வழிப்பைகள் தடுக்கின்றன வென்றும், அதனால் வேலை செய்யும் ஒவ்வொரு தசையும் குருதியை யிறைக்கும் ஓர் எற்றமாகிற தென்றுங்கண்டோம். ஒருவனிழுக்கும் வண்டியை மற்றொரு வனுஞ் சேர்ந்து இழுத்தால் வண்டி விரைவாய்ச் செல்வதுபோல் தசைகள் வேலை செய்யும் பொழுது எற்றம் இவ்வாறு உதவி பெற்று விரைவாய் வேலை செய்கிறது. மூச்சு இழுக்கும்பொழுது நெஞ்சு பெருப்பதால் குருதி அதற்கு மிகுதியாய்ச் செல்கிறது. விடும்பொழுது குறுகுவதால் குருதி அதிலிருந்து வெளிப்படு கிறது. இவ்வாறு மூச்சுவிடும்பொழுது நெஞ்சும் ஒரு எற்ற மாகிறது. இன்னும் நெஞ்சு பெருக்கும் பொழுது அதன் கீழுள்ள ஈரல்தாங்கி கீழிறங்குவதால் அது தினிப்பை, கல்லீரல், குடர்கள் இவைகளை அமுக்கி அழுக்குக் குருதியை எற்றத்திற்குப் பாயச் செய்கிறது. ஆனால் வயிற்றை இறுக்கிக் கச்சை ஒட்டி யாணம் முதலியவைகளாற் கட்டிவிடுவோமாயின் வயிற்றுத் தசைச்சுவர் (Abdominal wall) வலுவற்றுப் போவதால் கீழிறங் கும் ஈரல்தாங்கி வயிற்றுச்சுவரை அமுக்குமேயன்றி மேற்கண்ட உள்ளுறுப்புக்களை அமுக்கி அழுக்குக் குருதியை இவைகளி லிருந்து பிழியாது. ஆதலின் இக்கொடிய பழக்கங்களை விடல் வேண்டும். மூச்சுப் பயிற்சியையுங் கையாள (Breathing Exercise) வேண்டும். உடற்பயிற்சிகள் செய்யும்போது ஒவ்வொன்று முடிந்ததும், எற்றத்தை நோக்கித் தோலைத் தேய்த்தல் அழுக்குக் குருதி ஓட்டத்திற்குதவியாகும்.

**குருதிச்சுற்று மிகுவதாலாகும் பயன்கள் :**— தசைப்பயிற்சி யினாலும், மூச்சுப்பயிற்சியினாலும் குருதிச்சுற்று மிகுமென்று கண்டோம். அதனலாகும் அரும்பயன்களாவன :—

(1) நமது தோலின் கூடுகள் புதுப்பிக்கப்படுகின்றன. குருதியாலும் வேர்வையாலுங் கழுவப்படுதலின் அது (தோல்) சிகப்பாகவும் வழுவழுப்பாகவும் மாறுகிறது.

(2) உடலிற் கொழுப்பு மிகுந்திருந்தால் அது எரிக்கப்படுகிறது. குறைந்திருந்தால் குருதிகொண்டுவரும் உணவுப்பொருள்களிலிருந்து சேர்த்து வைக்கப்படுகிறது. இவ்வாறு கொழுப்பை அளவு படுத்துகிறது.

(3) தசைகள் நன்றாய் ஊட்டப்பெற்றுப் பெரியனவாகவும், வலிவுடைனவாகவும் உறுதியுடையனவாகவும் ஆக்கப்படுகின்றன.

(4) எலும்புக்கூடு வலிவுண்டாக்கப்பெற்ற தசைகளால் நிமிர்ந்த நிலையிலிருக்கிறது. கூன் முதலிய நிலைமாறலை நீக்குகிறது. எலும்புகளுக்குள்ளும் குருதி மிகுதியாய்ப் பாய்வதால் அவை உறுதியடைகின்றன.

(5) தூய, புதிய குருதி மிக்க உயிர்க்காற்றுடன் மூளையில் பாவுவதால் ஆங்குள்ள ஒவ்வொரு மயிர்குழாயும் கூடுகளுங் கழுவப்பெற்று உள்ளம் குளிருகிறது. அதன் ஆற்றல் இரண்டு மூன்று மடங்கு மிகுகிறது.

(6) நுரையீரல் விரிந்து மார்பு பெருகுகிறது.

(7) குருதி யேற்றம் வலுவடைகிறது.

(8) உணவு நன்றாய் எரிக்கப்பட்டுப் பசியுண்டாகிறது.

(9) ஊன் நீரோட்டம் (Lymphatic Circulation) மிகுகிறது.

(10) இத்தகைய பல நன்மைகளால் உள்ளத்துவகை உண்டாகிறது. பயனில சொல்லுதல், சோம்பல், சுருட்டுப்பிடித்தல், பொடி, புகையிலை போடல் முதலிய தீய பழக்கங்களைக் குறைக்கிறது.

ஆகலின் குருதியோட்டத்தை மிகச்செய்வது உடலையும் உள்ளத்தையும் தூண்டி விடுதலை யொக்கும். எனவே தக்க பயிற்சி செய்பவரே தக்க வாழ்வு வாழ்பவராவர். செய்யாதவர் நடைப் பிணத்திற்கொப்பாவர்.

ஏற்றத்திற்கு உறுதிபயக்கும் வழி:— உழைக்காத தசை வலுக்காது. குருதி யேற்றமும் ஓர் தசையே யாதலின் அதை வலுக்கச் செய்ய அதற்கு எப்பொழுதுஞ் செய்யும் உழைப்புக்கு மேல் உழைப்புக் கொடுக்க வேண்டும். ஆனால் நாம் எண்ணிய அளவில் ஏற்றம் மிகுந்து துடிக்காது. அதை உழைக்கவைக்கும் வழி மேற்காட்டியபடி தசைப்பயிற்சியும் மூச்சுப்பயிற்சியுமே யாகும். நெடுநாளாக உடற்பயிற்சி செய்யாதவர் திடீரென்று பயின்றால் ஏற்றத்துடிப்பு தாறுமாறாகலாம். இஃதுண்டாகாதபடி சிறிது சிறிதாகப் பயில வேண்டும். பயிற்சி அளவிற்கு மிஞ்சியதன்றெனத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் பயிற்சி முடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஏற்றத்துடிப்பு எப்பொழுதும் போலாகவேண்டும்.

குருதியிலுள்ள முப்பொருள்களும் அவற்றின் வேலைகளும்:- குருதிச்சொட்டு ஒன்றைப் பெருக்கிக் காட்டுங் கண்ணாடிக்கீழ் வைத்துப் பார்ப்போமாயின், அதனுள் முப்பொருள்களைக் காணலாம். அவையே (க) நிறமற்ற நீர்ப்பொருளாய (Liquid) ஊனீர் (Plasma or Lymph) (உ) செங்கூடுகள் (Red Corpuscles) (ங) வெண்கூடுகள் (White Corpuscles) ஆகும். இவற்றுள் (1) ஊனீரே குருதியை நீர்ப்பொருளாக வைத்திருப்பது. இதுவே தண்ணீரையும் சமிக்கப்பெற்ற உணவுச் சாற்றையும் தாங்கிச் சென்று எல்லாக் கூடுகளையும் ஊட்டுகிறது. இதுவே கழி பொருள்களைக் கவர்ந்து செல்வது. (2) செங்கூடுகள் இவ் வூனீரிலே மிதப்பதால் குருதிக்குச் சிவப்பு நிறத்தைக் கொடுக்கின்றன. குண்டூசித்தலை பருமனுள்ள குருதியில் இரண்டாவதோராயிரக் (Millions) கணக்கான கூடுகளிருக்கின்றன. இதன் தொகை உடல் நலத்தைப் பொறுத்திருக்கிறது. இது குறைந்துள்ளவர் வெளுத்துப்போய், எளிதில் மூச்சுவாங்குவதுடன்

தலைவலியால் வருந்துகின்றனர். இத்தகையோர் சில நாட்கள் இரும்புச்சத்தை யுண்டால் நலமடைகின்றனர். இவ்விரும்புச் சத்தே இக்கூடுகளைச் சிவப்பாகவும், புல் இலைகளைப் பச்சையாகவும் ஆக்குகிறது. ஒரு செங்கூட்டைத் தனித்தெடுத்துப் பார்ப்போமாயின் மஞ்சளாயிருக்கும். ஆனால் பல சேர்ந்தே சிவப்பு நிறமடைகிறது. இவை உட்குழிந்து வட்டமாயிருக்கின்றன. இவை எலும்புமூளையின் கூடுகளிலிருந்து உண்டாகின்றன வென்று கண்டோம். இவற்றின் இன்றியமையாத வேலை உயிர்க்காற்றை நுரையீரலிலிருந்து ஒவ்வொரு தசைநாருக்கும் அதன் கூடுகளுக்கும் கொண்டு போய்க் கொடுப்பதேயாகும். நாம் ஓயாது மூச்சுவிடுவதின் முடிவான பயனை நம்முடலின் உட்புறத்தில் காற்றுப்படாது, வெளிச்சம்படாது ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் கூடுகள் மூச்சுவிடும் பொழுது தான் நாம் அடைகிறோம். ஆதலின் இச்செங்கூடுகள் எவ்வளவு இன்றியமையாதன பாருங்கள்! இவை தாமாகவே ஓடுகிறதில்லை. குருதி ஓட்டத்தால் ஓடுகின்றன. இவை மயிர்க்குழாயைவிட்டு வெளியிற் செல்லா. எனினும் மயிர்க்குழாய்களின் புரைவழியே இவை வெளியிலுள்ள கூடுகளுக்கு உயிர்க்காற்றை அனுப்புகின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் பிறந்தது முதல் ஆறுவாரம் வரை ஓயாதுழைத்துப்பின் இறக்கின்றன. (3) வெண்கூடுகள் நொடிக்கு நொடி மாறிக் கொண்டேயிருக்குந் தாறுமாறான உருவுடையன. இவை மிகச் சிறிதே வெண்மையாயும் மிகுதியாய் நிறமற்றதாயுமுள்ளன. குண்டூசித்தலையளவு குருதியில் 4000 வெண்கூடுகளிருக்கின்றன. இவற்றை உண்டாக்குவன மண்ணீரலும் (Spleen) கழுத்து அக்குள் (Armpit) இவற்றிலுள்ள ஊனீர்ப்பைகளுமாம். இவ்வுறுப்புகள் வெண்கூடுகளை நாம் சாப்பிட்டதும் மிகுதியாக உண்டு பண்ணுகின்றன; உணவிலுள்ளவும் நம்முடற்கு இறுதியைத் தரத்தக்கவுமாய நச்சுக்கூடுகளுடன் சண்டையிட்டு அவைகளைக் கொல்லவேண்டியதாயிருத்தலின். இன்னும் மூச்சுவிடுவதாலும், சிரங்கு காயம் முதலியவற்றாலும் குருதியுட் புகும் நச்சுக்கூடுகளை இவை எங்கே எங்கே யென்று தேடித்திரிந்து கொல்கின்றன. இவை குருதியில் மட்டுமல்ல: குருதிக் குழாய்களுக்கு வெளியிலு

முள்ள நச்சுக்கூடுகளையுங் கொல்ல இருக்குமிடந்தேடி குருதிக் குழாய்களினூடே இயற்கையாக வழியில்லாவிடத்தும் வழி பண்ணிக்கொண்டு செல்லுமியல்புடையன. நம் சிரங்கு, காயங் களில் சீழ் கோக்கிறதே. அது எதனால் தெரியுமா? எண்ணிறந்த வெண்கூடுகள் இச்சிரங்கு காயங்களின் வழியே உட்புகும் நச்சுக் கூடுகளைக்கொன்று தாமும் மாண்டதனாற்றான். தாய் நாட்டிற்குச் செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் வீரர்களைப் போல் நம்முடற் காகத் தம்முயிரையும் பொருட்படுத்தாது சண்டையிடும் இக்கூடுக ளின்றேல் நம்முடல் எத்தனை நாள் வாழ்ந்து விடும்! நம்முடல் கொசுக்காய்ச்சல் (Malaria) முதலிய நச்சுநோயால் வருந்தும் பொழுது எத்துணை பெரியபோர் உடல் முழுவதும் நடக்கிறது தெரியுமா? சர்மானிய போரும் (German War) அதற்கீடா காது. இப்போரில் வெண்கூடுகள் வெற்றி பெற்றால் நாம் வலி விழந்தேனும் வாழ்வோம். இன்றேல் நம்முயிர்க்கிறுதியே! இது மட்டுமா? நம்முடலில் எங்கேனும் ஒரு ஊறு நேரின் குருதி கசிந்து கசிந்து ஒழுகிவிடலாமன்றோ? இவ்வாறு நடவாதபடி அவ்வூறு நடந்த செய்தி வெகுவிரைவில் உடல் முழுவதும் பரவு கிறது. உடனே இவ்வெண்கூடுகள் மிகுதியாக உண்டாக்கப் படுகின்றன. இவை வெளிப்பட்ட குருதியை உறையவைத்து (Coagulate) குருதிக்குழாயிலுண்டான ஓட்டையை அடைத்து விடுகின்றன. இவ்வாறு குருதி தன்னிடத்துள்ள முப்பொருள் ளால் உடலின் கூடுகளுக்குக்காற்று, நீர், உணவு அளிப்பதற்கும், கழிபொருள்களைக் கவர்ந்து செல்வதற்கும், நச்சுப்பொருள்கள் பெருகாதபடி அழிப்பதற்கும், அறுபட்ட ஓட்டைகளை அடைப் பதற்கும் உதவுவதால் இதைப்போன்ற பயனளிக்கும் வேறு எந்த நீர்ப்பொருளையும் உலகிற காணவே முடியாது.

ஊநீர்ச்சுற்று (Lymphatic Circulation):—குருதி பாய் குழாய், வடி குழாய், மயிர்க்குழாய்களில் மட்டும் சென்று கொண்டிருந்தால் இக்குழாய்களுக்கு வெளியே இக்குழாய்களைத் தொடாமலே யிருக்கும் எண்ணிறந்த கூடுகளுக்கு உணவு செல்ல முடியுமா? முடியாதல்லவா? ஆதலின் குருதிச்சுற்றால் பய

னற்றுப் போமாதலின் குருதி பயன்படுமாறு அதிலொருபங்கு மயிர்க்குழாயகளினின்றும் ஒழுகுகிறது. இவ்வாறொழுகுவது ஊநீரே. குருதியல்ல. இவ்வூநீர் தசைக்கூடுகளைச் சுற்றிப்பரவுகிறது. இதிலிருந்து கூடுகள் வேண்டியவற்றை எடுத்துக்கொள்ளுகின்றன. எடுத்துக்கொண்டது போக மீதி மயிர்க்குழாய்களுக்குள் திரும்பிவரமுடியாது. ஏனெனில் இக்குழாய்களுள் ஏற்றத்தின் அமுக்கல் மிகுந்திருக்கிறது. இவ்வாறு ஊநீர் ஒழுக்கால் குருதியிலுள்ள நீர்ப்பொருள் குறைந்து கெட்டியாகுமன்றோ? அன்றியும் தசை நார்கள் ஒழுகிய எல்லா ஊநீரையும் பயன்படுத்துகிறதில்லையாதலின் எஞ்சிய ஊநீர் தங்குவதால் அவை வீங்கிவிடும். தங்கிய பங்கும் பயனற்றுப்போம். இத்தீமைகள் உண்டாகாதபடி உடல் முழுதும் ஊநீர்க்குழாய்கள் (Lymphatics) இருக்கின்றன. இவையும் மயிர்க்குழாய்கள் போன்ற பல சிறு குழாய்களும், இவை பல சேர்வதாலாகும் பெருங் குழாய்களுமாயிருக்கின்றன. கூடுகள் பயன்படுத்திய பங்கு நிற்க எஞ்சிய ஊநீர் உடலின் எல்லாப் பங்குகளிலிருந்தும் சென்று சேர்ந்து சேர்ந்து கடைசியில் இரு பெருங்குழாய்களுஞ் சேர்ந்து பின்னர் கழுத்துப் பட்டை எலும்புகளினடியிலுள்ள இரு வடி குழாய்களிலுள்ள அழுக்குக் குருதியுடன் கலக்கின்றன. இவ்வாறு கலக்கும் பொழுதுள்ள ஊநீர் கழிபொருள்களையும், பயன் படுத்தப்படாத உணவுப் பொருள்களையு முடையது. இவற்றுள் கழிப்பொருள்கள் நீக்கப்பெறும். உணவுப் பொருள்கள் குருதியுடன் சென்று மறுபடியும் பயன் படுத்தப்படும். இவ்வாறு எப்பொருளும் வீணாகப் படாது நம்முடலில் வெகு செட்டாய்ச் செலவழிக்கப்படுவது என்ன நன்மை பாருங்கள்! வடிகுழாயில் அழுக்குக் குருதி செல்வதற்கு உடற்பயிற்சி எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறே ஊநீரோட்டத்திற்கும் உடற்பயிற்சியே இன்றியமையாதது. இஃதில்லாது இவ்வோட்டம் ஒழுங்காய் நடவாததினாற்றான் யானைக்காலுண்டாகிறது. ஊநீரிலுள்ள கழிபொருள்களை நீக்குவன ஊநீர்க் குழாய்களினிடையே யுள்ள ஊநீர்ப்பைகளே (Lymphatic Glands) இவை இடுப்பிலும் அக்குளிலும் மிகுந்திருக்கின்றன. இவைகளிலுள்ள ஊநீர்க்கூடுகள் (Lymph cells)

தாம் பெருகி வெண்கூடாகின்றன. இப்பைகளுட் பெரிது ஈரல் தாங்கியின் கீழ் தினிப்பைக்கு இடதுபக்கத்துள்ள நீலச் சிவப்பான் மண்ணீரல். ஈண்டுக் கழிபொருள்கள் மிகுதியாய் எரிக்கப் படுகின்றன.

குருதியைத் தூய்மையாக்கும் மூன்றுறுப்புகள் :—இவையே (1) நுரையீரல், (2) கல்லீரல். (3) சுண்டிக்காய் (Kidneys) ஆகும். இவற்றுள் நுரையீரல் கரிக்காற்றை (Carbondioxide) நீக்குகிறது ; கல்லீரல் நச்சுப்பொருள்களை எரித்துப் பித்தநீர் (Bile) ஆக்குகிறது ; குண்டிக்காய் மூத்திர உப்பு (Urea), நீர் இவற்றை நீக்குகிறது. இவற்றின் விரிவை முறையே மூச்சுறுப்புகள், சமிக்கும் உறுப்புகள், கழிவாய்களென்னுந் தலைப்பின் கீழ்க் கண்டு கொள்க.

மயக்கப் பொருள்களின் மாண்பு :—புகையிலையால் எற்றம் முதலில் தாறுமாறாய்த்துடித்து, பின்னர்ச் சிறிது நின்று, பின் சிறிது தாறுமாறாய்த் துடிக்கும். இதற்குப் புகையிலைத் துடிப்பு (Tobacos Heart) என்று பெயர். இதனால் எற்றம் வலியிழந்திருக்கிற தென்பதை அறியலாம். சாராயச்சத்து (Alcohol) தோலையும் தசைகளையும் வெந்து சிவக்கச்செய்கிறது. இதனால் எற்றம் மிகுதியாய்த் துடிக்கிறது. இன்னும் இது எற்றத்தைக் கொழுக்கவைத்து, சோம்பருண்டாகி வலுவிழக்கச் செய்கிறது. இது மட்டுமா ? இது செங்கூடுகள் சுமந்து செல்லும் உயிர்க்காற்றை அதினின்றும் பிரியாதபடி செய்கிறதால் குடியர்களின் தசைக்கூடுகள் தக்க அளவு உயிர்க்காற்றைப் பெறாது திணருகின்றன. வெண்கூடுகளும் குடியர்களின் நலத்திற்காகச் சண்டையிடுவதே யில்லை. தந்நலமுங்கருதாத குடிகாரர்களுக்காக அவை தம்முயிரைக் கொடுக்க விரும்புவதில்லையோ, அன்றி அவையும் மயங்கி விடுகின்றனவோ தெரியவில்லை. எவ்வாறாயினுங் குடிகாரர்களின் குருதி நலனும் உயிர்க்குறுதியுங் கெடுவதிற் குறைவில்லை.

குருதி இழத்தலுக்கு முதலுதவி :—பாய்குழாய் அல்லது வடிகுழாய் அல்லது மயிர்க்குழாய் அறுவதால் குருதியை இழக்க

நேரும். பாய்குழாய அறுந்திருந்தால் ஒழுகும் குருதி நல்ல சிவப்பாயிருக்கும்; நீரொழுக்குப் போன்று விடாது பாயும். மயிர்க்குழாய் அறுந்திருந்தால் குருதி கசியும். நல்ல சிவப்பாகவேனும் கருஞ் சிவப்பாகவேனு மிருக்கும். குருதியை இழத்தலினால் வலிவின்மை, குருதியின்மையும் (Bloodlessness), மயக்கமும், இன்னும் மரணமும் உண்டாகலாம். ஆதலின் முதலுதவி சடுதியிற் செய்யவேண்டும். குருதி கட்டியாகும் (Conjealing) தன்மை யுடையதால் ஒழுகிய குருதி கட்டியாகி ஒழுக்கைத்தானே நிறுத்திக்கொள்ளும். இக்கட்டியைப் பெயர்க்கலாகாது. ஒழுகுமிடத்தை நன்றாய் அமுக்கி குருதி ஒழுக்கை நிறுத்தி விடலாமாகையின் தூய விரலால் அல்லது துணியால் வீண்பொழுது போக்காது குருதி ஒழுகுமிடத்தை நன்றாய் அமுக்க வேண்டும். இன்னும் அறுபட்டது பாய் குழாயாயின் அறுபட்ட விடத்திற்குச் சிறிது மேல் அல்லது கீழாக ஏற்றத்தின் பக்கமாக அமுக்க வேண்டும். ஏனெனில் குருதி ஏற்றத்திலிருந்தே பாய்குழாய்க்கு வருகிறது. அறுபட்டது வடிகுழாயாயின் முற்கூறியதற்கு எதிர்ப்பக்கமாக அமுக்கல் வேண்டும். காயம்பட்ட பங்கை உயர்த்துவதால் குருதி அப்பங்கில் குறைந்து பாயும். குருதியிழப்புங் குன்றும். இறுக்கிக் கட்டியிருக்குந் துணியைத் தளர்த்தி விட்டால் குருதி எல்லாப் பங்கிற்கும் விரவிப் பாவுமாகையால் குருதியிழப்புக் குறையும். காயம்பட்ட பங்கை அசைக்காதிருத்தல் நன்று. மிகக் குளிர்ந்த நீர் அல்லது பனிக்கட்டி நீரை காயத்தின்மேல் துணியால் பிழிதல் குருதிக் குழாயைச் சுருக்கிக் குருதி இழப்பைக் குறைக்கும். காப்பி, தேநீர் முதலிய குடிகள் ஏற்றத்தை விரைவாய் வேலை செய்யச் செய்யுமாதலின் இவைகளைக் கொடுக்கக் கூடாது. கையால் அமுக்குவதில் ஒழுக்கு நிற்காவிடில் ஒரு கைக்குட்டையை எடுத்து, நடுவில் முடியிட்டு, முடிச்சை, அமுக்கவேண்டிய குருதிக் குழாயின்மேல் வைத்து ஒரு சிறுகுச்சி அல்லது எழுதுகோலைச் செருகி முறுக்கினால், கட்டு இறுகும். இறுகவே குழாயின் மேலுள்ள முடி குழாயை அமுக்குவதால் ஒழுக்கு நின்றுவிடும். இது நின்றதும் முறுக்குதலை நிறுத்திவிட்டு அக்குச்சியை அப்படியே வைத்திருக்க மற்

றொரு கட்டுக்கட்ட வேண்டும். அரை மணி நேரத்தின்பின் இரண்டாங்கட்டை யவிழ்த்து முறுக்கைச் சிறிது தளர்த்திப் பார்க்க வேண்டும். குருதி ஒழுக்கு நின்றிருந்தால் கட்டை தளர்த்தியபடியே வைத்திருக்கலாம். ஆனால் எடுத்துவிடக் கூடாது. நிற்காவிட்டால் முன்போல் இறுக்கிவிட வேண்டும். முற்சொல்லியபடி கட்டை முறுக்கியும் நிற்காவிட்டால் எந்தப் பெரும்பாய் குழாயிலிருந்து குருதி ஒழுகுகிறதோ அதை அமுக்க வேண்டும். இதற்குத் தக்க பழக்கம் வேண்டும். குருதி ஒழுக்கு மிகினும் குருதிக்குப் பதிலாக உப்புநீரைக் குருதிக்குழாய் வழியே புகட்டின் (Injection) உடலிற் குருதியோட்டம் நின்று விடாது. உயிர் துறக்காது நாளாவட்டத்தில் நலனுறலாம். இவ்வாறே பேதி (Cholera) மிகினும் உப்புநீரைக் குருதிக்குழாயுட்புகட்டி உயிரைக் காப்பாற்றலாம்.

---

## ஐந்தாம் படலம்.

---

### மூச்சு உறுப்புகள்.

மூச்சுறுப்புகள் யாவை?:—அழுக்குக் குருதி நுரையீரலில் தூய காற்றுடன் கலந்து தூய்மையடைகிறதென்று முன்பு கண்டோமல்லவா? இத்தூய காற்று நுரையீரலை எவ்வழிச் சென்றடைகிறதென்பதை ஆராய்வோம். மூச்சுக்காற்று முதலில் மூக்கின் வழியே ஏறுகிறதென்பது உங்களுக்குத் தெரியும். பின்னர் சிறு குழாய்களின் வழியே கீழிறங்கி தொண்டைக்கு (Pharynx) வருகிறது. இதன் கீழ் முன் பின்னாக இரு குழாய்களிருக்கின்றன. முன்னையது மூச்சுக்குழாய் (Trachea); பின்னையது உணவுக்குழாய் (Gullet). மூச்சுக்குழாயின் உச்சியில் ஒலிப்பெட்டி (Larynx) இருக்கிறது. இதுதான் நீங்கள் அண்ணாந்து நீர் குடிக்கும்போது ஏறியிறங்குவது. இதனுள் குறுக்காக இரு ஒலிக்கயிறுகள் (Vocal chords) இருக்கின்றன. இவற்றினிடையே உள்ள வழிக்குக் குரல்வளை (Glottis) என்று பெயர். நீங்கள் உண்ணும் பொழுது உணவுப் பொருள்கள்

இவ்வளைக்குள் விழுந்து விடாதபடி மூடிக் கொள்வதற்காக குரல்வளைமூடி (Epiglottis) இருக்கிறது. ஆனால் மூச்சு இழுக்கும் பொழுது இம்மூடி நிமிர்வதால் வளை திறந்து கொள்கிறது. உடனே மூச்சுக்காற்று உள்ளே மூச்சுக்குழாய்வழியே செல்கிறது. இக்குழாய் 4 அங்குல நீளமுடையது. இது நெஞ்செலும்பின் உச்சிக்கு நேராக இரண்டாய்ப் பிரிகிறது. இவ்விரு குழாய்களுள் ஒன்று முப்பங்குகளாலாய (Three-lobed) வலது நுரையீரலுக்கும் மற்றொன்று இரு பங்குகளாலாய இடது நுரையீரலுக்குஞ் செல்கிறது. ஆங்கு இவை பல சிறு குழாய்களாகப் பிரிகின்றன. இவைகளுக்கு மூச்சுக்கிளைக் குழாய்கள் (Bronchial tubes) என்று பெயர். இவைகளில் ஒவ்வொன்றும் மரங்களைப் போல் கிளைகிளைகளாகப் பிரிவதால் நுரையீரல் முழுவதும் இக்கிளைக் குழாய்கள் பரவி யிருக்கின்றன. ஒவ்வொரு குழாய் முடிவிலும் எண்ணிறந்த காற்றறைகள் (Air cells) நெருங்கியிருக்கின்றன. இவ்வறைகள் அமைந்திருப்பதைப் பார்த்தால் எண்ணிறந்த திராட்சைக் கொத்துகள் போன்றிருக்கும். இக்காற்றறைகளின் சுவர்களினிடையே எண்ணிறந்த மயிர்க்குழாய்கள் வலை விரித்தது போற்பரவியிருக்கின்றன. இக்குழாய்களின் வழியே அழுக்குக் குருதிவந்து காற்றறைகளுக்குள் வந்திருக்குந் தூய காற்றுடன் கலந்து தூய்மையடைந்து பின்னர் குருதியேற்றத்திற்குச் செல்கிறது. காற்றும் குருதியால் அழுக்கடைந்து மூச்சுவிடும் பொழுது வெளியே செல்கிறது.

மூச்சு இழுத்து விடும் வகை:—நீங்கள் மூச்சை இழுக்கும் பொழுது நெஞ்சுக்கூடு பெருக்கிறதை அறிவீர்கள். என் பெருக்கிற தென்றால் காற்று உள்ளே செல்கிறது; அதனால் பெருக்கிற தென்பீர்கள். இது முழுத்தவறு. ஏனெனில் காற்று தானாகவே நெஞ்சுக்கூட்டினுட் சென்று பெருக்கவைக்கும் இயல்புடையதன்று. இவ்வியல்பு காற்றிற்கிருந்தால் இறந்தவனும் மூச்சு விடலாமன்றோ? ஆதலின் நெஞ்சுக்கூடு பெருப்பதாற்றான் மூச்சை இழுக்கிறீர்க ளென்பதை உணருங்கள். இவ்வாறு பெருக்க வைக்குந்தன்மை உயிருடைப் பொருள்களுக்கே உள.

இத்தன்மை நம்மில் ஈரல்தாங்கி, வயிற்றுச்சுவர், பழுக்களுக்கிடையேயுள்ள தசைகள் ஆகிய இத்தசைகளை இயக்குகிறது. நமது நுரையீரலை ஒரு துருத்திக் கொப்பிடுவோமாயின் நம்முயிர்த் தன்மையைத் துருத்தியை இயக்கும் ஓர் மனிதனுக்கு ஒப்பிடலாம். இத்தன்மையால் கவிழ்ந்த கிண்ணம் போன்ற ஈரல்தாங்கி சுருங்கி, தட்டையாய்க் கீழிறங்குகிறது. இதனால் இதனுடன் இணைக்கப் பெற்ற நுரையீரலின் அடிப்புறம் கீழிழுக்கப்படுகிறது. இதே பொழுதில் பழுக்களினிடையிலுள்ள வெளிப்புறத் தசைகள் சுருங்குவதால் பழுக்கள் மேற்புறமாகவும் முன்புறமாகவும் விரிகின்றன. இப்பழுக்களுடன் நுரையீரல் இணைக்கப் பெற்றிருப்பதால் இவ்விரிவினால் நுரையீரலின் மேற்புறம் மேலும் முன்புறம் முன்னும் இழுக்கப்படுகின்றன. ஆதலின் நுரையீரல் நாலாப் பக்கமும் விரிகிறது. இவ்விரிவை துருத்தியின் வாயை விரிப்பதற் கொப்பிடலாம். உடனே காற்று தனது பளுவால் விரிக்கப் பட்ட துருத்திக்குள் புகுவது போல், இடங்கொடுக்கும் நுரையீரலுக்குள்ளும் (காற்று) புகுகிறது. இதனால் மூச்சு இழுத்தல் (Inspiration) உண்டாகிறது. இவ்வாறு இழுக்கும் பொழுது ஈரல் தாங்கி கீழ்ச்சென்றதல்லவா? அது கல்லீரல், தினிப்பை, குடர் இவைகளை அமுக்குகிறது. இவைபின்னுங் கீழுஞ் செல்வதற்கு வழியின்றி முன்னுள்ள வயிற்றுச் சுவரைத்தள்ளுகின்றன. இவை யாவுந் தசைகளின் முயற்சியால் நடைபெறுகின்றன.

நுரையீரல் விரியும் பொழுது அதன் எண்ணிறந்த மீளுந் தன்மையை (Elasticity) உடைய தசை நார்களாலாக்கப்பட்டிருத்தலின் விரைவில் சுருங்கிப் பழைய பருமனையடைகின்றன. பழுக்களும் அவைகளினிடையே உள்ள மீளுந்தன்மையுடைய எலும்புக் குருத்துகளால் கீழும் உள்ளும் இழுக்கப்படுகின்றன. மீளுந்தன்மையுடைய வயிற்றுச்சுவர் உள்ளுறுப்புகளை அமுக்குவதால் அவை ஈரல் தாங்கியைமுட்டி மேற்றள்ளுகின்றன. இவ்வாறு பல வழியாலும் நுரையீரல் சுருக்கப்படுவதால் மூச்சு விடுகிறோம். இவ்வாறு மீளுந்தன்மையுடைய தசைகளாலும் எலும்புக்குருத்துகளாலும் நுரையீரல் முன்னிருந்த நிலையை யடைவ

தால் மூச்சுவிடுதல் (Expiration) தசைகளின் முயற்சியின்றித் தானுகவே நடக்கிறது. நாம் வலிவுடன் மூச்சுவிடுகிறதுமுண்டு. இருமல், தும்மல், பாடல், பேசல், வேலைசெய்து களைத்து மூச்சு வாங்குதல் முதலிய செயல்களைச் செய்யும்போது, வயிற்றுச் சுவர் வழக்கத்திற்கு மிகுதியாய் உட்சென்று உள்ளுறுப்புகளை அமுக்குவதால் அவை ஈரல் தாங்கியை மிகுதியாய் முட்டி மேற்றள்ளுகின்றன. பழுக்களின் இடையிலுள்ள உட்புறத் தசைகள் மிகுதியாய்ச் சுருங்குவதால் நெஞ்சுக்கூடு கீழும், உள்ளும் மிகுதியாய் அமுங்குகிறது. இதனுல் நுரையீரல் மிகுதியாய்ச் சுருங்கி மூச்சும் மிகுதியாய் வெளிப்படுகிறது.

நெஞ்சு மூச்சும் வயிற்று மூச்சும் முழு மூச்சும்:—வயிற்றை இறுக்கி ஆடை கட்டிவிடுவதால் நுனி நெஞ்சினுல் மட்டும் மூச்சு விட நேருகிறது. நுனி நெஞ்சுக்கூட்டிற்கு விரியுந்தன்மை சிறிதேயாதலின் இப்பழக்கம் வருத்தத்தைத் தருவதாய் இருப்பதுடன் களைப்பை எளிதில் உண்டுபண்ணும். இஃதன்றி நுரையீரலின் கீழ்ப்பங்கு அகன்று பெருத்தும் மேற்பங்கு கூரிதாய்ச் சிறுத்து மிருப்பதால் இவ்வாறு நுனி நெஞ்சினுல் மூச்சுவிடுவது நுனி நுரையீரலைமட்டும் இயக்கி மிகக் குறைந்த பயனையே அளிக்கும். உடல் நலனும் எளிதிற் குன்றும். இக்கொடிய பழக்கம் துடியிடையோடு விளங்க முயலும் பல பெண்களுக்குண்டு. இதற்கு மாருகச் சில ஆடவர்கள் ஆடையைத் தூக்கி நெஞ்சுப்புறத்தில் இறுக்கிக் கட்டுவதாலும், முதுகைக் கூனிக் கொள்வதாலும் வயறு பெருத்து நெஞ்சுக்கூடு சூம்புவதுமன்றி அடிவயிற்றுல் மூச்சு விடும்படியாகும். இதனுல் மார்பு பல மிழந்துவிடுவ தன்றி மூச்சின் முழுப்பயனையு மடையமுடியாது. இவ்விரண்டு கொடிய பழக்கங்களையும் விட்டு மூச்சுவிட உதவும் எல்லா உறுப்புகளையு மியக்கி முழுமூச்சு விடுபவரே வலிமை, நலம் எய்துவர். இஃதன்றி மூச்சுப்பயிற்சியை நீர் மூழ்கு முன்னும் பின்னும், சாப்பிடு முன்னும், தசைப் பயிற்சி செய்பு முன்பின்னும் செய்பவர் மிகுதியான நலமெய்துவர். இவ்வாறு செய்ய நிமிர்ந்து நின்றுகொண்டு அல்லது உட்கார்ந்துகொண்டு மூச்சை எவ்வளவு இழுக்க முடியுமோ அவ்வளவு இழுத்து, அடக்க முடியும்வரை அடக்கி,

விடக்கூடியவரை விட்டுப் பின் இழுக்காதிருக்கக் கூடியவரை இருந்து பழகல் வேண்டும். இதுவே ஒரு முழுமூச்சாகும். இவ்வாறு எவ்வளவுக் கெவ்வளவு செய்கிறேமோ அவ்வளவும் நல்லது. இழுக்கும்போதும் விடும்போதும் எவ்வளவு மெதுவாகச் செய்கிறேமோ அவ்வளவிற்கு நயமதிகம்.

மூச்சின் அளவு:—நாம் துடிநேரம் (Minute) ஒன்றிற்குப் பதினெண்முறை ஓயாது மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறேம். இது ஏற்றத்துடிப்பின் எண்ணிக்கையிற் காற்பங்கு ஆகும். நாமோ இரவில் குறைவாகவும், பகலில் மிகுதியாகவும், பருதி வெளிச்சத்தில் இன்னும் மிகுதியாயும் ஆழ்ந்தும் மூச்சுவிடுகிறேம். நங் கண்ணைக் கட்டிவிட்டால் நம் மூச்சு எதனுலேயோ குறைகிறது. நடுவயதுடைய ஆடவரினுங் கிழவர் குறைவாயும், மகளிர் மிகுதியாயும் குழந்தைகள் இன்னும் மிகுதியாயும் மூச்சு விடுகின்றனர். வேலையின் கடுமைக்குத் தக்கவாறு மூச்சு மிகுகிறது. பொது அளவுடைய (Average) நுரையீரல் மூச்சை எப்பொழுதும்போல் இழுத்தபின் 230 பரும அங்குல (C. in) க்காற்றையுடையது. விட்டபின் 200 பரும அங்குலக் காற்றையுடையதாதலின் 30 பரும அங்குலக் காற்று இயற்கை மூச்சால் போய் வந்துகொண்டிருக்கிறது. மூச்சை எவ்வளவு வெளிவிடக் கூடுமோ அவ்வளவு விட்ட பின்னும் 100 பரும அங்குலக்காற்று நுரையீரலிற்றங்குகிறது. இவ்வாறே கூடுமான வரை இழுத்தால் 330 பரும அங்குலத்துக்கு மேற்படாது. ஆதலின் முயன்று மூச்சு விடுவதால் 130 ப. அ. போயும் 130 ப. அ. வந்துகொண்டு மிருக்கிறது.

இழுத்துவிட்ட காற்றுகளின் வேற்றுமை:—நாம் இழுக்குந் தூயகாற்றில் ஐந்தில் நான்கு பங்கு உப்புக்காற்றும், ஒரு பங்கு உயிர்க்காற்றும், சிறிதே கரிக்காற்றும் நீராவியு மிருக்கின்றன. இவ்வாறு உட்கொண்ட காற்றிலுள்ள உயிர்க்காற்றில் காற்பங்கு குருதியிற் சேருகிறது. உப்புக்காற்று அப்படியே வெளிவந்து விடுகிறது. கரிக்காற்றும், நீராவியும், வெப்பமும் மிகுகின்றன. இவற்றை விளக்க வெளிவிடுங்காற்றை ஆடிக் குழாய் (Glass Tube) வழியே சுண்ணும்பு நீரில் ஊதினல் அது பால் போலா

கிறதால் கரிக்காற்றின் மிகை வெளியாம்; ஒரு குளிர்ந்த கற்பலகையில் மூச்சு விடுவோமாயின் அதில் எண்ணிறந்த சிறு நீர்த்துளிகள் படிவதால் நீராவி மிகுந்திருத்தல் தெளியும்; ஒரு வெப்பமட்டின் (Thermometer) கூட்டில் (Bulb) மூச்சு விடுவோமாயின் அது வெப்பமிகையைக் குறிப்பதால் வெப்பின் மிகை புலனும். நம்முடலில் நாளொன்றுக்கு 3 சேர் நிறையுடைய உயிர்க்காற்று குருதியுட் கலக்கிறது; 6 சேர் பருமனுடைய நீர் வெளிப்படுகிறது.

மூச்சுவிடுவதேன்?:—நம்முடலும் ஒரு மெழுகுவத்தியைப் போல் எரிந்து கொண்டே யிருக்கிறதென்றால் நீங்கள் வியப்புறுவீர்கள்! ஒரு மெழுகுவத்தி எரிவதற்குத் தூயகாற்று வேண்டுமென்பதும் அக்காற்றிலுள்ள உயிர்க்காற்றை எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக கரிக்காற்றையும், நீராவியையும், வெப்பையுங் கொடுக்கிறதென்பதும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். இதைத்தான் நம்முடலும் செய்கிறதே யொழிய வேறில்லை. ஆதலின் நம்முடல் கொழுந்துவிட்டு விரைவாய் எரியாவிடினும் மெதுவாய் எரிகிறதென்பது தெளிவே. இவ்வெரிச்சல் நுரையீரலில் நடக்கிறதென்று நினைப்பீர்கள். அது பெருந் தப்பு. நுரையீரலில் ஒரு பண்டமாற்றல் நடக்கிறதே யன்றி எரிச்சல் அல்ல. ஆங்கு குருதி கொண்டுவரும் நச்சுக்காற்றையும், நீரையும், வெப்பையும் காற்றிற்குக் கொடுத்துவிட்டுக் காற்றிலுள்ள உயிர்க்காற்றை எடுத்துக் கொள்ளுகிறது. ஆயின் எரிச்சல் எங்கு நடக்கிறதெனின், உடல் முழுவதுமே ஒவ்வொரு அணுக்கூட்டிலும் நடக்கிறது. இதற்கு வேண்டிய விறகு நாம் உண்ணும் உணவே. இதைக் குருதியே கொண்டு கொடுக்கிறதென்று கண்டோம். இன்னும் எரிதற்கு வேண்டிய உயிர்க்காற்றையும் இக்குருதியே தன்னிடத்துள்ள செங்கூடுகளாற் சுமந்து செல்கிறது. ஒவ்வொரு செங்கூடும் மிக நுண்ணிதேயாயினும் அது கொண்டு செல்லும் உயிர்க்காற்றின் அளவு அதை விட எத்தனையோ மடங்கு பெரிதே. காற்று மிகுதியால் தீயும் மிகுவதுபோல் நம்முடலும் நல்ல காற்று ஏராளமாய்க் கொடுக்கப் பெற்றால் (உயிருடன்) எரிதலும் மிகும். இவ்வாறு குருதி எரிய வைப்பதன்றி, எரிவதால் உண்டாகும்

கரிக்காற்றையும் அதுவே எரிச்சல் அவியாதபடி நீக்குகிறது. இவ்வாறு நீக்குவது அதிலுள்ள அப்பள உப்பின் (Soda) உதவியாற்றான். இவ்வுப்பு நம் குருதியில் இலதேல் நாம் புழுங்கி இறக்க வேண்டியதுதான். ஆதலின் உடல் முழுவதும் எரிகிறதன்றி, மூச்சும் விடுகிற தென்பதை இனியாவது நம்புவீர்களா? இதற்குதவியாகத்தான் நுரையீரலிற் பண்டமாற்றல் நடக்கிற தென்பதைத் தெரிந்து கொண்டீர்களா?

பண்டமாற்றல் நடக்கும்வழி :— செடி கொடிகள், மரங்கள், பல சிற்றுயிர்களெல்லாம் இலைகளினாலும் தோல்களினாலும் மூச்சு விடுகின்றன. தவளையின் தோல் கூட இவ்வாறு பயன்படுமாறே அமைக்கப்பட் டிருக்கிறது. ஆனால் உயிர்கள் அறிவாற்றலால் (பருமனலல்ல) பெரிதாக ஆக இத்தோல் மூச்சு போதுகிறதில்லை. நமது தோலின் பரப்பு 19 சதுர அடிதானிருக்கிறது. ஆனால் நமது நுரையீரலின் எல்லா மூச்சறைகளையும் ஒவ்வொன்றாக எடுத்து அவைகளின் சுவரை வளைவில்லாதபடி கூறு கூறாக அறுத்து இடைவெளி விடாது பரப்பினால் 2000 சதுர அடி இருக்கிறதெனில் நம் தோல் இதற்கு எம்மாத்திரம்? இவ்வளவு பரப்புடைய தோலை சிறு இடத்தில் அடக்கி வைக்கவே நுரையீரல் பலப்பல அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கிறதென்பது தெரிகிறதா? என்ன அருமையான எற்பாடு! இத்தகைய பேரறிவைக் குறிக்கும் எற்பாடுகள் முன்னும் பார்த்திருப்பீர்கள்; பின்னும் பார்ப்பீர்கள்! இத்தனை சதுர அடியுள்ள அறைச் சுவர்களிலும் நுரையீரலுக்கு வருங்குருதி பரப்பப்படுகிறது. நாம் இழுக்குங் காற்றும் இவ்வறைகளுக்குட் செலுத்தப்பட்டு இத்தனை சதுர அடிகளின் மேலும் பரப்பப்படுகிறது. இவையிரண்டும் முட்டிய இரண்டொரு மாத்திரையில் (Second) முற்கூறிய பண்டமாற்றல் நடக்கிறது. என்ன விரைவு! நடந்ததும் குருதி தன் தலைவர்களாகிய கூடுகளுக்கு உயிர்க்காற்றைச் சுமந்து செல்கிறது. காற்றும் அழுக்குடையதாகக் கருதப்பட்டு வெளியிற் றள்ளப்படுகிறது. பின்னர் முன்போல் தூயகாற்று இழுக்கப்பட்டு பிறகு வரும் அழுக்குக் குருதியுடன் பண்டமாற்றல் செய்கிறது. இத்தொழில் ஒரு மாத்திரையும் விடாது நடந்துகொண்டே யிருக்கிறது.

நம்மைக்கேட்டா? நாம் முயன்ரு? வருந்தியா? இல்லவே யில்லை! தானகவே, எளிதாகவே, நாம் நினைக்காமலே நடை பெருகிறது. இது பெரும் வியப்பன்ரே!

காற்ரேட்டம் :— இவ்வாறு நடக்கும் பண்டமாற்றலால் நம்முடற்கு ஊதிய முண்டாக வேண்டுமாயின் குருதி உயிர்க் காற்றை எவ்வளவுக் கெவ்வளவு அடையக்கூடுமோ அவ்வளவு அடையவேண்டுமன்ரே? 'சட்டியி லிருந்தா லன்ரே அகப்பை யில்வரும்' என்னும் பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். காற்று தூயதா யிருந்தா லன்ரே குருதிக்கு உயிர்க்காற்று மிகுதியாய்க் கிடைக்கும். அழுக்குக்காற்றில் மிகச்சிறிதே கிடைக்குமன்ரே! இது மட்டுமா? அழுக்கு நீரால் அழுக்கைக் கழுவ முடியுமா? தூயநீரன்ரே வேண்டும். இவ்வாறே அழுக்குக் குருதியைக் கழுவத் தூயகாற்று எவ்வளவு இன்றியமையாதது? இதைக் கருதாது அழுக்குக் காற்றை யிழுத்தால் குருதியிலுள்ள அழுக்கு நீங்குவதில்லை. இஃதன்றி அக்காற்றில் அழுக்குப்பொருள் எத்தனை யுளவோ அத்தனையில் ஒவ்வொன்றிலும் ஒரு பகுதி குருதியுட் கலக்கிறது. என்ன மோசம்! இதை உணர்ந்த பின்னுவது கெட்ட காற்றை இழுக்காதிருப்பீர்களா? இழுக்கா திருக்க எது தூயகாற்று எது அழுக்குக் காற்றென்று கேட்பீர் கள். மூச்சு முதன் முதல் என் மூக்கு வழியாய்ப் போகிற தென்று தெரியுமா? மூக்கு தூயகாற்று இது, அழுக்குக்காற்று இதுவென்று தெரிவிப்பதற்காகவே யிருக்கிறது. மூக்கிற்கு எக் காற்று பிடிக்கவில்லையோ அக்காற்று உங்களுக்கும் உதவா தென்பது திண்ணம். பலர் கூடு மிடங்களாகிய பள்ளிக்கூடம், அரங்கு (நாடகக் கொட்டகை), சொற்பொழிவுக்கூடம் முதலிய விடங்களில் தக்க சாளரங்க ளமைக்கப்பெருது காற்ரேட்ட மில்லாதிருந்தால் அங்குள்ள காற்றின் கெடுதியை உங்கள் மூக்கு உங்களுக்கு அறிவிக்கிறதன்ரே? இவ்வாறே சாளரங்களில்லாத இருட்டறை, பண்டசாலை (Store Room) கோயில் முதலியவை களினுட் புகுந்ததும் ஒரு திணறலும் மூக்கிற்கு அருவருப்பும் உண்டாகிறதல்லவா? அவ்விடத்தை நச்சுக்கூடமாகக் கருதி

உடனே விட்டு விலகுங்கள். இதற்கு மாறுகத் திறந்த வெளியி லிருக்கும்பொழுது எவ்வளவு உள்ளக்கிளர்ச்சி உண்டாகிறது! ஆதலின் சர்மானியரைப்போல் வீட்டிற்கொரு தோட்டமுண் டாக்கிக்கொண்டு பொழுது முழுவதையும் அதிலே போக்குவது எவ்வளவு நன்மை! இதை உங்கள் மூக்கு வெறுக்குமா? இல்லையே! ஆதலின் உடல் நலத்தையடைய இதுவே நல்ல வழி. இன்னும் உங்கள் மூக்கு என் பூவின் மணத்தையும், புழுகு, மான்மதம் முதலியவற்றின் மணத்தையும் விரும்புகிறது தெரியுமா? இம்மணங்களைக் கொடுக்கும் நெய்ப்பொருள் நச்சுக்கூடு களைக் கொல்லும் வன்மையுடையதாயிருக்கின்றன். " இனியாவது நீங்கள் மகிழ்ச்சியை மட்டுங் கருதாது பயனையுங் கருதியே பூவை விரும்புவீர்களென்று நம்புகிறேன்.

மூக்கின் பெருமைகள்:—இவ்வாறு நல்வழி காட்டுவதுடன் நில்லாது மூக்கானது இன்னும் பல்வழிகளிற் பயன்படுவதற்காக மிகவும் வியப்பைத் தரும் ஏற்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக் கிறது. மூக்கினுள் உச்சியில் மூன்று தொளைகளிருக்கின்றன. யாவற்றிற்கும் மேற் றுளையிலேதான் நாற்றத்தை யுணர்த்தும் நரம்புக ளிருக்கின்றன. நடுவழி மிகுந்த வளைவுடன் உட்புகும் காற்று இயற்கையாய் இவ்வழியாகவே செல்லும்படி அமைக்கப் பட்டிருக்கிறது. கீழ்வழி வெளிச்செல்லுங் காற்றிற்காக ஏற் படுத்தப்பட்டிருக்கிறது. இது மிகச் சிறிய நீளமுடையதே. வெளிச்செல்லுங் காற்று மிகப் பளுவானதால் இவ்வழியிற்றான் செல்லுகிறது. நடு வழி என் மிக வளைந்திருக்கிறது தெரியுமா? இதில் நெடுநேரம் உட்செல்லுங் காற்றுப்படுவதற்காகவே. இவ் வாறு படுவதால் இவ்வழியின் பரப்பிலுள்ள எண்ணிறந்த மயிர்க் குழாய்களிற் செல்லுங் குருதியின் உதவியால் இக்காற்று ஈரமும், சூடுமடைகிறது. இதனுல் நுரையீரலுக்கு எவ்வளவு நன்மை தெரியுமா? வரண்ட காலத்தில் காற்றின் வரட்சியும், குளிர் நாட் களில் காற்றின் குளிரும் நுரையீரலுக்குத் தெரியாது. இன்னும் இச்சூடு எத்துணை நச்சுக்கூடுகளைக் கொல்லுகின்றது! மூக்கின் வழியாய்ச் சென்ற காற்றை வாயினுட் குழாய் வைத்துப் பிடித்துப் பார்த்தால் நச்சுக்கூடுகள் அற்றிருப்பதைக் காணலாம்! என்ன

நன்மை!! இஃதன்றி இவ்வழியிலிருக்கும் மயிர்களை நீங்கள் பயனற்றதாக நினைப்பீர்கள். மயிர்வினைஞனைவிட்டு நீக்கவும் முயல்வீர்கள். ஆனால் இவை காற்றிலுள்ள தூசியை வடிகட்டுகின்றன. இதற்குதவி செய்வன இவ்வழியிலமைந்துள்ள சளித்தோல்கள். இவைகளிலுள்ள சளிக்கூடுகள் சளியைத் தயாரிக்கின்றன. இச்சளி நச்சுக்கூடுகளையும் தூசியையும் சிறைப்படுத்தி, கூடுகளைக் கொல்லுந்தன்மை யுடையதால் கொன்று காயவைத்து படல் படலாக உதிருவதை அறிவீர்கள். உங்கள் விரல்களாலுந் தோண்டி எறிவீர்கள். அப்பொழுது இவை எவ்வளவு அழுக்குடன் வெறுக்கத்தக்கனவா யிருக்கின்றன? இப்படியிருப்பது இவை தூசியை வடிக்கட்டுவதனாலன்றோ? ஆதலின் மூக்கு வழியாய்ச் செல்லுங் காற்று மூக்கைத் தாண்டியதும் தூயதாகவும், ஈரமுடையதாகவும், வெப்புடையதாகவும், ஏறத்தாழத் தூசியற்றதாயுமிருக்கிறது. ஏறத்தாழத் தூசியற்றது என்றது எதற்காகவெனின் சிலர் தூசி மிகுந்துள்ள பட்டினங்களிலும், தெருக்களிலும், இடங்களிலும் புகை மிகுந்துள்ள பொறிகளின் அண்மையிலும் இருந்து எப்பொழுதும் தூசி, புகை இவற்றையே இழுத்துக்கொண்டிருக்கின்றனர். இன்னாருக்காக மூக்கு எவ்வளவு வேலைதான் செய்யும்? மூக்குமட்டுமா? மூச்சுக்குழாயிலும், மூச்சுக்கிளைக் குழாய்களிலும் உள்ள வழியிலுள்ள கூடுகள் ஒவ்வொன்றும் கண்ணிமை மயிர்போன்ற மயிருடையன. இம்மயிர்கள் உயிருள்ள துடுப்புகளைப் போன்று உட்செல்ல வரும் தூசிகளை வெளியே தள்ளிக்கொண்டே யிருக்கின்றன. இதனாலும் தூசி தடுக்கப்படுகிறது. இவ்வாறு மூச்சின் வழியிலுள்ள மயிர்களும், சளியும் தம் பேரில் வஞ்சனையின்றி முடிந்த வரையில் தம்மாலியன்ற உதவியைச் செய்கின்றன. முற்றிலுந் தடுக்க முடியாததின் பிழை இவ்வாறு வாழத்தகாத இடங்களில் வாழ்பவனுடையதே. மூக்கினுடையதல்லவே அல்ல. இனி இவைகளைத் தப்பிச் செல்லுந் தூசி நுரையீரலிற் படிந்து விடுகிறது. இதனால் பிறக்கும் பொழுது முத்து வெள்ளையைப் போன்ற வெண்மையுடைய நுரையீரல் நாளாவட்டத்தில் பட்டினத்தானுக்குக் கற்பலகையைப் போன்றும், கரிவேலை (Coal miner) க்காரனுக்குக்

தூய கறுப்பாயும் மாறுகிறது. இதனால் நுரையீரலின் வேலைக்கு எத்துணை கெடுதி! இக்கேடு சிறிதும் நேராதபடி காத்துக்கொள்வோர் வீடுகள் தெருக்கள் முதலியவைகளைத் தண்ணீர் தெளிக்காது அல்லது சாணம் போடாது கூட்டமாட்டார்கள். ஏனென்றால் இஃதில்லாது கூட்டினால் பெருங்குப்பைகள் விலக்கப்படுமேயன்றிச் சிறு தூசிகள் பறந்து பின் சிறிது நேரத்திற்கெல்லாம் தரையிற் படிந்துவிடும். பின் மனிதர் நடமாடும்பொழுது இத்தூசி பறந்து காற்றை அழுக்குப் படுத்துகிறது. இக்கேட்டை நீக்கவே சில பணக்காரர் மின்சார உரிஞ்சி (Electric Sweeper) யைப் பயன் படுத்தித் தூசியைப் பறக்காதபடி உரிஞ்சிவிடச் செய்கின்றனர்.

மூச்சுவிடத் தெரியாதவர்கள் :—முற்கூறியபடி பல அரும் பயனளிக்கும் மூக்கை எத்துணைபேர் இகழ்ந்து மூக்கால் மூச்சு விடாது வாயினால் விடுகின்றனர்! இதனாலடையுந் தீமையை இவர்கள் உணர்வார்களாயின் நடுநடுங்கி ஊத்தைவா யங்காத்தலை விட்டுவிடுவார்களென்பது திண்ணம். ஆனால் பலர் தாம் செய்வது கெடுதி யென்று தெரிந்தும் அவற்றை நீக்கும் ஆண்மை யற்றவர்களா யிருக்கின்றனர். இப்பேடிகளுக்கு நாம் ஈதுரைக்க வில்லை. உள்ள உறுதியுடையோர்க்கே உரைக்கின்றோம். இன்னார் தெரிந்து நீக்கக்கூடிய வாய்மூச்சினாலுண்டாங் கேடுகளாவன :— (க) வாயால் உள்ளிழுக்கப்படுங் காற்று போதிய வெப்பு, ஈரமடையாது; அதிலுள்ள நச்சுக்கூடுகள் மாளா. (உ) தூசி அப்படியே சென்று விடும்; வடிகட்டப்படாது. இன்னும் வாயிலுள்ள நாற்ற முண்டுபண்ணும் பொருளும், அழுக்கும் நுரையீரலுட் செல்லும். (ங) வாய்வழியே மூச்சு விரைவில் செல்வதால் நுரையீரல் நெடுநாழி பெருத்திருப்பதில்லை. இதனால் எளிதில் இரைப்புண்டாகிறது. (ச) இன்னும் இதனால் மூச்சடக்க முடியாதாகையால் உணவு மெல்லாது விரைவில் விழுங்கப்படுகிறது. (இதன் கேடுகளைப் பின்னால் பார்க்க) (ரு) மூக்கிலுள்ள சளித்தோல் வறண்டு சுருங்கிக் குருதியோட்டமற்றுப் போவதால் சளிபிடிக்கிறது. (சு) குரல் தடிக்கிறது. (எ) மூக்கிற் செல்லுங்காற்றாலேயே நாம் நாற்றத்தை யுணருகிறோமாதலின் வாயால் மூச்சு

விடுபவர்க்கு நாற்றந்தெரியாது. (அ) சிலசுவை நாற்றத்தைப் பொறுத்திருக்கின்றவாதலின் இன்னோர்க்கு இச்சுவையும் விளங்காது. ஆதலின் இன்னோர் உணவிற் றக்க சுவையுண்டாக்க மிகுதியாய்க் காரப்பொருளைப் பயன்படுத்தி உடலைக் கெடுத்துக்கொள்ளுகின்றனர். இத்துணைகேடு விளைக்கும் இக்கொடிய பழக்கத்தை நீக்க வாயை எப்பொழுதுங் கெட்டியாய் மூடிக்கொள்ளல் வேண்டும். தூங்கும்போது நம்மை யறியாது வாய்திறந்து கொள்ளுமாதலின் இதை நீக்கத் தலைக்கணையை உயரமாக வைத்துக்கொண்டு முதுகின்மேற் படுத்துறங்க வேண்டும். அல்லது தாளைத் திறக்காதபடி தலையுடன் சேர்த்துக் கட்டிவிட வேண்டும். சில சிறுவர் மூக்கினுள் சதை வளர்வதால் (Adenoids Growth) வாயால் மூச்சுவிடுகின்றனர். இவ்வளர்ச்சியைத் தக்க மருத்துவரினுதவியால் சுரண்டிவிட்டால்தான் இன்னோர் மூக்கால் மூச்சு விடுவர்.

மூக்கின் தூக்கம்:— பகலில் மூக்கினுதவியால் காற்றின் தூய்மை அல்லது அழுக்கை அறிகிறோம். இனி இரவில் நாம் தூங்கும் போது நம் மூக்கிற்கு என்ன தெரியுமென்று நினைத்துப் பாருங்கள். அதுவும் நல்லது கெட்டது ஒன்றுந்தெரியாது உங்களைப்போலவே உறங்குகிறதல்லவா ? அப்பொழுதும் நீங்கள் மூச்சுவிடுகிறீர்களே. உங்கள் மூக்கு வந்ததை விழுங்கிக் கொண்டேயிருக்குமே. அது தூசியைப் பெரிதும் நீக்குந்தன்மையுடையதேனும் நச்சுக்காற்றை நீக்குந் தன்மையுடையதன்றே இதற்கென் செய்வதென்று கவலையுண்டாகிறதன்றோ? ஆம், கவலையுறுங்கள். தீமை நேராதபடி முன்னேற்பாடு செய்து கொள்ளுங்கள். இவ்வாறு செய்து கொள்ளாதோரே இரவுக்காற்று கெட்டதென்று நினைத்தனர். இது தவறு. உண்மையில் இரவுக்காற்று பகற்காற்றினும் தூயதாயும், தூசி, புகை குறைந்ததாயுமிருக்கிறது. ஏனெனில் மனிதர் நடமாடுவதும், நெருப்பெரிவதும், பொறிகள் வேலை செய்வதும் இரவிற் குறைவே. பின் தூங்கு மிடங்களிலுள்ள காற்றை நாமே கெடுக்கிறோம். ஒருவன் சூ பருமடிப் பருமனுள்ள அறையில் உம் துடிநேரம் தங்கியிருந்தால் பின்

அங்குள்ள காற்றின் நிலை அவன் பயன்படுத்தத் தகுந்ததன்று. ஆதலின் அக்காற்றை மாற்றவேண்டும். இதற்குச் சாளரங்கள் எவ்வளவு இன்றியமையாதன? இவ்வாறிருக்க ஒரு சிற்றறையிற் பலர் உறங்குவது என்ன மதியீனம்! இவ்வாறு தங்குவோர் கக்கியதை நக்குவதுபோல் தாம் வெளிவிட்ட காற்றைத் தாமே இழுக்க வேண்டுமன்றோ? ஆதலின் தனித்துறங்குவதே நன்று. தூங்குமிடமும் திறந்த வெளியாயிருத்தல் நன்று. அன்றி அறையிற் றாங்கநேரின் அது பெரிதானதாயும், உயரமானதாயும், வேண்டிய சாளரங்களையுடையதாயும் இருக்கவேண்டும். தூயகாற்று வர அறையின் கீழ்ப்புறத்தில் சாளரங்களும், அழுக்குக்காற்று செல்ல மேற்புறத்தில் சாளரங்களும், புகைப் போக்கிகளுந் தேவை. என்ன குளிராயிருந்தாலும் சாளரங்களை நன்றாய்த் திறந்து வைக்கவேண்டும். முகத்தை மூடிக்கொண்டு தூங்கலாகாது. நீங்கள் மிகுதியாய்த் தங்குமோரிடம் உங்கள் படுக்கையறையேயாதலின், ஈண்டே நீங்கள் உங்கள் வாழ்நாளில் மூன்றிலொருபங்கைக் (நாளொன்றிற்கு அ மணிநேரத்தைக்) கழிக்கின்றீராதலின் இவ்வாறு கழிக்கும்பொழுது காற்று கெடின் உங்கள் மூக்கு இதை உங்களுக்கு உணர்த்தாதாதலின் இவ்விடத்தை எவ்வளவு தூயதாய் வைத்திருக்க வேண்டு மென்பது படுகிறதா? மற்றையோரினும் நோயாளியே இவ்விடத்தைப் பாதுகாக்க வேண்டும். எனெனில் அவன் மிகுதியான காற்றை அழுக்குப் படுத்துகிறான்; அவனுக்கு வேண்டிய காற்றின் அளவும் மிகுதியே; அவன் தூங்குகிற பொழுதும் மிகுதியே யாகும்.

தும்மல்:—இது எப்பொழுது, எப்படி, என் உண்டாகிறதென்று உற்று நோக்குங்கள். நாம் இழுக்குங் காற்றில் தூசி மிகுந்திருந்தாலும், நமக்கு சளி பிடித்திருந்தாலும், ஆடையின் நுனியைத் திரித்து மூக்கினுள் விட்டுக் குடைந்தாலும் இஃதுண்டாகிறதல்லவா? உண்டாகும்பொழுது வெகு விரைவாயும் மிகுதியாயுங் காற்று வெளித்தள்ளப்படுவதைக் காண்பீர்கள். இது நெஞ்சுக்கூடு வெகு விரைவாய்ச் சுருங்கி, ஈரல் தாங்கியும் வெகு விரைவாய் உட்குழிவதால் உண்டாகிறது. உடற்சுத் திமை

செய்யும் உணவு கக்கப்படுவதுபோல் (வார்ந்தி) நுரையிரலுக்குத் தீமைதரும் தூசிக்காற்றும், சளி பிடித்திருக்கும்பொழுது அதன் குழாய்களை அடைக்கவரும் சளியும், ஆடையின் நுனியால் குடையும் போது மூக்கினுட் புகப் பார்க்கும் பொருளும் தும்மும்போது வெகு விரைவாய்த் தள்ளப்படுங் காற்றினால் அடித்துத் தூரத்தப்படுவது என்ன நன்மை!

விக்கல்:—இது தும்முதலுக்கு எதிரிடை. இதில் காற்று உள்ளே விரைவாய்ச் செல்லுகிறது. இது நமக்கு இன்பந் தருவதில்லையாதலின் இதை அடக்க முயலுகிறோம். இதை அடக்கும் பலவழிகளுள் எளிதான தும் விரைவிற் பயனளிப்பதும் யாதெனில் மூச்சை எவ்வளவு வெளியில் விடமுடியுமோ அவ்வளவு விட்டுப் பின் மூச்சை உள்ளே இழுக்காது எவ்வளவு இழுக்காது அடக்க முடியுமோ அவ்வளவு அடக்கியிருத்தலே யாகும். இவ்வாறு ௩, ௪, முறை செய்யின், இது விக்கும் முயற்சிக்கு எதிர் முயற்சியாதலின், விக்கல் நின்றுவிடும்.

ஒலிப்பெட்டியும் ஒலியும்:—இது மூச்சுக்குழலின் மேலிருக்கிறது. இது எலும்பு போன்றது; ஆனால் எலும்பைவிட மெதுவான எலும்புக்குருத்தினால் (Cartilege) செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் முதியோரின் பெட்டியில் சுண்ணும்பு மிகுத்திருப்பதால் குரல் தடித்திருக்கிறது. இப்பெட்டியில் இரு ஒலிக்கயிறுகளிருக்கின்றன. மூச்சை இழுக்கும் பொழுது இவைகளுக்குக் கட்டளை பிறப்பதால் அகன்று காற்று உள்ளே செல்ல இடங் கொடுக்கின்றன. இவையே ஒலியுண்டாக்குவன. ஒலியுண்டாக்குமுன் மூச்சையிழுத்து நுரையிரலைக் காற்றால் நிரப்பிக்கொள்கிறோம். நுனிநுரையிரலை மட்டும் விரைவில் நிரப்பிக்கொண்டால் சிறிது பொழுதே பேச இயலும். அடிநுரையிரலையுஞ் சேர்த்து நிரப்பிக்கொண்டால் ஒரு மூச்சில் நீண்ட பொழுது பேசலாம். இவ்வாறு நிரப்பிக்கொண்டபின் இக்காற்றையடக்கி வேண்டிய அளவு விட்டு இக்கயிறுகளை மீட்டி ஒலியுண்டாக்கச் செய்கிறோம். ஒலியின் அளவு, நிளம், வன்மைக்குத் தக்கவாறு இக்கயிறுகள்

மீட்டப்படுகின்றன. இவற்றை ஒலிப்பெட்டிகாட்டி (Laryngoscope) என்னுங் கருவியால் பார்ப்போமாயின் ஒலிக்கும் பொழுது இக்கயிறுகளிரண்டும் விரைவாயும், எளிதாயும், ஓரளவுடனும் திறந்து மூடுவது தெரியும். இவை மிகத்திறந்தால் ஒலி தளர்ந்திருக்கும். மூடிக்கொண்டு வர வர ஒலியின் வன்மைமிகும். ஏறக்குறைய மூடியிருந்தால் வன்மையின் அளவு மிகுதியே. ஒலி இதனினும் வன்மைபெற இக்கயிறுகள் முற்றிலும் மூடினல் ஒலியுண்டாகாதாதலின், இறுகும். இவ்வாறு பலதிறப்பட மீட்டப்படுவதால்தான் நாம் பேசுகிறோம், பாடுகிறோம். அளவிற்கு மிஞ்சிப் பேசுவதாலும் பாடுவதாலும், சுருட்டு குடிப்பதாலும், குடியினாலும் இக்கயிறுகள் சிவந்து நன்றாய் வேலைசெய்யாவாதலின் ஒலியுங் கெடும். கெடாதிருந்தால் ஓருயிரின் ஒலியும் மனிதன் ஒலியைப்போல் அழகையும், வேற்றுமையையும், உணர்ச்சி தெரிவித்தலையும், பயன்றருதலையு முடையதல்ல.

மூச்சுறுப்புகளின் நோய்:—சளித்தோல் வெந்துபோவதால் சளிபிடிக்கிறது. வெந்துபோன சளித்தோலின் இடத்திற்குத்தக நோயின் றன்மையும் பெயரும் மாறுபடுகிறது. மூக்குத்துளையிலுள்ள தோல் வேவதால் நீர்கொள்ளலும், தொண்டையின் தோல் வேவதால் இருமலும், ஒலிப்பெட்டியின் தோல் வேவதால் தொண்டைக்கம்மலும், மூச்சுக்கிளைக் குழாய்களின்மேல் வேவதால் குழாய்ச் சளியும் (Bronchitis), காற்றறைகளின்மேல் வேவதால் சளிவெப்பும் (Pneumonia) உண்டாகிறது. மூச்சுவழியில் சளி ஒட்டிக்கொண்டிருப்பதை நீக்கி, வழிதிறக்கவே இருமுகிறோம். இருமும்போது மூச்சை விரைவாய் விடுகிறோம். கக்குவான் (Consumption) குச்சிக் கூடுகளால் உண்டாகிறது. இக்கூடுகள் கெட்ட காற்றிலிருந்து உள்ளே சென்று நுரையீரலிற் றங்கி அதைத்தின்னப்பார்க்கின்றன. இதைத் தடுக்க இக்கூடுகளைச்சுற்றிச் சளியுண்டாகிறது. இச்சளி அறைகளையுங் குழாய்களையும் அடைத்துக் கொள்ளுவதால் இதை நீக்க இருமுகிறோம். ஆதலின் சளி கெட்ட பொருள்களைத் தள்ளுவதற்கே உண்டாகிறது. இது எளிதில் நுரையீரலை விட்டுவிடாதாகையால் இருமி

இருமி உடலிளைத்து நலிகிறோம். இது எவ்வளவு கொடிய நோய்! இது வாராதிருக்கத் தூயகாற்றையே இழுக்க வேண்டும்.

சளித்தோல் வேவதேன்?:—மிகுதியாக உடையணிந்தும் கம்பளி ஆடைகளைத் தரித்தும் உடலை வெப்பப்படுத்திக் கொள்வதும், எப்பொழுதும் நம்மேல் குளிர்காற்று, வெய்யில் படாது வீட்டிற்குள்ளேயே இருத்தலும், தோலை வலிவிழக்கச் செய்கின்றன. இதனால் ஊர் வெப்பநிலை சிறிது மாறினாலும், நீரிற் பழகினாலும் குருதியோட்டம் ஒழுங்கற்றுப்போகிறது. இதனால் சளித்தோலின் வலிவற்ற விடங்களிலுள்ள மயிர்க்குழாய்களில் குருதி மிகுகிறது. அக்குருதியின் மிகுந்த உதைவால் (Pressure) அம்மயிர்க்குழாய்களின் சுவர் புண்பட்டு அளவிற்கு மிஞ்சிய குருதி ஒழுகிறது. இதனால் அங்குள்ள சளித்தோல்நார்கள் (Fibres) வெந்து போகின்றன. இது நடவாதபடி தடுக்கக் குளிர்ந்த நீரிற் குளித்தலும் முழுகலும், மிகுதியாய் வெளியில் வாழ்தலும், குறைந்த உடையணிதலும் நல்ல வழிகளாம். சளி வெப்புங் கக்குவானும் சளிபிடித்தலிலிருந்தே வருதலின் சளி பிடிக்கும்படி வைத்துக்கொள்ளலாகாது.

மயக்கப் பொருள்களின் மாண்பு:— (க) புகையிலையைத் தூளாக்கி மூக்கால் உறிஞ்சுகின்றனர். இது நாம் இழுக்கும் தூய காற்றையும் அழுக்குப் படுத்துகின்றதன்றோ? மற்றய அழுக்கிலும் இப்புகையிலை அழுக்கு மிகக்கெடுதல். ஏனெனில் இதில் நச்சுப்பொருளுமிருக்கிறது. சிலர் மூக்கடைப்பை நீக்கப் பொடி போடுகின்றனர். இது பெரு மதியின்மை. ஏனெனில் சளிபிடிப்பதால் மூக்கடைப்புண்டாகிறது. பொடி இச்சளிபிடித்தலை நீக்காது மிகச்செய்கிறதால் பொடி போடுபவர்க்கு மூக்கடைப்பு நிற்கிறதில்லை. அடிக்கடி உண்டாய்க்கொண்டேயிருக்கிறது. ஆதலின் பொடி மூக்கடைப்பை உண்டாக்கும் சளியை அப்பொழுது நீக்கினும் அச்சளி மறுபடியும் வந்து கொண்டேயிருப்பதற்கு ஓர் முதலாயிருந்துகொண்டேயிருக்கிறது. பொடி போடாதவர்க்கு மூக்கடைப்பு சிலநாட்களில் நின்றும் விடுகிறது; உள் இழுக்குங்காற்று நச்சுப்பொருளால் அழுக்கடைவதுமில்லை.

(உ) சுருட்டுப் பிடிப்பதினுல் சிறிது புகையும், புகையின் காரமும் இழுக்குங்காற்றுடன் நுரையிரலுட் சென்று நச்சுப் பொருளைக் குருதிக்குக் கொடுத்துக் கெடுக்கிறது. இவ்வாறு கெடுப்பதில் சுருட்டினும் தாள்சுருட்டு (Cigarette) வன்மையுடையது. சுருட்டுப் புகையினும் தாள்சுருட்டுப்புகை அவ்வளவு காரமானதன்று என்றாலும் இக்காரமின்மையே சிலரை இதை விழுங்கும்படி தூண்டுகிறது. இவ்வாறு விழுங்குவதால் இப்புகை நுரையிரலுட் சென்று 2000 சதுர அடி பரவி, நச்சுப் பொருளை குருதிக்குள் மிகுதியாகச் செலுத்துகிறது. ஆனல் சுருட்டுப்புகையின் காரமே இவ்வாறு விழுங்காதபடி தடுப்பதால் அவ்வளவு கெட்டதன்று. ஆதலின் விளையாட்டிற்காகவும், திறமையைக் காண்பிப்பதற்காகவும் தாள் சுருட்டுப் புகையை வாயால் விழுங்கி மூக்கால் விடுவோர் அடையுங் கேட்டிற்களவில்லை. அதிலும் சிறுவர்களடையுங் கேட்டிற்களவேயில்லை.

(ஊ) புகையிலையைப் பாக்கு வெற்றிலையுடன் போடுவதாலும் அதன் காரம் சிறிது நுரையிரலுக்குஞ் சென்று கெடுதியை விளைக்கிறது. இவ்வாறு போட்டுக்கொள்வோர் அண்மையிலிருந்தால் அன்னர் பேசும்பொழுது எவ்வளவு காரமான காற்று வெளிப்படுகிறது பாருங்கள்.

(எ) குடி:—இது நுரையிரலையும் குருதிக் குழாய்களையும் வலுவிழக்கச் செய்கிறது. குடி மிகின் மூச்சுறுப்புக்களை இயக்கும் உயிர் முடிச்சை மயக்கிவிடுவதால் மூச்சு நின்றுபோய் உயிரிழக்கச் செய்கிறது. இம்முடிச்சு இயற்கையாகவே குருதியிலுள்ள நச்சுக்காற்றின் சிறு மிகுதியையும் உணரும். இவ்வுணர்ச்சியால் நச்சுக்காற்றின் மிகுதிக்குத் தக்கவாறு மூச்சை மிகுதிப் படுத்துகிறது. இவ்வுணர்ச்சியைக் குடி கெடுத்துவிடுவதால் நச்சுக்காற்று மிகினும் மூச்சை மிகுதிப்படுத்தாது உயிர்க்கிறுதி யுண்டாவதும் வியப்பாகுமோ?

திக்குமுக்காடுபவர்க்கு முதலுதவி:—உணவுக்குழாய் மூச்சுக் குழாயைத் தாண்டிச் செல்கிறது. தாண்டுகிறவிடத்தில் இரண்

டும் சேருகின்றன. யாதேனுமொன்றை விழுங்கும் பொழுது மூச்சுக்குழாய் குரல்வளைப்பெட்டிமூடியால் மூடப்படுகிறது. மூச்சுவிடும் பொழுது இது திறக்கப்படுகிறது. இவ்வாறு ஒன்று மூடும்பொழுது ஒன்று திறக்கும் ஏற்பாடு எப்பொழுதும் நன்ருகவே வேலை செய்கிறது. ஆனல் விழுங்கும்பொழுது பேச, அல்லது சிரிக்க முயலுவீர்களாயின் ஒரேபொழுதில் இரண்டையுந் திறத்தல் நிமையாதலின் இவ்வேற்பாடு குழப்பமடைகிறது. அப்பொழுது மூச்சுக்குழாயும் திறந்திருப்பதால் உணவுப்பொருள் உள்ளே செல்கிறது. இப்பொருளால் மூச்சுக்குழாய் அடைபடுவதால் மூச்சுவிடமுடியாது. உடனே மூச்சுறுப்புகள் விரைவாய்க் காற்றை வெளிவிட்டு இப்பொருளைத்தள்ள முயல்கின்றன. இதைத்தான் புரையேறுதலென்கிருேம். இவ்வாறு ஏறும்பொழுது சில வேளை குரல்வளைக்குள்ளே சென்ற சோற்றுப் பருக்கை விரைவாய்த் தள்ளப்படுவதால் மூக்குவழியே வந்து விடுகிறதன்ருே? இவ்வாறு குரல்வளைக்குட் செல்லும் பொருள் காசு, கட்டுப்பல் (False Teeth) முதலியவைகளைப்போல் பெரிதாயிருந்தால் மூச்சு சிறிதும் விடமுடியாது, திக்குமுக்காடும். இதனுல் இறந்தும்படலாம். இதை நீக்கப் பக்கத்திலிருப்போர் துணிவுடன் இரண்டொரு விரலைத் தொண்டைக்குள் விட்டு, அப்பொருளை முடியுமாயின் கொக்கியால் மாட்டி யிழுப்பதுபோல் வெளியே கொண்டுவரவேண்டும். முடியாவிடில் குரல்வளைக்கப்பால் உள்ளே தள்ளிவிடவேண்டும். அல்லது அவனைக் குனியவைத்து மெதுவாய் முதுகில் குத்தினுலும் அது வெளியே வந்து விழுந்துவிடும். இவ்வாறு வெளிவந்த பின்னும் அவன் மூச்சுவிடாதிருந்தால் செயற்கைமூச்சு (Artificial Respiration) விடவைத்தல் வேண்டும்.

செயற்கை மூச்சு:—உங்களுக்கு நீந்தத்தெரியுமா? தெரியாதாயின் தண்ணீரில் வீழ்ந்து விட்டால் இறக்கத்தான் வேண்டுமென்று நினைப்பீர்கள். இல்லை! ஒருவரும் உதவிக்கில்லாவிடினும் உதவி கிடைக்கும் வரை நீரில் மிதக்க ஒருவழியுண்டு. அஃதெவ்வாறெனில் காலையுங் கையையும் ஆட்டாமலிருக்க வேண்டும். முதுகின்மேல் படுத்துக்கொண்டு தலையை அண்ணாந்து

மூக்கையும் வாயையும் உயர்த்த வேண்டும். மூச்சை நன்று யிழுத்துச் சிறிது சிறிதாக விட்டு மார்புக்கூட்டைப் பளுக்க வைத்திருக்கவேண்டும். கையைத் தண்ணீருக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும். இவ்வாறு துணிவுடன் செய்தால் மிதந்து கொண்டிருக்கலாம். ஆனால் இதைச்செய்யாது ஒருவன் நீரினுள் முழுகிவிட்டால் அவனைப் பல மணி நேரத்திற்குப் பின்னெடுத்தாலும் செயற்கை மூச்சால் உயிர்ப்பிக்கலாம். இதற்காக அவனுடைய வாய்க்குள் கையைவிட்டு மண், மணல், புல்லிருந்தால் எடுத்துவிட்டுப் பின் நுரையீரலுக்குட் சென்றிருக்கும் நீரை நீக்க வேண்டும். இதற்கு, சிறு குழந்தையாயின் காலைப் பிடித்துக் கொண்டு தலைகீழாக இரண்டொரு மாத்திரை தொங்கவிட்டு சிறிது குலுக்கலாம். பெரியோனாயின் இடுப்புத்துணியைப் பிடித்துத் தூக்கிக் குலுக்கலாம்; மிகப்பருத்த உடலுடையவனாயிருந்து தூக்க முடியாவிடின் பீப்பாய், கல்லுருளை (Roller), விழுந்த மரம் முதலியவைகளிற் குப்புறத் தலைகீழாகப் படுக்க வைக்கலாம். நீர் வெளிப்பட்டதும் ஈரத்துணியைக் களைந்து உலர்ந்த துணியால் மூடி பிறகு மூச்சுண்டாக்க வேண்டும். இதற்கு இருவழியுண்டு. (க) மருத்துவர் சில்வேச்டர் முறை (Dr. Sylvester's Method). இதன்படி அவனை மல்லார்ந்து படுக்கவைத்துத் தோள்பட்டையினடியில் துணியைச் சுருட்டி மெத்தெனவைத்துக் கைகளை மடக்கி நெஞ்சக் கூட்டின் இருபுறத்திலுஞ் சேர்த்து வைக்கவேண்டும். இதனால் மூச்சு விடுபடும். பின் மெதுவாக, ஒருபடித்தாகக் கைகளை நேர்மேலே நீட்டி, நீட்டியபடியே பின்புறம் தலைக்கு நேராகக் கொண்டு வர வேண்டும். இதனால் மூச்சிழுத்தல் உண்டாகிறது. இவ்வாறு நாடிநோய் ஒன்றிற்கு மனிதனாயின் டுரு விழுக்காடும் குழந்தையாயின் 20 விழுக்காடும் செய்யவேண்டும். செய்யும்பொழுது ஒருவனை விட்டு நாக்கைச் சிறிது வெளியே இழுத்துப் பிடிக்கச் சொல்லவேண்டும். இன்றேல் மூச்சின்வழி, நாக்கால் அடைபடுமாதலின் இச்செயற்கை மூச்சால் பயனில்லை. (உ) ஆசிரியர் சேபரின் (Schaper's Method) முறை மற்றொன்று. இதன்படி அவனைக் குப்புற நீட்டிப் படுக்கச்செய்து கைகளிரண்டையும்

தலைக்கு நேராக நீட்டிவிட வேண்டும். அவனுக்குப் பக்கத்தில் அவன் முகத்தை நோக்கி முட்டியிட்டு நாம் உட்காரவேண்டும். பின்னர் அவன் முதுகின் அடியில் இடுப்பின் இரு பக்கத்திலும் நம் இருகைகளையும் வைத்து நம்முடலை முன்றள்ளி அதன் நிறையால் அவன் இடுப்பை அழுத்தச்செய்ய வேண்டும். இதனால் அவன் மூச்சுவிடுவான். பின் கையைத் தளர்த்தி உடலைப் பின்னுக்குத்தள்ளி நம் குதியின்மேல் உட்கார்ந்து பளுவை அவன்மீது படாது விலக்க வேண்டும். ஆனால் கையை அவன் மேலேயே வைத்திருக்க வேண்டும். இதனால் மூச்சு உள்ளே இழுபடும். இவ்வாறு நாடிநேரம் ஒன்றிற்கு 12 முதல் 15 விழுக்காடு வரை நீரில் விழுந்தவனின் ஆண்டிற்குத் தக்கவாறு செய்யவேண்டும். இம்முறையில் நாக்கைப் பிடிக்க வேண்டியதில்லை, தானே வெளி வந்து விடுமாதலின். கையைக் கீழ்ப்பழுக்களின் மேல் வைத் தமுக்க வேண்டும். இம்முறைகளால் விழுந்தவன் மூச்சுவிடத் துவங்கினால் அவன் மூச்சுவிட்டு இழுப்பதற்கிசைய நாமும் செயற்கை மூச்சைவிடச்செய்ய வேண்டும். நன்றாய் மூச்சு விடுவானாயின் இவ்வுதவியை நிறுத்தி விடலாம். பின் அவன் உடலில் வெப்புண்டாக்கவும், குருதி யோட்டத்திற்குதவியாகவும் கை கால் உடம்பை ஏற்றப் பக்கமாகத் தேய்க்க வேண்டும். பின் கம்பளம் அல்லது துணியால் மூடி இருபக்கத்திலும், காலிலும் வெந்நீர்க்குப்பியை வைத்து வெப்புண்டாக்க வேண்டும். அவனுக்கு அறிவு வந்தவுடன் சிறிது வெந்நீர் அல்லது காப்பி அல்லது தேநீர் கொடுக்கலாம். அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்து மூச்சு மறுபடியும் நின்றால், மறுபடியுஞ் செயற்கை மூச்சுண்டாக்கவேண்டும்.

தொடரும்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# மணிமேகலை.

திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், நாங்குனேரி.

சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது மணிமேகலை தகுந்த பருவமடைந்தது கண்ட நற்றாய் யாது செய்வதென மாதவியிடம் கேட்க, அவள் மணிமேகலையைக் கோதைத்தாமம் குழலொடு களைந்து துறவு பூணச்செய்தாள் என்பதே. கண்ணகி கோயில்கொண்டகாலத்து அது காணவந்த தேவந்தி இச்செய்தியைச் சேரனிடம் சொன்னாளாகையால் அதன் முன்னாலேயே மணிமேகலை துறவெய்தியவளாவாள். இதனால் மணிமேகலை முண்டிதக்கோலத்தோடிருந்தாளென வறியலாம். பருவமடையுமுன் சித்திராபதியுடனிருந்த மணிமேகலை அதன்பின் மாதவியுடனிருந்தாள். இதற்கு முழுதும் மாறுபட்ட செய்தியே மணிமேகலையிற் காணப்படுவது. அதில் மாதவியுடனேயே மணிமேகலையிருந்ததாகத் தெரிய வருகிறது. அவளைத் தன் வீட்டிற்குக் கொண்டுவந்து பொருள் தேடச் சித்திராபதி பலமுறை முயல்கிறாள். இவ்வாறு முயலும் சித்திராபதியுடன் மணிமேகலையிருந்து பருவமடைந்திருந்தால் அவளை மாதவியிடம் அவள் அனுப்பியிருக்கவே மாட்டாள். சிலப்பதிகாரமோ இத்தகைய குணமுடைய சித்திராபதியைப் பற்றிக் கூறவில்லை. அதில் மணிமேகலையைக் 'கணிகையர் கோலங் காணா தொழிக' வென்று மாதவி கூறியபடி அவள் பருவமடைந்தவுடன் அவளை யாது செய்வதெனச் சித்திராபதி மாதவியிடம் வினவுகிறாள். உடனே மணிமேகலையின் கோதைத்தாமம் குழலொடுகளைந்து போதித்தானம்புரிந்தறம்படுத்துகிறாள் மாதவி. இதனால் சித்திராபதி மாதவியின் தாய்போல் நடந்தமைபுலனாகிறது.

மணிமேகலையிலோ சித்திராபதி குணமும் மாதவி குணமும் முழுதும் மாறுபடுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றது. அவ்விழாக்காலத்திற் பண்டை வழக்கப் படியே ஆடுதற்பொருட்டு மணிமேகலையும் மாதவியும் வாராமை யால் மனம் புழுங்கிய சித்திராபதி வயந்தமாலையை யழைத்து நீ மாதவிபாற் சென்று விழாவிற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார் கூறும் பழிமொழியை அவளுக்குச் சொல்லிவா என்றனுப்பினள். ஊரார் பழிமொழியை யாதெனக் கவனிப்போம்.

வயந்தமாலை மாதவியிடம் சென்று,

"உன்னோ டிவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்
வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்"

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையுங்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே
அலகின் மூதூ ரான்றவ ரல்லது
பலர்தொகு புரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பா டில்லை நாணுடைத்தென் "றாள்.

(மணி II 17—19 ; 30—36.)

இதனால் நாடகக் கணிகையர்க்குரிய நடனமெல்லாம் கற்றுத் துறைபோகிய மாதவி அரங்கேறி நடித்து நம்மை மகிழ்வியாமல் இவ்வாறு தன் குலத்திற்கு இழுக்காம் தவம்பூண்டாளென்றறிய விருப்பதால் மாதவி நடனத்திற்கு வாராமைபற்றியதே பயங் கெழுமாநகரலரென வறியலாம். உன்னோடு இவ்வூருற்றதொன் றுண்டுகொல் என்றதனாலே மாதவி மட்டுமே தவவொழுக்கம் பூண்டவளாகக் காணப்படுகின்றாள். மணிமேகலை தவவொழுக்கம் பூண்டவளாகக் காணப்படவில்லை. ஏனெனில் எச்சுரை அவளைப் பற்றியில்லை. ஆனால் தவவொழுக்கம் பூணுவதற்காக அவள் தவ வொழுக்கம் பூண்ட தன் தாயுடனேயே வசிக்கிறாள்.

மணிமேகலை அப்பொழுதுதான் பருவமடைந்ததாகத்தெரிய வருகிறது. ஏனென்றால், சித்திராபதி அவளைத் தன் வசப்படுத்திப் பொருள்தேட வெண்ணுகிறாள். அதனுடன் துறவுபூண்ட தன் மகள் மாதவியையும் கூடத் தன்வழிப்படுத்த முயலுகிறாள். பதினெட்டாவது பாட்டில் மணிமேகலை அம்பலமடைந்தமை கேட்ட சித்திராபதி,

"மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூ
ரிதுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது" (8-10)

என்றதனால் மாதவி மட்டுமே தவவேடம்பூண்டிருந்தமை வலியுறுகிறது. மேலும், சித்திராபதி,

"மாதவி யீன்ற மணிமேகலை வல்லி
போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
உதைய குமர னுளங்கொள் வண்டின்
சிதையா வுள்ளஞ் செவ்வியி னருந்தக்
கைக்கொண்டு" (25—29)

என்றதனாலே அவள் எவ்வாறாவது பொருள்தேடு மாசையுடையவளாயிருந்தாளென்பது தெளிவாகும். அவள் மணிமேகலையை யெப்படியாவது உதயகுமாரன் தேரிலேற்றி வருவேனென்று சூள் செய்து அவனிடஞ்சென்று,

"நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவண் டுணீஇய
விரைவொடு வந்தேன்" (58—61)

என்று கூறியதால் மணிமேகலை அப்பொழுதுதான் பக்குவமடைந்தவளென்றும், அதனால் அவளின்ப நுகர உதய குமரனைத் தூண்டினளென்றும் அறியலாம். சித்திராபதி மணிமேகலையை நடிக்கச்செய்து ஆடவர்களை இழுத்து அவளின்பம் நுகர்வித்துப் பொருள் தேடவே அவளை அவள் தாயுடன் அழைத்தாளென்பது, அவளே உதயகுமாரனிடம்,

"ஆடவர் காண நல்லரங் கேறி
ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்டகம் புக்குப்
பண்டோர் மொழியிற் பயன்பல வாங்கி
வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை" (103—109)

என உரைத்தலால் விளங்கும். இதனால் மணிமேகலையும் மாதவியும் ஆடவாராததனாலேயே வருந்தி வயந்தமாலையைத் தூது போக்கினவளாவளென்றும், மாதவி ஆடவாராமை கருதியே ஊரா ரேசினரென்றும் நன்கு தெளியலாம். ஆகையால் இவ்வேச்சுரை கோவலனிறந்த மறு சித்திரையிலாக இருக்கவேண்டும். சித்திராபதியோ உதயகுமரனிடம் மணிமேகலையைச் சேர்க்க மிக முயன்றாள். உதயகுமரன் தன்னிடம் ஆசை கொண்டிருந்தமை மணிமேகலையுமறிவாள். இது சுதமதியுடன் பூஞ்சோலை சென்றவிடத்து உதயகுமரன் வருகிறானென்றறிந்த அவள்,

"சித்திரா பதியோ டுதய குமரனுற்
றென்மேல் வைத்த உள்ளத் தானென
வயந்த மாலை மாதவிக் கொருநாட்
கிளந்த மாற்றங் கேட்டே னாதலின்" (மணி IV 79-82)

எனக் கூறுவதாலறியப்படும். அப்பொழுது அவளைப் பெறமுடியாது அவன் சித்திராபதியால் அவளை யடைவேனென்று போகிறான். இவ்வாறு முன்னும் முயன்ற உதயகுமரனையே சித்திராபதி பின்னரும் தூண்டி அவளைத் தன்தேரிலேற்றிவரச் சொல்லுகிறாள். அவன் அவள் சூழ்ச்சியிற் போயவன் மடிந்தமையும் அதனால் மணிமேகலை சிறைப்பட்டுப்பின் அரசமாதேவியிடமுள்ளாளென்பதையுமுணர்ந்து பொருளாசையால் அவளை மீட்டும் தன் வீட்டிற் கிட்டுவர வெண்ணி அரசமாதேவியிடம் செல்கிறாள். சென்றவள் "நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை-என்மனைத் தருக" என வேண்டுகிறாள். அரசன் மனைவியோ தவவொழுக்கத்திற் கருத்துடைய மணிமேகலை உன் எண்ணப்படி உன் வீடு வாராளென்கிறாள்.

இதுகாறு மாராய்ந்தவற்றால், சித்திராபதி பணப்பேய் பிடித்தவளென்றும், அதனால் துறவுபூண்ட மாதவியையும் அவளுடன் கூடியிருந்து அப்பொழுதுதான் பருவமடைந்திருந்த மணிமேகலையையும் தன்வழிப்படுத்திப் பொருள்தேட முயன்றுளென்று மறியலாம். இத்தன்மையள் மணிமேகலை கூறும் சித்திராபதி. ஆனால், சிலப்பதிகாரங் கூறும் சித்திராபதியோ இத்தன்மையளல்லள். அவள் தன்னுடன் கூடியிருந்த மணிமேகலை பருவமடைந்தமைகண்டு மாதவர் பள்ளியடைந்து அங்கிருந்த முண்டிதக்கோலத்தளான மாதவியிடம் "உன் மகள் பருவமடைந்தாள்," "தலைக்கோ லாசான் பின்னுள ளாகக், குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார், யாது நின்கருத் தென்செய் கோவென" (சிலப். XXX. 20—22) உரைக்கிறாள். இதனால் மணிமேகலை கூறும் சித்திராபதியும் சிலப்பதிகாரம் கூறும் சித்திராபதியும் குணத்தாலும் செயலாலும் மாறுபடுகின்றமை காண்க.

இனி மணிமேகலையின் செய்தியை யாராய்வோம். மேற்கூறியவாறு சித்திராபதி சொல்லக் கேட்ட மாதவி தன் மகளை,

"வருகவென் மடமகள் மணிமேகலை யென்
றுருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்."

(சிலப். XXX. 24—28)

கண்ணகி கோயில் கொள்ளுமுன் இவ்வாறு மணிமேகலை கூறவில்லை. "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை, அருந்தவப் படுத்தலல்ல தியாவதும், திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாள்" (மணி. II. 55—57) என்றும், "அணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய—தாயோ கொடியள்" (III. 149—150) என்றும், "ஊழ்தருதவத்தள் சாப சரத்தி" (V. 16) என்றும், "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த" (VII. 13) என்றும் காணப்படு மடிகளால் அவள் பொதுவாகத் தன்னம்மையுடனிருந்து பரத்தைமைத் தொழில் விடுத்துத் தவவழிப்பழகினவ

ளாவள் என்பது அறிய இருக்கின்றது. ஏனென்றால் அவள் கச்சிக்குப்போன பிறகே "தவத்திறம் பூண்டு தருமங்கேட்டுப், பவத்திற மறுகென.........நோற்றனள்." (XXX. 263—264)

மேலும் மணிமேகலா தெய்வம் "சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி...........மணிமேகலையா, ஞதிசான்முனிவ னற வழிப்படூஉ-மேது முதிர்ந்த திளங்கொடிக் காதலின்" என்றும், "ஏதமில் நெறிமக ளெய்திய வண்ணமு, முரைப்பாய் நீயவள் என்றிற முணரும்" என்று முரைத்ததை நோக்கின், மணிபல்லவம் போனபொழுதுதான் மணிமேகலை ஆதிசான் முனிவனற வழிப்படும் ஏதுமுதிர்ந்து அவ்வேதமில்நெறி யெய்தியவளாவ ளென்றறியலாம். ஆனால் அவள், சிலப்பதிகாரம் கூறும் வண்ணம் கூந்தல் களைந்து தவ வழிப்பட்டிலள். எனெனில் பலவிடத்தும் 'மதுமலர்க் குழலியொடு' (III. 16) என்றும், 'மதுமலர்க்குழலாள் மணிமேகலை தான்' (V. 92) என்றும், 'மைம்மலர்க்குழலி' யென்றும், (XII. 5), 'நறுமலர்க்கோதாய்' (XII. 56) என்றும், 'தோட்டலர்க்குழலியை' (XX. 13) என்றும் 'மதுமலர்க் குழலி' (XXI. 4) 'தோட்டலர்க் குழலி' (XXI. 10) யென்றும் 'நறைமலர்க் கூந்தல் நங்கை நீயும்' (XXVI. 62) என்றும் மணிமேகலைபிற் கூறப்படுதலினாலே வஞ்சிபோய்க் கண்ணகியை கண்டு கச்சிபுகும்வரை அவள் குழலுடனேயே இருந்தவளாவள். ஏதோ இவள் சிறப்பித்தழைக்கப்படுகிறாள், உண்மையில் இவளுக்குக் கூந்தல் இல்லையென்றால் அது பிழை. என்னை? மணிமேகலாதெய்வம் அவளை மணிபல்லவத்து விட்டபொழுது விழித்தெழுந்த அவள் தந்தையை நினைத்துக் "குறற்றலைக் கூந்தல் குழைந்து பின்வீழ, அாற்றினள் கூவி யழுதன ளேங்கி" (VIII. 36—37.) என்றதனால் அவள் மதுமலர்க்குழலியாகவே யிருந்தனள். கச்சியில் அறங்கேட்டிருந்தபொழுதுகூட அவள் கூந்தல் களைந்தமை கேட்கப்படவில்லை. இதனாற் சிலப்பதிகாரங் கூறும் மணிமேகலை வேறு, மணிமேகலை நூல் கூறும் மணிமேகலை வேறு என்றறியலாம். சிலப்பதிகாரம் கண்ணகி கோயிலடைவிற்கு முன்னரே மணிமேகலை குழல்களைந்து புகாரில் தவவழிப்

பட்டாளென்கின்றது. மணிமேகலை நூலோ கச்சிபுக்குக், கண்ணகி கோயில் கொண்டதற்கு வெகுநாள் கழித்துத் தவவழிப் பட்டாளென்றும், மணிமேகலையை ஆடலுக்கழைத்தது போலவே மாதவியையும் சித்திராபதி ஆடலுக் கழைத்தாளாகையாலும் ஊரார் மாதவி ஆடவாராமைபற்றி ஏசினராகையாலும், மணிமேகலை துறவு பூண்டும் கூந்தல் களையாதிருந்தமை காணப்படுதலினாலும் மாதவியும் கூந்தல் களையாமலே இருந்தவளாவள். மேலும் அவள் கூந்தலிலாதிருந்தமை மணிமேகலையிற் கேட்கப்படவில்லை. இதனால் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கொள்கையானும் மாறுபடுகின்றன.

மேற்குறித்த ஆராய்ச்சியால் மணிமேகலைநூலிற் காணப்படும் செய்திகள் சிலப்பதிகாரத்திற்கு முற்றும் மாறுபடுகின்றமை தெளிவாகிறது.

மணிமேகலை கூறும் காவிரிப்பூம்பட்டின விழா முதலிய செய்திகள் கண்ணகி கோயில் கொண்டதற்குச் சிலவாண்டுகளுக்கு முன் அதாவது கோவலன் மாண்ட மறுசித்திரையிலே நடந்தன போலக் காணப்படினும் அதற்கு மறுசித்திரையிற் புகாரழிந்தபின் கண்ணகியை மணிமேகலை வணங்குகிறாளாகையால் அதற்குள் கண்ணகி கோயில் கொண்டு சிலவாண்டுகளாயின போலவும் செய்திகள் உள்ளன. இவ்வாறு சிலப்பதிகாரத்துக்கு முழுதும் மாறுபட்டுள்ளமையால் இளங்கோவடிகளுக்குக் கோவலன் வரலாறுரைத்த சாத்தனால் மணிமேகலை யெழுதப்படவில்லை. அவர் மணிமேகலையை இளங்கோவடிகள் கேட்டார் என்பது பிழை. அவர் தமக்குப்பெருமை கருதி அவ்வாறெழுதியவராவர். இளங்கோவடிகள் சாத்தனார் முன்னிலையிற் சிலப்பதிகாரத்தை யரங்கேற்றினாரென்பதை யறிந்த மணிமேகலையாசிரியர் இளங்கோவடிகள் முன்னிலையில் மணிமேகலை அரங்கேற்றப்பட்டதெனப் பிழை கூறினார். இளங்கோவடிகள் மணிமேகலை துறவைப் பாடவெண்ணிச் சாத்தனாரிடம் சொல்ல அவர் முன்னரே அதைப்பாடி முடித்து விட்டதாகத் கூறுகிறாரென்று அடியார்க்கு நல்லார் கூறுதற்கு இரண்டு நூலிலும் சான்றுகளில்லை. ஆகையால் ஆசிரியர்

திருவள்ளுவர் பெயரானெழுந்த ஞானவெட்டியைத் திருவள்ளுவர் பாடினாரென வழங்குவது போலவே மணிமேகலையும் சாத்தனார் பாடினாரென்று கூறி அதனுடன் அவர் பாடியமை பற்றி ஒரு கதையும் கட்டி வழங்குவாராயினர். அதைக்கேட்டறிந்த அடியார்க்கு நல்லார் அதை யெழுதியவராவர்.

சிலப்பதிகாரத்துக்கு முந்தியநூல் மணிமேகலையாயிருப்பின் அதிற்காணப்படும் உதயகுமான் சாவும் புகாரழிவும் சிலப்பதிகாரத்திற் காணப்படாமை வியப்பே. சோழ பாண்டிய விலங்கையரசர் செயல்களை யெல்லாம் கூறும் சிலப்பதிகாரம் இவ்வ உண்மையில் அதன்முன் நடந்திருக்குமேல் இவற்றைக் கூறுதிராது. மேலும் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்கு முந்திய நூலென்றால் அதில் கண்ணகியை மணிமேகலை வணங்கினாளென்ற செய்தி காணப்படுவதால் அச்செய்தி கண்ணகியை வணங்கினவரை யெல்லாம் கூறும் சிலப்பதிகாரத்திலும் காணப்படல் வேண்டும். அவ்வாறு சிலப்பதிகாரம் கூறவுமில்லை. ஆகையால் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிந்திய நூலென்பது அங்கையின் நெல்லிக்கனியாகிறது. சிலப்பதிகாரத்தைப்போலல்லாமல் மணிமேகலையில், பல வடசொற்கள் விரவியுள்ளன; அதன் நடையும் மிகமாறுபட்டுள்ளது. சிலப்பதிகாரக்காலத்து வடமொழி தமிழோடு விரவவில்லை. மணிமேகலைக் காலத்தோ வடமொழி தமிழோடு மிகுதியும் விரவி விட்டது. சிலப்பதிகாரக் காலத்து மதப் போரில்லை, மணிமேகலையின் காலத்தோ மதப்போர் காணப்படுகிறது; அதன் ஆசிரியராகிய சாத்தனாரென்பவரோ மதப்போரில் ஈடுபட்ட பௌத்தராகக் காணப்படுகிறார். அவர் தம்காலத்துப் பௌத்த மதம் குன்றுவது கண்டு இந்நூன்முகத்தால் அதைத் தாங்கலாமென எண்ணி இதை யெழுதியவராவர்.

இதுகாறுமாராய்ந்தவற்றால், சிலப்பதிகாரத்துக் காணப்படும் சாத்தனாரால் மணிமேகலை யெழுதப்பெறவில்லை யென்பதும் சிலப்பதிகாரத்திற்குச் சிலநூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட நூலே மணிமேகலை யென்பதும் இனிது புலனாகின்றன.

---

உ

ஓம் சிவம்.

# ஓவியமும் தமிழரும்.

திருவாளர் மு. வே. மா. உலக ஊழியர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், பூளைமேடு.

*ஓவியம் என்னும் சொல் பண்டைத்தமிழ் மொழி. ஓவியம், ஓவம், ஓவு என்பன ஒரு பொருட் கிளவிகள். இவ்வோவியம் என்னும் சொல் பலவகை வண்ணங்களாலும், வட்டம் கோணம் முதலிய வடிவங்களாலும் அழகுபெற அமைக்கும் உருவத்தைக் குறிக்கும். இதனைக் கைத்தொழில் என்று கூறுப; கையால் எழுதப்படும் தொழிலாதலின். அது பொருந்தாது; என்னை? கையினால் எழுதுதல் மாத்திரை அமையாமல் பலகலையும், பல கணக்கும் அறிதல் வேண்டுமாதலானும், அவை அறிந்தோன் எழுதிய ஓவியங்களே பாராட்டப்படுகின்றன ஆதலானும், அவை யறியார் எழுதிய ஓவியங்கள் அஃதின்மையானும் என்க. எனவே, ஓவியம் கல்வி என்னும் துறையினும், கைத்தொழில் என்னுந் துறையினும் அடங்குமாறு அறிக. ஓவியம் கல்வி, கைத்தொழில் என்னும் இருதுறைகளில் ஒருவாறு அடங்குமேனும் அவை இரண்டும் ஓவியத்தில் அடங்கும் என்று துணிந்து கூறலாம். பின்னர்க் கூறியதனால் ஓவியத்தை நிலைக்களனாகவும், அவை இரண்டினையும் அதனிடத்துவதியும் பொருள்களாகவும் கூறலாகும். அவ்வாற்றை விளக்குதும்.

கல்வி இருவகைத்து. ஒன்று எண். ஒன்று எழுத்து. கல்வியை எத்துணை வகையாகப்பிரிக்கினும் அவ்வாறு பிரிக்கப் பட்ட அவை எல்லாம் இவை இரண்டினுள்ளே அடங்கும் என்

* கிழி முதலிய ஆகு பெயராய் ஓவியத்தை உணர்த்தும்.

பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. அதனான் அன்றே "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்." என்னும் முதியாள் மொழியும், "எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்னும் பெரியான் மொழியும் எழுந்தன. இவ்வாறு இரண்டாய் வகைப்படுத்தப்பட்ட கல்வி ஓவியச் சுவரில் எழுதிய ஓவியமாக நின்று நிலவுகின்றது. எவ்வாறெனில் வகைப்பட்ட அவை இரண்டும் வரிவடிவில் எழுத்துக்களுள்ளும், அவ்வெழுத்துக்களால் ஆகிய சொற்களுள்ளும், கீற்றுக்களுள்ளும் அடங்க அவை ஓவியங்களுள் அடங்குகின்றன ஆதலான் என்பது. பரிபாடலுள் "எழுத்து நிலை மண்டபம்" என்னும் சொற்றொடருக்குப் பரிமேல் அழகர் சித்திரமண்டபம் என்று பொருள் கூறியிருத்தலும் இதனை வலியுறுத்துதல் அறிக.

எண்ணும், எழுத்தும் தாம் வரிவடிவம்பெறாத மிக்க பழங் காலத்து உள்ளத்தின் தொழிலாகிய எண்ணத்திலும், உறிப்பின் தொழிலாகிய மெய்ப்பாட்டுக்குறியினும், வாயின் தொழிலாகிய மொழியிலும் நிகழ்ந்தனவே ஆதலின் அவை நிலைஇயகளாக அது ஆதல் எவ்வாற்றான் இயையுமெனின்! நன்று சொன்னாய் எண்ணும், எழுத்தும் என்னும் அவ்விரண்டும் முறையே பண்பிலும், தொழிற் பண்பிலும் அடங்குகின்றன. ஐம்பொறி உதவியால் அறியும் காட்சி அளவானும், அக்காட்சியளவையின் துணைகொண்டு அறியும் கருதலளவையானும், பிற அளவைகளினாலும் காணப்படும் பொருளிடத்து உள்ள, இயற்கையாய், தான் இருத்தற்கு இடமாகிய ஒரு பொருள் இறப்பினும் தான் இறவாது மற்றைப் பொருள்களிற் கலந்து நிற்பதாய் ஐம்பொறிக்காட்சிக்கு அப்பாற்பட்டதாய் உளக்காட்சிக் கெளிதாய் இருப்பது எண். இவ்வாற்றான் எண் பண்பினுள் அடங்குதலை அறிக. எழுத்து தொழிற் பண்பென்பது வெளிப்படை. பொருள் இன்றேல் பண்பும், தொழிலும் இல. பொருள் உண்டேல் பண்பும், தொழிலும் உள. பொருளின் சாயலே ஓவியம். பொருளைக் கண்டவிடத்து அப்பொருளின் சாயலாகிய ஓவிய உருவம் அகத்தில் தோன்றுதலானும், ஓவியத்தைக் கண்டவிடத்து அவ்வோவியத்தால் உணர்த்தப்படும் பொருளின் உருவமும், பொருளும்

அகத்தில் உலாவுதலானும், பொருளும், ஓவியமும் வேற்றுமை நயத்தான் வேறெனத் தோன்றினும் ஒற்றுமை நயத்தான் ஒன்றே. ஆதலின், எண்காணப்படுதற்கும், கல்வி தோன்றுதற்கும் இடமாகிய பொருளுக்குக் கூறிய இலக்கணங்களை மாட்டேற்றுதல் என்னும் நூற் புணர்ப்பினால் அப்பொருளொடு வேறல்லாத ஓவியத்திற்குக் கூட்டுக. அவ்வாறு கூட்ட அத்தகைய பழங்காலத்தும் ஓவியக்கடலுள்ளே எண்ணும், எழுத்தும் என்னும் முத்தும், மணியும் மறைந்து கிடந்தன என்பது தெற்றென விளங்குதலை அறிக.

இனி, ஓவியம் கைத்தொழில் எல்லாவற்றிற்கும் தாயாகும். எவ்வாறெனில் அறைபுதும். கைத்தொழில் சிற்பத்தொழில், நூற்றற்றொழில், நெய்தற்றொழில், தச்சுத்தொழில், கம்மத்தொழில் முதலியவாய் மிகப்பலவாம். இத்தொழில்கள் புரிதற்கு உரிய கருவிகள் எல்லாவற்றையும் ஈன்றது ஓவியமே. ஆதலின் இத்தொழில்கள் எல்லாவற்றையும் ஈன்றது ஓவியமே. ஆதலால் ஓவியத்தாய்க்கு இவைகள் பிள்ளைகளானவாறு காண்க. மிகச் சிறந்த சிற்பம் ஓவியத்தின் திரிபென்றே கூறலாம். ஏனை ஒவ்வொரு தொழிலும் ஓவிய அடிப்படையின் மேல் எழுந்த மாளிகைகளாகும். சிற்பத்தொழில் புரிவோர்க்கே ஓவிய அறிவு வேண்டும். ஏனைத்தொழில் புரிவோர்க்கு ஓவிய அறிவு வேண்டியதில்லை. ஆதலின் எல்லாத் தொழில்கட்கும் ஓவியத்தொழில் தாயாவது யாண்டை எனின்? அறியாது கூறினாய், ஓவியம் கண்ணால் பார்க்கப்பட்டுக் கையால் எழுதப்படுவதுமாத்திரமன்று. கண்ணால் பார்த்ததோர் பொருளை மனத்தால் பலமுறை நினைத்து உள்ளத்தில் அமைத்துப் பின்னர் வெளிப்படுத்தப்படும் ஓவியமும், செவியால் கேட்டு உள்ளத்தில் அமைத்துப் பின்னர் உருவாக்கப்படும், ஓவியமும், உள்ளத்தால் உள்ளி உள்ளிப் பின்னர் உரைக்கும் ஓவியமும் எனப் பலவகைப்படும். ஆதலால் அமையும் என்பது.

மரங்கொல் தச்சன் ஒருவன் ஓவியம் எழுதத்தெரியாதவனாயினும் ஒரு பொருளின் அமைப்பைப்பார்த்து அதுபோல்

மாத்தால் உருவம் செய்கின்றான்; கருங்கைக்கொல்லன் ஒருவன் ஓவியம் எழுதல் அறியானாயினும் ஒரு பொருளைப் பார்த்து இரும்பை முரித்துக் கொன்று தான் பார்த்த பொருள் போன்றதோர் உருவத்தைச் செய்கின்றான். பணக்காரனொருவன் இம்முறையில் அமைத்துத் தரல்வேண்டுமென்று கூற, நன்கலந்தருங் கம்மியன் ஒருவன் அவன் கூறியாங்குப் பொன்னும், மணியும், முத்தும் கொண்டு நன்கலஞ் செய்கின்றான். புலவன் ஒருவன் தன் புலமை மிகுதியால் உள்ளத்தால் உள்ளி உள்ளிக் கவியாகிய ஓவியத்தைச் செய்கின்றான். இவ்வாற்றான் ஒவ்வொரு தொழிற்றுறைபில் அமரும் ஒவ்வொருவரும் ஓவியப்புலவரானமையறிக. இவர்களுட் பாவலன் கைத்தொழிலாளி அல்லனேனும் ஓவியப் புலவனாகக் கருதப்படுகின்றானாதலின் ஈண்டெடுத்துக் கூறினும்.

"இடிகொள் வேழத்தை எயிற்றுடன் எடுத்துடன் விழுங்கும்
கடிய மாசுணம் கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப்
படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பன பாராய்."

இச் செய்யுளை என் ஓவியம் என்று கூறலாகாது. இச் செய்யுளையாத்த கம்பனை ஓவியப்புலவன் என்று ஏன் கூறுதல் ஒன்றாது. இதனை நாம் படிக்கும் போது இடியும், அதன் முழக்கமும்; யானையும் அதன் பிளிறலும், மலைப்பாம்பும், அப் பாம்பு யானையை ஒருசேரத் தங்குதடையின்றி விழுங்கலும், அப் பாம்பின் கொடுமையும்; நூல்களும், நூல்களைக் கற்றறிந்த புலவரும், அவரடக்கமும்; துறவுப்பெரியாரும், அவரது நோன்பினாற்றலும், அப்பெரியாரிடத்து அன்புபூண்டு கிடக்கும் பாம்பின் அடக்கப்பணியும், அப்பெரியாரின் செலவும், அவர் செல்லும் படிகளும், மலையும், பக்கமலையும், சிதையும் இவற்றையெல்லாம் அவட்கு இராமன் காட்டுமாறும் நம்முளத்தகத்தும், நங்கண் முன்னும் நிற்கின்றனவலவோ? இங்கு காட்டியவற்றுள் கருத்தளவையால் உணர்தற்பாலவாய அடக்கம் முதலியவும் இச்செய்யுட் படத்தில் விளங்குகின்றவாறு கண்டுமகிழ்க. இவ்வளவை

யும் சுருங்கிய நாலடியளவுள்ள ஒரு நெடிலடிக்கிழியில் அமைத்துக் காட்டும் இவ்வோவியப் புலவனின் மாட்சி என்னே! என்னே!

"உயிராவணம் இருந்து உற்றுநோக்கி, உள்ளக்கிழியின் உரு எழுதி உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத்தந்தால் உணரப் படுவாரோடு ஒட்டிவாழ்தி"

இச்செய்யுளைத் தமிழ்நாடு செய்த நோன்பினுல் தமிழ் மொழியில் அருளிய பெரியார், உருவம் எழுதுங்கால் எழுதுவோனும், கருவியும், எழுதப்படும் பொருட்கிடமாகிய இடமும் அசைந்தால் ஓவியம் அழகுகெடும் ஆதலின் உயிராமல் இருந்து எழுதக் கூறியாணையிட்டிருக்கின்றனர். அது நிற்க அது பின்னர் கூறுதும். இவ்வடிகள் தம்முள்ளத்தில் கடவுள் வடிவினையும் அசைவின்றி எழுதியமை பெறப்படுகின்றதன்றோ? இத்தகைய பெரியாரும் ஓவியப்புலவர் என்று தம்மை ஒத்துக்கொள்ளுவாராயின் ஓவியப் புலவருள் ஏனையோரை அடக்குதல் குற்றமாக ஆகவுங் கூடுமோ என்னும் ஐயம் தோன்றுகின்றவாற்றை அறிஞர் அறிக.

இனி, யாண்டாண்டு அழகு காணப்படுகின்றதோ ஆண்டாண்டெல்லாம் ஓவியம் உண்டென்று அறிக. இதுவரை, ஒவ்வொரு தொழிலிலும் ஓவியத்தொழில் கலந்து நிற்கின்றதென்று கூறினும். இனி, ஓவியத்தின் இயற்கைப் பெருமையினைப்பற்றிச் சில கூறுவாம்.

ஓவியம் பார்ப்பவரின் கண்ணையும், கருத்தையும் கவருகின்றது; அவ்வழியே அவர்களுடைய உள்ளத்தில் உவகை அரும்புவிக்கின்றது. அதனுல் அவர்கட்கு அது இன்பத்தை அளிக்கின்றது. இன்ப ஆக்கத்தால் துன்ப நீக்கம் அளிக்கின்றது. ஓவியத்தை உற்றுநோக்கிப் பழகிவந்தால் உள்ளத்தை ஒருவழிப் படுத்தல் கைகூடும் என்று பெரும்புலமை சான்ற மறைமலையடிகள் முதலிய புலவர் பெருமக்கள் கூறுவாராயின் ஓவியத்தின் பெருமையை எவ்வாறு எடுத்துரைத்தல் ஒல்லும். எடுத்துரைக்க முடியாதென்பதை ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலாக் கடவுட்கு ஆயிரம் திருவுருவம் எழுதியும், அமைத்தும், வார்த்தும் தமிழர்

வழிபடுதலால் அறிக. என்னை? கடவுளது பெருமையை உரைக்க முடியாவாறு போல அக்கடவுளின் அருட்டிருவுருவினை விளக்கும் ஓவியத்தின் பெருமையையும் எடுத்துரைத்தல் முடியாதாகலான் என்பது. உரையாலும், உளத்தாலும், உணர்வாலும் பற்றப் படாத கடவுளையும் ஓவியத்தில் அமைக்குமிடத்து அவ்வோவியத்தின் பெருமை பெரிதே! பெரிதே! பல்லாயிரநாழிகைத் தொலைவிலுள்ள நாடுகளையும், மலைகளையும், கடல்களையும், நகரங்களையும், ஊர்களையும், மக்களையும், ஏனை உயிருடைப் பொருள்களையும், உயிரில் பொருள்களையும் ஓரிடத்தில் இருந்துகொண்டு எளிதில் உணர்வது ஓவியத்தினாலே என்றால் ஓவியம் எத்துணைச் சிறப்புடையது! எத்துணைச் சிறப்புடையது!!

இனி, இவ்வோவியத்தை வரையும் புலவன் எத்தகையன் என்பதனை ஆராய்வாம். சிறந்ததோர் ஓவியத்தைக் கண்டவிடத்து இவ்வோவியத்தைச் செய்தவன் எம்மகன் கொல்லோ" என்று வியப்புடன் அவனைக்காண நம் மனம் விழைகின்றது. இதனால் ஓவியப் பெருமை எல்லாம் ஓவியப் புலவன் பெருமையாகவே கொள்ளப்படுதல் அறிக. ஒரு முழவினை ஓவியன் வரைய வேண்டுமாயின் அம்முழவின் அளவினையும், அமைப்பினையும், நிறங்களினையும், வார்க்கட்டினையும், அவன் கூர்ந்து அறிந்திருந்தால் அன்றி எவ்வாறு அதனை அவன் வரைதல் கழியும். ஒரு மரத்தினை ஒருவன் எழுதவேண்டின் அதன் கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள் முதலியவற்றை அவன் எவ்வளவு நுணிகி அறிதல் வேண்டும். மக்கட்குக் கூறிய உறுப்புக்கள் உடையாராக இருப்பினும் தாம் வாழுமிடங்களின் தட்ப, வெப்பங்களால் பெரிதும் மாறுபாடுடையாராய் வதியும் மக்களை உருவத்தில் அமைக்குங்காலும், அவ்வொரு நாட்டுமக்களுள்ளும் எண்ணிறந்த வேறுபாடுடையாராய் வதியும் தனித்தனி மக்களை உருவத்தில் அமைக்குங்காலும் அவன் எவ்வளவு உற்றுணரும் ஆற்றல் உடையனாய் இருத்தல் வேண்டும். எனவே ஒவ்வொரு பொருளையும் தனித்தனி அறிந்து அப்பொருளை முன்னர் உள்ளத்தில் எழுதிப் பின்னர்க் கையினால் எழுதும் ஆற்றல் வாய்ந்தவனாகின்றான். எனவே அவன் நுண்ணுடலும், பருவுடலும் ஒற்றுமையுடையனவாய்

ஒருவழியொழுகுகின்றன. ஒரு பொருளின் உறுப்பியல்பினை நூற்புலவன் ஒருவன் வாயினால் உரைத்துணர்த்துகின்றான். ஓவியப்புலவன் ஒரு பொருளின் உறுப்பியல்பினைக் கையினால் எழுதி உணர்த்துகின்றான். நூற்புலவன் கேட்பவர்க்கு உணர்த்து கின்றான். ஓவியப்புலவன் பார்ப்பவர்க் குணர்த்துகின்றான். நூற்புலவனுக்கும் ஓவியப்புலவனுக்கும் இவ்வளவே வேறுபாடு. உணர்த்தும் முறையில் நூற்புலவனுக்கும் ஓவியப் புலவனுக்கும் ஒற்றுமையிருத்தல் உணர்க.

ஓவியப் புலவன் ஒவ்வொரு பொருளின் உடலமைப்பையும் நிறமுதலியவற்றையும் அறிந்திருத்தலேயன்றி மாநிலவளாக அறிவும், வரலாற்று அறிவும் வாய்க்கப் பெற்றவனாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டுப் பொருள்களையும் வரைய வேண்டியவனாயிருத்தலின் அவனால் மாநிலவளாக அறிவு இன்றியமையாமல் வேண்டப்படுவ தொன்றே எனினும் வரலாற்று அறிவு வேண்டியதன்றாம் பிறவெனின், அற்றன்று. என்னை? ஏனை உயிரில் பொருளையும், உயிருடைப் பொருளையும் போலானாய் மனிதன் நாளும், நாளும் அறிவு வளரப்பெற்று வருகின்றானாதலின் அறிவின் குறைவுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப அவன் ஒழுக்கங்களும், உடலமைப்பும் பிறவும் மாறுபடுகின்றன, ஆதலின் அறிதல் வேண்டும் என்பது. இத்துணை அறிவுடைமை வாய்க்கப் பெறலேயன்றி ஒவ்வொரு உயிர்ப்பொருளின் எண்ண அலைகளையும் தான் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறு அறியும் மதுகை இல்லாமையான் அன்றே இக்காலத்து ஓவியர் சிலர் ஓடாப் பொன்னையும், ஓட்டையும் ஒப்பநோக்கும் பெரியாராகிய திருநாவுக்கரசுநாயனார்க்குப் பொற்கலங்கள் அணிவிக்கின்றனர். பொன்னைத்துறந்த பெரியார்க்குப் பொற்பணிகளை வலிந்துபூட்டி எழுதப்பட்ட அவ்வுருவத்தில் தெய்வத்தன்மை யாண்டிருக்கும்.

"இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்"

இச் செய்யுட்கிழியில் அப்பெரியார் திருவுருவமும், திருவருளும் விளங்குகின்றனவா? அப்பொருந்தா ஓவியத்தில் அவை விளங்குகின்றனவா? அந்தோ! அந்தோ! இன்னார் நந்தமிழ் நாட்டுத் திருநெறிப்பெரியாரை வாயினல் வைது பேசும் மாக்களினும், தாள்களிற் பிதற்றும் தண்ணியரினும் தமிழ் நாட்டுக்குத் தீங்கிழைக்கின்றனர். என்னே? அவ்வாறு வைப்பும் மாக்களும், எழுதும் மூகையரும் இம்மையிற் வன்பமும், மறுமையில் நிரயமும் எய்துகின்றனரோயன்றிப் பெரியார் உருவத்திற்கும், அவ்வுருவைப்போற்றும் அடியார்க்கும் அவ்வுருவமருளும் அருளுக்கும் யாதும் தீங்கு செய்திலர். ஓவியர் முன்னவை பெறுவாரல்லரேனும், பின்னவை புரிகின்றனராதலின் என்க.

இனி, ஓவியர், மக்களுட் சிறந்தார்க்குக் கூறிய பண்புடைமையுள் ஒன்றாகிய பொறுமைக்கு உறைவிடமாதல் வேண்டும்; ஒருபொருளைப் பலமுறை ஆய்ந்தறிதற்கும், அப்பொருளின் உருவைத் திருத்தமாய் எழுதுவதற்கும் அது இன்றியமையாமல் வேண்டப்படுதலின். இனி, மெய்யுணர்வென்னும் வீட்டிற்கு வாயிலாகிய ஒருமையுள்ளம் உடைய ஓவியனே சிறந்தவனாவான். இதனான் அன்றே 'பல்லூழ் இவை இவை நினைப்பின் வல்லோன் ஓவத்தெழு தொழில் போலும்" (பரிபா—உக.) என்னும் மொழிகள் தோன்றலாயின. மன ஒருமையுடன் ஒருவன் எழுதிய ஓவியங்களே பார்ப்பவரை மன ஒருமையில் இருத்தும். அவ்வாறு மன ஒருமையுடன் எழுதப்படாத ஓவியங்கள் பார்ப்பவரின் உள்ளங்களை அலைக்கும். எவ்வாறெனின், காதலனும், காதலியும் ஒரு நினைவுடன் மணந்து பெற்ற ஒருவர் இவ்வுலகில் எல்லாரானும் நன்குமதிக்கப்படுகின்றனர். எல்லாருக்கும் நல்லறிவு ஈகின்றனர். அது போல உளமும், கண்ணும், கையும் ஒருவழிப்பட்டு எழுதுதலினல் உளதாகிய ஓவியம் தன்னைப் பார்த்தவரை மகிழச் செய்விக்கின்றது. அன்றியும் உள ஒருமையும் அளிக்கின்றது. ஓவியப்புலவனைத் தந்தையாகவும், ஓவியத்தை மகவாகவும் கூறுதல் பொருந்தும். இக்கருத்தான் அன்றே சிற்பிகளைப் பிதா என்று கூறுப. அன்றியும் தூய

உள்ளத்தின் வழி உளதாகிய சொல் தூயதாமாறு போலத் தூய உள்ளம், கண், கைகளால் உளதாகும் ஓவியமும் தூய்மை அளித்தலைப் பெறுதல் இயல்பன்றோ? தூய்மை என்றது ஈண்டு உள ஒருமையை. அதன் வழியே அது தோன்றுதலின். விதை ஒன்று விதைக்கப் பயிரொன்று தோன்றுதன்றோ? தந்தை இயல்பு மைந்தன் இயல்பு என்றுரைத்தல் நந்தண்டமிழ் மொழிக்கு உண்டன்றே.

இனிச் சிறந்த ஓவியப்புலவன் ஒருவாற்றால் படைத்தற் கடவுளுடனும் ஒப்புமையுடையனாகின்றான். படைத்தற்கடவுள் உடலைப் படைக்கின்றான். ஓவியப்புலவனும் உடலைப்படைக்கின்றான். அன்னானும் உயிரைப்படைத்திலன். இன்னானும் உயிரைப்படைத்திலன். இவ்வளவில் ஒற்றுமை மிக்கிருத்தல் காண்க. அன்னான் உயிர்படைக்கின்றான் என்று பெரியோர் கூறுகின்றனரே எனின், உயிர்களை மறைத்துப் பின்னர் விடுத்தலை நோக்கி அவ்வாறு கூறுகின்றனர் என்க. இது ஒருவகை மரபாம். மறைத்துவிடுத்தலை "விழுங்குயிர் உமிழ்ந்தனை" (புறம்பயம் தேவாரம் திருமுறை 2) என்னும் பெரியார் வாக்கான் உணர்க. நிற்க. இருவருக்கும் வேறுபாடு என்னை எனின் அன்னான் படைக்கும் உடல் உயிரின் துணையால் இயங்குகின்றது. உயிர் உறைதற்கு இடமாகின்றது. இன்னான் எழுதும் ஓவிய உடலுக்கு அவை இல.

இனி, கடவுளையும் ஓவியப்புலவன் என்று ஓர் பெரியார் "உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்து இருக்கும் உயிர் ஓவியமே" (மீனாட்சிபம்மன் பிள்ளை—வருகை) என்று கூறியுள்ளமை அறிந்து மகிழ்க. இதனுள் ஓவியம் எழுதும் புலவன் எழுதும் முறையையும், அன்னோனே தன் ஓவியத்தைக் கண்ணிமைக்காது பார்த்து மகிழும் மகிழ்ச்சியையும், அவன் அசைவற்று உள ஒருமையுடன் இருக்கும் நிலைமையையும் அழகொழுக மொழிந்துள்ளமை நோக்கி மகிழ்க. உயிர்ப் பொருட்களின் மெய்ப்பாட்டினையும் ஓவிய உருவில் காட்டும் ஆற்றல் ஓவியப்புலவனுக்குளதெனின் அன்னான்

சிறப்பினை அறிவார்யாரே. இது காறும் கூறியவாற்றால் ஓவியப் புலவன் இயல்பும், அவன் பெருமை 'இத்துணை என்று வரையறுக்க முடியாமையும் சொல்லப்பட்டன.

இனி, இவ்வோவியக்கலையைத் தமிழ் நாட்டார் எவ்வகையில் அறிந்திருந்தனர், இப்பொழுது எவ்வகையில் அறிந்திருக்கின்றனர் என்பன ஒரு சில கூறி இக்கட்டுரையை முடிக்குதும். பண்டைத் தமிழர் ஓவியக்கலையை நன்கு உணர்ந்திருந்தனரா? இல்லையா? என்பனவற்றிற்குச் சான்றாக உள்ளன அம்மக்களுள் அறிவுடையாரால் செய்யப்பட்ட பழந்தமிழ்ச் செய்யுட்களேயாம் என்பதனை யாரும் மறார். பிறவும் உளவேனும் அத்துணைச் சிறப்பில. பண்டைத் தமிழ்ப் புலவர் ஓவிய உலகிலேயே நன்கு வதிந்திருந்தனர். மிக்க பழம் பாட்டுக்களில் ஓவியத்தைப்பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவராகிய சித்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில், ஓவியச் செய்வினை அமையப்பெற்றுள்ள சக்கரவாளக் கோட்டம் என்ற ஒரு நிலையம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தது என்று கூறியுள்ளார். அதனுள் ஓரிடத்து

"நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்
நல்லவழி எழுதிய நலங்கிளர் பாடமும்."

எனக் கூறியுள்ளார்.

இதனுள் எழுதும் இயல் நலம் அமைய "நல்லவழி எழுதிய"து என்று கூறியது நாம் உற்று நோக்குங்கால் நமக்கு எவ்வளவு அழகு பயக்கின்றது. "ஊரா நற்றேர் ஓவியப் படுத்து" எனக் கூறியுள்ளார். இதனுள் ஊரப்படாமல் அசைதலின்றி நிறுத்தப்பட்ட தேரை அசையாத ஓவியத்திற்கு உவமை கூறியுள்ளார். இனி, ஓவியங்கள் விளக்கமான சுண்ணத்தால் எழுதப்பட்டிருந்தன என்றும், அவ்வோவியங்களை எழுதியவர் சதுரப்பாடு கெழீஇயவராயிருந்தனர் என்றும், மக்கள் அவ்வோவியங்களைக் கண்டு அவற்றின் அழகில் ஈடுபட்டுக் களிகூர்ந்து நின்றிருந்தனர் என்றும் பொருள் பொதிய

"தெண் சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்" என்று கூறியுள்ளார்.

சோழன் மகன் உதயகுமரன் எனப்படுவான் மணிமேகலை யின்உருவின் சாயலைப் பளிக்கறைப்புறத்துக் கண்டு அதனைச் சித்திரக்கைவினை என்று பிறழக்கருதினன் என்று கூறியருளினர். இதனால் அக்காலத்துச் சித்திரங்கள் நிறைந்த அழகுடையனவாய் வரையப் பட்டிருந்தன என்பது பெறப்படுகின்றதன்றோ?

"குரவமும், மாவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி" னவாய்

நிற்கும் ஓர்மலர் வனம்

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவாறு"

போல் தோன்றும் என்று கூறுவாராயின் ஓவியத்தைப் பண்டைத் தமிழர் கொள்ளைகொண்டு நுகர்ந்தனர் என்று கூறுதல் பொருந்தும். அதனால் அன்றே அரியதோர் புதிய பொருளைக் கண்ட விடத்துப் 'பொல்லாத ஓவியமோ' என்னும் பழமொழி தமிழ் நாட்டில் நிலவுகின்றது. (பொல்லாத ஓவியம்—துளைபடாத ஓவியம்) சுருங்கக்கூறின் இச்சித்தலைச் சாத்தனர் என்னும் புலவர் ஓவியக்கடலுள் மூழ்கிக் கரை தெரியாராய் மயங்குகின்றார் என்று கூறுதல் பொருந்தும்.

இனி, சங்கப் புலவருள் ஒருவர் பெயர் பெருஞ்சித்திரனர் என்று வழங்கப்பட்டதென்றால், தமிழர் ஓவியக்கலையில் எவ்வளவு பற்றுடையராயிருந்திருத்தல் வேண்டும்.

இனி, நனவிற்பாடிய நல்லிசைக்கபிலனார் செல்வக்கடுங்கோ *வாழியாதனைப் பாடிய பாட்டினுள் தமது உயிர்த்தோழனாயிருந்து இறந்தவனாகிய பாரி என்னும் வள்ளலைச் சிறப்பித்துக் கூறுமுகத்தான் அவன் வீட்டினை "ஓவத்தன்ன வினைபுனை நல்லில்" (பதிற்-6) எனக் கூறியுள்ளார். இதனுள் பாரியின் வினைபுனை வீட்டிற்கு ஓவியத்தை உவமையாகக் கூறியிருத்தல் நம்மாற் பாராட்டும் தகுதியுடையதாகும். குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசனைப் பெருங்குன்றூர்க்கிழார் என்னும் புலவர் தாம் பாடியபோழ்து அவனது ஊருவழகுடைய நகரத்திற்கு ஓவியத்தை உவமையாக "ஓவத்தன்ன உருகெழு நெடு நகர்" (பதிற்—88) எனக்கூறியுள்ளார். இனி இவ்வாறே சான்றோர் ஓவியத்தைப்பற்றிக் கூறியுள்ள பகுதிகளை எடுத்து எழுதிக்கொண்டிருப்பின் இக்கட்டுரை விரிந்து செல்லுதலின் இவ்வாறு காட்டுதலை நிறுத்துகின்றோம்.

இவ்வாறு பழங்காலத்து ஓவியம் சிறப்புற்றிருந்தமைக்கு ஏதுவான ஓவிய இயல்களைத் தம்மகத்துடைய நூல் சில இருந்திருத்தல் வேண்டும். அத்தகைய நூல்கள் கடற்கோளால் இறந்தொழிந்தவேனும் ஓவியச் செந்நூல் என்னும் ஒரு நூல் மாத்திரம் சங்ககாலத்திற்குச் சற்று முன்னரும் இருந்ததாக அறிகின்றோம். 'ஓவியநூலுள் நிற்றல் இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள" (சிலப். வேனில்-25, 26) என்று கூறுதற்கண் ஓவிய நூலென்று ஒரு நூல் உண்டென்று அடியார்க்கு நல்லார் வரையும் உரையும், "ஓவியச் செந்நூல் உரைநூற்கிடக்கையும்" என்னும் மணிமேகலையடியும் இதனை வற்புறுத்துகின்றன. இவற்றுள் சாத்தனார் ஓவியச்செந்நூல்

---

* இவன் இயற்பெயர் செல்வக்கடுங்கோ என்பது வெளிப்படை. ஐங்குறு நூற்று முப்பத்தில் முதலடிமுழுதும் 'வாழி ஆதன்' என்னும் அடைமொழிகள் கூறப்பட்டிருத்தலானும், அம்மொழிகள் சேர அரசனைக் குறித்தலானும் "கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் எழுதி" என்றாற் போல் அவ்வரசனுக்குப் பெயராயியையந்திருத்தல் கூடுமோ என்று எண்ண இடமுண்டு. எனினும் அந்நூலாலும், அந்நூல் உரையாலும் 'ஆதன் அவினி' என்னும் சோரன் அறியப்படுகின்றான். இருவரும் ஒருவராக இருத்தல் கூடுமோ என்னும் ஐயமும் உதிக்கின்றது.

என்றும்: அடியார்க்கு நல்லார் ஓவியநூல் என்றும் கூறியிருத்தல் ஆராய்ச்சிக்குரியது. மணிமேகலை என்னும் பொருட்டொடர் நிலைச்செய்யுள் சீத்தலைச் சாத்தனாரால் செய்யப்பட்டது என்பதனை யாரும் மறார். அன்னார் ஓவியச்செந்நூல் என்று ஒன்று இருந்தது என்று கூறியிருப்பாராயின் அவர் காலத்தினும் பலநூற்றாண்டு கட்கு முன்னர் அந்நூல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு கலைக்கு ஓர் இயனூல் எழுதப்பட்டிருந்ததென்றால் அக்கலை தோன்றி எத்துணையோ ஆண்டுகட்குப் பின்னரே அந்நூல் எழுதப்படல் வேண்டும் என்று மொழிநூலாசிரியர் மொழிகின்றனர். எனவே, அந்நூல் தோன்றுவதற்கு எத்துணையோ ஆண்டு கட்கு முன்னரே ஓவிய அறிவு தமிழ் நாட்டில் தலை சிறந்து நின்றது என்பது போதருகின்றதன்றோ? என்னை? பிறிதோர் மொழியில் நின்றும் மொழிபெயர்த்திருத்தல் கூடாதோ எனின்? அவ்வாறு கூறல் வழுவாம்; நறுந்தமிழ் மொழிகளால் பெயரிடப் பட்டு ஓவியச் செந்நூல் என்று வழங்கியமையின் என்க.

இவ்வாறு ஓவியக்கலையில் சிறப்புற்றிருந்த தமிழ் மக்கள் வழித் தோன்றியாருள் இது பொழுது அக்கலையில் பெயர் பெற்றவர் யாரேனும் உளராவெனின், ஒருவரும் இலர் என்று துணிந்து கூறலாம். ஓவியத்தொழிற்றுறை போகிய தமிழர் சிலர் இக் காலத்து உளராலோ எனின் பழங்காலத்தை நோக்க இக்காலம் எத்துணையோ பங்கு அறிவுடையாரைப் பெற்றிருக்கின்றது. ஆதலின் அது அமைவுடைத்தே. எனினும், அத்தகைய பழங் காலத்து இக்கலைத்துறையிற் சிறப்புற்றிருந்த தமிழ் மக்களின் வழித்தோன்றல்களை அத்தகைய பழங்காலத்து இக்கலைத்துறை யிற் சிறப்பிலராயிருந்த பிறநாட்டு மக்களின் வழித்தோன்றி யவரோடு பொருத்தி நோக்கின், நந்நாட்டு மக்கள் எத்துணையோ பகுதி பின்னிறங்கியுள்ளார். ஆதலின், தமிழ் மக்கள் இக் காலத்து அத்துறையில் இன்னும் முன்னேற்றமடையவில்லை என்று கூறுதல் வழுவன்று. கலாசாலைகளில் ஓவிய ஆசிரியர்க்கு அளிக்கும் ஊதியமும் அவர்கட்கு அளிக்கும் மதிப்புமே, தமிழ் மக்கள் இக்கலையைப் பேணவில்லை என்பதற்குச் சான்றுபகரும்.

தமிழ் மக்கள் தமிழ் ஓவியக்கலைக்குப் புத்துயிர் அளித்து வாழ வேண்டுமாறு எல்லாம்வல்ல தமிழ்த்தாயின் இணையடி பரவுகின்றோம்.

---

431

உ

திருச்சிற்றம்பலம்.

# ஒருகல்வெட்டு.

---

திருவாளர், பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

---

வேனிற்கால விடுமுறையில் யாத்திரையாகத் திருவெஞ்சமாக் கூடலூர் சென்றிருந்தபோது அங்குக் கடவுள் கோயிலிலுள்ள கல்வெட்டுகளிற் சிலவற்றை யெழுதிக்கொண்டு வந்தேன். அவற்றுளொன்று இங்குத் தெரிவிப்பது.

இது, விகிர்தேசப் பெருமான் திருக்கோயிலிற் கோமுகியின் கீழ்பாற் சுவரிலுள்ளது. முன்பொருகால் நந் தமிழ்ப் பொழிலில் வெளிவந்த இவ்வூர்க் கல்வெட்டைப் போலவே இதுவும் கோனேரின்மை கொண்டான் தந்த ஓலையாகும்.

இதிலிருந்து அக்கால வழக்கங்கள் சில அறிந்து கொள்ளலாம். 'ஒருகால், இக்கோயிற் பொருளைக் கடன்கொடுத்து, ஒரு ஊருக்குப் பொது நன்மைக்கிருந்த ஒரு நிலம் ஒற்றிகொள்ளப் பட்டதென்றும், சிலநாளிற் கடன்கொண்டோர் பொருளைத் திருப்பிக்கொடுத்துவிடவே கோயிலூழியக்காரர் அப்பொருளுக்கு வேறு நிலம் வாங்க வேண்டுமென்று அரசனை வேண்டிக் கொண்டார்களென்றும், அரசனும் அதற்கிணங்கி, அப்பொருளைத் தன் அரசியல் வேலைக்காரர்க்குரிய பொருளிற் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்கு விடப்பட்டிருந்த நிலத்தில் இருவேறு இனமான விளைநிலத்தை அப்பொருளுக்கு ஈடாகக் கொடுத்தானென்றும், அவ்வாறு கொடுத்த நிலமும் ஏனை நிலங்கள் போல எவ்விதவரியு

யின்றி முற்றூட்டாகவே எண்ணப்படக் கொடுத்தானென்றும், அந்நிலம் ஆறுகலம் விதைப்பாடு உடையதென்றும் அதன் விலை நூற்றிருபது அச்சு (ரூபாய்) என்றும் இது தெரிவிக்கின்றது.

இக் கல்வெட்டு வருமாறு :—

சுவரிலுள்ளபடி.

1 ஸ்ரீராஜகெஸரி
2 ஸ ஸி வ த ஸ்ரீதிரிபுவனசசககரவததி கொனெரினமைகொணட
3 ான ஆளுடையாா திருவெஞ்சமாககூடலநர்யனாகோயில
4 றதெவகனமிகளுககு நமமொலை குடுத்தபடியாவது இநநாய
5 னாஸ்ரீபணடாரத்தில அசு இடடுவிககிாம சொழசருபபெதி மஙகலத
6 தூஊராணமைக காணி ஒறறி கொணடு அவ்வூராள்கள அவவசசுஸ்ரீப
7 ண்டாரததுககு ஒடுககினமையில இவவசசுக்கு நிலங்கொள ளவேணு
8 மமென்று இததிருக கொயிலற தெவகனமிகள நமமை வந்து அறிவி
9 ததமையில இபபொருள ஸ்ரீயககிபழஞசலாகை அச்சு நூற திருபது
10 ம நமசசுககு°கது நஙகனமிகளககக கொணடு இவவசசு கடகு விடடநி
11 லமாவது வீரசொழ மணடலததது வெங்காலநாடு உழுந்தன குறிச
12 சியான முடிகொணட சொழபுரதது நமகரு த திறப
13 பாயச செவகப பறறுய வருகிற இருபததையவெலிநிலத
14 தி-ஆனைகாழிப பொயயிற கிழ ஆனைகாழி நெலவிதைகாற செயநெலவிதை முககலம இபமுககலத்து

---

குறிப்பு:—10-ஆம் வரியில் உடுக்குறியிட்டவை தவறியெழுதினவையாயிருத்தல் வேண்டும்.

15 க்கு எல்லையாவது கிழககெல்லைககுபபறறு ஆனைகாழிக
கவறகு மேறகுககுடிப்பறறி ஆனைகாழிககுத தெறகு
தாழ

16 தாழஞ செயவாரததிறகவறகுக கிழககு தாழஞ செயவாரத
திறகவறகு வடக்கு இநநானகெல்லைககு உளபட

17 ட நெல்விதை முககலமும ஒரு பூததரையில காடடெழு
மாவில நெலவிதை முககலததுககு எல்லை

18 யாவது குடிபபறறில மசககலுககு மேககு கிழககு நோக
கிப பொனகவறகு வடககு வடகூறறிலகாட

19 டெழுமாபபொனகவறகுக கிழககு வடகூறறிலகாட டெழு
மாவுககுத தெறகு இநநான்கெல்லைககுடப

20 டநெலவிதை (......) நெலவிதை அறுகலததுககும முடி
கொண்ட சொழபுரததில வநத இறைகழி புரவுசிறறு

21 யம எலலைவயுகவை எபபெறபபடடதும செனனிவெடடி
செயயாராகவும முநநீர் துறநது உழுவாகளாகவும
இநநெலவிை

22 த அறுகலததுககும அறற விலையால ஸ்ரீயககிபழஞசலாகை
அசசு நூறறிருபது மநஙகநமிகளுர கெறகைகக
கொண

23 டமையில இநநெலவிதை அறுகலமும யாணடு பதினமுன்
றுவதுகா முதல சுறறுப புலபொகாமுற்றூடடுநெ

24 தவதானமாகக குடுததமையிற சநதிராதிததவரை † செம்பி
லுஞ சிலையிலும வெடடிககொள்ளப பெறுவதாகநம

25 ஓலை குடுததொம இவை எலலாமவலல சொழ மூவெந்த வே
ளான எழுதது இவை வாணாராய தெவனெழுததி

---

20-ஆம் வரியில் உடுக்குறியிட்ட விடத்திலுள்ளதைப் படிக்க முடியவில்லை. அவ்விடத்தில் ஆகநாரல் என்ற எழுத்துக்கள் இருக்கின்றன.

24-ம் வரியில் † இவ்விடத்தில், 'செல்வதாக', என்ற சொல் இருக்கவேண்டும்.

26 வைதியாக ‡ நாகதேவன எழுதது இவைகெதாய தேவ னெழுதது இவ்வகளபபாயராயன எழுதது இவை கட்டுவெட்டி எழுததுஉ

## இதன் திருத்தம்.

ஸ்ரீராஜகேசரி

ஸ ஸ்தி
வ த திரிபுவனச் சக்கரவர்த்தி, கோனேரின்மை கொண் டான், ஆளுடையார் திருவெஞ்சமாக்கூடல் நாயனார் கோயிற் றேவகன்மிகளுக்கு நம்மோலை கொடுத்தபடியாவது :—

இந்நாயனார் (1) ஸ்ரீ பண்டாரத்தில் அச்சு இட்டு விக்கிரம சோழச்சருப்பேதி மங்கலத்து ஊராண்மைக் காணி ஒற்றிகொண்டு அவ்வூராள்கள் (2) அவ்வச்சு ஸ்ரீ பண்டாரத்துக்கு ஒடுக்கினமை யில், இவ்வச்சுக்கு நிலங்கொள்ள வேண்டுமென்று இத்திருக் கோயில் (3) தேவகன்மிகள் நம்மை வந்து அறிவித்தமையில், இப்பொருள் (4) ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு நூற்றிருபதும் நம்மச்சுக்கு (5) நங்கன்மிகள்
கைக்கொண்டு இவ்வச்சுகட்கு விட்டநிலமாவது :—

வீரசோழ மண்டலத்து (6) வேங்கால நாட்டு (7) உழுந்தன் குறிச்சி யான (8) முடிகொண்ட சோழ புரத்து நமக்குத் (9) திறப்பாய்ச் (10) சேவகபற்றாய் வருகிற இருபத்தைவ் வேலி நிலத்தில், (11) ஆனைகாழிப்பொய்யில், கீழ் ஆனைகாழி செல்விதை காற் செய் செல் (12) விதைமுக்கலம்.
இம் முக்கலத்துக்கு எல்லையாவது :—

கிழக்கெல்லைக்குப் பற்று ஆனைகாழிக் (13) கவற்கு மேற்கு; குடிப்பற்றி ஆனைகாழிக்குத் தெற்கு; (14) தாழஞ்செய்வாரத்திற் கவற்குக் கிழக்கு; தாழஞ்செய்வாரத்திற் கவற்கு வடக்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட செல் விதைமுக்கலமும்,

---

26-ம் வரியில் ‡ இவ்விடத்தில் சிதைக்தவை 'ராய' என்ற எழுத்துக்களாக இருக்கலாம்.

(15) ஒருபூத்தரையில் (16) காட்டேழுமாவில் நெல்விதை முக்கலத்துக்கு எல்லையாவது :—(17) குடிப்பற்றில், (18) மசக்கலுக்கு மேற்கு ; கிழக்கு நோக்கிப்போன கவற்று வடக்கு ; வடகூற்றில், காட்டெழுமாப்போன கவற்குக் கிழக்கு ; வடகூற்றில், காட்டெழுமாவிற்குத் தெற்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட நெல் விதை (முக்கலம். இந்நெல் விதை முக்கலமும் ஆனைகாழில் நெல் விதை முக்கலமும் ஆக) நெல் விதை அறுகலத்துக்கும் முடிகொண்ட சோழபுரத்தில் வந்த (19) இறைகழி, புரவு, சிற்றுயம், எல்வை, உகவை யெப்பேர்ப்பட்டதும் (20) சென்னிவெட்டிச் செய்யாராகவும். (21) முந்நீர் துறந்து உழுவார்களாகவும்.

இந்நெல் விதை யறுகலத்துக்கும் அற்றவிலையால் ஸ்ரீ யக்கி பழஞ்சலாகை யச்சு நூற்றிருப்பதும் நங்கன்மிகளுக்கேறக் கைக் கொண்டமையில், இந்நெல் விதை யறுகலமும் யாண்டு பதின் மூன்றுவது கார் முதல் (22) சுற்றுப்புல்போகா முற்றூட்டும் தேவ தானமாகக் கொடுத்தமையிற் சந்திராதித்தவரை (செல்வதாகச்) செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளப்பெறுவதாக நம்மோலை கொடுத்தோம்.

இவை (23) எல்லாம்வல்ல சோழமூவேந்த வேளான் எழுத்து.

இவை வாணராயதேவன் எழுத்து.

இவை (24) தியாகராய நாகதேவன் எழுத்து.

இவை (25) கேதராய தேவன் எழுத்து.

இவை களப்பாயராயன் எழுத்து.

இவை காடுவெட்டி எழுத்து.

## இவற்றின் விளக்கம்.

(1) ஸ்ரீ பண்டாரம்—திருக்கோயிற் பொருள் வைப்பு (Treasury) (2) அச்சு—நாணயம் (ரூபாய் போன்றவை); (3) தேவகன்மிகள்—கோயிற்றொழில் புரிவோர்; (4) ஸ்ரீ யக்கிபழஞ் சலாகை—அக்காலத்து வழங்கிய நாணயம். இன்றும் சிலவிடத்தில் வீரராக்கியன்பணம் என்று பழைய நாணயம் காணப்படுகிறது. இது அதுவாயிருக்கலாம் (5) கங்கன்மிகள்—அரசாங்க உத்தியோகத்திலிருப்பவர். (6) வேங்காலநாடு-கொங்குமண்டலத்தின் உண்ணாடுகளில் ஒன்று, கருவூர்த்தாலூக்காவின் பெரும்பாகம். உழுந்தன் குறிச்சி—இப்பெயருடைய ஊர் இப்போது காளிக்குறிச்சியென வழங்குகிறது. (8) முடிகொண்ட சோழபுரம்—இப்போது முடிகோணம் என வழங்குகிறது. இவ்வூரில் இத்திருவெஞ்சமாக்கூடற் கோயிலுக்குரிய மானியமாக இன்றைக்கும் 10 எக்கர்ப் பரப்புள்ள நிலம் இருக்கிறது என்கின்றனர். (9) திறப்பு—தெரியவில்லை.* (10) சேவகப்பற்று-அரசாங்க உத்தியோகருக்குச் சம்பளத்துக்காக விடப்பட்ட மானியம். பல ஊர்களில் சில நிலங்கள் இவ்வாறு அழைக்கப்படுவதை இன்றைக்கும் காணலாம். (11) ஆனைகாழிப் போய்—விளைநிலத்தின் பெயர். ஆங்கில ஆட்சியார் நிலத்தை யளவு செய்து அவற்றை ஒன்று இரண்டு (1-ஆம் நெம்பர் 2-ஆம் நெம்பர்) எனக்குறித்து வழங்குதற்கு முன் ஒவ்வொரு நிலமும் ஏதேனும் ஓரோர் காரணத்தால் ஒவ்வொரு பெயரிட்டு வழங்கிவந்த தென்பது யாவருமறிவர். சடையப்ப முதலியார் ஊராகிய வெண்ணெய்நல்லூரில் கழுநீர் பாய்ந்தான் என்னும் பெயரோடு ஒரு செய் இன்றும் இருப்பதாகவும் அது கம்பர் பாடிய

"முட்டி வட்டில் முழக்குற வாக்கிய
நெட்டு லைக்கழு நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கழு கோங்குப டப்பைபோய்
நட்ட செந்நெலின் காறுவ ளர்த்துமே

---

* இனும், சுரோத்திரியம் முதலாயவற்றின் வேறுபட்டு அரசியலாருக்கு இறைபெறுவதில் முழு உரிமையும் உடைய நிலங்கட்கு, இவ்விடங்களில், திறப்பு எனும் பெயர் வழங்கப்பெறுகின்றது.

என்னும் செய்யுளை நினைப்பூட்டுவதாகவும் காலஞ்சென்ற பின்னை, நாராயணனர் எழுதியிருப்பது இங்குக் கருதத்தக்கது. (12) விதை முக்கலம்—முக்கல நெல்விதைத்தற்குரிய நிலம். நில அளவைக் கூறும் போது நீட்டலளவையாற் கூறுமல் 'ஒரு கோட்டை விதைப்பாடு,' 'ஒருபடி காடு' 'இரண்டுவள்ளப்பூமி' என இன்றும் வழங்கிவருவது காண்க. (13) கவல்—இனும் ஊர்களில், விளைநிலத்தைச் சார்ந்து, சிறுவரிவிதிக்கப்பட்டுள்ள நிலங்களுக்கு இப்பெயர் உண்டு. இங்குக் குறிக்கப்பட்டதும் அதுவே போலும்? (14) தாழஞ்செய்வாரம்—இதுவும் நிலத்தின் பெயர். (15) பூத்தரை—இதுவும் விளைநிலத்தின் பெயர். (16) காட்டெழுமா—'மா' நீட்டளவைப் பெயர். (17) குடிப் பற்று—கல்வெட்டு 15-ஆம் வரியில் 'பற்று ஆனைகாழி' என வருவதால்—அரசாங்கத்தார் வசம் இருக்கும் நிலத்திற்குப்பற்று என்றும், அதனைக் குடிகள் பற்றிப்பயிர்செய்யின் அதற்குக் குடிப்பற்று எனவும் வழங்கியதாதல் வேண்டும். (18) மசக்கல்—தெரியவில்லை. (19) இறைகழி, புரவு, சிற்றுயம், எவ்வை, உரவை—இவை வெவ்வேறு வரிகளின் பெயர்கள். (20) சென்னி வெட்டிச் செய்யாராகவும்—இன்னதென விளங்கவில்லை. (நம் ஆணையை மீறிச் செய்யலாகாது என்பதாயிருக்கலாம்.) (21) முந்நீர் துறந்து உழுதல்—ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் இவற்றைப் பாய்ச்சுவதனுல் ஒருவரியுமிறுக்காமலே உழுதல். முந்நீர் என்பது இவ்விடத்தில் வரியைக் குறிக்கிறது. முற்றூட்டாய்த் தேவதானமாகக் கொடுத்தமையால் இவ்வாறு எழுதப்பட்டது. இக்கல்வெட்டு 23, 24-ஆம் வரிகளைப் பார்க்க. (22) சுற்றுப் புல்போகா முற்றூட்டு என்று வருமிடமெல்லாம் சுற்றுப்புல் போகா என்று அடை கொடுத்துக் கூறப்படுவதைப் பல கல் வெட்டுகளிலும் காணலாம். (23) எல்லாம் வல்ல மூவேந்த வேளான்—அரசாங்கத்துப் பல்வேறு வேலைகளையும் மேற்பார்த்தற்குப் பலதுறைகளிலும் வல்லவனுய் (All round Master) இருத்தல் பற்றி இப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். (24, 25) தியாகராய நாகதேவன், கேதராயன்—திருவெஞ்சமாக்கூடலூர்க் கருகில், நாகன்பள்ளி, கே (த்) தன்பட்டி யென்ற ஊர்கள் இன்னும் இருக்கின்றன. இவைகள் அவர்களுக்கு விட்ட ஊர்களாயிருக்கலாம்.

உ

கடவுள் துணை.

# உயிர்ப்பண்புகளும் வீட்டு வாயில்களும்.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், தமிழ்ப்புலவர்,
சலகண்டபுரம்.

வியக்கத்தக்க பல்வகை வண்ணம், வடிவு, தோற்றங்களை யுடைய உடல்களை நிலைக்களமாகக்கொண்டு வாழும் உயிர்க்குலங் களனைத்தும், தத்தம் வாழ்விற்கு அவ்வப்போது தேவையாகும் பல பண்டங்களைத் தேடுதற்காக, நாடோறும் ஓயாது தொழில் புரிகின்றன. அத்தொழிலும், அவற்றின் மனவிருப்பத்தை ஒட்டி நிகழ்வன. விருப்பமும், இஃது ஆக்கம் தருவது, இஃது கேடு பயப்பது என அறிந்து, ஆக்கப்பாட்டிற் கேற்றதெனத்துணிந்த பொருட்களின்மேல் நிகழ்வது. ஆகவே, அறிவு, விழைவு, செயல் என்னும் இம்மூன்று பண்புகளும் எல்லாவுயிர்கட்கும், மேன் மேலுயரும் வாழ்க்கை நலத்திற்கென்றே நன்கு அமைந்துள்ளன வென்பது புலனாகின்றது. ஓர் சிற்றெறும்பு, தனக்கேற்ற இரை இஃது, இன்னவிடத்திலுள்ளதென அறிந்து, அதைத் தன்பாழி யிற் சேர்த்து உணவு கிடையாக்காலை உண்ணலாமென விரும்பித் தனது குறிய கால்களை விசையாய்ப் பெயர்த்து ஊர்ந்து செல்கின்ற தன்றோ? அங்ஙனமே நாமும் காலத்திற்கேற்ப வேண்டுவன வற்றை அறிந்து, அடையவிரும்பிப் பலமுயற்சிகள் புரிந்திட்டு கின்றோம். உண்மை காணும் நோக்கத்தோடு ஊன்றிக் கருது வோமாயின், அறிவு முதலிய இம்முப்பண்புகளும், நம்முடல் நலம் பேணுதற்கு மாத்திரமல்ல, இவ்வுலகவின்பங்கட்கு மிகமேலாகிய

ஒப்புயர்வில்லா மெய்ப்பேரின்ப மளித்து நம்மை ஈடேற்றும் சீரிய கருவிகளாகப் பயன்படுவனவுமாமென் அறிந்து மகிழலாம். அஃதியாங்ஙனம்? என்பதனை விரித்துக் கூறவே இக்கட்டுரை எழுகின்றது.

நிறுத்த முறைக்கும் இயற்கைக்கும் பொருந்த அறிவைக் குறித்து முதலிற் சில கூறுதும். அறிவித்தற்குரிய சிறந்த கருவி யாது? அஃது அறிவு என்பதொருதலே. இவ்வறிவின் வழித்தாய் நாம் அறிந்து கொள்ளும் வகைகளை நோக்குவாம். அவை அடியிற் காட்டியவாறு பலதிறத்தன.

(க) புறத்தேதோன்றும் உலகப்பொருட்களையும் அவற்றின் தன்மைகளையும் விழிமுதலாய ஐம்புலன்களினுதவியால் கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும், நேரேயறிவது. (இது காட்சியளவை.)

(உ) ஒன்றோடொன்றியைபுடையவாகக் குறி பிறழாது பிணைந்து தோன்றும் பொருட்களுள், ஒன்று காட்சிப்பட்டு, ஏனையது புலப்படாவழியும், பிரிந்து நில்லாதவற்றினியற்கை குறித்து, அக்காணாத பொருளையும் கண்டாலொப்ப உண்டெனக் கருதி அறிதல். (இஃது கருதலளவை.)

(ங) ஒருவர் கூறும் வாய்மொழியைச் செவியுற்றாயினும், ஓர் நூலைக் கற்றாயினும், முன்னறியாதவற்றை நம்பி அறிதல். (இஃது ஆகமவளவை எனப்படும்.)

(ச) இங்ஙனம், கற்றகேட்டவற்றுள் உரைக்கப்பெறாதவற்றையும் சொல்லுங் குறிப்பு நோக்கி யுணர்ந்துகோடல். (இஃது அருத்தாபத்தியளவை என்பது.)

(ரு). அறியப்படாத பொருளை அறிவித்தற்கு அறியப்பட்ட பொருட்களுள் ஒப்பாவதொன்றை எடுத்துக்காட்டி "அஃது இதனை யொக்கும்" என உணர்த்த உணர்தல். (இதனை உவமையளவை என்ப.)

இங்ஙனமே பல அளவைகள் மேலுமுளவேனும், மேற்குறித்தவற்றினொன்று யடங்குதலின் வேறு விரித்தல் வேண்டா.

இவ்வகை அளவைகளாற் பொருட்டன்மைகளைப் புலப்படுத்தும் அறிவு, உயிரினுடைெருங்கியைந்துள்ளதேயாம். சிலர், புத்தி யென்னும் உட்கருவி (அந்தக்கரணங்)களுள் ஒன்றினை அறிவாமென மயங்குவர். அது பொருந்தாது. மனத்தால் நினைந்த பின்னரே அறிவு தலைப்படுமென்பதுந் தவறே. என்னை? இஃதொன்று தோன்றுகின்றதெனப் புலன்களின் வழித்தாய்ப் பொதுக் (நிர்விகற்பம்) காட்சியால் அறிந்த பின்னரே இஃது யாதோ? என மனம் நினைவதன்றி ஒன்றனையும் அறியாமுன்னம் நினைப்பு நிகழாமை காண்டலின். இவ்வாற்றால் அகக்கருவி நான்கனுள் ஒன்றும் புத்தியும், உயிர்க்கேயுரிய சிறப்பியல்பாகிய அறிவும் வெவ்வேறுதல் பெற்றும்.

இவ்வரும் பெறலுண்மையைத் தமிழுஞ் சைவமும் தலைசிறந்தோங்க உதித்தருளிய நம் மெய்கண்டசிவம் "—நீ சத்தாகாய் பேசின்—அசத்துமலை—நீ யறிந்து செய்வினைகணீ யன்றி வேறசத்துத்—தானறிந்து துய்யாமைதான்." என்றோதியருளிய வாற்றானும், மாதவச் சிவஞானயோகிகள் மாபாடியத்துள் "ஆன்மா, அந்தக் கரணங்களோடு இயை பின்றி, உடனாய் நிற்கும் வித்தை மாத்திரையே கருவியாகக் கொண்டு வாயில்களை அதிட்டித்தவழி எதிரே தோன்றுவதோர் விடயத்திற் பொதுவகையான் இஃதோர் பொருளென்றறிதலாகிய நிருவிகற்பக்காட்சி முற்பட நிகழுமன்றே! அதன் பின்னர் ஆன்மா, மனத்தை யதிட்டிக்க மனமானது சித்தமாய் நின்று இஃது யாதாகற்பாற்று? என ஒன்றைத் தூக்கிச் சிந்தித்துப்பின்னர் இஃது குற்றியாகற்பாற்று; மகனாகற்பாற்று; என ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ? அன்றோ? என ஐயுற்றும் நிச்சயித்தற்கேதுவாகிய வேட்கையை விளைத்து நிற்கும். அதன் பின் ஆன்மா, ஆங்காரத்தை அதிட்டிப்ப ஆங்காரமானது, குற்றியென்றுதல், மகனென்றுதல் ஒன்றைநிச்சயிப்பேன் யான், என்னும் அகந்தை விளைத்து நிச்சயித்தற்கண் முயலும் ஊக்கத்தை உண்டாக்கி அதற்கேதுவாகப் பிராணவாயு

வையும் இயக்கி நிற்கும். அதன்பின் ஆன்மா, புத்தியை அதிட்டிப்பப் புத்தியானது, இவன் மகன், இதுகுற்றி, இதுகுடம்; இது ஆடை என அவ்வப்பொருள்களைப் பெயர் சாதி முதலியன பற்றிச் சிறப்புவகையாற் றுணிதலாகிய சவிகற்பக்காட்சியே ஈண்டு நிச்சயித்தலெனப்படுமென்க." எனத் தமிழ்மணம் தெய்வச்சைவச் செவ்வியொடு கமழும் அமிழ்த வாக்கால் தெளிவுபெற விரித்தோதியருளியவாற்றானும் உணர்க. இங்ஙனம் ஒன்றைப்பொது வகை (நிர்விகற்ப)க் காட்சியாலுணர்த்தும் அறிவும், சிறப்பியல்பு (சவிகற்ப) விளங்கவறிவுறுத்தும் புத்தியும் ஒன்றாகாவென்றும், இவற்றுள் முதற்கணிறுத்த அறிவே உயிர்க்குரிய இயல்பாம் பண்பென்றும் ஐயமறத் தெளியப்படும்.

அறிவாலறிந்த பின்னர் அப்பொருட்களைப் பெறுமாறு வலிக்கும் நினைவே விழைவுத்தருமெனினும், அவ்விழைவும் முன்னில்லாத தொன்றன்று. அறிவேபோல விழைவும் உயிர்க்கியல்பாய பண்பேயாம். இவ்வுண்மை "இனி வித்தையான் ஞானசத்தி விளங்கி விடயங்களை அறியலுறும் ஆன்மாவுக்கு இச்சை நிகழ்ந்தன்றிப் போகநுகர்ச்சி செல்லாமையின், வித்தையினின்றும் தோன்றி, ஆன்மாவின் இச்சாசத்தியை விளக்கிப் புத்தி குணங்களின் அவைராக்கியமெனப்படும் அராக நிகழ்ச்சிக்கு எதுவாய் நிற்பது அராகதத்துவம்" என மாபாடியத்துக் கூறப்படுதலால் துணியப்பெறும்.

இங்ஙனம் அறிந்து விழைந்த பின்னர், காதலித்த பொருளைப் பெறுதற்குச் சுறுசுறுப்பாக முயலும் செய்கை தொடங்குகின்றது. இச்செய்கையும், உடலுறுப்புக்களின் தொழிற்பாடேயாயினும், அவற்றை அவ்வாறியக்கும் கருவியாய மிக நுண்ணிய இயக்கம் உயிர்க்கியல்பாகவுள்ளதாம். என்னை? எங்ஙனம் அறிவதற்கும் விரும்புதற்கும் எற்ற நுண்ணிய கருக்கள் உயிர்க்கியல்பாதல் துனித்துணரப்பெறுமோ அங்ஙனமே செய்கைக்கும் முதற்கருவுண்டென்கை தேற்றமாதலானும், அறிவு இச்சை செயலென்னுமிம்மூன்றும் ஒன்றன்பின்னொன்றாய் அடைவே தொடர்ந்து நிகழக்காண்டலானும், உயிர்க்கு இயல்பாக இயங்கும்

ஆற்றல் இல்வழி உடலுறுப்புக்களை இயக்குமாறின்றாகலானும் என்க. இவ்வுண்மை "மாயையின் வயிற்றுண் மன்னி வரும் செயல் ஞான மிச்சை—யேயுமக் கலாதி மூன்று லேகதே சத்தி னேய்ந்திங்—காயுமுக் குணங்க ளந்தக் காணங்க ளாதி யெல்லாங்—காயமெத் தங்க ளாகிக் கலந்துட னிற்கு மான்மா" எனச் சிவ ஞான சித்தியாரிலும்,

"இனிக், கலாதத்துவமாவது, மூலமலத்தின் மறைப்புண்டு சூனியம்போ னின்ற ஆன்மாக்களுக்குப் போகநுகர்ச்சியின் பொருட்டு மலசத்தியிற் சிறிதே நீக்கி ஆன்மாக்களுக்குக் கிரியா சத்தியை விளக்குவது." என மாபாடியத்தும் கூறப்படுதலால் அறியத்தக்கது.

இதுகாறும் கூறிப்போந்தவாற்றால், உயிர்கள் இயல்பாகவே அறிவு, விழைவு, செயல் என்னும் மூன்று சிறப்புப் பண்புகளையும் "ஓர் நறுமலரின் நிறமும், அதன்கட் பொதிந்த தேனும், அத னிற்றோன்றும் மணமும் போல"ப் பிரிவறப்பெற்றுள்ளன (மலரின் நிறம்போல அறிவும், தேன்போல விழைவும், மணம் போலச்செயலும்) என்றும், உயிர்களைப் பிணித்துச் சூழ்ந்துள்ள இருண்மலத்தால் இம்முப்பண்புகளும் விளங்கிப் பயன்தாராமை யின், பொருட்கடலாம் இறைவன் மாயையானுதவும் வித்தை அராகம் கலை என்னும் இம்மூன்று தத்துவங்களும் முறையே அறிவு, விழைவு, செயலென்னும் இப்பண்புகளை அவ்விருண் மலத்தைச் சிறிது நீக்குமாற்றால் விளக்கி யுதவுதலால் அவை உலக வாழ்க்கைக்குதவுவனவாகின்றன என்றும் விளக்கப்பட்டது.

இப்பண்பு மூன்றனுள் அறிவு, விழைவின் நிகழ்ச்சிகள், குறிப்பு மெய்ப்பாடுகளானும், செயல் ஒன்றும் காட்சிக்கு வெளிப் படையாகவும் பிறர்க்குப் புலனும்.

உயிர்கட்குப் போலவே கடவுளுக்கும் இயல்பாக அறிவு, இச்சை, செயல், ஆற்றல் (சத்தி) உண்டெனச் சைவநூல் இயம் பும். உயிரும் இறைவனும் இம்முப்பண்புகளை இயற்கையாக உடைமையால் தம்முள் நிகராதல் செல்லாது. அறிவிக்க ஒன்றை

அறியும் இயல்பு உயிரினது: எவற்றையும் தானே அறியும் ஆற்ற லியற்கை இறைவனது; தன்னலங்கருதுவது உயிரின்வேட்கை அனைத்துயிர்க்கும் அருள்சுரப்பது இறைவன் வேட்கை; சிறு தொழில் புரிவதுயிர்க்குரியது: முடிவிலாற்றல் இறைவனது ஆகலான். இறைவனது அளவிடற்கரிய அறிவு இச்சை ஆற்றல் களுக்கும் ஏனைத்தேவர்களுள்ளிட்ட எல்லாவுயிர்களின் அறிவு முதலியவற்றிற்கும் உள்ள வேற்றுமையைக்குறித்து நமது மணி வாசகப் பெருமானர், "அறுவகைச் சமயத் தறுவகையோர்க்கும்- வீடுபேறாய்நின்ற விண்ணோர் பகுதி-கீடம்புரையுங் கிழவோன்." எனத் திருவாய் மலர்ந்தருளியதூஉம் காண்க. மேலும் "அவ னுக்கிவனுமசித்தாமே." எனச்சித்தியாரிலும், இறைவன் பெரு மைக்கு முன் எல்லாவுயிர்களும் அறிவில் பொருட்கள்போற் சிறுமையுறுவன" எனத் தெருட்டப்பட்டது.

இனி, இவ்வறிவு முதலிய சிறப்பியல்புகளால் உயிர், வீடு பேறுறுதல் எவ்வாறென்பதனைக் கூறுமுன் நினைவு கூரத்தக்க தொன்றுண்டு. எல்லாவுயிர்களும், தம்மியற்கையறிவு காட்டுந் துறைகளில் விருப்பம் மூளப் பல்வகைப் பொருட்களைத் தேடி யின்பந்துய்ப்பான் நாடோறும் மிக முயன்று எண்ணியவளவிற் பெருகவோ சிறுகவோ ஒருவாறு பெறினும், அவ்வளவில் அமை யாது, பெற்றவற்றினும் மிக நல்லன உயர்ந்தனவென வேறு சில வற்றைக் குறிக்கொண்டு, அவற்றையும் பெறுதற்கு எற்ற முயற்சி கள் புரிந்து இங்ஙனமே கடலலைத்துரும்பென அலைந்தலைந்து தளர்ந்து, இறுதியிலேனும் மன அமைதி பெறாமல், அன்னோ! கொன்னே மாய்கின்றனவே! இதற்கென்னோ பொருட்டு? குறை வறப் பொருளுடையார்க்கும், இருநிலம் ஒருங்கு புரக்கும் ஒரு தனி வேந்தர்க்கும் மேலும் பலபொருட்களை அடைதற்கண் அவா நிகழுமெனின், அப்பாழ்த்த அவாத்தான், எதனைப்பெறின் அடங்குவதெனத் தெரிந்திலதே! இவ்வுலகந்தான், உயிர்களைக் கண்மயக்குறுத்திப் பற்பல பொருட்களைக் காட்டிக் காட்டி அலைத் துச் சலிப்புறச்செய்து அடையும் பேறு யாதோ? தனக்கோ ராக்கமுமின்றிப் பிறரை அல்லலுறுத்தும் அதன் குறிக்கோள் யாதாம்? எனக் கவலையுடன் கருதுவோமாயின் ஒன்று புலப்

படும். அது, பகலவன் காயும் பாலை நிலத்தில், நண்பகலில், உண்ணும் நீர் வேட்டோர் முன்பு, நன்னீர்பெருகி ஓடுகவோடு வது போன்று தோன்றும் கானல்நீரே யன்ன இவ்வுலகப் பொருட்களை நம்பி அவாவுவோரும், அப்பேய்த்தேர் நீருண்டு நீர் வேட்கை தணிதல் எத்துணை மெய்ம்மையோ அத்துணை மெய்ம் மையாக அவாவடங்கப் பொருள்பெற் றமைகுவர் என்பதே. இவ்வாராய்ச்சியின் முடிபுதான் யாதோவெனின்? உலகப் பொருட்களை நச்சோறும் அவாவி நீண்டு எத்துணைக் காலந் துன்புறினும் இன்பமடைதலியலாது. புலன்கள் உலகப் பொருட் களிற் றொடருந்துணையும் துன்பமும் நம்மைத் தொடாதிராது என்றே கூறலாம்.

அற்றேல், இறைவன் செய்த பேருதவியால் தமக்கியல்பாகிய அறிவு முதலியன விளங்கி ஆற்றல் பெற்று, உயிர்கள், மேலும் தமக்குத் தாமே இன்னலை விளைத்துக் கொள்வனவென முடிவதால், இறைவன் கருணைக்குப் பயன் இவைதாம் போலும்! எனக் கொள்ளாமோ வெனிற் கொள்ளாம். என்னை? இவ்வறிவு முதலியவைகளே வேறு துறையில் செலுத்தப்பெறின் வீடு பேற்றையளித்து உயிர்களை என்றும் பேரா இன்பத்தோடு இடை யீடறப் பின்னிப் பிணைத்துய்விக்கும் வன்மையினவுமாதலின். அஃதெவ்வாறு? இவ்வினவுக்கு விடையன்றே இக்கட்டுரையின் இலக்காவது.

பிறவியுளதுணையும் துன்பமிகுதிக்கிடையே யன்றித் தனித்த இன்பம் எய்தலாகாமையானும்; பிறவிகள் வினைதர வருதலின் பிறவி நீக்கத்திற்கு வினைகளின் நீக்கம் இன்றியமையாது வேண்டப் படுதலானும்; வினைகளும் மேலைக்கெய்த நிற்பன (சஞ்சிதம்) இப் போது துய்ப்பவுரியன (பிராரப்தம்) பின் துய்ப்ப ஈட்டுவன (ஆகாமியம்) என முப்பாற்பட, அவற்றுள் இடைப்பகுதி துய்த்தே தீர்வதன்றி விலக்கலாகாததாயும், முற்பகுதி, பிற்பகுதி சுருங்கித் தீர்வுழித்தானே யழிவதாயும் இருத்தலின், பின்துய்ப்ப ஈட்டும் வினை (ஆகாமியம்) யொன்றனைத் தொலைப்பின் அஃதே பிறவிதீர்த்து வீடு பெறுவதற்கேற்றதாக அமைதலானும்; இவ்

வுடலில் இவ்வுலக நுகர்ச்சிகளைத் துய்க்கும்போதே மேலைக்கென ஈட்டும் வருவாய் வினையை (ஆகாமியம்) நீக்கு மொருகுறியே கொண்டொழுகல் வீடுபேற்றை யவாவியோர்க்குப் பொருந்துவ தாமென்கை தேற்றம். உண்மை இவ்வாறிருத்தலின், அவ்வினை எதனுலுளதாமோ அக்கருவியின் தலையை நசுக்கல் வேண்டப்படும்.

மனிதர்களின் அறிவு விழைவு செயலென்னும் மூன்றும் உலகப் பொருட்களை அவாவிச் செல்லுதலே பற்றுக்கோடாக, விளையும் வருவாய் வினையை (ஆகாமியம்) மாற்றவேண்டின், அவ் வறிவு முதலியன தவறுநெறியிற் செல்லாது செவ்விய நெறியிற் செலுத்தப்படல் வேண்டுமென்பதாகின்றது. அச்செப்பமான நெறியாது என எண்ணித்துணிதலே வீடுபேற்றிற்கு வழிகாட்டும் எல்லாச் சமய நூற்களும் கொண்ட நோக்கமாம்.

இனி எந்த மறைகளும் ஆகமங்களும் சமய நூற்களும், வீடு பேற்றிற்குக் கூறும் (ஒன்றை யொன்ருெவ்வியும் ஒவ்வாமலு முள்ள) அனைத்துப் பொருட்களும், அறிதகு தொகுதி (ஞான காண்டம்) விழைவுத்தொகுதி (பத்திகாண்டம்) செய்வினைத் தொகுதி (கரும காண்டம்) என முப்பகுதிகளுளொன்ருகவே முடியும். எனெனின் அறிவு விருப்பம் செயலென்னும் உயிர்ப் பண்புகளாலேயே யன்றி வேறெவ்வாற்ருனும் உய்யும் வழியின் மையான் என்க.

தானே பரம் எனக்கூறும் வேதாந்த நூற்கள், அறிவான் இறைவனைத் தானுகக்கருதுமாறு கூறி ஞானப்பகுதியின் வழிப் படும். கடவுளின் தாட்டாமரைகட்கு ஆராவன்பு பூண்டு தன்னை யும் மறந்த அவசங்கோடல் வீடுபேறு தரும் எனச் செப்புவன வைணவ முதலிய சமய நூற்கள். இது பத்தியின் பாலதாம். எவ்வினை புரியினும் அவற்ருலாம் பிற்பயனில் விருப்பமுருது கடவுட் பொருட்டே செய்துவருதல் வீடுபயக்கும் என மொழி வன கீதை முதலியன. இது செயல்பற்றியது. இவ்வாற்ருன், அறிவு, வேட்கை, செய்கைகளை இறைவன்பாற் படுத்தின் உயிர் கள் துன்பம் நீங்கி வீட்டின்பமடையும் என்பதுணர்க.

திண்ணப்பராகிய கண்ணப்பரது செய்கையைப் பொருது வருந்திய சிவகோசரியார் கனவில், காளத்தியிறைவன் தோன்றி அக்கண்ணப்பருக்குத் தன் பாலுள்ள அன்பின் பெருக்கை அறிவிக்குமிடத்தே இறைவன் கூற்றாக நம் அருண்மொழித்தேவர்

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லாம் நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறி நீயென் றருள்செய்வார்."

என, அவரது அறிவு விழைவு செயல்கள் இறைவன் வயத்தனவாதலை விளக்கியருளினர். இச்செய்யுளில் "கண்ணப்பரது வடிவம் முழுதும் அன்புமயமாகவே விளங்கிற்று" என்பது குறிக்கவே "அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு" என வுரைக்கப்பட்டது. "அன்பு பிழம்பாய்த் திரிவாரவர் கருத்தின்அளவினரோ" என வேறோரிடத்தும் இங்ஙனமே கூறப்பட்டது. இதனால் கண்ணப்பர் வேட்கையனைத்தும் குடுமித்தேவர் பாலே குழுமிச்சென்று தன்னை அயர்த்து நின்றதென வறிகின்றோம். மற்று, அவரது அறிவு வேறொன்றனையும் உணராது இறைவனையே உணர்ந்து நின்றது. அவரது செய்கைமுற்றும் பயன் கருதாமலும், கொள்ளுவது, தள்ளுவது என்னும் பகுப்புணராமலும் உறங்குவோன், கைவிதிர்ப்பது போன்று நிகழ்ந்தன. இறைவன் கண்கெடத் தன்கண்ணைக் கூரம்பால் சூத்திப்பெயர்த்த போதும் துன்பப்புலப்பாடறவிருந்த அவரது நிலைமை யுரைக்கடங்குவதொன்றன்றே! "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்" என அருளி, மணிவாசகப் பெருமானும், கண்ணப்பருடைய பண்புத்தற்கிழமையாகிய வன்பைப் பணபியாகிய அவரோடு வேற்றுமையறக் கொண்டு பாராட்டிப் போந்தனராயின், அறிவு வேட்கை செயலென்னும் மூன்று பண்புகளையும் இறைவற்கே காணிக்கைதந்த நம் கண்ணப்பர் பெருமை, கசிந்து கசிந்துருகி நினைப்போரை இறைவனடிக் கீடுபடுத்தும் தகுதியதாதற் கையமுளதோ? ஐந்துபே ரறிவுங்கண்களே கொள்ள—" என வரும் பெரிய புராணத் திருவிருத்தமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிற் றில்லைப்பதியில் அம்பலவாணனைச் சேவித்தகாலை, அவரது

அறிவாதி மூன்றும் ஒரேபடித்தாய் இறைவனை நாடி இன்புற்றுத் திளைத்த நிலையையே காட்டும். திருவாசகத்து நம் மணிவாசகனூர்

> "சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
> கண்ணிணை நின்றிருப்பாதப் போதுக்காக்கி,
> வந்தனையுமம் மலர்க்கே யாக்கி வாக்குன்
> மணிவார்த்தைக் காக்கியைம்புலன்களார
> வந்தெனையாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
> மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
> தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
> தனிச்சுடரே யிரண்டுமிலித் தமியனேற்கே"

என, இறைவன், தமது அறிவு முதலிய மூன்றனையும் தன்வயப் படுத்தாட்கொண்டதை நினைந்துருகுகின்றனர்.

இதனுள் 'சிந்தனை நின்றனக்காக்கி' என்பது அறிவை இறைவன் கவர்ந்து தன்னையே நினைக்குமாறருளியதையும், 'கண்ணிணை நின்றிருப்பாதப் போதுக்காக்கி' என்பது அப்பெருமான் பாற் கொண்ட வேட்கை "பருகுவது போலும் ஆர்வத்தோடு தமக்குப் புகலிடமாகிய தாட்டுணைகளையே விழிகளால் நோக்குமா றருளியதையும், "வந்தனையும்......வார்த்தைக்காக்கி" என்பது, செயலனைத்தும் இறைவனை வழிபாடாற்றற்கே யாக்கியதனையும் தெரிவித்து, அறிவு, விழைவு, செயலென்னும் இம்மூன்றும் இறைவன் தன்பாற் படுத்தமை கூறப்பட்டிருத்தலறிக.

சிவஞானபோதம் முதலிய அறிவுநூற்களில் மிக நுட்பமாக வும், எல்லாச்சமய நூற்களின் திரண்ட தெள்ளிய பொருட்க ளாகவும் காணப்படுவன, யாம் மேற்கூறிய அறிவாதி மூன்றும் இறைவன்பாற்பட ஒழுகும் நெறிபற்றியனவே யல்லது வேறில்லை என்பதனை ஒரு சிறிது விளக்கி, இக்கட்டுரை கூறியவற்றைத் தொகுத்துச் சுட்டி முடிவுறுத்துவாம்.

தொடரும்.

# தமிழக நிலைமையும் தமிழர் கடமையும்.

திருவாளர் S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L.
மதுரை.

பாரதநாடு பாரதீனப்பட்டுப் பருவந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் நேற்றளவு தன்னரசு தாங்கி நின்ற தமிழகம் இன்று அந்நியாட்சியில் அவசமுற்று அலக்கணுற்று உறங்குகின்றது. அடுத்த பிற நாகரிகமனைத்தும் கெடுத்து அவற்றின் நலந் தமதாக்கித் தேக்கித்திரியும் ஆரிய வகுப்பினரின் மூலப் படையை முனியாமல் முன் நேசபாசத்தாற் கட்டி வசமாக்கி அவர் தேவபாடையை மறப்பித்துத் தமிழ் பயிற்றித் தம்மவராக்கி மகிழ்ந்த தமிழகம், இன்று தமிழையே வெறுத்தொதுக்கி ஆங்கிலத்தில் மயங்கியலைகின்றது. பண்டைநாள் மேலே உரோமை யவனரும் கீழச் சீனசாவகரும் ஊன் உடை உவப்பிற்குரிய பல் பொருளும் வேண்டுதொறும் விரும்பிவர அளந்தறியா வளந்தலை நின்ற தமிழகம், இன்று காடாரத்தின் (பர்மாவின்) மிகையரிசி பெறினன்றி பட்டினி நோன்பின்பாடு திகழப்பயில்கின்றது. முன் தன் கலத்தில் வேண்முத்தும் சந்தனமும், கலிங்கமொடு பொருளனைத்தும் பிறநாடு புகுத்தி நீதி வளர்த்து வந்த தமிழகம், தற்காலம் வறுமையுந்த தம்மக்களையே கூலிகளாய்க் கடல் கடத்தி அந்நியருக்காளாக்கி அலமருகின்றது. விளையுள்வளம் உவட்டாமல் விரும்பி வினைத்திறம் வளர்த்துச் சாலமனும் தருக்குடைய உரோம பெருமன்னருமே காதலிக்கப் பல் பொருளும் வழங்கிய நம் தமிழகம், இப்போது கையாறு மேற்கொண்டு பிறர் எச்சில் பெரிதுவந்து பிழைக்கின்றது. தென்பாண்டியனை வடவாரியர்

பழித்ததனைப் பரதேசப்பார்ப்பனராற் கேட்டவுடன் படையொடு சென்று அவரையடர்த்து வென்று அடக்கித் தமிழர் தறுகண்மை என்றும் நின்று நிலவ இமயத்தில் விற்பொறித்துத் தம்மவர் புகழ் காத்த சேரரின் வீறுவளர்த்த தமிழகம், தற்போது அந்நியராதிக்கம்பெருக்குவதில் போட்டியிடும் பெருமக்கள் நிலைக்களனாய் நிற்கின்றது. என்றும், "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" எனும் பொய்யாப் பொருளுரை பேணி, "உள்ளத்தனையர் உயர்வு" எனும் மெய்ம்மையை வற்புறுத்தி ஊக்கித் தம்மக்களைப் புகழொடு வளம் பெருக்கி வாழ்வித்த தமிழகம், இன்று சாதி வெறிக்கட் காதல் கொண்டொழுகும் உட்கப்படா ஒளியிழந்த மக்களால் பாடிழந்து பரதவிக்கின்றது. முன் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு, இப்போழ்து அறிவுலகத்தாரால் அகற்றப்பெற்று, உரனோடு ஒழுக்கமும் ஒழுக விட்ட பேதையர் ஊதியம் பெருக்க எழுந்து எழுந்திறக்கும் நவீனங்களில் ஈடுபட்டு மதிவளம் வறண்டு வருந்துகின்றது. முன் சமணரொடு சோனகருஞ் சோதராக்கொண்டு மகிழ்ந்து அனைவருமாம் தமிழச் சமுதாய நலமொன்றே குறியாக்கித் தழைத்துயர்ந்த தமிழகம், தற்காலம் தம்மொடு தாம்பொருது அழியச் சண்டையிடும் மூலபலச் சமயங்கள் முறிந்து விளிபடுகளனாய் நிற்கின்றது. சிறை நலனும் சீரும் இலது எனினும், மாந்தர் உறைநிலத்தில் யார்க்கும் அவரை ஓட்டல் அரிதாவதாகவும் ஆரியப் படைவென்று விலக்கிப் பிறராட்சியறியாத கன்னிநாடாய் நின்ற நாமிருக்கும் நாட்டினிலே பிறர்க்கடிமை நாமே பேணும் பெற்றியினைத் தமிழகம் தற்காலம் படைத்துமுளது.

என்னே இவ்விபரீதம்! எண்ணரிய தொல்லைநெடும் பல்லாண்டு ஈடழியாது இருந்து உயர்ந்த தமிழ் நாடு, இக்காலம் மிகச் சிறிய சின்னாளில் தேம்பி மெலிந்தேங்கி நிலையினிழிந்து நாகரிகவுலகினிலே தலையினிழிந்த மயிராகித் தடுமாறக் காரணத்தை வினவுதல் நம் கடமையன்றோ? நோயுற்றேன் என்று உணரார் பிணியகற்றப்போவதில்லை. நோய் நாடி நோய்முதல் நாடி வாய் நாடி வாய்ப்பச் செய்வார்க்கன்றிப் பிணிதணிக்கும் பெற்றியில்லை. எல்லையறு தொல்லை நெடும்புகழோடு வளமண்ட வாழ்வுகந்த

நாம் இன்று பஞ்சமொடு நோய்படுத்தப் பஞ்சையராய் வள நாட்டில் வருந்துவானேன்? இருபுனலும், வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் அமைந்துள நமது நாட்டில் அவந்தராய் நாம் அலமருவோமோ? காவிரியும் பொருநையொடுவைகையும் வளஞ்செய்யும் இயற்கையினைமறக்கவில்லை. மழையின்றும் பிழைப்பதில்லை. பிழையா விளையுள்தரும் வளநிலங்கள் குறையவில்லை. பெரும் பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால் ஆற்ற விளைவது தமிழ்நாடு. அப்படியிருந்தும் நாடாவளமுடைய நமது நாட்டில் நாமின்று மிடிமையோடு அடிமைநிலை யெய்துவானேன்?

இன்று நம்மை ஆளும் அந்நியர் நம்மை வெம்முனையில் வென்றதாகச் சரிதமில்லை. ஆளுபவர் நம் மொழியைத் நாம் வெறுக்கப் பணிக்கவில்லை. நாம் ஒருவரை ஒருவர் பழித்து அனைவருக்கும் சிறுமையினை விளைத்திடுமாறு அவர் நமக்கு விதிக்கவில்லை. நாட்டின் நிதியனைத்தும் நிதம் கவர்ந்து செலும் அந்நியருக்காளாகி நம்மவரை நாம் பகைத்து இகல் வளர்த்துப் பொருதழியப் போரார்வம் கொள்வதேனோ? நெடுங்காலம் நின்றுவரும் காழ்த்தமரம் ஒருகணத்தில் யாராலும் ஒடிவதில்லை. உள்ளூரத்தைச் செல்லரிக்கப் புறக்காழ்போல் நிற்குமாம் அலைப்பவரின்றியும் அழிந்துபடும். தமிழ்ச் சமுதாயம், ஒற்றுமையுரத்தைச், சாதி மதமாற்சரியச் செல்லினுக்கு விருந்தாக்கி உட்டுளைப்பட்டு உரன் அழிந்த புழை மூங்கிற் பண்ணையென நிற்கின்றது. இழிவுயர்வு படைத்த ஈரிரண்டு வருணமுறை தமிழகம் முன்னறியாத இறும்பூதன்றோ? சோதரர்கள் நாரணனை வழிபட்டால் சைவருக்குப் பகைவரெனக் கருதுவானேன்? மறுமை நலங்கருதி வருசமயங்கள் இகவாழ்வில் இன்னலெலாம் விளைக்க இகல் வளர்க்க இடந்தருவதற்கு அவசியமும் முறையும் உண்டோ? மாற்சரியக் குன்மத்தால் சமுதாயப் பெருவாழ்வின் நல்லுணவை நாம் இன்று வெறுக்கின்றோம். உணவற்ற உடல் நாளும் மெலியும். அதனை நோயெளிதில் நலியும். தமிழச் சமுதாயம் நின்றோங்கித் தழைவதற்குப் பகையிடமாம் பலகலையும் வேரற நாம் பறித்தல் வேண்டும். உணவுகக்க உண்மையினில் நல்ல பசி வளர்த்தல் வேண்டும்.

ஒரு சிலரைக் கீழாக்கி நாமுயர்வேம் என்பார்க்கு விடுதலை நாள் என்றுமில்லை. தமிழரெலாம் சோதரராம் என்பது நம் எவர்க்கும் பொதுநின்று உயிர்ப்பிக்கும் மனப்பாங்காயமைதல் வேண்டும். பொய்ம்மை நமதாயிடினும் என்றுமதைக்காயும் நிலை எய்தல் வேண்டும். மெய்ம்மை பிறரிடங்காணில் அதை மேற்கொள்ள விரைதல் வேண்டும்.

அன்பு சிவம், சங்கமத்துட் சாதியில்லை-என்று, பல முழங்கு பவர் நந்தனாரை யெரிப்புகுத்தி யன்றி ஒரு சோதரராக்கொள்ளாமை கருதல் வேண்டும். யாழ்ப்பாண அடிகளை முன் கோவில் தொறும் வெளிநிறுத்தி வழிபாட்டிற்குட்புகுதல் சைவநெறி தானுமா? தமிழகத்தைத் தழைப்பிக்க மருந்தாமா? என்பதனை நடுநிலையில் கருதல் வேண்டும். நாவுக்கரசு நாயனாரையும் வாயிற் படியில் விலக்கி வேறிடம் புகுத்தியதைப் பேணும்வரை பார்ப்பனர்ச் சாதி மறக்கவைத்தல் நம்மவர்க்குச் சாத்தியமா? சாதித்தருக்கிற்குப் பழந்தமிழ் நூல் உண்மையினில் இடந்தருமா? திருப்பாணாழ்வாரைத் தோட்சுமந்த விர்ப்பனரால் பெருமிதங் கொள்ளும் வைணவர்கள் தற்காலம் சாதியினைப் பேசுவதும் பொருத்தந்தானா? எப்பெயர்கொண்டு எதைத்தொடினும் அது கடவுட்குவப்பேயாகும். எல்லவரும் இறைவனுக்குப் பொது மக்கள். மக்கள்தமைப் பேணுபவர் இறைவனுக்கே உண்மை வழிபாடு செய்வார் என்ற உயர் சமய உண்மை உரைத்துவரும் நந்தமிழச் சோதரர்கள் பேச்சளவில் நிறுத்தி அவை பொருளற்ற பொய்யுரைபோலாக ஒழுகும்வரை நாம் ஒற்றுமை வளர்ப்பதில்லை. தமிழகமே நமக்கெல்லாம் ஓரன்னை; தமிழரெலாம் ஒருப்பட்டுய்ந் துயர்வதற்கேபுரிய பல சோதரராம்; என்ற உண்மை நம்மனத்தே யூன்றல் வேண்டும். தமிழினிலும், தமிழகத்தும் அனைவருக்கும் மெய்யன்பு பெருகவேண்டும். ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே யன்றி நம்மில் ஒற்றுமைநீங்கில் அனைவருக்கும் தாழ்வே என்றதை நாம் எல்லாரும் பொதுவேதாய்ப் போற்றல் வேண்டும்.

தொடரும்.

---

452



உ

# முருகன் சிறுவிளையாடல்.

திருவாளர் L உலகநாத பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 179-வது பக்கம்.)

'வேட்டுவர் வெய்யர், நில்லாது கடிதே ஓடுமின்' என்று இவள் உரைத்தது, அவரால் எனக்குவரும் ஏதத்தினை அஞ்சியன்றே? என்பால் இவட்கு வெறுப்புண்டெனின் இவ்வாறு கூறுவளோ? கூறிடாளன்றே. அதனால் என்னிடத்து இவள் வைத்துள்ள அன்புடைமையை வெளிப்படுத்தினளாயிற்று; என மகிழ்வெய்தி நின்ற முருகேசன், வேண்டும்போது வேண்டுருக்கொள்ளும் வித்தகனாதலின், தவத்துறை மேவிய சைவமுதியவராக உருக்கொண்டு, வேட்டுவத்தலைவற்கெதிர் சென்று, 'வாகை பெரிதாக வளம்பல எய்துக' என்று வாழ்த்தி நீறு நல்கினன்.

நீறுபெற்ற குறிஞ்சிமன்னன் நிலமுறப்பணிந்து நின்று, 'குறவருமருளும் இக்குன்றத்தில் அரிதின் முயன்று வருந்திவந்த முதியீர்! வேண்டியதை ஒல்லையிற் சொல்லுவீர்' என்றனன்.

'மேதக்கோய்! ஒதக்கேள்! உள்ள மயக்கும் உடலின் முதிர்ச்சியும் ஒருங்ககல, நின் வரைக்குமரியை எய்தி இனிதாடவேண்டிக் கடிது வருகின்றேன்' என்றான் கந்தன்.

கந்தன் கவர்பொருள்பட மொழிந்ததை உணராத கானவர் கோன், 'ஐயரே! உமது எண்ணம் அதுவானால், நீர் நவின்ற

தீர்த்தத்தை நித்தலுமாடித், தமியளாயிருக்கும் எங்கள் நேரிழைக்கொரு துணையா யிருப்பீர்' என, 'மன்னவ! அன்னது அழகி'தென் றுரைத்தனன் அண்ணல்.

வெற்பனும், தன்மகள்பாலெய்தி முன்னையிற்போலத் தின்பன பலவும் நல்கிப், 'பெருந்தவரை அருந்துணையாக வைத்து, வனசரரோடு வல்லையின் மீண்டனன்.

அவன் சென்றபின்னர், முதியோன் வடிவுற்ற முருகன் 'முருந்தன முறுவற் றிருந்திழை! நான் இனி என் செய்குவேன்; நலிகின்றது பசிநோய்' எனத், தேனும் கனியும் தினைமாவும் தரத் தெவிட்டவுண்டு, 'நீர் வேட்கை பெரிதுடையேன்' என்றனன்.

அப்படியாயின் இவ் வரையினுக் கப்பால் எழு மலைகளுண்டு. அவற்றைக் கடந்துசென்றால் ஒரு தெண்ணீர்ச் சுனை தென்படும். அதன்கண் நீர் பருகி இங்கு வருதிர் என்றனள் வள்ளி.

'பூட்டுவிற்போலும் புருவமுடைப் பூவையே! நாப் புலர்தலால் நீர் வேண்டினேன். நானோ என்றால் கிழவன், அன்றியும் புதியவன். அதனால் இம் மலையிற் செல்லும் வழியறியேன். ஆதலால் நின் கால் வருந்துமெனக் கருதிக் காலம்போக்காது நீ ஒல்லையின் முன்சென்று நன்சுனை காட்டுதி' என்றான் அறுமுகங்காந்த கள்வன்.

முருகனது சூழ்ச்சி தேராத மொய்குழல், எந்தாய்! வருக என அழைத்துச் சென்று வரைபலவுங் கடந்து விரைகமழ் சுனை நீர் காட்ட, வேனிலால் மெலிந்தான்போல நீர் பருகி, மெல்லியால்! நீர் வேட்கை நீங்கிற்று. மன வேட்கை தவிர்ந்திலது. அதனைத் தணிப்பையாயின் என் குறை முடிந்தது என்று கும்பிட்டு நின்றனன் குழவன்.

ஐயனது செய்கையைக் கண்ட நங்கை, நகைத்து உயிர்த்துச் சீறி நடுங்கி, மாதவத்தீர்! தவவேடந் தாங்கித் தகாதன இயம்பி நின்றீர். உம்முடைய நீர்மையை நினைக்கின், பார்வைக்குப் பாலாகத் தோன்றிப் பருகியபின் ஆவிபோக்கும் நஞ்சின் நீர்மை

யேயல்லாது பிறதில்லை. கொய்தினை காப்பேனை மெய்தழுவக் கருதிக் கைதொழுது நிற்றல் கடனன்று. கானவர் இச் செய்கை காணில் தீதாக வன்றோ முடியும். நாணற்பூவென நரைத்தும் நல்லுணர்வு சற்றுமில்லாத நீர் எத்துக்கு மூத்தீர்? இழிகுலத் தேனை விரும்பிப் பித்துக்கொண்டார்போலப் பிதற்றுகின்றீர். இவ் வேடர் கோத்துக்கெல்லாம் கொடும்பழியைச் செய்தீரே. புனத்திற் புள்ளுமாவும் தினைக்குரல் கவரும். நான் முந்திச் செல்வேன், நீரும் நடந்தருளும்' என்றுரைத்துச் செல்லத் தொடங்கினள்.

பொன்னனையாள் முன்செல்லுந் திறநோக்கி, 'இனி என் செய்வது என்றிரங்கினன். தந்திமுகத் தண்ணா! முன்னே வருவாய்' என நினைந்தனன் முருகன்.

அவ்வளவில், முந்திச் செல்கின்ற மொய்குழலாட்கு எதிரே விநாயக வேழம், அலையெறி கடல்போல் முழங்கி மலையென வந்துற்றது.

என்செய்வாள் எந்நிழை? அச்சமோடு மீண்டு, கைவத வேடங்கொண்ட கந்தனை வந்தணுகி, எந்தாய்! இவ்வேழத்தினின்றும் காத்தருள்வீர்; நீர் சொல்லியவண்ணம் செய்வேன்' என்றுரைத்து ஒருபாற் சேர்ந்து தழுவிக்கொண்டனள்.

அன்னகாலையில் என்னையாளுடைய அண்ணல், கடவுட் களிற்றினை வழிப்பட்டு வணங்கி 'நீ வந்திடலால் மணக்கவலொழிந்தது, வள்ளியுஞ் சேர்ந்தனள். எம்பெருமான்! மீண்டெழுந்தருள்க' என்னுமளவில், 'இனியது' எனவுரைத்து யானைமுகன் ஏகினன்.

கந்தன் கன்னிமயில் அனையாட்குக் கருணைசெய்து, படைக்கலம் தாங்கிய பன்னிருகரமும், முழுமதியன்ன மூவிருமுகமும், அருண்மழை பொழியும் ஆறிரு கண்ணும், வேலும் மயிலும் விளங்கத் தொல்லுருக் காட்டி நின்றனன்.

கண்காண வெளிநின்ற கந்தன் திருவுருவை வணங்கிப்பாவித் தேவரும் காண்டற்கரிய பெருமானை ஏழையேன் காணப் பெற்றது என்னென விம்மித மெய்தி, இன்னவனென் றறியாதிகழ்ந்தேனே யாதாகுமோ என நடுநடுங்கிச் செங்கை குவித்து, உடல் வியர்ப்ப, வலியவந்தாண்ட அருட்டிறத்தினை நினைந்து நினைந்து, ஆராத காதல் பெருக நின்று, 'வேலவரே! இவ்வுருவை முன்னே நீர் காட்டிக் கருணைபுரியாது இத்துணையும் கொன்னே கழித்தீர்; கொடியனேன் செய்த குற்றமெல்லாம் இன்னே தணித்து என்னை யாண்டு கொள்ளும்' என்றாள்.

'முன்னே மாயவன் மகளாகிய நீ, நம்மை மணக்குமாறு நற்றவம் செய்தனை; அதனால் இம்மைதனில் உன்னை எய்தினேம்' என்றுரைத்து அம்மைதனைத் தழுவி ஐயன் அருள்புரிந்து, 'மங்கை நல்லாய்! உங்கள் புனந்தனில் முன்னே சென்று உறைக, யாமும் வருவே' மென, விடைகொண்டு அடிபணிந்தேகினள் இறைவி.

சென்ற வள்ளி ஏனற்புனத்துளேகி இருத்தலும், பாங்கி வந்துபணிந்து தோற்றமும் ஒழுக்கமும் மாற்றமும் செய்கையும் முன்னையின் வேறுபட்டிருப்பக்கண்டு, 'இப்புனம் அழிதர நீ எங்ஙன் ஏகினை செப்புதி' என, 'வேனிலான் மெலிந்து சுனையாடப் போந்தனன்' என, நன்று! நன்று! ஆடினேரை, விழி சிவப்பவும் வாய்வெளுப்பவும் மெய்வியர்வரும்பவும் கைவளை நெகிழவும் செய்திடும் சுனை எவ்விடத்திருந்தது' இயம்புவாய் எனச் சொல்லிய இகுளையைச் சுளித்துநோக்கி, 'உன்னை நற்றுணையாகக்கொண்டு இங்குற்ற எனக்கும் ஒரு குற்றம் உரைத்தனை கொடியை' என இவ்வாறு பாங்கியுந் தலைவியும் தம்மிற் பகர்ந்து நிற்குமளவில், செவ்வி இஃதெனத் தேர்ந்த செவ்வேள்.

'கோட்டிய சிலையினன் குறிகொள் வாளியன்
தீட்டிய குறியவாள் செறித்த கச்சினன்
வேட்டம தழுங்கிய வினைவ லோனெனத்
தாட்டுணை சிவந்திடத் தமிய னேகினன்.'

வேட்டமாடி வருந்தினேன்போல வாளிபூட்டிய வில்லும் வாளும் கைக்கொண்டு காட்டுணை சிவப்பத் தமியனாகப் போந்து, காந்தள் போலுங் கரத்தினீர்! யான் எய்த கணையாற் சோரிபாயப் பெருமுழக்கொடு ஒரு களிறு இங்குப் போந்ததுண்டாயிற் புகலுமின் என்றனன்.

இவ்வாறு இறையவன் வினவி நிற்பக்கண்ட தோழி, 'ஐய! உமது வன்மையை உம்மை யொத்தவர்க்கு உரைப்பதேயன்றி எம்போலும் எளியர்க்கு இசைப்பதால் என்னபயன்' என்றுரைத்திட்டு, ஐயர் வேட்டை வந்திடுவதும் நம் தையல் புனத்தைக் காத்திடுவதும் உண்மையே. இவ்விருவர் கொண்ட காதலையும் இன்னவர் கண்களே உரைத்திடும் என்று மதிப்பளாயினள்.

தொடரும்.

௨

# புகழேந்தி–ஒட்டக்கூத்தர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துக் கல்லூரிச் சிறார் நடிப்பதற்குக் காலநிலையை ஒட்டி எழுதப்பெற்றதோரு சிறு நாடகம்.

## காட்சி. க.

இடம்:—பாண்டியன் அரசவை.

உரியோர்:—வீரபாண்டியன், அவன் மகள் செந்தமிழ்ச்செல்வி, புகழேந்தியார், முருகனார், மாறனார், மருதனார், ஒட்டக்கூத்தர், ஏவலாளர்.

பாண். புலவர்காள்! செந்தமிழன்னைக்கு இன்று எவையேனும் புதிய அணிகள் இயற்றியிருக்கின்றீர்களா?

முரு. அரசே! நம் செந்தமிழ்ச் செல்வியார், தமிழ்த்தாயின் சிறப்பினைக் குறித்து ஒரு வெண்பா யியற்றியுள்ளார்.

பாண். நன்று! அம்மா! அதனைக்கூறு, கேட்போம்.

செல். அப்பா! எளியேன் இயற்றியதும் ஒருபாட்டு ஆகுமா? அதனையும் இப்புலவர் பெருமக்கள்முன் கூறுவதா? அஃதிருக்கட்டும்; இப்புலவர்களியற்றிய அரிய செய்யுட்களையும், பெரிய ஆராய்ச்சிகளையும் கேட்டு மகிழ்வோம்.

புக. அன்னாய் வாழி! உன் செய்யுளையே முதலில் கேட்கும் அவாவுடையேம். அன்புகூர்ந்து கூறுவாயாக.

சேல்: தந்தாய்! உங்கள் பணி இதுவாயின், ஏதோ அதனைக் கூறுகின்றேன்.

வெண்பா.

உதியன் வரையில் ஒழுகுசுவைத் தேனோ!
பொதியி லிளங்காலின் பொற்போ!—மதுகரங்கள்
நண்ணு மலர்நாடு நல்கு திருமணமோ!
என்னோ தமிழின் எழில்!

மரு. ஓ! என்ன அழகிய வெண்பா! "வெண்பாவிற்புகழேந்தி' என்பாரின் அன்பார்ந்த மாணவியன்றோ! சேரநாட்டுத் தேன், பாண்டியநாட்டுத் தென்றல், சோழநாட்டு மலர் இவற்றால் எய்தும் இன்பங்களைத் தருவது தமிழ் என்று பொருள்படுகின்றது. என்ன அழகிய வெண்பா! எங்கே அம்மா! இன்னொருமுறை அவ்வெண்பாவினைக் கூறு.

சேல் உதியன் வரையில்........தமிழின் எழில்.

முரு. இவ்வெண்பாவில் ஐம்புல வின்பங்களையும் அமைத்துப் பாடிய அழகு வியக்கத்தக்கது. தேன் என்றதால் சுவையும், தென்றல் என்றதால் மெய்யின்பமும், மதுகரங்கள் நண்ணும் என்றதால் இனிய ஒலியும், மலர் என்றதால் அழகிய காட்சியும், திருமணம் என்றதால் நறிய மணமும் கூறியிருப்பது உற்று நோக்கத்தக்கது. (அவ்வெண்பா வினைக்கூறல்.)

மாற. புலவர்காள்! இவ்வினிய வெண்பாவில் உள்ள உள்ளுறை ஒன்றை உற்று நோக்கினீர்களா? சோழநாடு திருமணம் நல்குமாமோ! இத்திருமணம் பூவின் நறுமணம்தானோ? அன்றி மணமக்கள் திருமணமோ? "மதுகரங்கள் நண்ணும் மலர்நாடு நல்கு திருமணமோ" என்பதை உற்று நோக்குங்கள்.

சேல். இப்புலவர்க்கு இதுதான் வழக்கம். எதனிலும் உள்ளுறை என்று இல்லுரைகள் பொருத்திக் கூறுவார்.

புக. ஓகோ! மாறனர் கூறுவது, நமது செந்தமிழ்ச்செல்வி எண்ணிக்கூறியது ஆயினும், எண்ணுதது ஆயினும், தமிழ்த் தாயினருளால் அவ்வெண்பாவில் அமைந்து, நம்மை ஒரு புதிய ஆராய்ச்சிக்குக் கொண்டுவந்துவிட்டது. அரசே! நமது செல்விக்கு மணப்பருவம் எய்தியதுமுதல், இது வரையில் எதிர்நோக்கியிருந்த திருமணப்பேச்சு இன்று நம் தமிழ்த்தாயின் அருளால் மாறனர் வழியாக வெளி வந்திருக்கின்றது. ஆகவே, அரசே! நாம் இன்று அது பற்றி எண்ணிமுடித்தல் வேண்டும்.

சேல். ஐயன்மீர்! நான் போகின்றேன். நீங்கள் இயற்றி வரும் செய்யுட்களைக் கேட்டுமகிழ வந்தேன். நீங்கள் ஏதேதோ பேசுகின்றீர்கள். நான் போகின்றேன்.

புக.—அம்மா! சற்று இரு. நாங்கள் எடுத்த காரியத்தை ஒரு முடிவு செய்துகொண்டு பின்னர் உன் விருப்பின்படி நாங்கள் இயற்றியுள்ள செய்யுட்களைக் கூறுவோம்.

பாண். புலவீர்காள்! நமது செல்வியின் திருமணம்பற்றி உங்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் கூறுங்கள்.

முரு. பண்டுதொட்டே பாண்டியரும் சோழரும் கொண்டு கொடுத்துவரும் உரிமைச்சுற்றத்தார்கள். நமது செல்வியின் பாட்டிலும் திருவருட் செயலால் அக்குறிப்புத் தோன்றியுளது.

மரு. குலோத்துங்க மன்னனது கல்வி, அறிவு, வீரம், அருள், ஆட்சித்திறமைகளை நீங்கள் அறிவீர்கள்.

மாற. குலோத்துங்க மன்னனும் நம் செல்வியும் ஒத்தவுருவும், திருவும், அறிவும், மணத்திற்கேற்ற வயதும் உடையவர்கள்.

ஏவ. ஆமாங்க மகாராசா. சோழராசா முடிசூட்டுக்கு நாமெல்லாம் போயிருந்தபோது, அங்கேயிருந்த பூங்காவனத்தில்

அந்த இளவரசும் நம் செல்வியம்மாளும் பேசிக்கொண் டிருந்தாங்க........பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை, மாப் பிள்ளைக்கேற்ற பெண்ணுங்க.

செல். சீ! ஏண்டா! பிதற்றுகிறாய்.

ஏவ. மகாராசா! இந்தநாய் சொல்லுவது பொய்யா மெய்யா என்று இந்தப்பயல் நாகனைக் கேட்டால் தெரியும். நாங்களிரண்டுபேருந்தான் அம்மாளுக்குக் காவலாகப் போயிருந்தோம்.

நாக ஆமாங்க மகாராசா! போயிருந்தோம். பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை, மாப்பிள்ளைக் கேற்ற பெண்ணுதானுங்க.

வா-காவ. மகாராசா! சோழநாட்டிலிருந்து யாரோ ஒருபுலவர் வந்திருக்கிறார். அவர் பெயர் ஒட்டக்கூத்தராம்.

பாண். நன்று! அவரை இங்கு வரச்செய். (பின்னர்ப் புலவர் களை நோக்கி) புலவர்களே! சோழநாட்டுப்புலவர் திலக ராய ஒட்டக்கூத்தரின் அருமை பெருமைகள் யாவையோ?

முரு. அரசே! அவரது இயற்பெயர் ஆனந்தக்கூத்தர் என்பது. முருகவேளின் அருள்பெற்றவர். கன்னலோ! பாகோ! என்னக் கவித்தமிழ்பொழியும் மாண்பினர்.

மாற. அரசே! அவர் செங்குந்தமரபினர். செங்குந்த மரபி னரை, கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய சீலங் களினால் உயரச் செய்தவர். அவர்களுடைய வீரதீரத்தை உலகிற்குக் காட்டவேண்டி 'ஈட்டி எழுபது' என்றொரு நூலை இயற்றி, அதனை அம்மரபினர் ஆயிரவர் தலை மீதிருந்து அரங்கேற்றியவர்.

மரு. அரசர் பெருமானே! பொய்ப்புலவர்கள் யாரேனும் புலவர் எனத்தம்முன் வருவாராயின், அவர் தம் செருக்குத்தலை வீட்டி ஓட்டுபவர்.

புக. அப்புலவர் பெருமான் சோழ அரசபாம்பரையின் நன் மதிப்பை நெடுங்காலமாகப் பெற்றவர். இப்போதிருக் கும் குலோத்துங்க மன்னன் இவர் தம் மாணவனே. ஒருஅமயம் இப்புலவர் குலோத்துங்கனைப்பாடத்தொடங்கி

"ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரான்"

என்று கூறவே, அது கேட்ட குலோத்துங்க மன்னனால்,

"என்று நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேஎன்னைச்
சொல்லுவரே."

என்று பாடப் பெற்றவர். அம்மட்டோ! தாம் பாடிய அப்பாட்டின் உண்மையை உலகத்திற்கு மெய்ப்பிக்க வேண்டி, ஆண்டிற்கு ஒருநாள், அச்சோழன், ஒட்டக் கூத்தப்புலவர் அடிக்கீழ் அமர்ந்து உலாவருகின்றான் என் றால் அப்புலவரின் பெருமையைஎன்னென்பது அரசே!

"எத்தனை புலவ ரோமுன் இறைவரை வசம் செய்துற்றார்
அத்தனை பேருள் ஆரும் அருந்தமிழ் ஒட்டக்கூத்தன்
ஒத்தவர் முடிமேல் தன்தா ளுறவைத்த தில்லையில்லை
இத்தனை அதிட்ட மன்னோர்க்கு இசைந்தமை எற்றந்தானே."

ஏவ. அரசே! சோழநாட்டுப்புலவர் ஒட்டக்கூத்தர் இதோ வந்து விட்டார்.

பாண். வருக! வருக! அமர்க! அமர்க! நீங்களும், அரச ரும், பிறரும் நலந்தானே. உங்கள் ஆட்சியும் குடிகள் மாட்சியும் சிறந்து நிற்கின்றனவா?

ஒட். அரசே! வாழ்க! வாழ்க! அங்கு யாவரும் நலனே! அரசாட்சிக்கும், குடிமாட்சிக்கும் ஒரு குறையும் இல்லை. இங்கு நீங்களும், அரசியும், செல்வியும், புலவர்களும், பிறரும் நலனுற்றிருக்கின்றீர்களா? கோல்வளம், குடி வளம் குறைவிலாது ஓங்குகின்றனவா?

பாண். உங்கள் அருளால் யாவரும் நலமே! ஒருகுறையுமிலது. புலவர் ஏறே! சிறியேனைப் பொருள்செய்து இங்கு அருமையாக எழுந்தருளியது எனக்கும், இங்குள்ள புலவர்கட்கும் மிக்க பெருமையையும் மகிழ்ச்சியையும் தருவதாகும்.

ஒட். அரசே! அருமையாக வந்தேனென்று கூறி, யான் அடிக்கடி வாராததோர் குறையினை எனக்குக் காட்டிய நுண்ணுரை பற்றி மகிழ்ந்து, அக்குறையினைப் பொறுத்திட வேண்டுகின்றேன். அரசே! நமது செந்தமிழ் தெய்வத்தின் அருளால் இனி எனக்கு அடிக்கடி இங்கு வந்து போகும் நற்பேறு கிடைக்குமென எண்ணுகின்றேன்.

பாண். புலவர் பெருமானே! அஃதென்ன! அங்ஙனம் நிகழின் அது எனது நற்பேறேயாகும் தாங்கள் குறித்தது என்னேயோ?

ஒட். அரசே! பாண்டிய மன்னர்கட்கும் சோழ மன்னர்கட்கும் பலதலைமுறையாக இருந்துவரும் நட்பினையும் உறவினையும் நான் தங்கட்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. இறைவனது இருவிழிகள் எனத்தகும் சூரிய சந்திர மரபினர் என்று நீங்கள் கூறப்படுவதொன்றே உங்கள் பெருமையையும், உலகிற்கு நீங்கள் நட்புற்றுச் செய்துவரும் நன்மையையும் காட்டுமன்றோ? உங்கள் நட்பை, என்றென்றும் நிலவுமாறு உங்களுக்குள் அவ்வப்போது எய்தும் சுற்றமுடைமை வளர்த்து வருக்கின்றது. தமிழ்த்தாயின் அருளால் எங்கள் இளவரசுக்கும், உங்கள் இளவரசிக்கும் உரிமைச்சுற்றமும், உருவும், திருவும், மணப்பருவமும் அமைந்து விளங்குகின்றன. இதுபற்றிய வேண்டுகோளுக்கே யான் இங்கு வந்தவனாவேன்.

மாற. அரசே! இன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பாருங்கள். எல்லாம் தமிழ்த்தாயின் தண்ணருளேயன்றோ?

பாண். புலவரேறே! இதுபற்றி நீங்கள் இவ்வளவு தூரம் வருவானேன்? உங்கள் பணியினை யான் மறுத்துரைப்பதும் உண்டோ? உங்கள் விருப்பின்படியே செய்வோம். யான் எங்கள் செல்வியைத்தா இசைவது, உங்கள் பரந்த ஆட்சிக்கு அன்று, விரிந்த திருவிற்கு அன்று, சிறந்த வீரத்திற்கு அன்று, குலோத்துங்கன் உமது அரிய மாணவனென்ற அந்த ஒருநலத்திற்கேயாகும்.

ஒட். அரசே! அங்ஙனமே உங்கள் செல்விக்கும் இயற்கையில் அமைந்துள்ளபல சீர்களினும் சிறந்ததொன்று அச்செல்வி இப்புலவர் பெருமானின் மாணவியாக இருத்தலேயாகும்.

பாண். புலவர்பெருமானே! ஆம். ஆம். அஃதுண்மையினும் உண்மையே.

செல்வி. அப்பா! புலவர்கள் இயற்றிய அரிய செய்யுட்களைச் சொல்லச் செய்கின்றேனென்று சொன்னீர்களே? வேறுஏதேதோ பேசிக்கொண்டிருக்கின்றீர்களே? புதிதாக வந்திருக்கின்ற புலவர்பெருமானையாவது ஒரு செய்யுள் கூறச் சொல்லுங்களே.

மரு. அம்மா! நன்று கூறினாய்! ஐயீர்! கூத்தரே! எங்கள் செல்வியை மணக்கும் தனிச்சீர் உங்கள் அரசனுக்கு உளது என்பதை இந்தச் செல்வி ஏற்கும்படி ஒரு அம்மானையில் வைத்துப் பாடுங்கள்.

ஒட். அம்மா! செல்வி! உங்கள் அத்தை மகன் பெருமையை எடுத்துப் பாடுகின்றேன் கேள்.

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானை
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை
வீருக்குள் வீரன் ஒரு மீன்வனே அம்மானை

வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானை
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டியநா டம்மானை.

புக. புலவர் பெருமானே! யான் மறுமொழி கூறலாமோ?

ஓட். தடையில்லை. தாங்கள் கருதியவாறே நன்று கூறலாம்.

புக. திருநெடுமா லவதாரம் சிறுபுலியோ அம்மானை
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்த தம்மானை
ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானை
கரையெதிரே டேறியதும் காவிரியோ அம்மானை
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை
பரவைபடிந் ததும்சோழன் பதந்தனிலோ அம்மானை
பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ அம்மானை.

ஓட். ஓ! மிக நன்றாக வுளது. இத்தகைய பெரும் புலவரின் மாணவியாகிய ஓர் மணியினை யாங்கள் அடைவது ஒரு பெரும் நற்பேறேயாகும்.

ஏவ. மகாராசா! வணக்கம்! நம் அரசியார் இங்குள்ள எல்லோரையும் உணவருந்த அழைக்கின்றனர்.

## காட்சி. ௨.

இடம் :—சோழன் அரண்மனை.

உரியோர் :—குலோத்துங்கன், கூத்தர், போலிப்புலவர்கள், ஏவலன்.

ஒட். அரசே! வாழ்க! வாழ்க! இந்தக் கலைமகள் திருநாளில் புலவர்கட்குப் பரிசில் தந்துவரும் இத்திருவிழா உங்கள் மரபில் நெடுங்காலமாக நடந்து வருவதால்தான், நமது தாய்மொழிப் பயிற்சி இவ்வளவு மேன்மையுற்றிருக்கின்றது. எத்தனையோ புலவர்கள் இத்திருவிழாவிற்கு வந்து தங்கள் புலமைத் திறங்களைக்காட்டிப் பெரும் பெரும் பரிசில்களும் பட்டங்களும் பெற்றுச் சென்றுள்ளார்கள். அரசே! இத்திருவிழா உண்மைப் புலவர்களை ஊக்கப் படுத்துவதற்கென்றே தோன்றியதாயினும் அதனை உணராமல், பாவம், போலிப்புலவர்கள் சிலரும் வந்து, தங்கள் பொழுதையும் நமது பொழுதையும் வீணாக்கி விடுகின்றார்கள். ஐயோ! பாவம்.

குலோ. ஆம் ஆம் புலவரேறே! அங்ஙனம் உலகினை ஏமாற்றி வரும் போலிப்புலவர்களைச் சிறைப்படுத்தி, வேண்டும் பயிற்சிகள் செய்வித்து, அடுத்த கலைமகள் விழாவிற்குள் ஏதாவது கற்றுவரச்செய்திருக்கும் உங்கள் ஏற்பாடு, மிகச் சிறந்ததாகிவிட்டது. போலிப்புலவர்கள் வருவது வர வரக் குறைந்துபோயிற்று. சிறைப்பட்ட புலவர்களும், ஏதோ, ஒருவாறு கற்றுக்கொண்டு போகின்றனர்.

ஏவ. மகாராசா! ஒரு புலவர் கூட்டம் வருகின்றது.

குலோ. வரச்சொல். (வருதல்)

ஒட். புலவர்களே! வருக! வருக! அமர்க! அமர்க! ஐயன்மீர்! நீங்கள் கலைமகள்விழாப் பரிசு பெற வந்திருக்கும் புலவர்கள் போலும்.

குயவர். ஆம். ஆம். நாங்கள் வெகு தூரங்களிலிருந்து வந்துளோம். தக்க பரிசுகள் தந்து அனுப்புவீர்களாக.

ஓட். ஐயிர்! நீங்கள் யாவர்! உங்கள் ஆராய்ச்சிகளைத் தெரிவியுங்கள்.

குய. ஐயிர்! நான் கோட்டையூர் குண்டுச்சட்டிப்புலவர் மகன் கன்றுக்குட்டிப் புலவர். எனக்கு இலக்கணக் கவிராயர் என்றும் பெயருண்டு.

ஓட். அப்படியா! தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம் கூறுங்கள்.

குய. பாடுபட்டித் தேடிப் பணத்தை அறஞ்செய்யும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—

ஓட். ஓ! ஓ! இதுதான் தொல்காப்பியச் சூத்திரமோ.

குய. இன்னம் இருப்பதையும் கேட்டுப் பேசுங்கள்.
—கூடுவட்டிச்
செட்டி கடையிலோ சேர்மாண பண்டிலோ
விட்டுச்செல் லுங்களந்த விண்.

ஓட். ஐயிர்! போதும், போதும். இருங்கள்.

குய. ஐயா! நானும் போதும் போதும் என்னும்படி எனக்குப் பரிசு தருதல் வேண்டும்.

ஓட். இருக்கட்டும். ஐயிர்! தாங்கள் யார்?

தச்சர். பந்தநல்லூர் சந்தக்கவிச் சுந்தராசாரியார்.

ஓட். தங்கட்கு எத்துறையில் சிறந்த புலமையுண்டு?

தச்.—'சந்த........ஆசாரி' எனும் இந்தப் பேரே அந்தக் கேள்விக்குத் தந்திடாதோ விடை.

ஒட். நல்லது. ஒரு சந்தக்கவி பாடுங்கள்.

கொக்குக் கொக்குக் கொக்குக் கொக்கென் றிருமாமுன்
திக்கித் திக்கித் திக்கிப் பேசித் திகையாமுன்
தக்குத் திக்கென் றூடுந் தாசியர் தமதில்லம்
புக்குப் புக்குப் புக்கே யமனடி புகுவீரே.

ஒட். ஓ. நல்ல பொருளமைதி! அமருங்கள். தாங்கள் யாவர்? தங்கள் புலமையினைச் சிறிது காட்டுங்கள்.

கோல்லர். ஐயா. யான் வல்லம் செல்லப்ப ஆசாரி மகன் திரு வேங்கடப்புலவர். விசுவப்பிராமணுள். சகத்குரு—

ஒட். அவையெல்லாம் இருக்கட்டும். தங்கட்கு எத்துறையில் சிறந்த பயிற்சியுண்டு?

கோல். தல புராணங்கள் பாடுவதில் எங்கள் வமிசத்தினர் பேர் பெற்றவர். எலுமிச்சம்பழக் கவிஞர், நார்த்தம்பழக்கவி ஞர் என்று கேள்விப்பட்டிருக்கலாம். எலுமிச்சம்பழக் கவிஞர் பேரன் இஞ்சிக்கவிராயர் என்றும் என்னை சொல்வ துண்டு. ஐம்பது தல புராணங்கள் பாடியிருக்கிறேன்.

ஒட். இருக்கட்டும். தலபுராணங்கள் பாடுவதற்குரிய இலக் கணங்கள் யாவையோ?

கோல். அந்த இலக்கணங்களை யெல்லாம் சுருக்கி எங்கள் பாட்டனர் ஒரு பாட்டிலடக்கிவைத்திருக்கிறுர். அதனைக் கூறுகிறேன் கேளுங்கள்.

கேளப்பா தலபுராணம் என்றொரு ருத்தன்
கிட்டினல் அவன்ஊரும் அதனைச் சுற்றிக்
கிடக்கின்ற பலவூரும் கேட்டுக் கொள்ளு
கிட்டியதோர் நதிகேளு கோயில் கேளு
பாழப்பா அவ்வூரொன் றூலு மதைப்
பகருதிருத் தலமாக்கிப் பாடு சுற்றிப்

படுமூர்கள் எவற்றினையும் பதிகளாக்கு
பாடிடுவாய் நாடுநகர்ப் படலமெல்லாம்
ஆளப்பா பாழான ஆறென் றூலும்
ஆகாச கங்கையென அதனை ஆக்கி—

ஒட். ஐயீர் போதும். தாங்கள் யார்? தங்கள் புலமை யாது?

**வேளாளர்.** மருதூர்கிழாஅர் பேரர் மாணிக்கப் புலவர். எங்கள் பாட்டனார் வைத்திருந்த இலக்கணம் இன்னம் இருக்கின்றது. அவர் திதியன்று, ஐயர் அதனை எடுத்து அதன் மேலே எழுதியிருக்கும் பேரைச்சொல்லி அர்ப்பணம் செய்திடுவார்.

ஒட். அப்படியா? என்ன பேர் சொல்லுவார்?

**வேளா.** எதோ தொலகாபபியம நாம லட்சணசாஸ்திரே அர்ப்பியாமே அர்ப்பியாமே என்பர்.

ஒட். (தனக்குள்) ஓ. ஓ. தொல்காப்பியம், புள்ளியில்லா தெழுதப்பட்டிருக்கின்றதைப் படிக்கும் முறை! ஐயீர்! தங்கள் புலமை யாதோ?

**வேளா.** ஐயா! நாம் வரகவிதான், படிப்புச் சுருக்கந்தான். ஆயினும் பாட்டு நன்றாகப் பாடுவேன்.

ஒட். அப்படியா! எப்படியாவது ஒரு பாட்டுக் கூறுவீராக.

**வேளா.** சொல்லாரும் அவ்வொட்டக் கூத்தப் புலவர்
துணையிருந்தால்
நெல்லார எய்தும் பணம்தனம் எல்லாம்
நிரம்பவரும்
அல்லாது போனால் அடிமேலடியாய்
அடித்துத்தள்ளிப்
பொல்லாத அந்தச் சிறைச்சாலையிற்கொண்டு
போடுவரே.

ஒட். மிக அரிய பாடல்! ஐயீர் தாங்கள் யாவரோ? பிறவிக் குருடரோ. தங்கள் புலமை யாதோ?

குருடர். ஐயா! யாம்

மன்னவர்தம் சிண்டினையும் மடக்கிப்பற்றி
மடித்தலத்தில் வைத்திடுமோர் சாதியாவேம்—

ஒட். நல்லது. தங்கள் புலமைத் திறத்தினை தெரிவியுங்கள்.

குரு. நாம் நமது அரசன்மீது ஒரு பாட்டுப்பாடி வந்திருக்கிறோம்.

ஒட். மிக்க மகிழ்ச்சி. இதுகாறும் இப்புலவர்கள் ஒருவரும் எமது மன்னனைப் பாடினால்லர். எங்கே அதனைக் கூறுங்கள் பார்ப்போம்.

குரு. செக்கச் சிவந்த செந்தா மரைமலர்த் திருவினொடும்
ஒக்கப் பிறந்த ஒருபெரு மாதினை உற்றவனே!

ஒட். ஓய்! போதும் நிறுத்தும்! ஓ சேவகா! இவர்கள் எல்லோரையும் நமது சிறைச்சாலையிற் கொண்டுபோய்ச் சேர்த்து விடு. ஓ போலிப் புலவர்களே! நீங்கள் ஓராண்டினில் அங்கு நம்மால் ஏற்படுத்தப் பெற்றுள்ள ஆசிரியரிடம் நன்கு கற்றுவந்து தேறவேண்டும். தேறினால் உங்களுக்குப் பரிசில் தந்து விட்டு விடுவோம். இன்றேல் மீண்டும் சிறைப்படுத்தி வைப்போம். போமின்.

ஏவலாள! விரைவிற் கொண்டு போ.

470

## காட்சி. ௩.

இடம் :—சோழன் அரண்மனை.

உரியோர் :—சிறையிலிருந்து வெளிவரும் புலவர்கள், குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஏவலர்.

குய. புலவர்களே! செந்தமிழ்த்தாயின் திருமகனாகிய புகழேந்திப் புலவர் நமது தவப்பயனாலேயே சிறைச்சாலைக்கு வந்திருந்தார் எனல் வேண்டும். பாண்டிய நாட்டிலிருந்து சோழ நாட்டிற்கு வந்துகொண்டிருந்த புகழேந்தியாரை, பாவி கூத்தன்! வழி மறித்துச் சிறைக்கு அனுப்பினனாமே!

தச். ஆம், ஐயா, அவர் எவ்வளவு அன்புடன் நமக்கு நாடோறும் கல்விபயிற்றி வந்தனர்! நீடுவாழ்வாராக என அவரை வாழ்த்துவதன்றி நாம் அவருக்குச் செய்யக் கிடக்கும் கைம்மாறு யாது?

கோல். ஐயா! அவர்தம் புலமைதான் என்ன புலமை! ஒட்டக்கூத்தர் ஒட்டக்கூத்தரென உலகம் புகழ்வதெல்லாம் புகழேந்தியின் புகழை அறியாததாலேயாகும். அரசர் பவனி வந்த போது இருவர் தகுதியும் வெளிப்பட்டு விட்டதன்றோ!

குரு. ஐயா! நான்தான் புலவர் பெருமானுக்கு மிகவும் கடமைப் பட்டுளேன். புறக்கண் இலனேனும், அகக்கண்ணை எனக்குத் திறந்துவிட்ட தெய்வம், புகழேந்தியன்றோ! ஐயா! பவனியன்று நடந்த செயல்களை எனக்கு விளக்கமாகச் சொல்லுவீர்களா?

வேளா—அரசர் பவனி, சிறைச்சாலை வாயிலில் வந்துநின்றது. புகழேந்திப்புலவர், சன்னலின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். அரசர் பார்த்தார். அதோ அங்கு நிற்பார், பாண்டிநாட்டுப் புலவர் தலைவரன்றோ? என்று கேட்டார். அதற்குப் புலவர்...............நினைவில்லையே, ஒரு பாட்டுக் கூறினர்.

குய. நான் சொல்லுகிறேன்.

மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன் கனைகடலின்
மீனிற்கு மோஅந்த வெங்கட் சுறுமுனம் வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோ னுதயத்திற் றார்மன்னனே

என்பதாகும்.

வேளா. ஆம் ஆம். நினைவு வந்து விட்டது. அது கேட்ட அரசர், புகழேந்தியாரை நோக்கினர். அக்குறிப்பறிந்த புகழேந்தியார், அரசனைநோக்கி அதனை வெட்டிப் பாடலாமா? அன்றி ஒட்டிப்பாடலாமா? எனக் கேட்டனர். அரசர் ஒட்டிப்பாடுக வென, புகழேந்தியார்,

மானவன் நானந்த வாளரி வேங்கையாம் வற்றிச்செத்த
கானவன் நானந்த எரியும் தழலாம் கனைகடலின்
மீனவன் நானந்தக் வெங்கட் சுறுவதாம் வீசுபனி
தானவன் நானந்தக் கதிரோ னுதயம் தார்மன்னனே

என்று பாடினர்.

தச். அது கேட்ட அரசன், உடனே கதவைத் திறக்கச்செய்து, புகழேந்தியாரை வரவேற்று, ஒட்டக்கூத்தரொடு அருகே உட்கார வைத்துக்கொண்டு, அரண்மனை எகினன். அவ்வளவு தான் அங்கு நடந்தது.

கோல். அப்புறம் அரண்மனையில் நடந்த செய்திகள் தெரியீரோ?

குரு. அவை என்ன கூறுங்கள்.

கோல். அரண்மனை செல்வதற்குள், பாண்டிய நாட்டிலிருந்து வந்த பணிப்பெண் ஒருத்தி, அரசிக்கு நடந்தவெல்லாம் கூறிவிட்டாளாம். அரசிக்குக் கோபமுண்டாக, தன் அரண்மனை வாயிலை அடைத்துவிடச் செய்தனளாம். அதனை அறிந்த அரசன், கூத்தர், புகழேந்தி எனும் இருவரொடும் சென்றூராம். முதலில் அரசியின் கோபத்

தைத் தணிக்குமாறு, அரசன் வேண்டியவாறு, ஒட்டக் கூத்தர் பாடினூராம். அரசி, மிக்க சினங்கொண்டு, ஒட் டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத்தாள்' என்று கூறி, இன்னெரு தாழ் இட்டனளாம். அதன்மேல், அரசன் புகழேந்தியாரை வேண்டிக்கொள்ள, அவர் ஒரு பாட்டுக் கூறினராம். அதுகேட்டு மகிழ்ந்த அரசி, கதவைத்திறக் கச் செய்து, எல்லோரையும் வரவேற்றுக் கொண்டன ளாம். ஒட்டக்கூத்தர், அரசியிடம்பொறுத்திட வேண்டிக் கொண்டனராம். புகழேந்தியார் அன்று தொட்டு, அரசவையில், குலோத்துங்கன் வலது பக்கத்தில் அமர்ந்து விளங்குகின்றனராம்.

ஏவ. ஐயன்மீர்! அரசரும் அரசியும் புலவர்களும் அவைக்கு வருகின்றனர். (வந்தமர்தல்)

அரச. புலவர்களே! நீங்கள், கடந்த ஓராண்டில் எக்குறைபு மின்றி இனிது பயின்று வந்தீர்களா?

புல. ஆம். ஆம். உமாமகேசன் அருளால் எங்கட்கு எத்த கைய குறையுமில்லை. நன்கு பயின்று வந்தோம்.

குய. அரசே! யாம் இப்போது, ஒட்டக்கூத்தரை எதிர்த்து முன் நிற்கச் சித்தமாயுளோம்.

ஒட். அப்படியா?

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்த ஞாடா?

குய. கூனை யுங்குட முங்குண்டுச் சட்டியும்
பானை யும்வனை யங்குசப் பையல் யான்.

அரச. என்ன மிடுக்கான விடை. செல்வி! அங்குசப் பையல் என்ற நுண்ணுரையினை நோக்குவாய்.

அரசி. ஆம். அம், குசப்பையல்; யானை என்றதற்கேற்ப அங்குசப் பையல், மிக அழகிது.

ஒட். ஐயிர்! மாணிக்கப் புலவரே! நீரும் எதிர்த்து முன்நிற்க வந்தவர்தாமோ! அன்றி முன்போற்பாடி ஓடி ஒளிய வந்தவரோ?

வேளா. கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகநகப் பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூமுழுதும் காக்கின்ற மன்னன் கவியொட்டக்கூத்தநின் கட்டுரையாம் பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே.

அரச. 'மன்னன் கவியொட்டக் கூத்த'! என்கின்றார் இப்புலவர்; 'மன்னனது புலவன்' என்று பொருள் கூறுவதினும் மன்னுகிய புலவன் என்று பொருள் கூறிற் சிறந்ததாகும்.

புக. அரசே! புலவரைப் போற்றும் உமது மாண்பு வியக்கத் தக்கது.

ஒட். ஓ. பொட்டையரோ! உமது செய்தி என்ன?

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலுவிலுத்துப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்!

குரு. கண்பொட்டை யாயினு மம்பட்ட வென்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே.

அரச. ஓ. ஓ. இவர் விடை கூத்தரையன்றி யாவரையும் திடுக்கிடச் செய்திடுகின்றதே!

அரசி. ஆம். அதனை அவர், நீயும் திடுக்கிட என்றதில் உள்ள உம்மையாற் சொல்லுகின்றாரே.

அரச. ஓ. ஓ! நீயும் திடுக்கிட என்று கூறுகின்றாரோ!

ஒட். ஐயிர்! திருவேங்கடப் புலவரே! உமது செய்தி என்னையோ?

கோ. செல்லன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லுவோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுக்கிப் பருந்தாட்டமாட்டிப் பகைவர் முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே.

ஒட். ஐயிர்! போதும், போதும். உமது கவியைக் குறைகூறுவார் இங்கு யாருமிரார். ஐயிர்! சந்தக்கவிராயரே! உமது செய்தி என்னவோ?

தச். சொன்னசந் தக்கவி யாவரும் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யேதென்ற போதி லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியினல்
கன்னசந் தங்களி னிற்கவி யாப்பைக் கடாவுவனே.

அரசி. 'கவியாப்பு' என்ற சொல்நயம் வியக்கத்தக்கது.

அரச. ஆம். ஆம். இப்புலவர்கள் எல்லோரும் நன்ருகச் செய்யுட்கள் பாடுவதினல், இவர்கள் நன்கு பயின்றுளார்களென்பது தெரிகின்றது.

குய. எல்லாம் இந்தப் புகழேந்தியார் திருவருளே. அவர் நீடு வாழ்வாராக.

அரச. அப்படியா? புலவரேறே! எமது சிறைச்சாலை உமது திருவடியைத் தீண்ட என்ன தவஞ் செய்ததோ! அன்றி, இப்புலவர்கள் தாம் என்ன தவஞ் செய்தனரோ?

அரசி. அவரைச் சிறைப்படுத்தி இப்புலவர்கள் பாட்டுக்களைப் பெற உங்கள் புலவர், என்? நமது புலவர், ஒட்டக்கூத்தர் என்ன தவஞ் செய்தனரோ?

ஒட். அரசி! செல்வி யாரே! யான் முன்னமே பிழைபொறுத்திட வேண்டினேனே? அன்றியும், அதன் பயனையும், நீங்கள் கூறியதுபோல், இன்று பெற்றுவிட்டேனே! இனி, என்னை நாணிடச் செய்தல் வேண்டாமன்ரே.

அரச. (கூத்தரைப் பார்த்து) நல்லது. புலவரேறே! இப்புலவர்கட் செல்லாம் தக்க பரிசுகள் தந்தனுப்புங்கள்.

## காட்சி. ௪.

இடம். ஒட்டக்கூத்தப்புலவர் இல்லம்.

உரியோர். கூத்தர், வேற்றுருக்கொண்ட புகழேந்தி, கூத்தரின் புதல்வி, ஏவலன், முற்காட்சிகட்குரிய பிறர்.

கூத்தர் மகள். அப்பா! இதோ வைத்தியர் வந்திருக்கின்றனர். எழுந்து கை காட்டுங்கள். (காட்டல்).

புக. ஐயிர், காலையில் மருந்துண்டீர்களா? நேற்றைக்கு இன்று, சற்று வெப்பின் வேகம் தணிந்திருப்பதாகத் தெரிகின்றதே.

ஒட். ஆம், கொஞ்சம் தணிவு தான், தலைவலி மிகக் குறைவு, ஐயிர்! யார் யாரோவந்து ஏதேதோ தந்து, வாய் வயிறெல்லாம் வேகும்படி செய்து விட்டார்கள். தாங்கள் கொடுத்துவரும் மருந்தினாற்றான் வெப்பும், இருமலும் குறைந்து வருகின்றன. உங்கட்கு மிக்க வந்தனம். நீங்கள் செய்யாமற் செய்த இப்பேருதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

புக. ஐயிர்! நான் ஒன்றும் செய்துவிடவில்லை. ஏதோ என் கையிலிருக்கும் ஒரு சிறுமருந்தினைத் தங்கட்குத் தந்து வந்தேன். தமிழ்த் தாய்க்குப் பெருமையளித்துவரும் தங்கட்கு, இத்தமிழுலகினரெல்லாம் கடமைப் பட்டிருக்கின்றனர். அத்தமிழுலகத்தினுள்ளவர்களில் யானும் ஒருவனே. எனக்கும் அக்கடமையுண்டல்லவா?

ஒட். ஐயிர்! தாங்கள் கூறியபடி நான் தமிழ்த்தாய்க்குப் பெருமை யொன்றும் செய்துவிடவில்லையே. தமிழ்ப் புலவர் என்று வரும் பலரைச் சிறையிலிட்ட கொடும் பாவியாகிய யான் எங்ஙனம் தமிழ்த்தாய்க்குப் பெருமை செய்தவன் ஆவேன்? சிறுமைசெய்தவனே யாவன்.

புக. " தங்கள் செய்கை ஒரு விதத்தில் நல்லதுதானே. போலிப் புலவர்களாக வருபவர்களை, ஓராண்டு சிறை புகுத்திக் கல்வி கற்றுவரச் செய்துவந்தீர்கள். அங்ஙனம் கற்றுத் தேறியவர்கட்குப் பரிசளித்து வெளி விட்டீர்கள். இச்செய்கையிற் குறைகள் இல்லையே. உங்கள் செய்கையால் உண்மைப் புலவர்கள் ஆகியோர் எத்துணையோ பேர்.

ஒட். ஆம், என்றாலும் உலகம் போற்றாத செய்கையன்றோ இது. உலகத்தோடு ஒட்டி நடக்கக் கல்லாது போயினேன். என் செய்வேன். பாவம், போலிப்புலவர்கட்கு மட்டும் இடையூறு செய்தேனல்லேன். உண்மைப் புலவர் ஒருவருக்கும் தீங்கு செய்து விட்டேன்.

புக அவர் யார்? அவருக்கு என்ன தீங்கு செய்தீர்கள்?

ஒட். பாண்டிய நாட்டுப் புலவர் தலைவராகிய புகழேந்தியாரையும் சிறையிலிட்டு வைத்தேன். அத்தீச்செய்கை என் நெஞ்சை சுட்டு வந்ததாலேயே எனக்கு இவ்வெப்புநோய் உண்டாயிற்றென்றே கூறலாம். பாவம்! எண்ணிய தொன்று, உண்மை யொன்றாக முடிந்தது.

புக. அவர் எத்தகையர்? எண்ணியதென்ன? முடிந்ததென்ன?

ஒட். புகழேந்தி என்பாரைத் தெரிந்துகொள்ளாத தமிழர்களும் உண்டோ? தமிழ்த்தாயின் முதல் மகன் அவரேயன்றோ! கலைமகள் அருளைப் பெற்றாருள் அவரை யொத்தார் ஒருவர் உளரோ! அவரையும் சிறையிலிட்டு வைத்தேன் பாவியேன். —

புக. அவர், பாண்டி நாட்டில் பெரும்புலவராக இருக்கலாம். உங்கள் முன்னிலையில் சூரியன் முன் மின்மினிதானே! அவரையும் சிறையிலிட்டுப் பயிலச் செய்வதும் தக்கதுதானே.

ஒட். ஐயோ! அறியாது கூறினீர், அவர்தான் சூரியன், நானே மின்மினி. புலமைகுறித்து அவரைச் சிறையிட்டேன் அல்லேன்.

புக. பின் எதற்காகவோ!

ஒட். பாண்டிய மன்னன் அவைக்களத்திலிருந்த அமைச்சன் ஒருவன், புகழேந்தி இங்கு வந்து, எங்கள் அரசன் அருளைப்பெற்று, என்னைச் சிறைப்படுத்த வருகின்றார் என அஞ்சல் அனுப்பினன். அவர் தம் பெரும் புலமையை யான் அறிவேன் ஆதலின், அவர் அங்ஙனஞ்செய்துவிடக் கூடும் என்று எண்ணி, முன் ஏற்பாடாக அவரைச் சிறை யிட்டு வைத்து, உண்மை அறிய முயன்றேன். தெய்வத் திருவருளால் நடந்தன பல. உண்மையை ஆராய்ந்தறிந்த போது, அவர் அங்ஙனம் எண்ணி வந்தவர் அல்லர் என் றும், தமது மாணவியாகிய எங்கள் அரசியைப் பார்த்துப் போகவே வந்தவரென்றும், புகழேந்திப்புலவர் அங்கிருப் பதால் தங்கட்குச் செல்வாக்கில்லை யென்று கண்ட அமைச்சன், அந்த அஞ்சலை அனுப்பினனென்றும் அறிந்து கொண்டேன். அந்தோ! அப்புலவர்பால் மன் னிப்புப் பெற்றுக் கொள்ளாமலும் இறக்க நேரிட்டுளதே! மன்னிப்புப் பெற்றிருப்பேனாயின் ஆறுதலுடன் இறப் பேன்.

புக. அப்படியா. அந்த அமைச்சன் வேலையா இது!

புதல்வி. அப்பா! பாற் கஞ்சி கொண்டுவந்திருக்கிறேன். சிறிது பருகுங்கள்.

ஒட். ஓ. இப்பாவிக்குக் கஞ்சியும் வேண்டுமா?

புக. நன்றாயிருக்கிறது. சிறிது பருகுங்கள்.

ஒட். இக் கஞ்சியே யன்று, புகழேந்திப் புலவரின் அமிழ்தம் போன்ற வெண்பாக்களில் ஒன்றைப் பிழிந்து கொடுத்தா லும் எனக்கு வேண்டாம்.

புக. (தன்னுருக்கொண்டு) ஓ. புலவரேறே! இவ்வுரையே என்னை உண்மைப் புலவனுக்குகின்றது! இதற்கே தவங்கிடந்தேன். யானே தங்கள் அருளைப் பெற்றுள்ள புகழேந்தி.

ஒட். புலவீர்! என்னைப் பொறுத்தருளல் வேண்டும். இன்னு செய் தார்க்கு மினியவே செய்யும் சான்ருேராகிய பெருந் தகையிர்! உமக்குப் பற்பல வணக்கம்.

எவ. புலவீர்காள்! நமது அரசரும், அரசியும், பாண்டிய மன்ன ரும், வேறு சில புலவர்களும் தங்களைப் பார்க்க இதோ வருகின்றூர்கள்.

ஒட். என் நோய் முழுவதூஉம் நீங்கிற்று. இன்றே நன்னுள் இன்றே கலைமகள் திருநாள். (யாவரும் வருதல்) வருக! வருக! அமர்க! அமர்க! உங்கள் வருகையால் எனது சிற்றில் தமிழ்த்தாயின் பேரில்லம் ஆகிவிட்டது. எல்லி ரும் நெடிது வாழ்வீர்களாக!

---

## தமிழ்த்தாய் வாழ்த்து.

---

வாழி திருமக ளோடு கலைமகள் கூடு கரந்தையில் வளர்சங்கம்!
வாழி யதனுயி ராய தலைவனு மாம கேசனு மொருசிங்கம்!
வாழி எமதுகல் லூரி யிதனிடை மேவி யறிவுறு சிறுவோரே!
வாழி மதியுய ராசி ரியர்கள்மா நேச ரேனும்அருள் பெரியோரே!
வாழி கலைமகள் நாளி லுயரிடம் மேவு பெருநிலக் கிழவோனே!
வாழி முருகனே யாகு மேனவெழில் வீரமுதலுறும் இளையோனே!
வாழி மிகவரு ளோடு விழவிதிற் கூடி மனமகிழ் அவையோரே!
வாழி தமிழனே! வாழி யிருநிலம்! வாழி எமதிறை! மிகவாழி!

---

# பிழையுந் திருத்தமும்.

---

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 458<br>,, | 7<br>26, 27 | நண்ணுமலர்நாடு | நண்ணுசேர் ஏட்டுமலர். |
| 469 | 12 | சிவந்த செந்தாமரை மலர்த்திருவினொடும் | சிவந்திடு செந்தா மரைப் பூத் திருவினொடும் |
| 471 | 14 | நானந்த எரியும் | நானவ் வெரியும். |
| ,, | 15 | நானந்தக் | நானந்த. |
| ,, | 16 | நானந்தக் கதிரோ னுதயம் | நான் அக் கதிரோ னுதயமாம். |
| 473 | 3 | தாள் | தாழ். |

---

'உடல் இயலும் உடல் நல வழியும்' என்னும் கட்டுரையின் பிழை திருத்தங்கள் அக்கட்டுரை முடிவில் வெளிவரும்.

திருத்தக்கதேவர் சமண சமயத்தில் இளமையிற்றுறந்தோ ரென்று அதற்கிணக்கமாக ஓர் பொய்ம்மையுடைய கதையினையும், வீண் தருக்கமும் செய்யத் துணிவார் பலர். என்னை? திருத்தக்க தேவர் தம் நூலைப் பாண்டிய மன்னனது அவைக்களத்திலே சங்கப் புலவர்களது முன்னிலையிற் படித்துக் காட்ட, சில புலவர்கள், தேவர் காமவின்பச் சுவையினை நன்கு துய்த்தவராதல் வேண்டுமெனவும், இவர் இளமையிற்றுறந்தோரல்ல ரெனவும் கூறியபொழுது தேவர் யாவரும் காணத் தன் இளமையிற்றுறந்த தனை உறுதிப்படுத்தவும், தன் தூயஒழுக்கத்தையும் வலியுறுத்தவும் காய்ச்சின இரும்பினைத் தூக்கித் தழுவி, தான் இளமையிற்றுறந்த நிலைமையினை நிலைநிறுத்திக் கொண்டாரென்பதே. இக்கதைக்கு ஆதாரம் யாதோ அறிகிலோம்.

திருத்தக்கதேவர் முடியுடைப் பெருவேந்தர்களும் அழுக் காறுடனிறும்பூது கொள்ளும் செல்வத்தினைப் பெற்ற தக்க நாடுடைய வள்ளல். இந்நாட்டினைத் தேவர் தம் கதையிற் சிறப் பித்துக் கூறியிருப்பதைப் பின்வரும் கவிகளுட் காண்க.

'படம்புனைந் தெழுதிய வடிவிற் பங்கயத்
தடம்பல தழீஇயது தக்க நாடது
வடங்கெழு வருமுலை மகளிர் மாமைபோன்
றிடம்பெரி தினிதத னெல்லை யெய்தினன். [1439.]

தேங்கயத் தணிமலர் தெகிழ்ந்த நாற்றமும்
பூங்குழன் மடந்தையர் புனைந்த சாந்தமு
மாங்கெலா மகிற்புகை யளாயவாசமுந்
தாங்கலாற் றக்கநா டாய தென்பவே. [1440.]

'தேவர்' என்ற அடைமொழி துறவிகளுக்கேயுரியது. அஃது அரசர்க்குரியதன்று என்பவரது சங்கையை 1448-ஆம் பாவே நீக்கும். அஃது,

கேமமா புரமெனுங் கேடி லல்லிசைப்
பூமிமேற் றிலகம்வைத் தனைய பொன்னகர்த்
தாமநீ ணெடுங்குடைத் தரணி காவல
னுமவே னரபதி தேவ னென்பவே.